# நாடகச் சிலம்பு

★

ஆசிரியர் :

புலவர் கு. திருமேனி, B. A., B. O. L.,
தமிழ் விரிவுரையாளர், தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

★

இலக்கிய நிலையம்
30, ஆண்டார் தெரு, திருச்சிராப்பள்ளி–2

முதற் பதிப்பு : 1959
இரண்டாம் பதிப்பு : 1962
மூன்றும் பதிப்பு : 1965
நான்காம் பதிப்பு : 1966

படைப்பு

அரங்கநாயகி எனப் பெயர்தாங்கி வாழ்ந்த
என் அன்னைக்கு.

வருந்திச் சுமந்துபெற்ற வயவுநோய் தீர்க்கயான்
திருந்தக் கலைகள்கற்றுத் தேர்ந்தவென் தெளிவுகாட்ட
இருந்து காணகில்லா என்னன்னைக் கிந்நூலைப்
பொருந்தப் புனைவித்துப் புகழ்வேட்டு வாழ்த்துவனே.

உரிமை ஆசிரியர்க்கே

ரூ. 4-50

விலை : ரூ. 3.50

இந்நாடகத்தை முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ நடிக்கவோ
அன்றி வேறெவ்விதமாகவோ பயன்படுத்துவோர்
முன்கூட்டியே ஆசிரியர் இசைவு பெறுதல் வேண்டும்.

# அணிந்துரை

---

பேராசிரியர், வித்துவான்
திரு. தி. சே. பாலசுப்பிரமணியன், M. A.
தமிழ்த்துறைத் தலைவர், தேசீயக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

நண்பர் உயர்திரு கு. திருமேனியவர்கள் 'நாடகச் சிலம்பு' என்ற சிறந்த இந்நூலைத் தமிழன்னையின் திருவடிகளிற் சார்த்தி வணங்குகின்றார். இளங்கோவடிகள் அருளிய சிலப்பதிகாரத்தினைப் பெரிதும் தழுவியே இந்நாடக நூல் அமைந்துள்ளது. சிலப்பதிகாரத்தை மேற்போக்காகப் படிப்போர் கதைப்போக்கினையே அறிவர்; ஊன்றிப் படிப்போர் அதன் அழகினை உணர்வர்; ஆனால், அக்காப்பியத்தைப் பல கோணங்களிலிருந்து காண்போர் இளங்கோவடிகளின் நுண்மாண் நுழைபுலத்தைக் கண்டு களிப்பதோடு அமையாமல், சிலப்பதிகாரத்தில் சில சிக்கல்கள் இருப்பதையும் காண்பர். பல்யாண்டுகள் இளங்கோவடிகளோடு பழகியவரே சிலம்பின் வியத்தகு சிக்கல்களைக் கண்டு அவற்றைத் தம் புலமைத் திறத்தால் அவிழ்க்கத் துணிவர்.

இனி, இந்நூலாசிரியர் மேற்கூறிய மூன்றாவது இனத்தைச் சேர்ந்தவர் என்பதை, இந்நாடகத்தை முறையே பயில்வோர் அறிவர். ஒருமுறை படித்து ஒதுக்கிவைக்கும் நூல் அன்று, இந்நாடகம். இளங்கோவடிகள் தமது காப்பியத்தில் வெளிப்படையாகக் கூறாது, படிப்போரது அறிவின் திறத்திற்கு விட்டுச்சென்ற பல பொருள்களை எளியவரும் அறியவேண்டும் என்ற அவாவினால் இந்நூலில் ஆசிரியர் தமது கூர்த்த மதியால் அவற்றை எளிய, இனிய, நாடக நடையில் நவின்றுள்ளார். இளங்கோவடிகள் கூறாதொழிந்தவற்றை இந்நூலாசிரியர் அவர் கூற்றாகக் கூறியுள்ளாரே என்று சீற்றங்கொள்வார் சிலர் உளரெனின், அவர்கட்கு யான் ஒன்று துணிந்து கூறுவன். காய்தல் உவத்தல் இன்றி நூலாசிரியரின் கூற்றினை ஆய்க. "எப்பொருள் யார்யார்

வாய்க் கேட்பினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு'' என்ற திருவள்ளுவனாரின் கூற்றினை நினைவுகூர்க. தமிழ்நாட்டில் கற்பனைக்கும், ஆய்வுத்திறனுக்கும் இடமுண்டு என்று தெளிக. இளங்கோவடிகளின் சிலம்போசையினை இந்நூலாசிரியர் எங்ஙனம் உலகில் பரப்பி ஒலிக்கின்றார் என்பதை ஓர்க. இங்ஙனம் இந்நூலைப் படிப்பரேல் வெகுண்டெழாது நூலாசிரியரின் முயற்சியை வரவேற்போராவர். எனவே, இந்நூலினைச் சிலப்பதிகாரத்திற்கு ஒரு விளக்கம் என்றே கூறலாம்.

நூலாசிரியரின் புதுக்கருத்துக்களில் ஒன்றிரண்டு கூறுவோம். வழக்குரை காதையில் "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று, வெள்வேற் கொற்றங்காண்'' என்று அரசன் கூறக் கேட்ட கண்ணகி,"நற்றிறம் படராக் கொற்கை வேந்தே, என் காற்சிலப்பு மணியுடையரியே'' என்று சொல்கின்றாள். இதற்கு முன், வாயிற் காவலனால் கண்ணகியின் தோற்றத்தினை ஒருவாறு மன்னவன் உணர்ந்துள்ளான். அதன்மேலும் சோழநாட்டு மன்னரின் முறைதிறம்பா வகையினைச் சான்றுகளோடு கூறி, அம்முறையினை இங்கே காணவில்லையே என்று குறிக்கின்றாள் கண்ணகி. தீய வினைவுகளை முன்கூட்டியே உணர்த்தும் உற்பாதங்களையும் மன்னன் அறிவான். இங்ஙனம் இருந்தும், தன்னிடத்தும் தவறு இருக்கலாம் என்று அவன் துணிந்தானல்லன். இப்பெண்ணின் கூற்றிலும் உண்மையுண்டெனை அவன் உணர்ந்தானல்லன். "கள்வனைக் கோறல் கடுங்கோலன்று, வெள்வேற் கொற்றங்காண்'' என்று வினைவறியாது அவன் விளம்புகின்றான். என்றாலும், கண்ணகி, "என் காற் சிலம்பு மணியுடையரியே'' என்று கூறுவானேன்? "உன் காற் சிலம்பின் உள்ளீடு என்ன, முத்தா மாணிக்கமா?'' என்று அவன் கேட்டிருந்தால் அல்லவோ கண்ணகி இவ்வாறு புகன்றதற்குப் பொருள் உண்டு. இவ்வாறு, அவன் கேட்டதாக இளங்கோவடிகள் யாண்டும் கூறவில்லை. ஆகவே, பாண்டியன் காற்சிலம்பின் புறத்தோற்றத்தினை மட்டுங் கண்டு, அது தன் சிலம்பெனை மயங்கிக் கோவலனைக் கள்வன்

என்று தேறுகின்றான். எனவே, அரசவையில் உள்ள சான்றோருள் ஒருவர், "இவ்வழக்கில் புறச்சான்றை மட்டுங் கொண்டு ஒரு முடிவுக்கு வரலாகாது; அகச்சான்றும் வேண்டும். ஆதலின், சிலம்பின் உள்ளிருக்கும் பரலினை யாது என அறிவோம்" என்று கூற, இதுகேட்ட கண்ணகி, "என் காற்சிலம்பு மணியுடையரியே" என்று கூறலாம். ஆதலின், கண்ணகியின் இக்கூற்றினைப் பயனில்கூற்றாக ஒழிக்காது பயனுடைக் கூற்றாக்கவேண்டி, சிலம்பில் மாணிக்கத்தைப் பரலாக இடுவது வணிகர்க்கே உரிய மரபு என்றும், முத்தினைப் பரலாகக் கொள்ளுதல் அரசர் மரபு என்றும் கண்ணகி வாயிலாகப் புகாரிலேயே முன்கூட்டி உணர்த்தியது நூலாசிரியரின் கற்பனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது. இதற்குத் தக்க இலக்கியச் சான்றுகள் காண்பது அரிது எனினும் இக்கற்பனையால் அடிகள் நூலுக்குப் பெருமையேயன்றிச் சிறுமையில்லை.

மற்றும், நண்பர், புலவர் கு. திருமேனி அவர்களின் ஆழ்ந்த புலமைக்கு மற்றொரு சான்று காட்டுவது கானல்வரி என்ற பகுதி. இவர் தமக்குள்ள சங்கநூற் பயிற்சியால் கானல்வரியில் பொதிந்துள்ள பல்விலைய முத்தங்களை ஆழ்ந்தெடுத்து நமக்கு நல்குகின்றார். கோவலன் மாதவி என்ற இருவரும் ஒருபொருள குறித்துத் தாழிசைபோல் பாடிய பாட்டுக்களை இணைத்துப் பார்த்து, இருவர் பாட்டுக்களில் காணப்பெறும் பொதுத்தன்மைகளையும் அவற்றிலிருந்து வெளிப்படும் கருத்துக்களையும், அப்பாக்கள் அவ்விருவரின் அகப்புற வாழ்க்கைகளை எப்படிப் புலப்படுத்துகின்றன என்பதையும் இவர் இந்நூலில் தெளிவுறக் கூறியுள்ளார். கானல்வரியின் பெருமையினைத் தமிழுலகம் இனிமேல்தான் முற்றிலும் அறியும். இவ்வரிப்பாட்டின் நுண்பொருள்களை யான் கண்டபோது, இளங்கோவடிகளே இவர்தம் சிந்தையுட் புகுந்து, தம் கருத்தினை உணராத தமிழுலகிற்கு, இவர் வாயிலாக அவற்றை வெளிப்படுத்துகின்றாரோ என வியந்தேன். அன்றேல், இன்று இத்தகைய ஒரு நூல் வெளிவர இயலாது.

மேலும், காவுந்தி அடிகளும் மாடல மறையோனும் நமது பெருமதிப்பிற்குரியோர் என்பதை இந்நூல் நமக்கு நன்கு உணர்த்துகின்றது வஞ்சிக்காண்டம் சிலப்பதிகாரத்தின் ஏனைய இரு காண்டங்களோடு வலிய இணைக்கப்பட்டதொன்று; மேலும், அது மிகையானதுமாகும்—என்ற ஒரு கொள்கையை மறுக்குமுறையில் மதுரைக் காண்டத்தில் மிக்கு விளங்கும் அவலச் சுவையினைத் தம் திறமையால் வஞ்சிக் காண்டத்திலும் பொருத்திக் காட்டுகின்றார், ஆசிரியர். தேவந்தி, அடித்தோழி, மறு பிறப்புப்பெற்ற கோவலன் தாய், கண்ணகியின் தாய் இவர்தம் வாயிலாக இவ்வுண்மையை நமக்குப் புலப்படுத்துகின்றார்.

இவைகிடக்க, இந்நூலில் வீரர்க்குச் செங்குட்டுவன் கொடை வழங்கும் பகுதி, மாடல மறையோன் இறுதியில் பேசும் பேச்சு, இளங்கோவடிகள் வருகை முதலியன நம் நெஞ்சில் நிலைத்த இடம் பெறத்தக்கன. நண்பர் திருமேனி அவர்கள் நூலாசிரியர்—நாடகாசிரியர் உலகில் இந்நூலின் வாயிலாகத்தான் முதன்முதல் தோன்றுகின்றார் என்று எண்ணுகின்றேன். இவர் இந்நூலினைத் தொடர்ந்து வெளியிடவிருக்கும் 'சிலம்பணி மகளிர்' என்ற நூலினைத் தமிழுலகு உவகையோடு வரவேற்கும் என யான் திண்ணமாக நம்புகின்றேன்.

என்னுடன் பணியாற்றுபவராதலின் இவரைப்பற்றி யான் மிகுதியாக உரைக்க விரும்பவில்லை. தமிழுலகம் இவ்வாசிரியரது துணிவான முயற்சியைப் பெரிதும் பாராட்டி வரவேற்கும் என்று நம்புகின்றேன். இவர்தம் நன்முயற்சி சிறந்த பயனளிக்க இறைவன் இன்னருள் பாலிப்பானாக!

திருச்சிராப்பள்ளி
6—2—59

இங்ஙனம்,
தி. சே. பாலசுப்பிரமணியன்.

# முன்னுரை

'நாடகச் சிலம்பு' என்று பெயரிய இந்நூல் இளங்கோவடிகள் செய்த சிலப்பதிகாரக் காவியத்தை அடிப்படையாகக் கொண்டு நாடக உருவில் அமைக்கப் பெற்றதாகும்.

இந்நூலிடை வருவோர்தம் பண்பாட்டின் பெருமை சிறுமைகளை விளக்கவேண்டி சில காட்சிகள் கற்பிக்கப் பெற்றுள்ளன. இக்கற்பனைகளெல்லாம் இளங்கோவடிகள் ஆங்காங்கு நூலகத்து முன்னும் பின்னும் குறிப்பாக வெளிப்படுத்திய சொற்களையும் கருத்துக்களையும் கொண்டு அமைக்கப்பெற்றனவேயன்றி யாண்டும் இல்லாதனவல்ல.

இதன்கண் நூல் முழுமையும் காணும் பல குறிப்புக்களைக் கொண்டும், கோவலன்–மாதவி என்ற இவர்தம் பண்பாடுகளைக் கொண்டும் கானல்வரிக்கு விளக்கம் தரப்பெற்றுள்ளது.

இந்நூல், சிலப்பதிகாரம் கற்காதவர்களுக்கு அதனைப் படித்துச் சுவைக்கத் தூண்டும் ஒரு தூண்டுகோலாகும் என்பது என் துணிபு. சிலப்பதிகாரம் கற்றுணர்ந்தோர் மனம் மகிழும் வகையில் பல புது செய்திகளைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ளேன்.

இஃது ஒரு முழு நூலேனும், அடிகள் பகுத்தது போலவே யானும் மூன்றாகப் பகுத்து எழுதியுள்ளேன். யான் வெளியிட்ட கோவலன், பூம்புகார்ப்பொற்றொடி, தென்றமிழ்ப் பாவை என்ற உறுப்பினர்தம் பண்பாடு குறித்த நூல்கள் (Character Study) இந்நாடகத்திற்குப் பெரும் விளக்கமளிப்பனவாகும்.

இதற்கு அணிசெய்யும் முறையில் தேசீயக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர், வித்து வான் திரு. தி. சே. பாலசுப்பிரமணியன், எம். ஏ., அவர் கள் இந்நூலைப் படித்துச் சுவைத்து, அணிந்துரையும் தந்து சிறப்பித்தமைக்கு என்றென்றும் யான் நன்றி யறிதலுடையேன்.

இந்த நூல் வெளிவருவதற்குக் காரணமாக இருந்த வருள் தலையாயவர் என் நண்பர் திரு. சி. ஆ. இராமையா அவர்கள். அவர்கள் இடையீடின்றி இரண்டாண்டுகள் என்னைத் தொடர்ந்து ஊக்கி ஊக்கி இதனை எழுதி முடிப்பித்தார்கள். அதில் என் நண்பர், புலவர் திரு. கு. விநாயகமூர்த்தி அவர்கட்கும் பெரும் பங்குண்டு. வெளியிடும் பொறுப்பை ஏற்று, அத்துறைப்படுத்திய வர் தஞ்சை சரபோஜிக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலை வரும் என் உழுவலன்பருமாய திரு. கோ. வேங்கடாசலம் எம். ஏ., அவர்கள் ஆவார். இந்நூல் நன்முறையில் விரைவில் வெளிவரப் பெருந்துணை புரிந்தவர் திரு. அரங்கராசன் அவர்கள். இவர்கள் அனைவர்க்கும் யான் நன்றி செலுத்தக் கடப்பாடுடையேன்.

சென்னைப் பல்கலைக்கழகப் புத்தகக் குழுவினர் இந்நூலினைப் பயிர்நூற்கலை அறிவியற் (B. Sc. Agriculture) பகுதிக்கும், பல்கலைக்கழக முன்னிலை வகுப்புச் சிறப்புத் தமிழ் (P. U. C. Advanced Tamil) பகுதிக்கும் பாடமாக வைத்தமைக்கு என் நன்றி.

தமிழக அறிஞர் பெருமக்கள் எனது இச்சிறு முயற்சியை வரவேற்பார்கள் என்னும் நம்பிக்கை மிக்குடையேன்.

*திருச்சிராப்பள்ளி,*
1—8—1965.

கு. திருமேனி.

# உள்ளுறை

## புகார்க் காண்டம்

### களம் 1


| | | | பக்கம் |
|---|---|---|---|
| காட்சி : | 1. | கடற்கரைக் காட்சி | 1 |
| | 2. | மாசாத்துவான் மனை | 8 |
| | 3. | மாநாய்கன் மனை | 14 |
| | 4. | மாசாத்துவான் மனையின் திருமணக்கூடம் | 20 |
| | 5. | பள்ளியறைக் காட்சி | 22 |
| | 6. | மருவூர்ப்பாக்கத்துள்ள ஒரு பொழில் | 27 |
| | 7. | இல்வாழ்க்கை | 32 |
| | 8. | விருந்தோம்பல் | 34 |
| | 9. | கரிகாலன் அரண்மனை — அரசவை | 37 |
| | 10. | கரிகாலனின் ஆடலரங்கு | 39 |
| | 11. | மாதவி மனை | 41 |
| | 12. | மாதவி மனையின் தனியறை | 44 |


### களம் 2


| | | | |
|---|---|---|---|
| காட்சி : | 1. | மணிமேகலை பிறந்தநாள் விழா | 46 |
| | 2. | கோவலன் மனையில் கண்ணகியும் தேவந்தியும் | 50 |
| | 3. | ஆடலரங்கில் மாதவி | 54 |
| | 4. | மாதவி மனை | 57 |
| | 5. | கடற்கானலும் வரிப்பாடலும் | 63 |
| | 6. | கோவலன் மனை | 83 |
| | 7. | வழிநடைக் காட்சி | 86 |
| | 8. | வழியிடை ஒரு மரநிழலில் | 90 |


## மதுரைக் காண்டம்

### களம் 3


| | | | |
|---|---|---|---|
| காட்சி : | 1. | உறையூரை அடுத்த காடு | 93 |
| | 2. | பொய்கைக் கரை | 102 |
| | 3. | கொற்றவைக் கோயில் | 105 |

பக்கம்

| | | |
|---|---|---|
| 4. | குளமடுத்த பொழில் | 113 |
| 5. | வையையாற்றில் | 118 |
| 6. | துறவோரிருக்கை | 121 |
| 7. | மாதரி இல்லம் | 127 |
| 8. | மதுரை வீதி | 132 |
| 9. | பாண்டியன் ஆடரங்கு | 134 |
| 10. | மதுரை வீதியில் ஓர் ஒதுக்கிடம் | 137 |

களம் 4

| | | |
|---|---|---|
| காட்சி : 1. | ஆயர்பாடி | 140 |
| 2. | பொதுமன்றம் | 142 |
| 3. | மதுரை வீதி | 146 |
| 4. | பாண்டியன் அரண்மனை | 151 |
| 5. | பாண்டியன் அரசவை | 153 |
| 6. | மதுரை வீதி | 158 |
| 7. | திருச்செங்கோட்டு மலைமுகடு | 164 |

## வஞ்சிக் காண்டம்

களம் 5

| | | |
|---|---|---|
| காட்சி : 1. | பேரியாற்றங்கரை | 169 |
| 2. | சேரன் அவைக்களம் | 173 |
| 3. | பாடிவீடு | 178 |
| 4. | வடவர் பாடிவீடு | 184 |
| 5. | போர்க்களம் | 186 |
| 6. | கங்கைப் பாடிவீடு | 191 |
| 7. | வேண்மாளின் அந்தப்புரம் | 201 |
| 8. | நாளோலக்கம் | 203 |
| 9. | கண்ணகி கோயில் | 208 |
| 10. | கண்ணகி கோயிலின் வெளிப்புறம் | 214 |

# நாடக உறுப்பினர்கள்

| | |
|---|---|
| கரிகாலன் | — புகார் வேந்தன் |
| நெடுஞ்செழியன் | — பாண்டி வேந்தன் |
| செங்குட்டுவன் | — சேர வேந்தன் |
| இளங்கோ | — செங்குட்டுவனின் தம்பி |
| கயவாகு | — இலங்கை வேந்தன் |
| கனகன், விசயன் | — வடபுல வேந்தர்கள் |
| கன்னர் நூற்றுவர் | — வடநாட்டரசர் |
| சாத்தனூர் | — சேரன் அவைக்களப் புலவர் |
| அழும்பில்வேள் | — செங்குட்டுவனின் அமைச்சன் |
| வில்லவன்கோதை | — செங்குட்டுவனின் தானைத் தலைவன் |
| சஞ்சயன் | — கன்னர் நூற்றுவர் தூதன் |
| அஃதை, செங்கணான், முரம்பில், பனிமெய்யன் | — செங்குட்டுவன் படைவீரர்கள் |
| உத்திரன், விசித்திரன், உருத்திரன், வைரவன், சித்திரன், தனுத்தரன், சிவேதன் | — வடபுல அரசர்கள் |
| மாசாத்துவான் | — புகார் வணிகப் பெருமக்களுள் ஒருவன் — கோவலனின் தந்தை |

| | | |
|---|---|---|
| மாநாய்கன் | — | புகார் நகர மற்றொரு வணிகப் பெருமகன் — கண்ணகியின் தந்தை |
| கோவலன் | — | மாசாத்துவானின் மகன் |
| மாடலன் | — | புகார்வாழ் மறையவன் — மாசாத்துவானுக்கும் மாநாய்கனுக்கும் நண்பன் |
| கண்ணகி | — | மாநாய்கனின் மகள் |
| மாதவி | — | புகார்வாழ் கணிகை |
| காவுந்தி | — | சமணத் துறவி |
| மாதரி | — | இடைக்குலப் பெருமகள் |
| கோப்பெருந்தேவி | — | நெடுஞ்செழியனின் மனைவி |
| வேண்மாள் | — | செங்குட்டுவனின் மனைவி |
| வயந்தமாலை | — | மாதவியின் தோழி |
| பெருமனைக்கிழத்தி | — | மாசாத்துவானின் மனைவி |
| ஐயை | — | மாதரியின் மகள் |
| தேவந்தி<br>வள்ளி<br>முல்லை<br>குலக்கொடி<br>சண்பகம்<br>எழிலி | — | கண்ணகியின் தோழியர் |
| நப்பின்னை<br>பாவை | — | இடைக்குலப் பெண்கள் |

# புகார்க் காண்டம்

களம் : 1] [காட்சி : 1

## கடற்கரைக் காட்சி

[மாலை நேரம்—திங்கள் தோன்றலும் கதிரவன் மறைதலும். புகார்க் கடற்கரையில் பொழுதுபோக்க வந்தவர், கலங்கள் காண வந்தவர், பல தேயத்தவர், பலதுறைப்பட்டவர் ஆய எல்லோரும் ஒருங்குகூடிக் கிடக்கின்றனர்—அரசன் கோயில் மணி ஒலி கேட்கின்றது]

"டாங்......டாங்......டாங்......டா-அங்......"

புலவர் : ஓ! மன்னவன் கோயில் மணியோசையா!

[மணி ஒலி கேட்டதும் எல்லோரும் அசைவற்று நிற்கின்றனர். அங்கு வானத்துத் திங்களைப் பார்த்து]

புலவர் ஒருவர் :

திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண்
[குடைபோன்றிவ்
அங்கண் உலகளித்த லான்.

பாணன் ஒருவன் :

[சீறியாழ் தாங்கிய கையன், உச்சி முடித்த தலையன், குழை யாடும் காதினன்]

ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்
காவிரி நாடன் திகிரிபோல் பொற்கோட்டு
மேரு வலம்திரித லான்.

பாடினி ஒருத்தி :

பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி உலகிற் கவன்குலத்தோ(டு)
ஓங்கிப் பரந்தொழுக லான்.

[எல்லோரும் தலைசாய்த்து வணங்கிவிட்டுத் தத்தம் வினைகளில் ஈடுபடல். கூட்டத்தில் தலைப்பாகை, சந்தனப்பொட்டு, கையில் ஓர் ஊன்றுகோல்—இவற்றோடு கூடிய புலவர் ஒருவர்; காதில் பெரிய குண்டலம், கழுத்தில் முத்து வடங்கள், உச்சியில் முடித்த கொண்டை—இவற்றோடு கூடிய பாணன் ஒருவனைக் காணுகின்றார். கண்டு கண் சுருங்கிய பார்வையோடு கை காட்டி]

புலவர் : ஐயா, நான் தங்களை எங்கேயோ பார்த்தது போல் நினைவிருக்கிறதே!

பாணன் : ஆம், ஐயா...எனக்கும் தங்களை எங்கேயோ கண்டதுபோல்.. [மலர்ந்த முகத்தோடு] ஆம், பார்த்திருத்தல் கூடும்......யான் ஒரு கலைஞன், இசை கொண்டு வாழ்பவன்; எங்குமிருப்பேன். இன்று இக்கடற்கரை வளங் கண்டுபோக வந்தேன்...... தாங்கள்...யார்?

புலவர் : யானொரு புலவன்...மக்கள் அகத்தையும் புறத்தையும் மனக்கண்ணால் காண்பேன்; உண்மையை உள்ளபடி உணர்த்தாமல் சற்றுப் புனைந்துரைப்

பேன்......தத்துவம் பேசுவதும் என் இயல்பு...ஏன் ...உலகுய்ய,மக்கள் உணர்வுபெற, உண்மைவாழ்வு வாழ வேண்டுவவெல்லாம் பாடுவது என் தொழில்!

**பாணன்:** ஐயா, தாங்கள் நேற்று மணிவண்ணன் கோட்டத்தில்......

**புலவர்:** ஆம், ஐயா...யான் பாடிய பாடல்களைக் குழலி லும் யாழிலும் இசைத்துக்காட்டியது தாங்கள் தானே?

**பாணன்:** யானேதான்.....நன்றாக நினைவிருக்கின்றது.

**புலவர்:** நேற்றைய தங்கள் நிலையும்......இன்றைய கோலமும்......

**பாணன்:** ஆம், மாற்றம்தான். மாசாத்துவான் என்ற வணிகன் ஒருவன் புனைவித்த கோலமே இது. தாங்களும் அங்கிருந்துதான்...

**புலவர்:** இல்லை இல்லை; எனக்கு இவை தந்து உரு மாற்றியவன் ஒரு பேரறிவாளன்...அவன் உவர்க் கடலெடுத்த ஊருணி; உலகூட்டும் பெருநிதி; கற்றவர் நற்றுணை......அவன் வளந்தலைப்பட்டு இன்று இவ்வண்ணமானேன்......தாங்கள் எந்தவூர்?

**பாணன்:** எனக்குப் பிறப்பால் உரியது சேரநாடு, பிழைப்பால் உரியது சோழநாடு, பழகும் கலையால் உரியது பாண்டிய நாடு! தங்கட்கு?

**புலவர்:** எனக்கா? அஃகஃகா [வெடிநகை—ஆனால், சிந்தனை படர்ந்த முகத்தோடு] எனக்கு யாதும் ஊர், யாவரும் கேளிர்.. குறிப்பிடத்தக்கது தாய் வயிறு பிறப்பிடம்; உலவுவது இப்பரந்த உலகம்; ஆனால், என்றும் நிலையாக உரியது இவ்வுடல் கிடத்தும் நன்காடு.

பாணன் : ஐயா! நீங்கள் புலவர் என்பதை மெய்ப்பித்து விட்டீர்கள்; ஒரேயடியாகப் பிறப்பில் தொடங்கி இறப்பில் முடித்துவிட்டீர்களே!

புலவர் : ஆம், புலவர் வாழ்க்கையே பிறப்பில் தொடங்கி இறப்புகாறும் பாடுவதுதானே! எனக்குமட்டும் அவ்வரம்பு விலக்கோ? அதைத்தானே கூறினேன்.

பாணன் : ஐயா, அதோ நிற்கின்றாரே அவர்தான் அந்த மாசாத்துவான் என்ற வள்ளற் பெருமகன்.

புலவர் : என்ன! அதோ அவரை நோக்கி வருகின்றாரே ஒருவர், அவர்தான் யான் கூறிய மாநாய்கன் என்ற பெருந்தகை! கலங்காண வருகின்றார் போலும்! நாம் போவோம்; மீண்டும் அவர் கண்ணில் பட்டால் கொடை சுமக்கமுடியாது.

[இவர்கள் இருவரும் சற்று விலகிப்போகின்றனர்]

[இரண்டு கப்பல்கள் வந்து நிற்கின்றன. மாசாத்துவான் நிற்ப, மாநாய்கன் அவனை நோக்கி வருகின்றான்]

மாசாத்துவான் : வாருங்கள் வாருங்கள், வணக்கம்!

மாநாய்கன் : வாருங்கள் வாருங்கள், வணக்கம், வணக்கம்!

மாசாத்துவான் : வீட்டில் மனைவி மக்கள்...உம்... குழந்தை கண்ணகி – எல்லோரும் நலந்தானே?

மாநாய்கன் : ஆம், நம் கரிகாலன் ஆட்சியில் நலத்திற் கென்ன குறை? நம் வீட்டில், தம்பி கோவலன் எல்லோரும்......

மாசாத்துவான் : ஆகா, எல்லோரும் இன்புற்றிருக்கின் றோம்......நீங்கள்தான் நம் வீட்டுப்பக்கமே வருவ தில்லை!

மாநாய்கன் : வராமலென்ன, ஓய்வே இருப்பதில்லை. சென்ற இரண்டுமுறைகளாக உரோம நாட்டிற்கும், சீனத்திற்கும் முத்து மூடையும், சந்தனக்குறையும் அனுப்பினேன். பொருளின் தரங்கண்டு அளவு கடந்த பண்டங்கள் அனுப்பிவிட்டார்கள். அவற்றைக் கிடைக்கப்பெருது மக்கள் வருந்தும் இடம் பார்த்து அனுப்பும் வேலை பெரிதாகப் போயிற்று!

மாசாத்துவான் : ஆம், மக்கட்கு நன்மை செய்வது தானே நம் தொழில்! நம் முன்னேர் நமக்கு மறை மொழிபோல், "கொடுப்பதையும் குறையாமற் கொடு; கொள்வதையும் மிகாமற் கொள்" என்றல்லவோ விதித்துள்ளார்கள்...

மாநாய்கன் : ஆம், நம்மவர்க்கு அம்முதுமொழி உயிர் தான்.

மாசாத்துவான் : பாருங்கள், எனக்குச் சென்ற பல முறையாக எவ்வளவு விலை குறைத்துக் கொடுத்தாலும் குவியும் ஊதியம் கணக்கிறந்துபோயிற்று. எல்லைகடக்கும் பொருளைத் திங்கள்தோறும் ஏழை எளியவர்கட்கு வழங்கிவிடுகின்றேன். யாராவது அறவிலை வணிகன் என்று குறைகூறிவிடுவாரோ என்று அஞ்சி அப்பொருள்களைக்கூட என் பெயர் குறியாது கொடுக்கச் சொல்கிறேன். வேறு என் செய்வது?

மாநாய்கன் : உண்மைதான். (முகஞ்சுளித்துக்கொண்டு) சிலர் ஏதோ அறம் அறமென்று, அதனைத் தொழில் நடத்தும் சூழ்ச்சியாகத் தொழிலறிக்கை ஆக்குகின்றனர். அதனுல்தான் யானும் என் அளவில் மிகுந்து சேரும் பொருளை அப்படியே வழங்கிவிடுகின்றேன்.

[ மாடலன் வருதல் ]

மாடலன் : வணக்கம், வணக்கம் — வணிகப் பெரு மக்களே வணக்கம்..... என்ன, இன்று ஞாயிறும் திங்களும் ஒன்றுசேர்ந்திருக்கின்றன !

மாசாத்துவான் : ஏன், சேரமலென்ன ?

மாடலன் : இருவரையும் ஒருசேரப் பார்க்கும் முதல் முறை இதுதான்.

மாநாய்கன் : நீர் பார்ப்பது இதுதான் முதல்தடவை!

மாடலன் : ஆம், கலன்கள் எல்லாம்...எப்படி வந்தன?

மாநாய்கன்—மாசாத்துவான் : சிதைவின்றியும் ஊதியம் பெருகவும் வந்தன ஐயா! எங்கட்கு இனி எந்தக் குறையுமில்லை.

மாடலன் : இதுவரை நின்ற குறை நிறைவுபெற்று விட்டது; இனிமேல் குறையொன்றுமில்லை என்று சொல்கிறீர்கள் ?

மாநாய்கன் : ஏன், இந்தக் கரிகாலன் ஆட்சியில் என்றும் எங்கட்கு எக் குறையும் இருந்ததில்லை; இனியேதும் இருக்குமென்று எதிர்நோக்கவும் இல்லை! நீர் ஏதோ புதுமை பேசுகின்றீரே!

மாடலன் : ஆம், புதுமைதான்! சொன்னால்தானே உங்கட்குத் தெரியும்—வாணிபமும் ஊதியமும், பேரும் புகழும் பெரிது என்றிருப்போர்க்கு இது புரியாது.

மாசாத்துவான் : குறையிருந்தால் சொல்லும் பார்ப்போம்!

மாடலன் : வணிகவேந்தர்களே, உங்கட்கு அருட் செல்வமோ,பொருட்செல்வமோ,புகழ்ச்செல்வமோ இல்லையென்று யாரால் கூறமுடியும்? மக்கட்

செல்வம் பெற்ற உங்கட்குக் குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, இட்டும் தொட்டும் மயக்கும் குழவிச் செல்வம் தருதற்கு மருமக்கள் செல்வம் இல்லையே! அது குறையில்லையா? அது வேண்டாமா? அக் கவலை இப்பொழுது இல்லையோ? இல்லை என்று அழுத்தமாகச் சொல்லுங்கள், பார்ப்போம்!

**மாசாத்துவான் :** ஆம், குறைதான். நீர் சொல்வது முற்றிலும் உண்மை. எம்மக்கள் மணமங்கலத்தின் நன்கலம் கண்டு உவக்கத்தான் வேண்டும்.

**மாடலன் :** ஆம், வேண்டுமென்றால் போதுமா? [கையால் மாநாய்கனைக் காட்டி] பெண் வைத்திருப்பவர்களிடம் கேட்டால்தானே தருவார்கள்! ஒத்த குலம்—ஒத்த செல்வம்—ஒத்த அறிவு ..

**மாசாத்துவான் :** [மாநாய்கனை நோக்கி, வெட்கப்பட்டு, பார்த்தும் பாராமலும்] ஆம், நம் கண்ணகி......

**மாடலன் :** அப்பப்பா......என்ன கூச்சம்! உரிமை யோடு கேளுங்களேன்... உங்கள் சொல்லுக்குத் தடை என்றாலும் கோவலனுக்கென்றால் தடை யொன்றுண்டோ?

**மாநாய்கன் :** [எதிர்பாராது மாசாத்துவான் பெண் கேட்டமையால் நாணி முகஞ்சிவந்து] நீங்கள் கேட்டு இல்லை என்று யாரால் சொல்லமுடியும்? அவள் பிறந்த நாளே கோவலனுக்கு உரியவள்தானே!

**மாசாத்துவான் :** அப்பா, என்னுள்ளம் குளிர்ந்தது... யான் பெற்ற பேறே பேறு!

**மாடலன் :** மணத்துக்குரிய எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் மகிழ்ச்சியோடு மனை புகுங்கள்.

[எல்லோரும் பிரிந்துபோதல்]

## மாசாத்துவான் மனை

[கோவலன் கலையரங்கில் யாழ் இசைத்துக்கொண்டிருந்தான்]

மாசாத்துவான் : தம்பி கோவலா...தம்பீ!

கோவலன் : இதோ வந்துவிட்டேன் அப்பா! மரக் கலங்கள் எல்லாம்...

மாசாத்துவான் : எல்லாம் வெற்றியோடு வந்தன. நீ ஏன் யாழையும் தூக்கிக்கொண்டு வந்துவிட்டாய்? என்ன ஈடுபாடோ உனக்கு இந்த இசையில்! யாழைக் கொண்டுபோய்க் கலைக்கூடத்தில் வைத்துவிட்டு உன் அன்னையைக் கூப்பிடு.

கோவலன் : அம்மா!

பெருமனைக்கிழத்தி : [வந்து கணவனை வணங்கிநின்று] நம் கலங்கள் எல்லாம்...

மாசாத்துவான் : ஏதமின்றி எல்லாம் வந்தன! அதோடு ஒரு பொன்னும் கிடைத்தது!

பெருமனைக்கிழத்தி : அப்படியானால்......நம்முடைய வீடே பொன்னால் ஆனதுதானே......

மாசாத்துவான் : போடி போடி! இவையெல்லாம் பொன்னா? இருந்திருந்தும் இவையெல்லாம் பத்தரை மாற்றுத்தானே இருக்கும்?

பெருமனைக்கிழத்தி : என்ன, பத்தரைமாற்றுத் தங்கந் தானே உயர்ந்தது!

மாசாத்துவான் : என்னே உன் அறியாமை! நீ அணிந்திருக்கும் காலணி எல்லாமே நூற்றெட்டு மாற்றுடைய கிளிச்சிறை; இது தெரியாதா?

பெருமனைக்கிழத்தி: அப்படியா!

மாசாத்துவான்: உன் மங்கல அணி ஐந்நூறு மாற்றுடையது; அதன் பெயர் சாம்பூநதம்!

பெருமனைக்கிழத்தி: நீங்கள் அணிவித்ததாயிற்றே என்று அதனை வணங்குவதல்லது எந்த ஆராய்ச்சியும் யான் மேற்கொண்டதில்லை. அப்படியென்றால் இதுபோன்ற பொன்னு இப்போது கிடைத்தது?

மாசாத்துவான்: அதுவும் இல்லை; நீயும் இதுவரை அத்தகைய ஒன்றைப் பார்த்திருக்கமாட்டாய்; நானும் இதுவரை பார்த்ததில்லை. என் வாழ்க்கை அநுபவத்தில் சாதகும்பம், சாம்பூநதம், வைணவம், சிருங்கி, சுத்திசம் என்ற இயற்கைப் பொன்னையும் கண்டிருக்கின்றேன்; இரசவாதப் பொன், ஆகரப் பொன் என்ற செயற்கைப் பொன்னையும் கண்டிருக்கின்றேன். இவ்வளவு கண்டிருந்தும் இதுபோன்றதொரு பொன் உலகில் உண்டென்றுணர்ந்து அதற்காக ஒருகாலத்தில் ஓடோடித் தேடினேன். அது இன்று என் மகனுக்குப் பூம்புகாரிலேயே கிடைத்தது! யான் கொண்டுள்ள மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை.

கோவலன்: அப்பா! அப்படி என்னப்பா அதில் சிறப்பு?

மாசாத்துவான்: அதன் சிறப்பா...சொன்னால் அயர்ந்து போவாய்! ஆயிரத்தெட்டு மாற்றுப் பெற்ற ஆணிப் பொன். அது நம்மகத்திருக்க நமக்கு இல்லாததொன்றில்லை. நம்மனைக்கு—ஏன், நம் குலத்திற்கே ஒளிதரும் பொன்னடா அது!

[கோவலனும், தாயும் நிகைத்து நிற்கின்றனர்]

கோவலன் : அப்பா, எங்கே அந்தப் பொன்னைக் காட்டுங்களேன் பார்ப்போம்!

மாசாத்துவான் : [சிரித்துக்கொண்டே] அவ்வளவு மாற்று உயர்ந்த பசும்பொன்னை இப்படித் துடிதுடித்தால் காணமுடியுமா ?

பெருமனைக்கிழத்தி : எப்பொழுது பார்க்கலாம் ?

மாசாத்துவான் : நாளையே பார்க்கலாம்—நாம் மட்டும் பார்த்தால் போதுமா? அதனை உலகமே காண வேண்டும்! அதற்குத்தான் நம் மாடலன் எல்லா ஏற்பாடுகளையும் செய்கின்றார். நாளையே நம் உற்றார், உறவினர்—உறவினர் மட்டுமென்ன—அப்பொன்னின் திறங்காண நம் அரசன் கரிகாலனே வரப்போகிறான்!

பெருமனைக்கிழத்தி : அப்படியா! அவ்வளவு உயர்ந்த பொன்னை நாம் என்ன செய்வது ?

மாசாத்துவான் : நல்ல கேள்வி கேட்டாய்... [வெடிநகை கொள்கின்றான்] எனக்குத் தெரியாதா என்ன? நாளைக்கு நாம் நம்மிடத்திலிருக்கும் மாணிக்கத்தை அதில் பொதிந்துவைத்து அழகு பார்க்கலாம். [கோவலனைப் பார்த்து] உனக்குத்தான் அந்தப் பொன் !

[மாடலன் வருதல்]

மாடலன் : தம்பி! அந்தப் பொன்...அந்தப் பொன் தான். [மாசாத்துவானைப் பார்த்து] வணிகவேந்தரே! இந்த மாணிக்கத்திற்கு நல்ல பொன் கிடைத்ததல்லவா? இம்முறை கலந்தந்த ஊதியத்தைவிடக் கடற்கரை தந்த ஊதியம் பெரிதய்யா உங்கட்கு!

மாசாத்துவான்: [மகிழ்ச்சிப் பெருக்கில்] ஆமாம், ஆமாம்; பெரிதுதான்! கிடைப்பதற்கு அரியதுதான்!

[பொற்கொல்லன் வருகின்றான்]

பொற்கொல்லன்: வணக்கம், வணிகவேந்தே!

மாசாத்துவான்: வாருங்கள் பொற்கொல்லரே! எப்படி நலமெல்லாம்?

பொற்கொல்லன்: எல்லாம் தங்கள் கருணையால்........

மாசாத்துவான்: என் கருணையிலா...கொஞ்சம் இருங்கள் வருகிறேன். [உள்ளே போய் மீண்டு வந்து பொன் கட்டி ஒன்றை அவனிடம் கொடுக்கின்றான்]

பொற்கொல்லன்: [பொன்னை வாங்கியவன்னம் எல்லோரையும் வியந்து பார்த்து] ஆடகம்!

மாசாத்துவான்: ஆம், ஆடகம்தான்......இதில் மங்கல அணி நாளையே......

பொற்கொல்லன்: எல்லாவற்றையும் மாடலன் சொன்னார். தம்பி பெற்ற பேறே பேறு!

பெருமனைக்கிழத்தி: என்ன, நம் தம்பிக்கா!

மாசாத்துவான்: ஆம், உனக்கு மகிழ்ச்சிதானே?

பெருமனைக்கிழத்தி: [கோவலனைத் தழுவிக்கொண்டு] அப்பப்பா, தாங்கள் என் கண்ணிற்குப் பார்த்த பெண் யார்?

மாசாத்துவான்: பெண்ணா? யாராக இருக்கலாம்? தம்பிக்குப் பொருத்தமாக ஒரு பெண்ணை நீதான் சொல்லேன் பார்ப்போம்!

பெருமனைக்கிழத்தி: பெண்ணா......கூலவணிகர் பொன் வண்ணனார் வீட்டுப் பெண்...

மாசாத்துவான்: போடி பைத்தியம், பணக்காரர் அவர்—பெண் கருப்பாயிற்றே?

பெருமனைக்கிழத்தி: அப்படியானால், அணிவணிகர் வாணன்!

மாசாத்துவான்: அப்பப்பா...வயிரமும் பொன்னும் இருந்தால் போதுமா? எச்சிற் கையாலே காக்காய் கூட...

பெருமனைக்கிழத்தி: உம், முத்துவணிகர் முடியன் வீட்டு...[கோவலன் முகம் சுளிந்து நிற்கின்றான்]

மாசாத்துவான்: இல்லவே இல்லை. அவன் ஒழுக்கங் கெட்டவனாயிற்றே! இதோ பார், கோவலனுக்கு ஏற்ற பெண்ணாகவும் இருக்கவேண்டும்; அதோடு நம் குலத்திற்கும், செல்வத்திற்கும், பண்பாட்டிற்கும் ஒத்ததாகவும் இருக்கவேண்டும்...

பெருமனைக்கிழத்தி: அப்படியானால்......ஓகோ! பொருத்தமான இடந்தான் பிடித்திருக்கிறீர்கள்!

[கோவலன் விழித்துப் பார்க்கின்றான்]

மாசாத்துவான்: சொல்லேன் பார்ப்போம்!

பெருமனைக்கிழத்தி: நம் மணிவணிகர் மாநாய்கன் மகள் கண்ணகி—அப்படித்தானே!

[கோவலன் முகமலர்ந்து நகைவிழ்கின்றான்]

மாசாத்துவான்: தாய்க்கும் பிள்ளைக்கும் மகிழ்ச்சி தராத செயலில் இறங்குவேனா?

பெருமனைக்கிழத்தி: அப்பா, அவள் ஆயிரத்தெட்டு மாற்றென்ன—மாற்றறியாத பசும்பொன்னாயிற்றே! அவர் நமக்குத் தருவதாகக் கூறினாரா?

**மாசாத்துவான்:** நமக்கா தருவேனென்ருர்? கோவலனுக்குத்தான்—ஒரே பெண்—உயிராக வளர்த்து வைத்திருக்கிருர்.

[கோவலன் வெட்கத்தால் இடம்பெயர்கின்ருன்]

**பெருமனைக்கிழத்தி:** ஆமாம், நமக்குக் கோவலன் உயிரல்லவா...அதுபோல அவர்கட்கு உயிர் அவள்... இது பெற்ரேர்க்கு இயல்புதானே!

**மாசாத்துவான்:** நீ ஆகவேண்டியவற்றைச் செய்; நான் போய் மற்றவற்றைப் பார்த்துக்கொள்கிறேன்.

[பிரிந்து போகின்றனர்]

---

## மாநாய்கன் மனை

[மாநாய்கன் மனையடுத்த பூங்காவின் வெளியிருக்கையில் கண்ணகி உட்கார்ந்து ஆழ்ந்த நினைவில் இருக்கின்றாள். தேவந்தி அவளைத் தேடிவந்து]

தேவந்தி: கண்ணகி! என்ன, மாலைநேரத்தில் மகிழ்ச்சியாக இல்லாமல் என்னவோபோல இருக்கின்றாய்?

கண்ணகி: [பெருமூச்செறிந்து] ஒன்றுமில்லை தேவந்தி! ஒருநாளும் இல்லாத......என்னவோ ஒரு மாறுதல் என் மனத்தில் — என்ன என்றே சொல்லமுடியவில்லை......

தேவந்தி: [கண்ணை அகலத் திறந்து சிரித்த முகத்தோடு] ஆமாம் ஆமாம்—வயதுவந்த பெண்களுக்கு மாலை நேரம் வந்தால் இப்படித்தான் பெயர் தெரியாத நோய் ஒன்று உண்டாகும்!

கண்ணகி: [வியப்பும் ஐயமும் தோன்ற] அப்படியானால்... இது எனக்கு ஒரு நோயா?

தேவந்தி: உனக்குமட்டுமென்ன — பருவப் பெண்களுக்கு இந்த நோய் காலையிலே அரும்பும்; பகலெல்லாம் போதாயிருக்கும்; மாலையிலே மலர்ந்து போகும்! இப்படி நாடொறும் வரும்; போகும். அது உனக்கு இன்றுதான் தொடங்கியுள்ளது; இனி எல்லாம் நீங்கிப்போகும்!

கண்ணகி: இது என்ன நோய் தேவந்தி?

தேவந்தி: இதுவா?......மருந்து பிறிதில்லா நோய் என்பார்கள். இந்த நோய்க்கு மருந்தும் இந்த நோயேதான்! உனக்கு இது இப்பொழுதுதானே

வந்திருக்கிறது—இனிமேல் மருந்தும் கிடைக்கும்; ஏன் கவலைப்படுகிறாய்? இந்த நோய் போக்க ஒரு மருந்து உன் தந்தை கொண்டுவந்திருக்கிறார்!

கண்ணகி: என்ன தேவந்தி, அப்பா கடற்கரையிலிருந்து வந்துவிட்டார்களா? கலங்கள் எல்லாம் நன்றாக வந்தனவா?

தேவந்தி: கலங்கள் எல்லாம் நிறைந்த பொருள்களோடு வந்தனவாம். அதுமட்டுமா கண்ணகி? அப்பா உனக்கு விலைமதிக்கமுடியாத ஒரு மாணிக்கமும் கொண்டுவந்திருக்கிறார்!

கண்ணகி: தேவந்தி, நான்தான் விலைமதிக்க முடியாத மாணிக்கம் எத்தனையோ என் சிலம்பிலிட்டு வைத்திருக்கின்றேனே—என் தந்தையே இந்தச் சிலம்பிலுள்ள செல்வ வளத்தை வியப்பார்களே! இவை போதாவென்று இன்னும் வேறு மாணிக்கமா?

தேவந்தி: [நகைத்துக்கொண்டு] கண்ணகி, இதுபோன்ற மாணிக்கத்தை நீ இதுவரையில் பார்த்திருக்கமாட்டாய். வாழ்வில் ஒருமுறைதான் இது கிடைக்கும். சிலம்பிலுள்ள அந்த மணிகளையெல்லாம் நீ யாருக்காவது கொடுக்கலாம்—இந்த மாணிக்கம் உனக்கே உரியது; எவரும் அதனைத் தொடக்கூட நீ விடமாட்டாய். [கண்ணகியைப் பார்த்து புறுவலித்தல்]

கண்ணகி: தேவந்தி, எந்த ஊர் மாணிக்கம் அது?

தேவந்தி: பூம்புகார் மாணிக்கந்தான்; ஒரு பொருள் விழைந்து வேற்றூர் புகாதவர் வாழும் நம் புகாரில் கிடைக்காத மாணிக்கமா பிறநாட்டிலுண்டு? கரிகாலன் நாடு தந்த வளத்தினும் மேம்பட்ட செல்வம் இவ்வுலகில் வேறெங்கும் உண்டோ?

**கண்ணகி :** அப்பாவிடம் இருப்பதை நீ பார்த்தாயா? நான் அதை இப்பொழுதே பார்க்கவேண்டும்.

**தேவந்தி :** அதுவா......நான் அதனைப் பார்க்கவில்லை. நல்லநாளிலல்லவா உனக்கு அதனைத் தருவார்கள்! நாளை, இன்றைய நாளைவிட நல்லநாள். அதனை அப்போது பார்த்துக்கொள். அதற்குள் ஏன் இந்த விரைவு?

**கண்ணகி :** பார்க்கக்கூடவா நல்ல நாள் வேண்டும்?

**தேவந்தி :** ஆம், பார்ப்பதுகூட நல்ல நாளில்தான் பார்க்கவேண்டும். அந்த மணிபெறுவிழாவில் உனக்குக் கொடுக்கும் அம்மணியை நீ ஏற்கக் கூசித் துவள்வதை நான் பார்க்கத்தானே போகிறேன்!

**கண்ணகி :** தேவந்தி, நீ ஏதோ மணி மணியென்று மறைத்துப் பேசுகின்றாய்! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. இன்று நீ என்னிடம் பேசுவதெல்லாம் புதுமையாக இருக்கின்றது! என்னைக் கண்டதும் எனக்கு ஒரு நோய் வந்தது என்றாய்; அது தணிக்கும் மருந்தும் அப்பா கொண்டுவந்ததாகக் கூறினாய்; பின்னர் மருந்து மணியாயிற்று; மணி விழாவாயிற்று; விழவு இனி என்னவாகுமோ!

**தேவந்தி :** ஆம், கண்ணகி! மகிழ்ச்சிப் பெருக்கில் உரை பிறழப் பேசுகின்றேன். அதோ நம் தோழியர்கள் வருகின்றனர். தெளிவாக அவர்கள் கூறுவார்கள்.

[தோழியர் கண்ணகியும் தேவந்தியும் நிற்கும் இடத்தைச் சார்ந்து]

**முல்லை :** ஏய், வள்ளி! நம் கண்ணகி உனக்கு இளையவள்தானே?

ள்ளி : ஆமாம், எனக்குப் பதின்மூன்று, அவளுக்குப் பன்னிரண்டு!

ல்லை : அப்படியானால் அவளுக்குத் திருமணமாகப் போகிறதே...உனக்கு?

[கண்ணகி பேதுற்று நிற்றல்]

வள்ளி : எனக்கென்ன......உனக்குந்தானே இனிமேல் ஆகவேண்டும்?

ழல்லை : கண்ணகிக்கு ஆனால் எனக்கு ஆனதுபோலத் தான்!

வள்ளி : அப்படியானால் எனக்குந்தான்!

முல்லை : ஏண்டி, மணப்பிள்ளை அழகானவரென்றால் அவரைக் கண்ணனாக்கப் பார்க்கிறாயோ?

வள்ளி : இல்லை, கோவலன் என்பது கண்ணனின் மறுபெயர்தானே, அதனால்தான்......

[கோவலன் என்ற பெயரைக் கேட்டதும், கண்ணகி மயிர் சிலிர்த்து மெய்வியர்த்து நாணத்தால் நிலங்கிளைந்து நிற்றல்]

தேவந்தி : வள்ளி! முல்லை என்ன சொல்கிறாள்?

வள்ளி : இல்லை அம்மா...வந்து......கண்ணகிக்குத் திருமணம் வருகிறதல்லவா...அதைப்பற்றி...

தேவந்தி : ஆம், வருகிறது; உங்களுக்கு மகிழ்ச்சி தானே?

முல்லை : மகிழாமலென்ன! கிடைத்தற்கரிய கணவன் முருகன்போல கிடைத்திருக்கும்போது...

தேவந்தி : 'முருகன்போன்ற கணவன் எனக்கல்லவா உரியவன்; கண்ணகிக்கா?' என்று உறவு மொழிந்தாளோ, வள்ளி?

வள்ளி: முல்லை எப்பொழுதும் குறும்புக்காரி!

தேவந்தி: உன் குறும்புக்கு அவள் குறும்பு சற்றுச் சளைத்ததுதான்!

[சண்பகம், எழிலி, குலக்கொடி மூவரும் வருகின்றனர்]

சண்பகம்: முல்லை! கண்ணகி இங்கு இருக்கிருளா?

எழிலி: தேவந்தியை விட்டு அவள் பிரிவாளா என்ன?

தேவந்தி: ஆமாம், என்னை மட்டும் என்ன, அவள் நம் எல்லோரையும் பிரியும் காலம் வந்துவிட்டது!

குலக்கொடி: என்ன! அவள் எப்படி நம்மைப் பிரிந்திருப்பாள்? அவளைப் பிரிந்து நாம்தான் எப்படி...

சண்பகம்: ஆமாம், நீயும் கூடவே போயேன்; கண்ணகி கணவனோடு...

தேவந்தி: போதும் போதும்—இப்பொழுதுதான் ஒரு பூசல் ஒருவாறு முடிந்தது...

வள்ளி: ஏய், முல்லை! குலக்கொடி! சண்பகம்! எல்லோரும் வாருங்கள், அவளை நகைசெய்து கூத்தடிப்போம்......மணப்பெண்ணல்லவா?

தேவந்தி: நகைத்தல் வேண்டாம், பெருமை சொல்லிப் போற்றிக் கும்மியடித்துப் பாராட்டுங்கள்!

வள்ளி: கண்ணகி! இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி ஒன்றுகூடி இருக்கப்போகிறோம்!

கண்ணகி: [எல்லோரையும் பார்த்து] நீங்கள் என்றைக்கும் இப்படியே விளையாடிக்கொண்டு இருக்கலாம்!

தேவந்தி: ஏன் இப்படி மணப்பெண்ணைவிட வெட்கப் படுகிறீர்கள்? நன்றாய்ப் பாடியாடுங்களேன்!

எல்லோரும்:

கும்மியடிப் பெண்கள் கும்மியடி—உங்கள்
கோதை குழையவே கும்மியடி

கன்னித் தமிழ்மகன் சென்னியன்றோ—அவன்
பொன்னி வளம்பாடிப் பொள்ளெனவே
தட்டுத் தடவென்று தட்டுங்கடி—தாளம்
கெட்டு விடாமலே கொட்டுங்கடி

மண்ணில் புகழ்மிக்க மாநாய்கன்—அவன்
கண்ணிற் கருமணி கண்ணகியை
எண்ணில் தவம்செய்து பெற்றாண்டி—அவள்
ஈராறு ஆண்டுகள் எய்தினளே

கானத்து மானைப்போல் காட்சியடி—யாரும்
காணவே நில்லாமல் கரந்திடுவாள்
வானத்து மீனில் அருந்ததியை—இங்குக்
காணில் அவளிந்தக் கண்ணகியே

பூவுற்று வாழும் திருமகளை—என்றும்
காமுற்றுக் கண்டு கழல்பணிய
காண விழைபவர் கண்ணகியைக்—கண்ணால்
கண்டு திறங்கண்டு போவரன்றோ

கண்ணகி: தேவந்தி......போதும் போதும்! எனக்கு ஒரே வெட்கமாக இருக்கிறது. என்னைச் சற்று தனித்து விடுங்கள்.

[கண்ணகி நாணத்தால் அக்கூட்டத்தினின்றும் ஓடிப்போதல்; எல்லோரும் அவளைப் பின்தொடர்தல்]

## மாசாத்துவான் மனையின் திருமணக்கூடம்

[திருமணச் சிறப்பு — கண்கொள்ளாக் காட்சி — முரசு, முருடு, பணிலம் முதலியன முழங்கல் - மாமுதுபார்ப்பான் மணம் செய்துவைத்தல் — மாசாத்துவானும் அவன் மனைவியும் ஒரு புறம் — மாநாய்கனும் அவன் மனைவியும் ஒரு புறம் மணமக்களைக் கண்டு களித்தல்]

மாமுதுபார்ப்பான் : [மங்கல அணியை எடுத்து வட்டிலில் வைத்து] எல்லோரும் தொட்டு வாழ்த்துங்கள்......

மற்றொரு பார்ப்பான் : இதோ நெல், மலர், சுண்ணப் பொடி...இறை பேணி இடுதற்கு எல்லோரும் எடுத்துக்கொள்ளுங்கள்......

கூட்டத்தில் ஒருவர் : ஐயா, இந்தக்காட்சியைப் பார்க்க நம் கண்கள் எத்துணையோ தவம் செய்திருக்க வேண்டும்!

மற்றவர் : ஆமாம், கண்கொள்ளாக் காட்சி! பிள்ளை அழகைப் பார்த்தால் பெண்ணழகைப்பார்க்கமுடியவில்லை; பெண்ணழகைப் பார்த்தால் பிள்ளையைப் பார்க்கமுடியவில்லை!

ஒருவர் : பிள்ளையையோ பெண்ணையோ நான் முழுதும் பார்க்கமுடியவில்லை!

மற்றவர் : ஏனையா, கண் பழுதோ?

ஒருவர் : ஆம் ஐயா, எனக்குந்தான் அப்படி! ஒவ்வொருவர் வடிவத்தையும் முழுதுமாக மனத்தில் உருவாக்கிப்பார்க்க முடியவில்லையே! என்ன அழகு! என்ன ஒளி! அதோடு, அப்பப்பா எங்கே

தான் கிடைத்தனவோ, சுடர் விளக்குப் போல மணிகள்! அவற்றை வேறு பூட்டி...கண் போய் விடும் போலிருக்கிறது!

மாமுதுபார்ப்பான்: அப்பா, கோவலா! இதோ இந்த மண அணியை எடுத்து, உங்கள் குலதெய்வத்தை நினைத்துக்கொண்டு கண்ணகிக்குச் சூட்டு!

யாவரும்: வாழ்க! வாழ்க!! வாழ்க!!!

[மங்கல வாச்சியம் முழங்கல் – மலர்மாரி பொழிதல் – கோவலன் மங்கல அணி அணிவித்து, கண்ணகியின் கைத்தலம் பற்றித் தீ வலம் வருதல்]

ஒருவர்: ஆகா, கோவலனும் கண்ணகியும் வலம் வரும் காட்சியைக் கண்டவர்கள் கண்கள் இனி எதையுங் காணக்கூடாதையா! [தும்முதல்]

ஒருவன்: ஏனையா, தும்மல் வந்தால் அடக்கிக்கொள்ள வேண்டாமா? நல்ல நேரத்தில் இப்படி வெடி வெடிப்பதுபோல்...

மற்றவர்: அதுபோகட்டும்; நாம் என்ன தவம் செய் தோமோ, கதிர் ஒருங்கிருக்கும் இந்தக் காட்சியைக் காண!

ஒருவர்: ஆம், வணிகவேந்தர் மக்கள் மணத்தைக் காணத் தவந்தான் செய்திருக்கவேண்டும்!

[கூட்டம் கலைதல்]

---

## பள்ளியறைக் காட்சி

[துஞ்சுக் கட்டில், பவளத்தாலான குறுக்குச் சட்டம், யானைத் தந்தக் கால்கள்—மேல்கட்டு நீலப்பட்டு, முழுவதும் முத்துத் தோரணம் – பூப்பந்தல், பல்வகை மணப்பொருள் —உணவு வகை எல்லாம் நிறைந்த பள்ளியறையுள் பெண்கள் பலர் – மான் நோக்கினர், பொன்மேனியர், வாழ்த்துரையினர் — பாட்டினர் — ஒசிந்த பார்வையர் — விளக்கினர் – சுண்ணத்தர் – பாலிகையுடையவர் – குடநீர் உடையவர் – எல்லோருமாய்க் கோவலனையும் கண்ணகியையும் அமளியில் அமர்த்தி]

1. காவிடைப் புறவுபோலக் கவவுக்கை நெகிழ்தலின்றி
வாவியுள் வாழுமன்றில் வாழ்ச்சியுந் தழுவியுங்கள்
ஆவியிற் சிறப்பமற்றோர் அகற்சியைக் கருதித்தீது
மேவிடா வாழ்க்கைபெற்று மேலவர் புகழவாழி.

2. வாழிய வாழிவாழி வளர்பிறை யன்னநீவீர்
தாழிரும் ஆலும்போலத் தழைத்துநல் லறுகுமாக
ஊழிதோ றூழிவாழி உலப்பிலா துவகையோங்க
வாழிய வாழிவாழி வளம்பல பெற்றுவாழி.

[இருவரும் நிற்க எல்லோரும் போகின்றனர். கோவலனும், கண்ணகியும் உரையாடல்]

**கோவலன்:** (நயந்து) கண்ணகி! கண்ணகி......

[கண்ணகி நாணத்தோடு ஏன் என்பதுபோல் சற்று நிமிர்ந்து பார்த்துக் கவிழ்ந்துகொள்ளுதல்; கோவலன் அவளை அருகமர்த்திக் கைத்தலம்பற்றி வளைதிருத்தி, கையின் அழகு கண்டு வியந்து]

**கோவலன்:** கண்ணகி! என்ன உன் கைவண்ணங் காணும் என் கண்கள் தாமரையின் செம்மையை எள்ளுகின்றன! காந்தளைப் பழிக்கின்றன!

கண்ணகி! இதோ இந்தக் கையிலுள்ள வயிர மணிகள் தம் வெண்மைகெட்டு நின் நிறமேற்றுச் சிவந்து காட்சியளிக்கின்றனவே பார்த்தாயா! இப்பச்சை உன் கைச்செம்மையால் கருமணி ஆகின்றதே! இந்த மாணிக்கம் செம்மையில் போட்டியிட்டுத் தன்னிடம் உயிர்ப்பு இல்லையே என்று ஏங்குகின்றதே! கண்ணகி...இக்கையைத் தீண்ட [கண்ணில் ஒற்றிக்கொண்டு] நான் என்ன மாதவம் செய்தேனே!

கண்ணகி: போங்கள் அத்தான்! நகைமொழி பேசி இகழ்கிறீர்கள். [கையை வாங்கிக்கொள்கின்ருள்]

கோவலன்: கண்ணகி...என்னை எங்குப் போகச்சொல் கிருய்? நின்னையகன்ருல் நான் நீரகன்ற மீனல்லவோ? [மீண்டும் அவள் இரண்டு கைகளையும் பற்றிக் கொள்கின்ருன்]

கண்ணகி: [நலேகவிழ்ந்தவண்ணம் சற்று நிமிர்ந்து] அத்தான்! நீங்கள் உயர்ந்த அழகு உடையவர்கள்.

கோவலன்: சேச்சே......உனக்கேற்ற அழகனு நான்? அப்பப்பா! உன் அருகில் நிற்கும் அருகதைகூட...

கண்ணகி: அத்தான்......போதும் போதும் — என்னிடம் ஏன் இப்படி வம்பு செய்கின்றீர்கள்?

கோவலன்: வம்பா? இல்லை கண்ணகி! இயற்கையாயமைந்த இந்த நாணமே உனக்கு இவ்வளவு அழகு தரும்போது ஏன் இத்தனை அணிவகைகளைப் பூட்டி வேறு உன்னை வருத்துகின்ருர்கள்!

கண்ணகி: ஆமாம் அத்தான்! நான்கூட நினைத்தேன். தாங்களே எனக்கு அணி. தங்களிற் சிறந்த வேறு அணி எனக்கென்ன இருக்கின்றது?

**கோவலன்:** அப்பா! வாய் திறந்து ஒரு சொல் சொன்னாலும் ஆணித்தரமாகச் சொல்கின்றாயே! எனக்கா அவ்வளவு பெருமை......கண்ணகி! உனக்கு நான் அணியென்றால் நீ என் மார்பில் தவழுங் கோதை! [தழுவுதல்]

**கண்ணகி:** அத்தான்! நீங்கள் சற்று விலகியிருங்கள். உங்கள் மேனி பட்டால் நான் இன்புறுகின்றேனா துன்புறுகின்றேனா...ஒன்றும் புரியவில்லை. உடம்பெல்லாம் வியர்க்கின்றது!

**கோவலன்:** கண்ணகி! உனக்கு இந்த அணிகலச் சுமை வேண்டாம். இவைதாம் வியர்க்கக் காரணம். இவற்றை எடுத்துவிடுகின்றேன். உனக்குஎல்லாம் இனிதாகிவிடும்.

**கண்ணகி:** அத்தான்......நானே எடுத்துக்கொள்வேன் ......எனக்கு நான்......

**கோவலன்:** கண்ணகி! நீ ஒரு தெய்வப் பிறப்பு...... இனிமேல் எனக்குப் புத்தேள் உலகும் அப்புரை படா இன்பமும் வேண்டாம். நின் தோள் துயில் ஒன்று போதும்!

**கண்ணகி:** யானல்லவோ அங்ஙனம் கருதினேன். நீங்கள் என்னையா.....போதும்......புகழ் உரைகள் வேண்டாம்.

**கோவலன்:** புகழுரையா......கண்ணகி! உனக்கமைந்த உறுப்புகட்கு இந்த நிலப்பொருள் உவமையாகா. கண்ணுதல் பூணும் சிறுபிறை நின் திருநுதல் என்றால் அது அக்கடவுட்கு அன்றோ பெருமை

அளிக்கும்! கந்தன் கைவேல் நின் மலர்விழி என்ருல் அதில் அவனுக்கு ஒரு பீடுண்டு! காமன் கைவில் நின் கொடும் புருவம் என்ருல் அவன் மகிழ்ச்சியை அளந்துரைக்க யாரால் ஆகும்......

கண்ணகி: அத்தான்! தாங்கள் என்னை இப்படித் தெய்வமாக்கித்தான் மகிழவேண்டுமா? வேண்டாம் வேண்டாம். என் புகழ் கேட்கத் தாளேன், அத்தான்!

[கோவலன் அவள் மடியில் சாய்ந்தவாறு வானத்து எழுந்து வரும் மதியையும் அவள் முகத்தையும் மாறி மாறி நோக்கி]

கோவலன்: கண்ணகி......அந்த வெண்ணிலா.....

கண்ணகி: ஆம், தன் தண்ணொளியாகிய பாற்கடலில் இந்த உலகை மிதக்கச் செய்கின்றது!

கோவலன்: பாவம்! அதற்கு அந்தக் கறை மட்டும் இல்லாதிருந்தால்......

கண்ணகி: அந்தக் கறையில்லாதிருந்தால், அதனழகிற்கு ஓர் ஈடு இல்லைதான்!

கோவலன்: [பெருமூச்சு விட்டு] உம்..கண்ணகி! அதற்கு அந்தக் கறையோடு ஒரு குறையுமுண்டு!

கண்ணகி: ஆம், வளர்வதும் தேய்வதுந்தானே? ஒரு நிலையுற்று இருந்தால் மக்களுக்குச் சலிப்பேற்படும் என்றுதான் வளர்ந்து குறைகின்றது!

கோவலன்: ஆம், கண்ணகி! இந்தக் குறையும் அதற்குண்டு என்பதை இப்பொழுதுதான் நான் உணர்கின்றேன்!

கண்ணகி: குறைவா? நிறைவன்றே அது!

கோவலன்: கண்ணகி! இம்மதி தன் முழுமை கண்டு உலகு சலிக்குமென்று கருதிக் குறைகின்றது, வளர்கின்றது! அதுவுமன்றி அதற்குக் கலைதற்கரிய ஒரு கறையுமுண்டு. அப்பப்பா, பலர் காணும் நாணின்மையும் வேறு. என்ன அறிவீனம்!

கண்ணகி: அறிவீனமா! என்ன சொல்கிறீர்கள்?

கோவலன்: அந்த நிலவிற்கு இது ஈடென்று நினைத்தது தவறல்லவோ? யான் ஒருவனே கண்டுகண்டு கடலென்ன விம்மி மகிழும் கறைபடா மதியை, குறையில்லாத் திங்களைப் பலர் காணத் தோன்றுப் பசுங்கதிரைச் சலிப்பளியாப் பெரு நிலவை அதனோடு ஒப்பிடவும் நினைத்தேனே, என்ன மடமை!

கண்ணகி: அத்தான்...எந்த மதி அது?

கோவலன்: இந்த முகமதிதான் அது! [முத்தமிடல்]

## மருவூர்ப்பாக்கத்துள்ள ஒரு பொழில்

[பொழிலின்பந் துய்க்க மாதவியின் அன்னை சூழலில் வாழும் கணிகை ஆயிரவர் வருகை உணர்ந்த நகர நம்பிகள் கூடியிருத்தல். எதிர்பாராதவண்ணம் கோவலன் வருகை நேர்ந்தது கண்ட அவர்கள், பல திங்கள் தம்மைப் பிரிந்து மறந்த அவனைக் குறைகூறி நகைத்தல்]

**கந்தன்:** ஏய்! நம் கோவலன் வருகின்றான். அவனைப் பார்க்காமல் இப்பக்கம் திரும்பிக்கொள்வோம்!

**மதிவாணன்:** கந்தா! கோவலன் நம்மை அறவே மறந்துவிட்டானே!

**கந்தன்:** ஆமாம்! அவனுக்கு இப்பொழுது ஒரே ஒரு உலகந்தான் தெரியும்!

**கடம்பன்:** ஆமப்பா! அவன் இசை உலகத்தையே மறந்து வாழும்போது நம் உலகம்வேறு நினைவிருக்குமா?

**மதிவாணன்:** நினைவிருக்காதுதான்; உனக்கு அப்படி ஒரு மனைவி கிடைத்தால் அப்பொழுது தெரியும் எல்லாம்!

**கடம்பன்:** என்ன, அப்படிச் சொல்லிவிட்டாய்? நானென்றும் கோவலன்போல அதில் அதில் அப்படி அப்படி மூழ்கிப்போகமாட்டேன். நான் எங்கும் போவேன், எல்லாவற்றிலும் இருப்பேன்!

**கோவலன்:** பெரியோர்களே! வணக்கம். என்ன குறைபுராண அரங்கேற்றமாகின்றதோ?

எல்லோரும் : [நீடுக்கிட்டு ஒன்றும் அறியாதவர்போல்] ஓகோ! கோவலனு? வாப்பா, வா! என்ன ஒரேயடியாக மாறிப்போய்விட்டாய்?

மதிவாணன் : உனக்கு எங்கள் நினைவு அற்றுவிட்டதா, அல்லது எங்களை நினைக்க நேரம் இல்லையா?

கோவலன் : அப்பப்பா! எத்தனைக் குற்றச்சாட்டுகள்? என்னைச் சற்றுப் பேசவிடுங்கள்! எல்லாம்......

கடம்பன் : பேசுவாய் அப்பா பேசுவாய்! மறந்த குற்றத்திற்கு அமைதி கூறவேண்டாம்...தனிக் குடும்பமெல்லாம் எப்படி இருக்கிறது? கூலவாணிபம் செம்மையாக நடைபெறுகிறதா?

கந்தன் : வாணிபத்தைப்பற்றி ஏண்டா இப்பொழுது கேட்கிருய்? பதினுறு கப்பல் புதிதாக வாங்கியுள்ளான். பெரும் பொருள் குவிக்கிருன், பேரறம் புரிகிருன்.

மதிவாணன் : ஆறு திங்கட்குப் பிறகு வெளியில் வந்திருக்கிருயே, நீ தேவனுகிவிட்டாயோ? இந்த ஆறு திங்கள் உனக்குப் பகலா இரவா? கடையும் மனைவியும் தவிர வேறு...

கந்தன் : என்ன கேள்வி இது? அவன் பிரமன் ஆண்டுக்குப் போகாமல் தேவனேடு நின்றுனே, அதைச் சொல்! உன்னைப்போல் அவன் வாணிபத்தை மறக்காதிருக்கிருனே அதுபோதும்!

கடம்பன் : கோவலா! நீ எந்த ஆண்டிலாவது இரு; எங்கள் வரிசையில் உன் இசையையும் சேர்த்து விடாதே!

[தொலைவில் வரும் பெண்கள் கூட்டத்தைப் பார்த்து]

ந்தன் : ஏய்! காமன்படை புறப்பட்டுவிட்டது; நீங்கள் எல்லோரும் புகலிடம் தேடிக்கொள்ளுங்கள்!

கோவலன் : ஓ! அந்த ஆயிரவர் திருக்கூட்டமா? ஏய்! அவர்கள் இங்கு வருவது தெரிந்துதான் நீங்கள் இங்கு...

டம்பன் : கோவலா! நீ ஏன் இங்கு வந்தாய்? உனக்கு ஏதாவது இக்கூட்டத்து அழைப்பு உண்டோ?

[பெண்கள் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டே]

கோவலன் : உம்.. அழைப்புதான்! யாரப்பா அவள்? கூனியாக இருந்தும் அழகெல்லாம் அப்படி அப் படியே அமையப்பெற்றிருக்கிருள்!

மதிவாணன் : இவள் மாதவிக்குத் தோழி, வயந்தமாலை! உனக்கேன் இந்த ஆராய்ச்சி? மணமான நீ இவர் களைப்பற்றிப் பேசக்கூடாது.

கோவலன் : ஆகா! என்ன சொன்னுய்? மணமான எனக்குத்தான் அழகு துய்க்கத் தெரியும். உங்கட்கு என்ன தெரியும் அழகுணர்ச்சியோடுபார்த்தால்...

மதிவாணன் : கோவலா! நாங்கள் உன்னைப்போல் செய லோயும் பொறியால் துய்ப்பவர்கள் அல்லோம்; எங்கள் கற்பனைத் திறத்தால் புலன்விரித்து எத் தகைய இன்பத்தையும் எண்ணியாங்கு எண்ணி இன்புறுவோம்! எங்களுக்கா என்ன தெரியும் என்று கேட்கின்ருய்? நீ எதைத் தெரிந்து கொண்டாய்?

கோவலன் : [பெருநகைப்போடு] நீங்கள் சுவைப்பதெல் லாம் குருடர்கள் யானை கண்டதுபோலத்தான்! கண்டதே காட்சி என்பீர்கள்! கானல் நீர் வேட்கை தணிக்குமா?

கடம்பன் : வேட்கை தணிக்குமோ தணிக்காதோ, எங்கட்கு இவர்கள் காட்சிதான் பேரின்பம்! பெரு மகிழ்ச்சி!

கோவலன் : காட்சி இன்பமோ கருத்து இன்பமோ... இருக்கட்டும். அதுபற்றிச் சொன்னால் வருந்த மாட்டீர்களே?

நண்பர்கள் : இல்லை, சொல் பார்ப்போம்! எதுவேண்டு மானாலும் சொல்!

கோவலன் : நீங்கள் கற்பனை மனத்தால் துய்க்கும் அந்த இன்பம் தெங்கம்பழம் கொண்ட நாய் பெறும் இன்பத்தை ஒத்தது! நான் பொறியால் நுகர்வது கனி பெற்ற கடுவன் காணும் இன்பத்தைப் போன்றது!

கடம்பன் : ஏய்! இவனை இப்படியே பேசவிட்டால் நம்மை இனி நாயாக்குவான், நரியாக்குவான்! வாங்கடா போவோம்.

[அனைவரும் புறப்பட்டுப் பெண்கள் கூட்டத்தை நோக்கிப் போதல்]

மதிவாணன் : அதோ அக்கூட்டத்தருகிற் செல்வோம், கண்ணிற்கும் காதிற்குமாவது விருந்து கிடைக்கும்!

கோவலன் : பெரிய இடம், அரசியல் தொடர்புடையவர் கூட்டம்...கொஞ்சம் அடக்கமாகவே...

மதிவாணன் : பெரிய இடமென்றால் இங்கெதற்கு வருகின்றார்கள்–இவ்வளவு பூவோடும் பொலிவோடும், மணியோடும் அணியோடும்? இசையோடும் கூத்

தோடும் இங்கு வந்தது நாம் கண்டு சுவைத்தற்குத் தானே அன்றி அவர்களுக்குள் ஒருவரை ஒருவர் கண்டு களித்தற்கோ! போடா, இப்பொழில் இரு பாலார்க்கும் பொது!

கடம்பன்: ஆ! அப்படிச் சொல். நீ ஒருவன்தான் உண்மை தெரிந்தவன்!

[பெண்கள் கூட்டத்தினின்றும் யாழொலி கேட்டல்]

கந்தன்: அதோ! அவர்களுக்கிடையில் அழகாகப் பாடி யாழ் மீட்டும் அந்தச் சிறுமி யார்?

கடம்பன்: அவள்தான் தலைக்கோலரிவையின் மகள் மாதவி! சிறுமி என்றாலும் நன்றாக ஆடுவாள். குலவிச்சை கல்லாமல் பாகம் பெறும் என்பதை இவளிடம் காணலாம். இன்னும் ஓரிரு ஆண்டு களில் இவள் அரங்கேற்றத்தை எதிர்பார்க்கலாம்!

கோவலன்: விளையும் பயிர் முளையில் தெரியும் என்பார் கள். என்ன நுணுக்கம்! வார்தல், வடித்தல், உந்தல் எல்லாம் தடுமாற்றம் இல்லாமல் தெளிவாக இருக் கின்றன!

மதிவாணன்: தெளிவுதான்...நீ இந்த இசையில் ஈடு பட்டு இங்கேயே நின்றுவிடாதே; இரவாகிவிட்டது புறப்படுவோம்......வந்து நெடுநேரமாயிற்று.

[பொழிலைவிட்டு நண்பர்களுடன் கோவலன் புறப்பட்டுப் போதல்]

## இல்வாழ்க்கை

[தனிமனையில் கோவலனும் கண்ணகியும் இல்லற வாழ்க்கை நடத்துதல்]

**கோவலன்:** கண்ணகி!

**கண்ணகி:** ஏனத்தான்! இதோ வந்துவிட்டேன். எங்கே, தங்களை நெடுநேரமாகக் காணோமே!

**கோவலன்:** மருவூர்ப்பாக்கம் போனேன். அங்கு ஒருவன் யாழில் நைவளம் இசைத்தான். அச்சுவையில் ஈடுபட்டு என்னையும் மறந்து அங்கு நின்று விட்டேன்!

**கண்ணகி:** அப்பப்பா! அந்த இசை என்னையும் மறக்கச் செய்ததானால் அது பொல்லாததுதான்! அந்தக் கலை எனக்குத் தெரிந்திருந்தால் என் அத்தானை வேறிடம் பெயராது வைத்திருப்பேன்; உம்-என்ன செய்வது!

**கோவலன்:** கண்ணகி! உன் வாய் மொழியிற் சிறந்ததா, அந்த யாழிசை?

**கண்ணகி:** பொய்! நீங்களே இப்போதுதான் அந்த யாழுக்கு மயங்கி நாழிகைக் கணக்கில் நின்றேன் என்றீர்கள்!

**கோவலன்:** நீ இல்லாதபோதல்லவா அது வென்றது! நீ அருகிருந்து பேசும்போது எந்த யாழும் என்னை வெல்லாது எந்தக் குழலும் என்னுளம் குழைக்காது!

**கண்ணகி:** உம்...... முகமன் பேசுகிறீர்கள் அத்தான்! இரவு பத்து நாழிகையாகின்றதே!

**கோவலன்:** ஆம், உறங்கப்போகலாம்.

**கண்ணகி:** அத்தான்! பால் அருந்தவேண்டாமா? நீங்கள் வருவீர்கள் வருவீர்கள் என்று வழி பார்த்து நின்றதனால் பால் அட மறந்துபோனேன்!

**கோவலன் :** அதனால் என்ன? இப்பொழுது காய்ச்சு, போதும்! சிலதியர்...

**கண்ணகி :** அவர்கள் வேண்டாம். இதோ, ஒரு நொடியில் யானே அட்டுக் கொண்டுவருகிறேன்.

[கோவலன் யாழ் மீட்டுகின்றான்—கண்ணகி மெய்மறந்து இசை கேட்டு மயங்கிப் பால் வற்றிப்போனதைக்கூடத் தெரிந்து கொள்ளவில்லை. கோவலன் யாழை வைத்துவிட்டு அவளிடம் வர, கண்ணகியும் நிமிர்ந்து பார்த்துத் துணுக்குறுதல்]

**கோவலன் :** கண்ணே! கண்ணகி! என்ன திரட்டுப் பாலா?

**கண்ணகி :** இல்லையத்தான்! பால்தான் காய்ச்சினேன். தங்கள் இசை என்னை நிலைபெயராது செய்து விட்டது. அதனால் பால் முழுதும் சுண்டிவிட்டது.

**கோவலன் :** அட்டாலும் பாலின் சுவை மிகுமன்றிக் குன்றாதே!

**கண்ணகி :** அத்தான்! உங்கள் இசை, என் வழியாகப் புகுந்து பாலையும் கட்டியாக்குமென்றால் அதன் எல்லையறிந்தாரை என்ன என்ன செய்யுமோ!

**கோவலன் :** கண்ணின் மணியே! இசையைச் சுவைக்கும் தோய்ந்த அறிவும், இப்பெரிய உள்ளமும் உனக்கிருப்பதுவே போதும்; அதுவே யான் பெற்ற பேறல்லவா?

**கண்ணகி :** அத்தான்! இதோ, உங்களிசை கூட்டிய பாற்கட்டி!

**கோவலன் :** கண்ணகி! இதில் தோய்ந்தது எனது இசைமட்டும் அன்று; உன் அன்புங்கலந்து உருப் பெற்ற தீம்பாற் கட்டியன்றோ இது!

**கண்ணகி :** அப்படியானால் உண்டு மகிழுங்கள்!

**கோவலன் :** நான் மட்டுமா? அமளியில் அமர்ந்து உண்போம்; நீயும் வா!

## விருந்தோம்பல்

[ விடியற்காலை—கோவலன், வீட்டில் ஓர் இருக்கையிலிருந்து படித்துக்கொண்டிருத்தல் ]

மாடலன் : தம்பி...கோவலா ! [ கதவைத் தட்டல் ]

கோவலன் : வாருங்கள், வாருங்கள் ... [ வணங்கிய வண்ணம் ] அமருங்கள்.

மாடலன் : என்ன, காலையில் நூலுங் கையுமாக இருக்கின்றாய் ? பரமாகமமா ?

கோவலன் : இல்லை ஐயா ! இது இசை நுணுக்கம் என்ற நூல். தமிழர்களின் இசைப்புலமையின் நுட்பம் அறிதற்கு இது ஓர் அளவுகோல்.

கண்ணகி : [ தூண் மறைவில் நின்றுகொண்டு ] வாருங்கள்.

மாடலன் : வருகிறேனம்மா.

கோவலன் : என்ன இவ்வளவு காலையில் ?

மாடலன் : உன் அப்பா உன்னிடம் [ தான் கொண்டுவந்த பல பொற்பொதிகளைக் காட்டி ] இவற்றை வணிக முதலாகக் கொண்டு வாணிபத்தைப் பெருக்கச் சொன்ஞர்கள். கொடுத்துப்போக வந்தேன்.

[ ஆட்கள் பொதிகளை உள்ளே எடுத்துவைத்தல் ]

கோவலன் : அப்பா, அம்மா வரவில்லையா ?

மாடலன் : என்னப்பா ! இதோ அருகில்தானே இருக்கிருர்கள். உங்கள் தனி வாழ்க்கையின் செம்மையையும்,உன்வாணிபத்துறையின் முற்போக்கையும் கண்டு களிக்கத்தானே இந்த ஏற்பாடெல்லாம் ! உன்னைவிட அவர்கட்கு நின்னைக் காணத் துடிக்

காதா? சற்று நீ உன் மனைவியோடு இன்புற்று இருக்கவும், குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு உலகியல் தரும் அறிவோடு வாணிபத் துறையின் இயல்பைப் புரிந்துகொள்ளவும் பெருவாழ்வு வாழவுந்தானே தனித்து வைத்துள்ளோம். நீங்கள் தனியாக இருந்தாலும் எங்கள் கண்ணும் கருத்தும் இங்குதானே! உங்களையன்றி எங்கட்கு அன்பு பாராட்ட வேறு யாராவது உண்டா? கண்ணகி மிகச் சிறிய பெண். அவளை அன்போடு வைத்துக் கொள். தனித்துவைத்து நெடும்பொழுது எங்கும் கழிக்காதே. நான் வருகிறேன்.

கோவலன்: வருகிறீர்களா? இருங்கள், இருங்கள்... காலை வேளையில் எங்கள் வீட்டில் உணவருந்தா மலா?

மாடலன்: உண்மையெலென்ன! உன்னைக் கண்டதே எனக்கு அமுதம் உண்டதைப்போல மகிழ்தரு கின்றது.

[ மகிழ்ச்சிப் பெருக்கில் கண்ணீர்ப் பெருக்கல் ]

கோவலன்: கண்ணகி!

கண்ணகி: இதோ உண்டி கொண்டுவந்துவிட்டேன்.

கோவலன்: பார்த்தீர்களா...

மாடலன்: கோவலா! நீ மட்டும் கொடுத்துவைத்த வன் அல்லன்; நானும், உன் குடும்பமும்—ஏன், காவிரிப்பூம்பட்டினமும்—இல்லை, இல்லை இந்தச் சோழ நாடே...

கோவலன்: ஏனிப்படிப் புதுமை பேசுகின்றீர்கள்?

மாடலன்: இல்லை தம்பி! சங்கிற்குத் தெரியாது தான் பெற்ற முத்தருமை, மானிற்குத் தெரியாது தன்னிட

முள்ள நானத்தின் மணம் — அதுபோலத்தான் நீயும்!

**கோவலன்:** ஐயா! நான் இன்னும் உணவருந்தவில்லை...கண்ணகிக்கு ஏதாவது விருந்து கண்டால் போதும், என்னையே மறந்துபோவாள்; அதுவும் தங்களைப் போன்ற அறவோர் என்றால் தன்னையும் மறந்துவிடுவாள்!

**மாடலன்:** இல்வாழ்க்கையின் நோக்கம் அதுதானே! செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருத்தல் தானே இல்லறத்தின் கடன்; அதைத்தான் அவள் செய்கிறாள்!

**கோவலன்:** ஆம், நான் குறையென்றா சொல்கிறேன்?

[கண்ணகி தங்கத்தட்டு இரண்டில் உணவு கொணர்ந்து வைத்தல். மாடலனும், கோவலனும் இன்பக்கடல் மூழ்கினவன்ன உண்ணுகின்றனர். இருவர் முகமலர்ச்சியையுங் கண்டு தானும் உண்டதாக மகிழ்கின்றாள், கண்ணகி. மாடலன் பெருமூச்சு விடுதல்]

**கோவலன்:** ஐயா! என்ன இப்படி...

**மாடலன்:** ஒன்றுமில்லை; இந்த மகிழ்ச்சியை உங்கள் பெற்றோர் அல்லவா வந்து கண்டு மகிழவேண்டும்!

**கோவலன்:** ஏன், நானே அவர்களை அழைத்துவந்தால் போயிற்று!

**மாடலன்:** ஆம், அப்படியே செய். நான் வருகிறேன்.

[மாடலன் போதல்]

## கரிகாலன் அரண்மனை—அரசவை

கரிகாலன்: அமைச்சரே! அரங்கு நிறுவி எழினி அமைத்தாயிற்ரு?

அமைச்சர்: ஆம் அரசே! இனித் தலைக்கோலெடுத்து வீதி வலம் வந்து ஆடல் தொடங்கலாம்.

கரிகாலன்: தலைக்கோலிற்கு என்ன செய்தீர்?

அமைச்சர்: இமயப் படையெடுப்பில் நம் பட்டத்து யானை பறித்த பகைவர் குடைக்காம்பில்தலைக்கோல் ஒன்று இயற்ற எண்ணினேன்! அவர்கள் நம்மொடு பொரத்தக்க, அத்துணைப் பீடுடையவரல்லரே என்று அக்குடைக் காம்புகளை விரும்பிலேன் — அவந்தி நாட்டரசன்பால் கொண்ட குடையையும் எண்ணினேன். வச்சிரநாட்டு வேந்தன் குடையையும் நினைத்தேன். முத்துப் பந்தரும் தோரண வாயிலும் கொடுத்து நட்புக் கொண்டதால் அவை அத்துணைச் சிறந்தவல்ல என்று அவற்றையும் விடுத்தேன்.

கரிகாலன்: இப்படியே ஒவ்வொருவர் வீரத்திலும் மாசு கற்பித்தால் குடையேது? கோல் செய்யக் காம் பேது?

அமைச்சர்: ஆம் வேந்தே! ஆனால், நம்மோடு ஒப்பாக நின்று வெண்ணிப் பறந்தலையில் எதிர்த்துப் பொருதபோது தாங்கள் சினந்து ஓச்சிய வேல் தன் மார்பில் ஊடுருவி முதுகிலும் பாய, அது புறப்புண் ணென்று நாணி வடக்கிருந்து உயிர்துறந்தானே சேரலாதன், அவன்பாற் கொண்ட குடைக் காம்பி லேயே கோலியற்றியுள்ளேன்!

கரிகாலன்: அமைச்சரே! அழகு–அழகு-உம் அறிவின் அகலமும், ஆராய்ச்சியின் ஆழமும் எனக்கு மருட்கை தருகின்றன!

அமைச்சர்: புறப்படுங்கள் வேந்தே!

கரிகாலன்: அமைச்சரே, தக்கோர் எல்லோருக்கும் அழைப்பு அனுப்பினீரா?

அமைச்சர்: ஆம், வேந்தே! புலவர், மறவர், உழவர், கொல்லர், அயல்நாட்டார், வணிகா என்றின்னோர்க் கெல்லாம் அழைப்பு விடுத்துள்ளேன்.

கரிகாலன்: மாசாத்துவான், மாநாய்கன் போன்ற பெருவணிகர்கட்கு நம் தனியழைப்பை விடுத்தீரல்லவா?

அமைச்சர்: அரசே! தங்கள் விருப்பப்படியே அவ்விருவரையும் நானே நேரிற் சென்று அழைத்தேன். மாநாய்கன் வருவார். ஆனால், மாசாத்துவான் தன் மகன் கோவலனை அனுப்புவதாகக் கூறினார்.

கரிகாலன்: ஓ! அவருக்கு ஆடற்கலையினும் அறம் பெரியது. அதனால்தான் மகனை...

அமைச்சர்: அரசே! கோவலன் இசை—நாடகக் கலைகளில் மிகமிக வல்லவன்; அதனால்தான்......

கரிகாலன்: அப்படியா! நல்லது. அரங்கில் அத்தகையர் அமர்தல்தான் ஆடுவோர்க்குப் பெருமை தரும்; இனி, புறப்படுவோம்!

[யானையின் கையில் கோலைத் தந்து வீதி வலம்வந்து ஆடலரங்கில் வைத்து, அவரவர்கள் தத்தமக்குரிய இருக்கையில் அமர்தல்]

## கரிகாலனின் ஆடலரங்கு

[ மாதவியின் ஆடற்கலை அரங்கேற்றம் நடைபெறுகின்றது. அவையிலுள்ளோர் அனைவரும் அவளது ஆடலில் திளைக்கின்றனர். கலையுணர்வுடைய அனைவரும் தாள மிட்டும் நுட்பம் சுவைத்தும் வாய்கடந்து கைகடந்து ஊக்குதல் கண்ட மாதவி மேலும் தன் கலை நலத்தின் நுட்பமெல்லாம் புலப்படுத்தி ஆட, அந்தக் கலைத்திறம் அனைத்தையும் உண்மையாகவே கோவலன் எல்லோ ரினும் மேம்பட்டுத் தன் ஆடற்கலையைத் துய்க்கக் காணுகின்றாள். அழகு, செல்வம், கலை, நாட்டியம் எல்லாவற்றையும் காட்சியாலும், இருக்கும் இடத்தாலும், நயக்கும் நயப்பாலும் உணர்ந்த மாதவிக்குத் தன்னை யறியாது அவன்பால் உள்ளம் செல்ல, அவையோரறியா வகை இருவரும் நோக்கெதிர் நோக்கி ஒருவர் நெஞ்சில் மற்றவர் இடம்பெறுகின்றனர். ஆடல் முடிந்ததும்...]

**கரிகாலன்:** *மாதவி! நீ அரம்பையர் மரபில் வந்தவள் என்பதை மெய்ப்பித்துவிட்டாய்! உன் ஆடல் கண்டு பூம்புகாரே களிப்புக்கடலில் மூழ்கிக் கரை காணாது உழக்கின்றது. ஐந்தாமாண்டின் பேதைப் பருவத்துத் தொடங்கிய உன் ஆடற்கலை இன்றைய உன் பன்னிரண்டாம் ஆண்டின் பெதும்பைப் பருவத்தில் பேரறிஞர்களையும் பேதுறச் செய்கின்ற தென்றால், இனியும் வளரவிருக்கும் உன் கலைத் திறத்தை என்னென்பேன்! இனி நீயே இப் பூம்புகார்ப் பொற்றொடி! நீ என்றும் வாழ்வாயாக! வளர்பிறைபோல் உன் கலை வளர்க! மாதவி! இன்று தொடங்கி உனக்குத் “தலைக்கோல்தானம்” தந்தேன். இதோ தலைக்கோல், பெற்றுக்கொள்.*

அதனால் உனக்கு இன்றுதொட்டு நாடொறும் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் ஊதியம் கிடைக்கும். இதோ என்னுடைய தனித்த அன்பின் அறிகுறியாக இந்த மாலையைப் பெற்றுக்கொள்.

மாதவி: வேந்தே! தங்கள் திருவடி தொழுகின்றேன்!

[வணங்கி மாலையை ஏற்றுக்கொள்ளுதல்]

[அரங்கு கலைதல்]

அரசன்: மாதவி! உனக்கேற்ற அழகன் ஒருவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள உனக்கு ஓர் உரிமையையும் இன்று வழங்குகின்றேன்!

மாதவி: அரசே! தங்கள் புகழ் பெறும் ஒரு பேறும் பெற்றேன்; தங்கள் அன்புகனிந்த வாழ்த்தையும் பெற்றேன்; தலைக்கோல்தானமும் பெற்றேன்; நாடொறும் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன்னும் பெற்றேன்! தங்களன்பின் அறிகுறியாக இந்தப் பச்சைமாலையையும் பெற்றேன்; மணங்குறித்துத் தாங்கள் அளித்த உரிமையையும் பெற்றேன்! ஒழுக்கங்குன்றாப் புகார்க்கு இனி ஒடுக்கமேது! தங்கள் வாழ்த்தைப் பெற்ற எனக்குக் குறைவேது! உங்கள் கொற்றம் வாழ, வெற்றி ஓங்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

[எல்லோரும் போதல்]

## மாதவி மனை

[ மாதவி ஓய்வெடுப்பதுபோல் தன் மனையின் ஓரிடத்தில் தோழி வயந்தமாலையோடிருத்தல் ]

வயந்தமாலை: [மகிழ்பூப்பப் பார்த்து] மாதவி! இன்று உன் ஆடல்...!

மாதவி: [ நினைவு மிருதியோடு ] வயந்தமாலை! வந்து...... ஆம்!...

வயந்தமாலை: என்ன மாதவி! வந்து, போய் என்கிருய்? ஏன் உன் முகத்தில் ஒரு வாட்டம்? கண்ணேறு பட்டிருக்குமோ?

மாதவி: ஆம், கண்ணேறுதான்—என் கண் பொல்லாதது என்று நீயே சொல்வாயே!

வயந்தமாலை: உன் கண்ணு! உன் கண் பட்டதென்ருல் அவைக்களத்திற்கேதான் அது. அவைகாணுது நீ ஆடினுல் அது ஆடலாகுமா! என்னஉளறுகிருய்?

மாதவி: அவை கண்டுதான் ஆடினேன்! நீ அவையைப் பார்த்தாயோ?

வயந்தமாலை: பார்த்தேன் — கரிகாலன் கருத்தூன்றித் துய்த்தது ஒரு கண்கொள்ளாக் காட்சி! நீ தேசிகக் கூத்தில் இரட்டித்து ஆடியபோது, எல்லோரும் அந்த நுட்பமறியாது வாளாவிருப்பச் சோழன் பக்கத்தில் வீற்றிருந்த ஒருவன் மட்டும் வாய்விட்டுப் புகழ்ந்து கைகொட்டிச் சுவைத்தானே, நீ அதனைப் பார்த்தாயா?

மாதவி: ஆம், பார்த்தேன். என்னுடல் சிறப்பிற்கெல்லாம் அவன் இட்ட தாளந்தான் முதற்காரணம்! என்ன அழகு! என்ன கலை நுட்பம்! வயந்தமாலை...

என் இசை கேட்கத்தக்கவனும் அவன்தான், என் நாடகம் நயக்க உரியவனும் அவன்தான்! அவன் யாவன்? அவனையன்றி......

[ வயந்தமாலை நீடுக்கிட்டு ]

வயந்தமாலை: என்ன மாதவி! உன் மனம் அவன் பாலதோ? அவன் பெயர் கோவலன். வணிகர், மாசாத்துவான் மகன், பெருஞ் செல்வன், அருங் கலைஞன்!

மாதவி: வயந்தமாலை அவன் நான் ஆடும்போதே! தன் மனத்தை என்பால் வைத்து அடிமையாகி உழந்ததைக் கண்டேன். என் மனமும் என்னை யறியாது அவன்வயமாகிவிட்டது! அவன் உண்மை யில் என்னை விரும்புகின்றான் என்பதை யான் நன்குணர்வேன். சற்று, நீ நின் நுழைபுலத்தைப் பயன்படுத்தினால்......

வயந்தமாலை: என் புலமிருக்கட்டும் மாதவி! நாம் பூம் புகார்ப் பிறந்த பெண்களல்லவா? நம்மை அவன் நாடிவந்தால் நல்லது. நாம் அவனை நாடினால்... அது நம் பெண்மைக்கு இழுக்கன்றோ?

மாதவி: ஆம், உண்மைதான். நாம் நம் காதலை வலியச் சென்று கூறுதல் இழுக்குதான். வேந்தன் எனக் களித்த உரிமையை அவன் அறியான். அதனால்— ஒன்று செய்! கோவலன் இன்னும் தன் மனையகம் புகுந்திருக்க முடியாது. வழியிற் கண்டு அன்னா னிடம் இதோ இந்த மாலையை விற்பதுபோல் நடித்து நின்று குறிப்பு காட்டி, "இதனை வாங்கு வோர்க்கு மாதவி உரியவள்" என்று கூறு. அது போதும்! அதுவே வழியாக அவன் இங்கு வந்து சேர்ந்துவிடுவான். இது உறுதி!

வயந்தமாலை : நன்று நன்று, மாதவி! பெருஞ்செல்வர் இல்லத்து நம்பியரெல்லாம் அப்பட்டினப்பாக்கத்து வீதியில்தான் திரிவார்கள்; கோவலனும் அங்கே தான் சென்றிருக்கக்கூடும்!

மாதவி : வயந்தமாலை! அவன் உன்னை ஆடலரங்கில் பார்த்திருப்பான் அன்றோ? உன்னைக் கண்டால் போதும்—நீ என் தோழி என்பது தெரிந்தால், தானே வலியவந்து உன்னிடம் பேசுவான்!

வயந்தமாலை : மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்கின்றாயா என்ன?

மாதவி : [அஞ்சியவண்ணம் சோர்ந்து] இல்லை, இல்லை! ஏதோ சொன்னேன்.

வயந்தமாலை : [முறுவலித்துக்கொண்டு] மாதவி! மருளாதே, சொல்—உன் மனமும் தெரிந்தால் நல்லதுதானே!

மாதவி : கோவலன் வீதிவாய் வரும்போது ஒருபுறம் ஒதுங்கி நில். அவன் உன்னை நெருங்கும்போது நீயும் அவனிடம் பேச முற்படுவதுபோல் நடித்து உனது கைக்கண் இந்த மாலையை ஏந்திய வண்ணம், "இம்மாலை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு மதிப்புள்ளது. இதனை வாங்குவோர் மாதவி இடும் மாலையை ஏற்கும் தகுதியுடையவராவர்" என்றால் போதும், உன்னிடமிருந்து அவன் இம்மாலையைப் பெற்று, "இம்மாலைக்கும் ஓர் விலையோ?" என்று மார்பு ஒற்றி என் மனை புகுவான்! சென்றுவா, என் கண்ணல்லவா!

வயந்தமாலை : உம்......என்ன கற்பனை! (கண்ணை அகலத் திறந்து பார்த்து) நீ மீனுக்கு நீந்தவும் கற்றுக் கொடுப்பாய், பறவைக்குப் பறக்கவும் கற்பிப்பாய்! இதோ நொடியில் உன் விருப்பம் நிறைவேறும்!

[வயந்தமாலை மாலையுடன் வெளியேறல்]

## மாதவி மனையின் தனியறை

[மாதவி, கோவலன் வருகையைத் தெளிவாக உணர்ந்தவள் ஆதலின் தன் மனையை மணமனையாக்கித் தானும் மணக் கோலம் பூண்டிருந்து தன்னகம் புக்க கோவலனை மணந்தல். மணந்தபின்.........]

**கோவலன் :** மாதவி !

**மாதவி :** அன்பரே !

**கோவலன் :** என்ன, இவ்வறையில் வீசும் மணம் எனக்குப் புதுமையை விளைவிக்கின்றதே !

**மாதவி :** ஆம், இது திருமணமல்லவா !

**கோவலன் :** [மாதவியை மார்புறத் தழுவிக்கொண்டு உச்சி முகர்ந்து] அப்பப்பா ! மாதவி ! இது உன் மேனி தரும் மணமோ ? உடல் பனிக்கச் செய்கின்றதே !

**மாதவி :** இல்லை ; இது கலைநலம் வாய்ந்த தங்களின் மெய்யுறவின் கலவை மணம் !

[மாதவியின் முகத்தைத் தன் இரு கையிலேந்தி]

**கோவலன் :** மாதவி ! இது ஒரு வண்ணத் தாமரை !

**மாதவி :** அன்ப ! தாங்கள் இதில் மூசும் பொன் வண்டு !

[அவனினின்றும் பிரிந்து கண்கூடுவரிக் கூத்தாடி இன்புறுத்தல்]

[ மாதவி பாடுதல் ]

எடுப்பு

எல்லாம் கலையின் திறம் — எழில்மேவும்
இயற்கையின் இயன்ற ஈடிலாக் காட்சிகள் [எல்லாம்]

தொடுப்பு

அமைதியின் விளைவால் ஆவனவும் — அறிஞர்
தெரிந்து தெளிந்து தேடித் தொகுத்துத்தந்த
[ எல்லாம் ]

முடிப்பு

மயிலின் நடந்தனிலே — உயர் குயிலின் இசை கூட்டி
இயற்கை நிலைஎல்லாம் இயலின் திறமாக்கி
இசையும் கலந்தூட்டி இன்ப வளம் தேக்கிக்
கதையாக்கிக் கூத்தாக்கிக் கவின்கூட்டிக் கலையாக்கிப்
புலவோர்கள் புரையின்றி நலனென்று நமக்காகப்
புலன்வெல்லப் புனைந்தாக்கும் முத்தமிழ்ச் செல்வம்
[ எல்லாம் ]

[ மாதவியைத் தழுவிக்கொண்டு ]

**கோவலன் :** ஏழிசையே! இசைப்பயனே! என்னுயிரே! மாதவி! நின் திருமுகம் நோக்கித் திளைப்பேனா? அன்றிப் பொறிவளங் கண்டு புகழ்வேனா? உன் கலைவளங் கண்டு களிப்பேனோ? ஒன்றுமறியாது உழக்கின்றேன்...மாதவி!

**மாதவி :** அன்பே! அருந்தமிழே! ஆருயிரே! தங்கள் மூவா இளநலமும் தாவாக் கலைவளமும் என்னைக் குழைக்கின்றன. தங்கள் திருமேனி தீண்டத் திகைக்கும் யான் உங்களுடைமை.. அன்பே!

**கோவலன் :** மாதவி! நின்னைத் தழுவத் தவம் வேண்டும்!

**மாதவி :** ஐய, தங்களைத் தீண்டத் தவம் புரிந்தே யான் மாதவியானேன்.

[ இருவரும் இன்புறுதல் ]

## மணிமேகலை பிறந்தநாள் விழா

**கோவலன்:** மாதவி! என்ன பொற்குவை குறைந்த பாடில்லை? கை சிவந்து கன்றிவிட்டது...

**மாதவி:** குன்றம்போல் இப்படிக் குவித்துவைத்துக் கொடுத்தால், பொன்னளந்த கை கன்றாது வெளி றுமோ? "ஐந்து வெள்ளம் பொன் போதும்" என்றேன்; "என் மகள் விழவிற்கு ஐம்பது வெள் ளம் வேண்டும்" என்றீர்கள்; கொடுத்துக் குறை யுங்கள் பார்ப்போம்!

**கோவலன்:** உண்டவன், 'போதும்! போதும்!' என்று உணவினை மறுப்பதைப்போல் நாம் கொடுக்கும் பொன்னையுமன்றோ நம் ஊர் மக்கள் ஏற்க மறுக்கின் றார்கள்! இதைக் கண்டு கண்டு யான் பெற்ற வியப் புக்கும் மகிழ்ச்சிக்கும் ஓர் வரம்பு இல்லை, மாதவி!

**மாதவி:** உம்.. ம், கொள்ளெனக் கொடுப்பது உயர்ந் தது, கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்த தன்றோ? மகளுக்கு ஆசிகூற வருபவர்கள் நீங்கள் அளிப்பதை ஒப்புரவுங் கண்ணோட்டமுங் கருதி ஏற் கின்றாரன்றி வறுமையுற்று ஏற்க வருகின்றனர்? அன்ப! கரிகாலன் ஆட்சியில் கொடை வழங்க முற் பட்டால் இப்படித்தான் ஏமாற்றம் ஏற்படும். மழை பெய்வது பள்ளத்தை நிரப்பவா, அன்றி மேட்டை விலக்கவா? தாங்கள் வாரி வாரி வழங்கவேண்டி யதுதான் — பெறுவோர் பெறுவர்.

**கோவலன்:** மணிமேகலை என் மகள் மட்டுமா; என் குலதெய்வமும் அல்லளோ? அந்த ஆசை மிகுதிபற்றிப் பெருங்கொடை வழங்க நினைத்தேன்.

பொன்னளந்து குருதி ஓடினாலும் ஆவளுக்கென்று குறித்த பொற்குன்றை வழங்கியே ஆகவேண்டும்!"

மாதவி: அன்ப! நான் கொடுக்கின்றேன், நீங்கள் சற்று ஓய்வுபெறுங்கள்.

[மாதவி பொன் கொடுத்தல்]

கோவலன்: மாதவி! மக்கள் இடித்துப் புடைத்துக் கொண்டு நாம் தருவதைப் பெருதது நாம் விழையும் ஈத்துவக்கும் இன்பத்தைக் குறைக்கின்றது.

மாதவி: அன்ப! நம் நாட்டில் எங்கும் இப்படித்தான். இது சோழவள நாடல்லவா? உலவாது உலகூட்டி வளர்க்கும் காவிரித்தாய் தந்த சோற்றுச் செருக்கிருக்கும்போது, வறுமைப் பிணி யாரை என்ன செய்யும்?

கோவலன்: ஆ! வந்தது கேடு...[வாயில் பக்கம் பாய்ந்து ஓடுதல்]

மாதவி: அத்தான்.....

[பலோக்கு வெளியே—வீதிவாய் மதஞ்செருக்கி வந்த யானை முதியவர் ஒருவரை வெளவல்]

மக்கள்: ஆகா! முதியவர்..மாண்டார்—அடி—பிடி..ஆ அப்படித்தான்...டேய் கோவலன்..கொம்பு.. முறுக்கு துதிக்கை...அடடா...கையாலே வெட்டு... ஆ...அதுதான் சரி—கொம்புக்கிடையில்—துதிக்கையைக் கொம்புக்கு மேலே விடாதே...நீ கோட்டுக்குக் கீழே குறுக்காகப் புகுந்து...உம் சரியான ஆளையா இவர்...யானைக்கு மூச்சுவாங்குகிறது... இந்த ஆள் பிடித்த பிடியை...மூச்சே விடக்காணோம்...யானைமேல் விஞ்சையன் போல....

யானைப்பாகன்: ஐயா! யானை வலியொடுங்கி வாளா நிற்கின்றது, நீங்கள் கீழே இறங்குங்கள்...

**கோவலன்:** [யானையைப் பார்த்து] அட மடவிலங்கே! கொடைமனையைக் கொலைமனையாக்கிவிடப் பார்த்தாயே... நன்று நன்று!

**மாதவி:** அன்ப! செயலற்றுப்போனேன்!

[யானை வயப்பட்ட முதியவரைப் பார்த்து]

**கோவலன்:** முதியவரே! எங்கேயாவது அடிபட்டு விட்டதா?

**முதியவர்:** இல்லையப்பா! நீ இப்படிச்செய்யலாமா? பழி இந்தக் கிழவனோடு போயிருக்கலாமே; நீ அதன் மேல் பாயலாமா? மதம் பிடித்த யானையின் செயல் அறியாது இப்படிப் பாய்ந்துவிட்டாயே! நல்ல வேளை, வலியடங்கிற்று! இனி இப்படிச்செய்யாதே.

**கோவலன்:** முதியவரே! எளியவரை வலியவர் வதைக்கக்காணவா யான் இவ்வலி பெற்றேன்? இல்லவே இல்லை! எந்த எந்தத் துறையில் எனக்கு வலிமையுண்டோ அங்கெல்லாம் யான் எளியவர் துணைவன். தாங்கள் கொடைபெறத்தான் வந்தீர்களோ?

**முதியவர்:** ஆமப்பா! வேண்டுவவெல்லாம் போதுமென்ற அளவும் தருகின்றாயாம்!

**கோவலன்:** ஆம், நீங்களும் வேண்டுவ பெற்றுச் செல்லலாம்!

**முதியவர்:** அப்பா! பொன்னை யாரும் தருவர், நீயோ உன் உயிரையும் கொடுத்து என்னுயிரைத் தந்தாய். உயிர்க்கொடை தந்த உன் கொடைத்திறம் விஞ்சியோர் கடையெழு வள்ளல்களிலும் இல்லை!

**கோவலன்:** பாராட்டு வேண்டாம், பொன் பெற்றுக் கொள்ளுங்கள்.

முதியவர்: பொன்னு...! எனக்குப் பொன் எதற்கு? உன் அறநிலை கண்டு களிக்க வந்தேன். இதோ என் ஆசிக் கொடை உனக்கு—நீ நீடுவாழ்க! நான் வருகிறேன். [முதியவர் போதல்]

கோவலன்: [முதியவரைப் போகும்வரை பார்த்திருந்து] என்ன, இவரும் மறுத்துவிட்டார்! ஒருவழியாக இதைக் கொடுத்துவிட்டு மகளோடு குலவலாம் என்றால்....

மாதவி: ஆம் அன்ப! இனி வருவார்க்கு இங்கு இருக்கும் பொன்னை இவர்கள் கொடுப்பார்கள்; தாங்கள் வாருங்கள், நம் செல்வியைச் சிலதியர் ஊசலாட்டி மகிழ்கின்றனர்; அதில் நாமும் கலந்துகொள்வோம்!

[இருவரும் போதல்]

## கோவலன் மனையில் கண்ணகியும் தேவந்தியும்

[துன்பமும் மகிழ்ச்சியும் கலந்த முகத்தோடு]

**கண்ணகி:** தேவந்தி! பிறந்தநாள் விழா இதுபோது பெருஞ் சிறப்போடு நடக்குமல்லவா? அத்தான் பொற்குவை வழங்குவதைக் காணத் துடிக்கின்றது என் மனம்! நானொரு பாவி; மாதவி கொடுத்து வைத்தவள்!

**தேவந்தி:** [சிந்தனையோடு] கண்ணகி! போதும்...பேசாமல் இரு.

**கண்ணகி:** தேவந்தி! அவள் உயர்ந்தவள். என்போல் பாவியா அவள்? என் ஆருயிர் என்னையும் மறந்து இத்தனைக் காலம் தன்னுடன் வாழுமாறு அன்பு காட்டி, ஆர்வமூட்டி, அவர்வழி நின்று வேண்டுவ செய்கின்றாள் என்றால், என்னினும் எத்துணை மேம்பட்டவள் அவள், தெரியுமா!

**தேவந்தி:** ஆம், நீ சொல்வதிலும் ஒரு பொருளுண்டு. அவளோ ஆடுமகள்; இவரோ கலைப்பித்தர்!

**கண்ணகி:** நீ சொல்வதுபோல் மாதவி ஆடுமகள் என்பதாலோ, என் அன்பர் கலைப்பித்தர் என்பதாலோ அவர் என்னைப் பிரிந்து வாழவில்லை. என் அன்பர் என்னை வருத்தும் அத்துணைச் சிறியவரல்லர்! அவர் அங்கு நிலைபெற்றுவாழ அவள் காட்டும் மெய்யன்பு தான் காரணம்.

**தேவந்தி:** ஆம், மெய்யன்பு மட்டுமன்றி அவள் நன்கு ஆடுவாள், பாடுவாள், யாழ் மிழற்றுவாள்—நம்மவர்க்குத்தான் ஆடல் பாடல் என்றால் போதுமே!

**கண்ணகி:** ஆம், அப்படித்தான் இருக்கவேண்டும். எனக்கு ஆடிப்பாடத் தெரியவில்லை என்ற மனக் குறை என் அன்பர்க்குப் பெரிதும் உண்டு. அதை வெளியில் காட்டாது என்னை முகமன் பேசிப் பேசி ஏய்ப்பார்கள். என்னிடம் ஆசையில்லாமலா அவர்கள் அங்குப் போய் வாழ்வதாக நீ நினைக் கிருய்? இல்லை—அவளிடமும், தாம் வைத்த அன்புதான் காரணம்.

**தேவந்தி:** கண்ணகி! உன்னைப்போலப் பெண்கள் எல்லாம் இப்படிக் கணவன் செய்யும் பிழைகட்கு அமைதி சொல்லி வாழ்ந்தால் இந்த ஆடவர்உலகத் திற்குத் தலைகால் புரியாது!

[வெளியில் மாசாத்துவானும் பெருமனைக்கிழத்தியும் வருவதைக் கண்ணுற்று]

**தேவந்தி:** கண்ணகி! அதோ உன் மாமன், மாமி வருகின்றனர்.

**கண்ணகி:** ஆமாம், ஆமாம்...தேவந்தி!

**தேவந்தி:** ஆம், கண்ணகி! அவர்கள் வருவதற்குமுன் நீ முகங்கழுவித் தலையைச் சற்று ஒதுக்கிக்கொள்! அவர்கள் உன்னுடைய இந்தக் கோலத்தைக் கண் டால் வருந்துவார்கள்!

**கண்ணகி:** ஆம், நன்ருகச் சொன்னுய். இதோ நொடி யில்......

[மாமன் மாமி இருவரும் உள்ளே வருகின்றனர்—இருவர் முகங் களிலும் துன்பம் குடிகொண்டிருக்கின்றது]

**கண்ணகி:** வாருங்கள் மாமா, வாருங்கள் மாமி!

[அடிபணிந்து நிற்கின்ருள்]

மாசாத்துவான்: [தன் துன்பத்தை மறைத்துக்கொண்டு] கண்ணகி! என்னம்மா, உணவருந்திஞயா? எங்களுக்கு என்ன வைத்திருக்கின்ருய்?

கண்ணகி: இதோ, எல்லாமிருக்கின்றன—தாங்கள் விரும்புவது எதுவோ அதைத் தருகின்றேன், சொல்லுங்கள்.

பெருமனைக்கிழத்தி: கண்ணே! எல்லாம் உண்டோம். இதோ உனக்கும் தின்பண்டம் கொணர்ந்தோம்—நீ கொஞ்சம் தின்றுபார்!

கண்ணகி: எனக்கெதற்கு மாமி?...[கண் கலங்குகின்ருள்]

மாசாத்துவான்: உனக்குத்தானம்மா! கொஞ்சமாவது எடுத்துக்கொள் உம்...

கண்ணகி: இதோ மாமி! இது என்ன மிகவும் சுவையாய் இருக்கிறதே!

[அவர்கள் வருத்தம் தணியவேண்டி பொய்யாகச் சிரிக்கின்ருள். அதைக் கண்டு மாசாத்துவான் நெஞ்சடைக்க]

மாசாத்துவான்: அட கொடியவனே!

[மேல்துணியால் கண்ணை மூடிக்கொண்டு கலங்குகின்ருன். பெருமனைக்கிழத்தி கண்ணகியின் முகங் கண்டவண்ணம் கலங்குகின்ருள். கண்ணகி தன் துயரை அடக்கிக்கொண்டு]

கண்ணகி: ஏன் மாமி—ஏனிப்படி வருந்துகின்றீர்கள்?

மாசாத்துவான்: வருத்தமா... திருமகள் போன்ற நின்னை யும் பிரிந்து...

பெருமனைக்கிழத்தி: இப்படியும் ஆவானென்று...

கண்ணகி: என்ன மாமி! அவர்கள் ஒன்றும் நீங்கள் நினைப்பதுபோல் தவருக நடக்கவில்லை. அவர் களுக்கு இசையிலும், நாடகத்திலும் அத்துணை

ஆசை அதனுல்தான் அங்கே தங்கிவிட்டார்கள்...என்மீது பற்று இல்லாமலா?...என் அத்தான்...[அழுகின்ருள்—தேவந்தியுள்பட எல்லோரும் கண்கலங்க—கண்ணகி கண்ணைத் துடைத்துக்கொண்டு] மாமி, வாருங்கள் உள்ளே போகலாம்.

[கண்ணகியும் பெருமனைக்கிழத்தியும் தனித்துப் போகின்றனர்]

தேவந்தி: [மாசாத்துவானிடம் தனித்து] ஐயா! இன்று சின்ன ஐயாவிற்கு மகள் மணிமேகலை பிறந்ததற்குப் பொன்மழை பெய்து புகாரையே நனைத்தார்களாம். நம் கண்ணகி தன் மகள் விழாவைக் காண முடியவில்லையே என்று தேம்பித் தேம்பி அழுதாள். அழுதே சாவாளோ என்று அஞ்சினேன்; நல்ல வேளை தாங்கள் வந்தீர்கள்!

மாசாத்துவான்: அது தெரிந்துதானே இங்கு வந்தோம். அந்தப் பாவிக்கு மனமென்ன அப்படி மாறிப் போயிற்று?

தேவந்தி: ஏன் அவரைப் பாவி என்று திட்டுகின்றீர்கள்! அந்தக் கணிகை என்ன மாயஞ் செய்தாளோ!

மாசாத்துவான்: ஆமாம், மாயம் செய்தாள், மந்திரம் செய்தாள்! இவன் அறிவு திரிந்துக் காமுற்று நின்ருனென்ருல், ஊரை ஏன் பழிதூற்றுகிருய்!

[கண்ணகி பால் கொண்டுவருகிருள்]

மாசாத்துவான்: உள்ளேயே போவோம், அவள் ஏன் வீணே அலைகின்ருள்?

[உள் அறைக்குப் போதல்]

---

## ஆடலரங்கில் மாதவி

[மாதவி ஆடுகின்ருள்-நாடகம் நயப்போர் வாய்கடந்து குறும்பு பேசித் துய்க்கின்றனர்—சிலர் உறுப்பமைப்பை வியக்கின்றனர்—சிலர் அவள் அழகு முழுமையும் வியந்து பாராட்டுகின்றனர்]

அவையில் ஒருவன்: [கோவலன் காதில் விழுமாறு] ஏய்! அவள் கணைக்காலழகைப் பார்த்தாயா? அம்பராத் தூணிபோல!—ஆகா! அந்தப் பாதம் தொடங்கி முழங்கால் வரையில்......

அடுத்தவன்: டேய்! வரால்போல் என்று சொல். அடடா—என்ன நிறம்? என்ன அமைப்பு?

மற்றவன்: துடையமைப்பைப் பார்த்தீர்களா? செவ்வாழையைப்போல்......

[கோவலன் திரும்பிப் பார்த்தல்]

ஒருவன்: உம், பார்த்தேன், பார்த்தேன்!— பார்த்து என்ன செய்வது? கொடுத்துவைக்கவேண்டும் ஐயா! அவள் ஆடி ஆடி—அந்தத் துடைக்குத் துதிக்கை போன்ற அமைப்பு வந்திருக்கின்றது.

மற்றவன்: அட, போய்யா-இடையழகைப் பாரையா! துடியிடை, துடியிடை என்று படித்தேனே தவிர அதற்குப் பொருள் இப்பொழுதுதான் புரிந்தது!

அடுத்தவன்: ஐயோ பாவம்! இடை எதுவென்று தெரியாமலே இடையைப்பற்றிப் பேசுகிறீர்களே!

ஒருவன் : தெரியாதையா தெரியாது—அதோ என்னமோ இடைச்செரிபோல! உம்... [பெருமூச்சு விட்டுக் கொண்டு] ஆமாம், ஆமாம்—அதிலிருந்து மேலும் கீழும்...

அடுத்தவன் : பாரும்—உடுக்கைபோல இருக்கிறதா ?

ஒருவன் : ஆம் ஐயா ! தெரிகிறது, தெரிகிறது !

[கோவலன் முன்னும் பின்னும் திரும்பிப்பார்த்து இருக்கை கொள்ளாது வெறுப்புக்கொள்ளுதல்]

அடுத்தவன் : ஐயோ, அவள் ஒரு செதுக்காத பொற் சிலை ! புனையாத ஓவியம் ! முகத்தைப் பாரும், ஏதாவது மாசு மறு இருக்கின்றதா ?

கூட்டத்தில் ஒருவர் : ஐயோ, ஆட்டத்தைச் சுவையுங் கள்—போதுமையா உங்கள் வருணனை.

மற்றவர் : முதலில் ஆளைச் சுவைத்த பிறகுதான் ஆட்டத்தைச் சுவைக்கவேண்டும் !

ஒருவர் : இப்படி விலங்குணர்ச்சி கொண்டவர்கள் இருந்தால், கலையா வளரும் ? காமந்தான் வளரும் !

மற்றவன் : ஆமாம், ஆமாம் ! எல்லோரும் இப்பொழுது கலையைத்தானே அப்படியே சுவைக்கிறீர்கள் ? உங்கள் மறுவற்ற கண் மற்றதைப் பார்க்குமா ? மாசற்ற நெஞ்சு வேறொன்று எண்ணுமா ? ஏனையா வீணகப் பிறரைக் குறை கூறுகின்றீர்கள் ?

ஒருவர் : தன்னைப்போல் எல்லோரையும் எண்ணவேண் டாம்! உங்களைப்போல் பலர் இருக்கலாம்—எங்களைப் போலும் சிலர் உண்டென்பதை மறுக்கவேண்டாம்-

எங்கட்குக் கலைதான் உயிர், உணர்வு, இன்பம், வாழ்வு எல்லாம்.

மற்றவர்: ஐயா, நீங்கள் இருசாராரும் சற்று சும்மா இருங்கள். நான் இரண்டையும் சுவைப்பவன்– நீங்கள் ஒருவருக்கொருவர் கூறிக்கொள்ளும் குறை என்னிடத்திலும் உண்டு! என்போல் எத்தனையோ பேர் இங்கு இருக்கின்றனர். உங்கள் கருத்துக்களையும், சிந்தனைகளையும், ஆராய்ச்சிகளையும் இது போன்ற பொதுவிடங்களில் புலப்படுத்தாது, வந்த காரியம் எதுவோ அதைச் செய்யுங்கள்!

ஒருவர்: அப்பப்பா! உங்கள் போராட்டத்தில் ஆட்டமும் முடிந்தது; போங்கள் போதும்!

[எல்லோரும் கலைந்துபோதல், கோவலன் தாங்கொணாத் துன்பத்தோடு வெளியேறுதல்]

## மாதவி மனை

[ ஆடலரங்கில் வெறுப்புக்கொண்ட கோவலன் நேரே மனை புகாமல் பொழுது கழித்து வருதல் ]

மாதவி : அன்பரே ! என்ன...ஏதோ மன வாட்டம் கொண்டதுபோல்...

கோவலன் : [பொய்ச் சிரிப்புடன் ] அப்படியெல்லாம் ஒன்று மில்லை !

மாதவி : அன்ப ! ஆட்டமெல்லாம் எப்படி ? தாங்கள் நன்கு சுவைத்ததாகக் காணோமே, ஏன் ? ஆடல் நன்றாக இல்லையா ?

கோவலன் : ஆட்டத்திற்கென்ன...

மாதவி : என்ன...பேச்சு முழுதுமாக வரவில்லையே... இருக்கட்டும்...ஆடிய களைப்பு எனக்கு, பார்த்த சலிப்பு தங்கட்கு ! அத்தான் !—அது போகட்டும்— இப்படி இரவில் நெடும்பொழுது கழித்து வருகிறீர் களே, காக்கைகூட தன்னிணை நினைந்து காலமிற வாது மனை புகுவதைக் கண்டதில்லையா ?

கோவலன் : நான் புதிதாக வேறு எங்கும் போகவில்லை, மாதவி ! ஆட்டம் முடிந்ததும் வழக்கம்போல் நம் தெருவின் கோடியிலுள்ள காமக்கண்ணியின் நாடக மனைக்குப் போனேன். மலர்க்கொடிக்கு மல்லாடலில் ஒரு நிலை சொல்லிக்கொடுத்தேன். இப்படித்தான் அவர்கள்......அன்பின் ஆணை...... மறுக்கமுடியாது பொழுது கழிந்துவிட்டது !

மாதவி: ஓகோ! அன்பு ஆர்வத்தைக் கொடுக்கும்... பின்னர் அது ஆயிரமாக விரியும். அதனால் பொழுதோடு எல்லாவற்றையும் 'முடித்துக்கொண்டால் நல்லது.

கோவலன்: பாவம்! அவர்கட்கு எதையும் திருத்தமாகச் சொல்லிக் கொடுக்கவில்லையே......சிறுமியர்கள்... கலையார்வம்!

மாதவி: போதும், போதும்–இந்தச் சிறுமிகட்கெல்லாம் சொல்லிக்கொடுக்க நட்டுவனாரும் இசையாசிரியரும் உள்ளனர். உங்கள் கலையறிவு எனக்குப் பயன்பட்டால் போதும், ஊருக்கு வேண்டாம்!

கோவலன்: மாதவி...என்ன சொல்லுகிறாய்?...நீ உன் கலையை உலகுக்காக்கி வெளிப்போந்து ஆடவில்லையா? எனக்குமட்டும் ஏனிந்தக் கட்டுப்பாடு?

மாதவி: அத்தான்! காவலனுக்குக் கட்டுப்பட்டவள்— அறைக்குள் ஆடமுடியுமா? தாங்கள் என் அன்பிற்குக் கட்டுப்பட்டவர்கள், வெளிப்போந்து உதவலாமா?

கோவலன்: மாதவி! நீ நன்கு பேசக் கற்றவள்; உன்னைப் பேச்சில் வெல்ல...

[கோவலன் அயர்ந்து சிந்தனையோடிருப்ப...மாதவி ஆடுகின்றாள்]

கோவலன்: மாதவி, மாதவி! என்ன, கிளர்வரிக் கோலம்? இது ஊடலுக்குரியதாயிற்றே! நீ ஊடல் கொள்ள நான் ஒன்றும்......

மாதவி: அன்பரே! தங்கள் போக்கைக் கண்ணாரக் கண்டு கருத்தூடு கலங்கும் யான் இந்தக் கோலம்

பூணாது எதைப் பூண்பேன்? அழகின் கருவூல மென்ற காலம் போயிற்று; கலைக்கோயில் என்ற வாயைக் காணேம்; கணம் பிரியின் கழியும் உயிர் என்ற கருத்தும் கழிந்தது! மகப்பயந்த மகளிர்— சூடிக்கழித்த மலர் என்பது மெய்யாயிற்று!

கோவலன்: மாதவி! நான் இப்பொழுது உன்னைப் புகழவில்லையா? போற்றவில்லையா? நீ அன்று ஆடியபோது...

மாதவி: ஆம், புகழ இடம் இருந்தால்தானே...

கோவலன்: [கையைப் பிடித்துக்கொண்டு] நீ என்னை அப்படி எண்ணுதே; அன்பின் உறைவிடம் நீயன்ரே?

மாதவி: ஆம், கன்னித்தேனுண்டு கமலத்தில் துயிலும் வண்டு நெய்தலிலும் மொய்க்கும், குவளையிலும் ஆர்க்கும், ஆம்பலிலும் ஊதும். ஆனால், அதற்குத் தங்குமிடம் தாமரைதான்...

கோவலன்: என்ன...மாதவி! உவமை கூறி நகை யாடுகிருய்!

மாதவி: அத்தான்! உங்கள் மகள் பிறந்து பன்னி ரண்டு நாள்—உங்கள் கணக்குப்படி—ஆகின்றதே அறியீரோ?

கோவலன்: பன்னிரண்டு நாளா! என்ன மாதவி?

மாதவி: அன்ப! தாங்கள் என்னை மணந்து ஓராண்டு கழிந்தது தெரியாமல், "ஓராண்டா வந்தது! ஒரு நாளன்ரே?" என்று மயங்கியது நினைவிலிருக்

[illegible] ஆண்டுக் கணக்குப்படி பன்னிரண்டு [illegible] ஆகப் போகின்றதா?

[illegible] [illegible], இருந்தாலும் [illegible] மணிமேகலை [illegible] [illegible]

மாதவி : [illegible] அன்னை [illegible] அனைத்தும் [illegible] இந்திர விழாவில் அரங்கேற்றம் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறாள்.

கோவலன : மாதவி! மணிமேகலையைப் பார்த்து ஆண்டுக் கணக்கில் ஆகின்றது...

மாதவி : உங்கட்கு இசை, கூத்து, நாடகம், வெடிச்சிரிப் பிற்கு அந்தக் கேளிக்கைக் கூட்டம்; கலை பயில்வ தாகத் திரியும் அந்தச் சிறுமியர் குழாம்—இவை இருந்தால் உலகமே மறந்துபோகும்! அவர்களைவிட மணிமேகலையோ அன்றி நானோ உங்கட்கு உரியவர் களா? வாணிபம் பேணவும் இல்லை; வரம்பில் நிற்கவுமில்லை; பொறுப்பற்றுப்போனீர்கள்.

கோவலன் : மாதவி! அக் கூட்டத்தோடு எப்படியோ பழகிவிட்டேன். பேயோடாயினும் பழகியபின் பிரிவ தரிது என்பது நீயறியாததா? அவர்கள் என்ன தான் நமக்குத் தீங்கு செய்கின்றனர்?

மாதவி : அவர்கள் இன்னும் என்ன செய்யவேண்டும், அத்தான்? என் வாழ்விற்கே கேடு செய்கின்றார் கள். இருமனப் பெண்டிர் அவர்கள். அன்றோர்

தொடர்பால் நம் திருவெல்லாம் நீங்கிப்போகும். அது வேண்டாம்!

**கோவலன்:** மாதவி!.........என்னை நீ என்ன நினைத்தாய்? நான் ஒருபோதும் அன்பிலார் தோள் சேரவே மாட்டேன்—நீ கவலைப்படாதே.

**மாதவி:** [அழுதுகொண்டே] அன்பரே! உங்களை அந்த அணிமேகலையார் ஆயிரவரும் உளமுவப்ப விரும்புகிறார்கள் என்பது எனக்குத் தெளிவாகத் தெரியும். அப்படியானால் தாங்கள் எல்லோரையும்......

**கோவலன்:** சேச்சே...மாதவி! நீயா இப்படிப் பேசுகிறாய்? அப்பப்பா...இந்தப் பெண்களுக்கு மிக மிகப் பழகிப்போன பேச்சு இது... [மாதவியின் கண்ணீரைத் துடைக்கின்றான்]

**மாதவி:** [மேலும் வெகுண்டு] போதும் போதும்......இது பெண்களுக்கு இயல்பு என்றீர்களே–உங்களுக்குப் பல பெண்டிர் பழக்கமில்லாது போனால் எப்படி இதைத் தெரிந்துகொண்டிருக்க முடியும்? யார் யார் என்னென்ன சொன்னார்களோ!

**கோவலன்:** ஐயோ...மாதவி! உனக்கென்ன பைத்தியமா? இது பெண்களுக்கு இயற்கை என்று நூலில் படித்துள்ளேன். நீ கற்றுணர்ந்தவள், இது கூடத் தெரியாமலா இப்படி ஐயுறுகின்றாய்? மாதவி! இப்பொழுதெல்லாம் நீ ஏன் காண்வரிக் கோலம் பூண்டாடுவதில்லை?

**மாதவி:** அத்தான்! புன்புறவரி துய்த்த உங்கட்கு என் கண்கூடுவரி சுவைக்குமா என்றுதான்...!

கோவலன் : இதோ பார்! இன்று நீ காண்வரிக்கோலம் பூண்டால்தான் நான் உணவுண்ண வருவேன். இல்லையேல் உணவருந்தேன் !

மாதவி : அத்தான்! வேண்டாம் வேண்டாம்...முதலில் உண்டு இளைப்பாருங்கள்—பின்னர் தாங்கள் உரைத்த கோலம் நான் பூணுகின்றேன்-வாருங்கள் !

[மாதவி கோவலனின் கைகளைப் பற்றியழைத்துச் செல்லல்]

## கடற்கானலும் வரிப்பாடலும்

[புகாரில் இந்திரவிழா முடிவின் கடலாடு நாள்—கடற்கரையில் புன்னைமர நிழலில் யானைத் தந்தத்தால் ஆய கட்டில் —மேலே நீல விதானம்—அதன்கீழ் முத்துத் தோரணம்—கட்டிலில் ஓர் அழகிய யாழ்—கோவலன் கட்டிலில் அமர்ந்து மாதவியைத் தன் பக்கத்து அமர்த்திக்கொண்டு, அருகில் ஓடும் காவிரியையும் அவர்கள்முன் பரந்து பொங்கி நிற்கும் கடலையும் பார்த்து ஆர்வம்மீதுற, மாதவியைப் பாடப் பணிக்கின்றான். யாழைக் கையில் வாங்கி அதன் இசையெல்லாம் முறைப்படுத்தி, முதலில் கோவலன் இசைத்துப் பாட யாழை அவன் கையில் கொடுக்கின்றாள், மாதவி. கோவலன் சற்றுநேரம் சிந்தனைசெய்து இரவில் அவள் ஊடியதை மனத்திற்கொண்டு—அவள் அவையேறி நாடகம் ஆடுதல் போன்ற தனக்கொவ்வாத எல்லாவற்றையும் ஒன்றாக நினைத்து, அவளுக்கு எப்படியாவது தன் கருத்தை உணர்த்தி, தன் போக்கில் அவள் குறுக்கிடாமல் இருக்க வழிசெய்ய விரும்பிப் பாடுகின்றான்]

திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோ லதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங்கற்பென்
றறிந்தேன் வாழி காவேரி.

கோவலன் : மாதவி !

மாதவி : பேரன்ப! பாட்டு என்றால் இதுதான் பாட்டு !

கோவலன் : பாட்டு என்றால் பொருளையும் உட்படுத்தித் தானே... மாதவி !

**மாதவி:** இலக்கியத்தையோ, இசை முதலிய கலைகளையோ துய்க்கும்போது அவ்வவற்றின் நுட்பமும், கூறுபாடும், பொருளும் உணரவேண்டும் என்பதன்று; அவற்றின் முழு அமைப்பே இன்பக் கடலுள் ஆழ்த்தும் இயல்புடைத்தன்றோ!

**கோவலன்:** ஆம், உண்மைதான்; என் வரிப்பாட்டிற்குப் பொருள் தெரியாமலா இப்படித் துய்த்துத் துவண்டாய்?

**மாதவி:** சொற்பொருள் தெரிகின்றது—ஆனால், அப்பாட்டின் உட்கருத்து புலப்படவில்லை!

**கோவலன்:** உம்......நீயுணரா உட்பொருள் அப்படியொன்றும் அதிலில்லை, மாதவி! [சற்று நெருங்கியமர்ந்து அவளைத் தழுவுதல்]

**மாதவி:** என்னத்தான்! கடற்கரையில் இந்த விளையாட்டு? அதோ, எல்லோரும் உங்கள் பாட்டைக்கேட்டு மயங்கிக்கிடக்கின்றனர். இப்பொழுது அவர்கள் உணர்வு பெற்றால் நன்றாயிராது.

**கோவலன்:** மாதவி! அதோ பார்த்தாயா—அந்தக் காவிரிப்பாவையை?

**மாதவி:** ஆம், அத்தான்! கோடை நீடிய இப்போதும் அவள் பொலிவு ஒரு பொலிவுதான்!

**கோவலன்:** அவள் ஒரு பெண்ணல்லவா?

**மாதவி:** ஆம், இதிலென்ன வியப்பு? அவளால்தானே சோழன் பெருமையெல்லாம்!

**கோவலன்:** நீ மிக்க அறிவாளி. இதோ பார், அவள் கணவன் சோழன்—மிகப் பொல்லாதவன், தெரியுமா?

**மாதவி:** ஆம், அவன் பகைவர்க்குப் பொல்லாதவன் தான்!

கோவலன்: மாதவி! அவன் வடபுலம் படர்ந்து அந்தக் கங்கை மங்கையையும் தனக்கு மனைவியாக்கிக் கொண்டதை நீ அறிவாயோ?

மாதவி: ஆமாம்...

கோவலன்: அதுமட்டுமா? தென்திசை புகுந்து ஆங்கிருந்த குமரிப் பெண்ணையும் தன்வயப்படுத்திக் கொண்டானே அது?

மாதவி: அதுதான் உலகறிந்த செய்தியாயிற்றே!

கோவலன்: இந்தச் சோழப் பெருமகன் இவ்வளவு முதுமை எய்தியுங்கூட உரிமை மனைவி காவிரி இங்கு இருப்பவும், வடபுலத்தும் தென்புலத்தும் இருவரைப் பேணிக்கொண்டதைக் கண்டும் இக்காவிரி சோழனிடம் தனக்குப் பொறுமை இருப்பதாகக் காட்டினு ளல்லள். பொறுமைதான் காட்டவில்லை என்றாலும் அவன்பால் வெறுப்புற்று ஊடித்தான் நின்றாளா? அன்றித் தன் கடமையைச் செய்வதில் குறைதான் காட்டினாளா? இல்லையே. அவள் உள்ள நிறைவு உடையவள் என்பதை மெய்ப்பிக்க உழவரை மகிழ்வித்து, அவர் மகிழ்ச்சியிலும் பங்குபெற்று, விழவயர்வோர் களியாட்டிலும் கலந்து பொன்கொழித்துப் பூப்பொலிய, மணந்துழவிக் கலகலவெனக் காவிரி நாடனொடு கலக்க ஓடிவருகின்றாளே! பெருங் கற்புடைய மாதர்க்கு இதுதான் இலக்கணம் என்று சொல்லாமல் சுட்டுகின்றாளோ? பெருங்கற்பின் திறம் என்பதும் இதுதானே, மாதவி!

மாதவி: [சிரித்துக்கொண்டு] அத்தான்! ஆம், காவிரி ஒரு சிறந்தபெண்-மிகவுயர்ந்த பண்பாடு கொண்டவள்-பெருங் கற்பினள்தான்! அதில் என்ன ஐயப்பாடு?

**கோவலன் :** ஏன் மாதவி! நீயே காவிரியின் பண்பைப் பார்க்கின்றாய்; உணர்கின்றாய். இவ்வாறு பெண்மைப் பண்பின் பெருமை உணர்ந்த உனக்கேன் இந்தப் பொறுமையும் அழுக்காறும்?

**மாதவி.** அத்தான்! நீங்கள் குறும்புக்காரர்! நீங்கள் செய்த குறும்புத்தனத்திற்கு அமைதிதேடக் காவிரிப் பாவையையா துணை நாடினீர்கள்? அன்பரே! அவள் உங்களைக் கைவிட்டுவிடுவாளே!

**கோவலன்:** மாதவி! காவிரித் தாயையா அப்படிச் சொல்கின்றாய்? அவள் மக்கள் நீர்வேண்டி ஆற்றாதபோது தன் உடல் போழ்ந்து உலகூட்டுவாளே—வந்தவர்க்கெல்லாம் வாயார உண்ண உணவூட்டி, உடுக்க உடை தந்து, உறங்க இடந்தந்த காவிரித் தாயா என்னைக் கைவிடுவாள்! என்ன பேசி விட்டாய்?

**மாதவி:** காதல! கேளுங்கள், சொல்லுகிறேன்...

[யாழைக் கைக்கொண்டு]

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ வாடை அதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த வெல்லா நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!

**கோவலன் :** மாதவி! ஆ! என்ன உணர்ச்சி—உன்னோடு வாழ்ந்த இத்தனை ஆண்டுகளாகக் கேட்காத ஒலி; கருதாத கற்பனை; கருத்துச்செறிவு—ஆ...

**மாதவி :** போதும், அன்ப! புகழ்மாலை போதும்! கவியாக மாறிப்போனீர்களா என்ன?

**கோவலன் :** மாதவி! நான் உண்மையில் இப்பொழுது இந்த நில உலகிலேயே இல்லை! பொருள் முற்றிலும் புரியாமலே இன்புறுகின்றேனு, துன்புறுகின்றேனு...ஒன்றும் புரியவில்லை மாதவி! கலையின் திறம் இதுதானு? இன்பமும் துன்பமும் அவற்றின் உயர்நிலையில் வேறுபாடு அற்றனவோ ?

**மாதவி :** ஆமாம், போங்கள் அத்தான்! என் பாட்டு வெள்ளைப் பாட்டு, இதற்குப் பொருள் தெரியவில்லை என்ருல் நகைதானே...

**கோவலன் :** கண்ணே மாதவி! சொற்பொருள் தெரியாமலில்லை; சொல்லட்டுமா? மருங்கு=பக்கமெல்லாம், வண்டு=வண்டானது, சிறந்தார்ப்ப=ஆர்வத்தோடு ஒலிக்க...

**மாதவி :** என்ன அத்தான்! பள்ளி நினைப்பா! நான் ஒன்றும் தங்கட்கு ஆசிரியையல்லளே !

**கோவலன் :** அது போகட்டும்...நான் பாடியது போலவே காவிரிப் பாவையை நீயும் பாடினுய். அவள் என்னைக் கைவிட்டுவிடுவாள் என்ற உட்பொருள் அதில் எங்கிருக்கிறது ?

**மாதவி :** காதல! உட்பொருளா ? அது நீங்கள் சொன்னதுபோல், " சோழன் இரு மனைவியரை மணந்து வாழ்கின்ருன்; அதைக் கண்டும் காவிரி பொருமை கொள்ளாது அவன் வீர வளங் கண்டு அவனைத் தழுவ ஆர்வத்தோடு ஓடிவருகின்ருள் " என்றீர்களே—அவ்வாறு ஒன்றும் காவிரித்தாய் தாங்கள் நினைப்பதுபோலில்லை—சென்னியும் அப்படிப்பட்டவனல்லன் என்பதுதான் என் பாட்டின் உட்பொருள் !

**கோவலன் :** அப்படியா ! என்ன......?

மாதவி: காவிரிப் பாவை ஆடவர்களுக்கல்லவோ அறங் கற்பித்து அறிவு ஊட்டி அங்ஙனம் அழ கொழுக ஓடுகின்ருள்!

கோவலன்: மாதவி! நீ சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை.

மாதவி: அன்பரே! காவிரி ஒரு பெண்ணுக இருந்தும், இவ்வளவுபேருக்கிடையில் கடந்து செல்லும் பெரு மிதத்தைப் பார்த்தீர்களா? இரண்டு பக்கத்தும் பூத்துக் குலுங்கும் பூவையும், அதில் மொய்த்து மிழற்றும் வண்டையும், அதனுல் உதிர்ந்து ஒளிரும் மலரையும் கொண்டு, தன் நீர் நிறம் வெளிப்படத் தெரியாது, பூவாடை போர்த்துத் தன் கயற்கண்கள் அங்குமிங்கும் பாய—இடை நுடங்க—இசை முழங்க—இனிமை பொங்க வளைந்து நெளிந்து ஓடு வதைப் பாருங்கள்!

கோவலன்: ஆமாம், அவள் உலாவரும் பேரரசன் போல் எல்லோரிடையிலும் புகுந்து பெருமிதத் தோடும் மகிழ்வோடுந்தான் ஓடுகின்ருள்...

மாதவி: இந்த மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன தெரி யுமா? தாங்கள் கூறியதுபோல் அவள் கணவன் வேற்று மகளிரிடம் கொண்ட தொடர்பாலன்று— அவன்தன் ஒழுக்கத்தின் உயர்வால்தான்! சோழன் ஒழுக்கத்திற்கு உறைவிடம்; ஒப்புயர்வற்றவன். அவன் வீரத்திற்கு அறிகுறியாக, நாடு பெருக்க வடபுலத்தையும்,தென்புலத்தையும்தன தாக்கினுன் ...அதனுல் கங்கையும், குமரியும் அவனடிமைகள். அன்பரே! அடிமைகளைக் காமத்திற்கு ஆக்கும் சிறுமை நம் அரசப்பெருமகனிடமில்லை! சோழனின்

அடிமை நான். பன்னிரண்டு ஆண்டுகட்கு முன் கங்கையையும், குமரியையும் மனைவியராகப் பேணும் அளவிற்கு அவன் ஒழுக்கம் இழந்தவ னென்றால், இன்று யான் தங்கட்கு உரியவள் ஆமாறு எங்ஙனம்? சற்று உன்னிப்பாருங்கள், எல்லாம் புரியும்......அத்தகைய பேராண்மை கொண்ட பெரியோனைக் கணவனாகப் பெற்ற பெருங் கற்பினள்; அவள் பெருமிதம் பெருக, பெய்வளை குலுங்க ஓடிவருகின்றாள்! அன்ப, அந்தக் கோன் தன் நிலை கெட்டால் கோளும் தன் நிலை கெட்டுத் தென்புலம் படரும்–அது தென்புலம் படரின் மாரியு மில்லை; அருவியுமில்லை-அருவியற்றபோது அங்குக் காவிரியேது? மருங்கில் மரமேது? பூவேது? வண்டேது? குயிலேது? பெருமித நடைதான் ஏது?

**கோவலன்:** மாதவி! என்ன கூறுகின்றாய்?

**மாதவி:** காதல! கற்புடை மகளிர்க்குக் கணவனின் ஒழுக்கத்தால்தான் பெருமை—நிறையழிந்த ஆடவர்தம் மனைவியர் பெருமிதமாக வாழ்வதேது? அன்பரே! கற்புடைப் பெண்டிரை மனைவியராகப் பெற்றவர்கள் எப்படித் தம்மையொத்தஆடவர்கூட் டத்தில் ஏறுபோல் பீடுநடை பெறுகின்றார்களோ அப்படித்தான் நிறையுடைய ஆடவரைக் கணவ ராகப் பெற்ற மகளிரும், மகளிர் கூட்டத்தில் பெரு மித நடை கொள்வர். இதோ இந்தக் காவிரி நடப் பது அந்தப் பெருமித நடைதான்—அத்தான்! தன்னுடைய மனைவியை அயலான் வீட்டில் கண்டும் காணாததுபோல் இருக்கும் ஆடவனை, ஆடவர் கூட்டம் எப்படிப் பேடி என்று அழைக் குமோ அப்படியேதான் பெண்டிர் கூட்டமும் தம் கணவன்மாரை அயலாள் வீட்டில் கண்டும், காணா

திருக்கும் பெண்டிரை அலி என்று அழைக்கும். அவர்கட்கு அக் கூட்டத்தில் பீடில்லை, பெருமையில்லை, பெருமிதமில்லை—ஒன்றுமேயில்லை !

கோவலன்: [பெருமூச்சுவிட்டு.........ஆனால், உளத்து ஏற்பட்ட வெறுப்பைப் புலனாக்காது சிரித்துக்கொண்டு] மாதவி.........! அடேயப்பா உன் கற்பனை......

மாதவி: முகமன் எல்லாம் போதும், அத்தான் !

கோவலன்: நான் என்னுடைய கருத்தை உணர்த்த எடுத்துக்கொண்ட இதே காவிரியை நீயும் உன் கருத்தை உணர்த்தப் பொருளாகக் கொண்டது என்ன வியத்தகு செய்தி? ஆற்றுவரியில் மடக்காக...ஆகா ! அழகொழுகப் பாடிவிட்டாயே! உன்னைக் கலைச்செல்வி என்றால், உன் பீடுணர்த்த அந்தச் சொல் மிகச்சிறியது ! நின்னைப் புகழ என் தமிழ் மொழியும் சொல்வளமற்றுப்போயிற்றே ! நான் என்ன செய்வேன் ?

மாதவி: அத்தான்! நீங்கள் ஒன்றும் செய்யவேண்டாம் —வேறு ஒரு பாட்டுப் பாடுங்கள் அது போதும் ! ஏனிந்த வம்பு ?

[ கோவலன் பாடுதல் ]

காதல ராகிக் கழிக்கானல்
கையுறைகொண்டு எம்பின் வந்தார்
ஏதிலர் தாமாகி யாமிரப்ப
நிற்பதையாங் கறிகோம் ஐய
மாதரார் கண்ணும் மதிநிழல்நீர்
இணைகொண்டு மலர்ந்த நீலப்
போதும் அறியாது வண்டூச
லாடும் புகாரே எம்மூர்

மாதவி: அத்தான்! என்ன, இப்பாட்டில் ஒரு பெண்ணின் அவலக் குரலைக் கேட்கின்றேனே!

கோவலன்: [சிரித்துக்கொண்டு] ஆம், மாதவி! அவலம் தான். ஒருத்தியின் காதலன் அவளை முதல் நாள் கடற்கரையில் தலைப்பெய்தபோது கடல் தெய்வத்தையெல்லாம் காட்டி, "நின்னைப் பிரியவே மாட்டேன்—உறுதியாக மணப்பேன்" என்று சூளுறவு செய்தான்...

மாதவி: உம்—அவ்வாறு சூளுற்றவன் பிறகு என்ன செய்தான்?

கோவலன்: என்ன செய்தான்? அவன் அவளை அன்று மன்றாடி மன்றாடித் தன்னை மணக்கச்சொன்னதைப் போல இன்று அவள் அவனிடம் மன்றாடுகின்றாள்!

மாதவி: அவன் என்ன சொல்லுகின்றான்?

கோவலன்: என்ன சொல்வான்? அவள் அழுகையையும், வேண்டுகோளையும் கண்டு உள்ளம் களிக்கின்றான்!

மாதவி: அட பாவி...!

கோவலன்: மாதவி! அவன் செல்வன்—அந்தப் பெண் சொல்கின்றாள்: "மணலில் ஊர்ந்துவந்து கிடக்கும் பெரிய வெண்சங்கை மதியென்றும், அதனருகில் சிதறிக் கிடக்கும் முத்துக்களை விண்மீனென்றும் கருதி, உப்பங்கழிக்கண் இரவில் மலரும் ஆம்பல் பகலிலும் மலர்கின்ற இயற்கைத்து, புகார்" என்று தன் ஊரின் வஞ்சமறியாமையைச் சுட்டிக் காட்டி, "அதனால், யானும் உன் வாய்மொழியில் ஏமாந்தேன்; இனி என் செய்ய?" என்கின்றாள் அவள்...

மாதவி: [கண்கலங்கி] இப்படியா அறங்கெட்டார் எம் புகாரில் வாழ்கின்றூர்கள்!

கோவலன்: மாதவி! அறம் ஒன்றும் அழிந்துபோக வில்லை. அவள் இங்ஙனம் படும்பாட்டைப் பார்க்கும் அவனுள்ளத்தில் எத்துணை மகிழ்ச்சி தெரியுமா? இவ்வளவு அறியாமையும், மடமையும், வஞ்ச மறியா உள்ளமும் உடைய பெண்களைத் தழுவித் தணக்கும் இன்பத்திலும், அவர்கள் தங்கள் காதலர் கைவிட்டார் என்று கருதிக் கண்கலங்குவதைக் காண்பது கூடிமுயங்குழிப் பாடுபெறும் என்று பெறுமிதம் கொள்கின்றுன் அவன். மாதவி! கண்டாரைப் பிணிக்கும் கட்டழகியரைக் கலந்து விடுதல் காளையர்க்கு அழகு. அங்ஙனம் கலக்கக் கடல் தெய்வமென்ன—கடல்சூழ் மண்டலத்துக் கணக்கற்ற தெய்வங்களைக் காட்டிச் சூளுரைக் கலாமே! கண்டார்ப் பிணிக்கும் கோலங் கண்டும் நிறையழியாது வாழும் ஒருவன் பேடியன்றோ? முயங்கிப் பிரிதல் ஆடவர்க்கியற்கை; தணந்தார்க்கு உடைதல் பெண்டிர்க்கியற்கை! நம்மூர் இயற்கையே வஞ்சமறியாதது. வஞ்சமறிந்த பெண்ணின்பம் வளமற்றது. உனக்கு அதன் பெருமை தெரியாது!

மாதவி: அன்ப! கள்ளமறியா மகளிரைக் காமுற்று—நிறுப்ப நில்லா நெஞ்சொடு கலத்தல்தான் இந்த புகாரியற்கையோ? நிறையழிய வாழ்தல்தான் ஆடவர் இயல்போ? அறமற்ற செயல்தான் அழகுடையதோ?

கோவலன்: ஆம், மாதவி! இதோ ஆம்பலும், வண்டும் காட்டியது அதுதானே?

[மா]தவி: தங்கட்குக் காவிரிதான் தவருகப்பட்டாள் என்றிருந்தேன், புகாருமா அப்படி...... அத்தான்!—

உயர்ந்தோர் உறைவதால் என்றும் ஒடுக்கம் இவ்வூர்க்கில்லை. இத்தகைய எம் புகாரா அவ்வாறு நிறைகடந்த ஆடவரைப் பெற்றிருக்கின்றது? இல்லை...

கோவலன்:. மாதவி! ஏன், உன் புகார்......அப்படி இல்லையோ?

மாதவி: இல்லை! கேளுங்கள் சொல்கின்றேன்:

தீங்கதிர் வாள்முகத்தாள் செவ்வாய்
மணிமுறுவல் ஒவ்வா வேனும்
வாங்குநீர் முத்தென்று வைகலும்
மான்மகன்போல் வருதிர் ஐய
வீங்கோதம் தந்து விளங்கொளிய
வெண்முத்தம் விரைசூழ் கானல்
பூங்கோதை கொண்டு விலைஞர்போல்
மீளும் புகாரே எம்மூர்!

இன்னும் கூறுகின்றேன் கேளுங்கள்:

மறையின் மணந்தாரை வன்பரதர்
பாக்கத்து மடவார் செங்கை
இறைவளைகள் தூற்றுவதை யேழையம்
எங்ஙனம்யாங் கறிகோம் ஐய
நிறைமதியும் மீனும் எனவன்னம்
நீள்புன்னை அரும்பிப் பூத்த
பொறைமலிபூங் கொம்பேற வண்டாம்ப
லூதும் புகாரே எம்மூர்!

கோவலன்: மயிர்க்கூச்செறிகின்றதே, மாதவி! நீ மீண்டும் என்னை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்திவிட்டாய். எம் புகார்ச் சிறப்பை உன் வாயால் பண்ணோடு கேட்கப்பெற்ற ஒருவன் யான் என்றால்...மாதவி! இவ்வுலகில் என்னிற் பேறுபெற்றார் யார்?

இத்தகைய பாட்டுக்களை ஏன் நீ இதுகாறும் எனக்குப் பாடிக் காட்டி...எனக்குமட்டுமென்ன — நம் அரசன் அரங்கிலேயே பாடிக்காட்டியிருந்தால் அதைக்கேட்டு இம் மாநிலம் எவ்வகை இன்பத்தை எங்ஙனம் பெற்று, என்ன பாடுபட்டிருக்குமோ?

**மாதவி:** அன்ப! இத்தகைய பாட்டுக்களை அரங்கில் பாட வாய்ப்பில்லை. தாங்கள் பாடிய புகார்ச் சிறப்பே இத்தகைய பாக்களை உருவாக்கக் காரணமாயிற்று. எல்லாம் தாங்கள் அருகில் வீற்றிருக்கும் சிறப்பால்தான்!

**கோவலன்:** என் பாட்டா, உன் பாட்டுக்களை உருவாக்கிற்று?

**மாதவி:** ஆம், நீங்கள் சொன்னதுபோல், வெண் சங்கையும், ஒளி முத்தையும் கண்டு வேறுபாடு அறியாது வாய் விள்ளும் ஆம்பலில், வண்டுதும் அத்தகைய அறியாமையைப் படைத்தது நம் புகார் என்றீர்களே அது உண்மைதான்! அந்த அறியாமையைத் தாங்கள் பெண்களுக்கேற்றி, அத்தகைய மடவார்பால் பெறும் இன்பம் பெரிது, அம்மடவார்போல் யானும் வஞ்சமறியாதிருக்க வேண்டுமென்றீர்கள் — அப்படித்தானே?

**கோவலன்:** மாதவி! நான் குறிப்பாகக் குறிப்பிட்டது அப்படித்தான். நீ பாடியதும் அப்படித்தானே? என் கருத்தை நீயும் வழிமொழிந்ததாகக் காணப்படுகின்றதே!

**மாதவி:** அத்தான்! என் பாட்டும் தங்கள் பாட்டைப் போன்றதே. ஆனால், கருத்துமட்டும் ஆடவரைப் பற்றியது.

**கோவலன்:** ஆடவரைப்பற்றியதா? என்ன!

**மாதவி:** பொய்ம்மையை மெய்ம்மை என்றெண்ணி வாய்திறக்கும் ஆம்பலைப்போல, மெய்யன்புடையார் யார்—பொய்யன்புடையார் யார் என்ற வேறுபாடு அறியாது, மயக்க உணர்வுகொண்டு திரியும் ஆடவர்களுடையது எம்புகார் என்பது அன்றோ என் பாட்டின் கருத்து!

**கோவலன்:** உன் பாட்டில் அக்கருத்தா ஒலிக்கின்றது?

**மாதவி;** ஆம், அத்தான்! இக் கடற்கரையில் ஆடவர் எம்போன்ற பெண்களின் பற்களை முத்தென்று கருதி, அவற்றை விலைகொடுத்து வாங்குவார் போல நாள்தோறும் மயங்கி மயங்கி வந்து போகின்றனர். அவர்தம் அறியாமையை என்னென்று சொல்வது? இது இந்த ஊர் ஆடவர் இயல்பு! அதோ அந்தக் கடல் தன்பாலுள்ள மதிப்பிடற்கரிய முத்துக்களைக் கரைக்கண் வீசியெறிந்து, எம் மகளிர் சூடிக்கழித்த பயனற்ற மாலைகளைப் பண்டமாற்ருகக் கொண்டு செல்லுகின்றதே, அதைப்போல நல்லது கெட்டது எது என்பதறியாது திரிபுணர்ச்சி கொண்டு பேணவேண்டிய ஒழுக்கமிழந்து, பெற்ற பொருள் போக்கிப் பழியோடு புறங்கூற்றையும் ஏற்கின்றதே, இந்த ஆடவருலகம்-இது அறியாமையன்றோ? அத்தான்! இந்த ஊர், யாரிடம் எதைக் கொடுத்து எதைப் பெறுகிறோம் என்ற ஆய்தலுணர்ச்சி முற்றிலும் அற்ற ஆடவரையுடையது-என்பதைத்தான் அலையாலும், வண்டாம்பலூதலாலும் உணர்த்தினேன். [கோவலன் முகத்தில் ஒரு பெரிய மாற்றம். அதைக்கண்ட மாதவி] அத்தான்! நமக்கேன் இந்த ஊர்க் கதை? நாம் நன்முறையில் நடந்தால் போதும்! ஏன் புகாருக்கு மாசு கற்பிக்கவேண்டும்?

**கோவலன் :** மாதவி! நீர்வழிப்பட்ட மிதவைபோல ஊழ்வழிப்பட்டார் இயங்கத்தானே செய்வர்! சூழ்நிலையும், வாய்ப்பும் கிடைக்கின்றபோது மக்கள் பெற்றியழிதல் இயற்கை. தீதுடையது எதிரில் உண்டென்றறிந்த எவனும் அதனைக் கடக்க முற்படான்; விரும்பவும் செய்யான்.

நிணங்கொள் புலாலுணங்கல் நின்றுபுள்
ளோப்புதல் தலைக்கீ டாகக்
கணங்கொள் வண்டார்த்துலாங் கன்னி
நறுஞாழல் கையி லேந்தி
மணங்கமழ் பூங்கானல்
மன்னிமற் றுண்டோர்
அணங்குறையும் என்ப தறியேன்
அறிவேனேல் அடையேன் மன்னோ

மாதவி! கடற்கானலில் தீண்டுவாரை வருத்தும் தெய்வம் ஒன்று, காய்கின்ற மீனிற்குக் காவலாக ஒரு பூத்த புன்னைக்கொத்தைத் தன்கைக்கண் கொண்டு சுற்றித் திரியும் என்றறியேன். அறிந்தால் அப்பக்கத்திற்கே சென்றிருக்கமாட்டேன்...மாதவி! எனக்கு உற்ற எல்லா நிகழ்ச்சிகளும் யான் எதிர்பாராதவையே! இவையன்றி யானுக ஒன்று வேண்டி விழைந்ததில்லை! என்னைத் துன்புறுத்த வேண்டுமென்ற நோக்கோடு நின்ற அணங்கன்னுரை யான் பெற்றதும், நோயுற்றதும் விதிவயப்பட்டதன்றி மதியோடு பட்டதன்று. கழிந்ததற்கு இரங்கி என்செய்ய? முடிந்தது முடிந்து போயிற்று; வருந்தாதே. சூழ்நிலையையும் அந்த அணங்கின் இயல்பிடமும் கூறுகின்றேன், கேள். பின் தெளிவாய்!

மாதவி! கடற்கானலில் :

கயலெழுதி வில்லெழுதிக் காரெழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம் திங்களோ காணீர்
திங்களோ காணீர் திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கண்ணேர் வானத்து அரவஞ்சி வாழ்வதுவே

மாதவி! இன்னும் கூறுகின்றேன், உணர்ந்து பார்!

பொழில்தரு நறுமலரே புதுமணம் விரிமணலே
பழுதறு திருமொழியே பணையிள வனமுலையே
முழுமதி புரைமுகமே முரிபுரு வில்லிணையே
எழுதரு மின்னிடையே எனையிடர் செய்தவையே

மாதவி! வம்பு விரித்தன்ன இந்தப் பொங்கு மணல்—அம்மணல் கலித்த பொழில்—மலர்தரு நறு மணம்—மணம் நுகர ஒரு மடவோள்—அவள் குவளை வரிக் கண்ணும், குனித்த புருவமும், பவளச் செவ் வாயும், பருத்துத் திரண்ட இணைமார்பும்—ஆ! மாதவி! இந்தச் சூழ்நிலையில் பெற்றியழியாது ஒருவன் உளனென்றால், பேடியன்றி அவனும் ஓர் ஆண்மகனோ?

மாதவி : அன்ப! எனக்கு உங்கள் பாட்டும் விளக்கமும் என்னென்னவோ செய்கின்றன—வெளிப்படையாக எல்லாம் கூறிவிட்டீர்கள் போலும்! அன்பரே! இறுதியாக ஒன்று சொல்ல விரும்புகின்றேன் ; சூழ் நிலையில் மனிதன் கெடுவான் என்பது ஒருபுடை யிருப்பினும், கெடாமலும் இருக்கலாமன்றோ? கடல் சூழ்ந்த இக்கரையில் தோண்டி எடுக்கும் ஊற்றில் உவர் கலப்பதில்லை. தன்னைச் சூழ இருப்பதெல்லாம் உவர்நீர் என்ற உணர்ச்சி உடைமையால், அது தன்கண் உவர் கலவாது பேணிக்கொள்கின்றது!

அத்தான்! உள்ளம் உவப்ப ஒருவனைக் காத லித்து, அகத்தும் புறத்தும் அவனையே காணும் வெள்ளை உள்ளமும் கள்ளமில் அன்பும் அதில் விளை ஆர்வமும்கொண்ட கற்புடைய பெண்கள் தோளைத் 'தாமரைக் கண்ணான் உலகு' என்றனே அப்பெரி யோன்–அந்த மேலாந்தரத்த பெண்டிர் இயல் பையும் மனப்பான்மையையுங் கூறுகின்றேன், கேளுங்கள்!

**கோவலன்:** சொல்......தெரிந்தவெல்லாம் சொல்!

[ மாதவி பாடுதல் ]

**தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்**
**எம்மை நினையாது விட்டனரோ விட்டகல்க**
**அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்**
**நம்மை மறந்தாரை நாம்மறக்க மாட்டேமால்**

அத்தான்! தலைவர்கள் தம் இன்பம் ஒன் றையே கருதி அதனைத் தலைவியர்பால் துய்த்து, நுகர்ச்சி ஓய்ந்ததும் தத்தம் செயலில் தலைப்படு கின்றனர். அவர்களை விரும்பி மனம் போக்கிய மகளிர்தம் துடிப்பு கைவிட்ட அவர்கள் கருதவோ, எண்ணவோ முடியாத அளவு பெரியது. அப் பெண்கள் தம் நெஞ்சத்து நின்ற நெகிழ்ச்சியை யாரிடம் கூறி எப்படி ஆற்றமுடியும்? இதற்கு அவர்கள் தமக்கு ஆறுதல் அளிப்பதாகக் கருதி விளித்துக் கூறுபவையெல்லாம், தம் காதலரோடு கூடிக்களித்த பொழிலும், அப்பொழிலூடு நின்ற பொய்கையும், பொய்கை பூத்த பூக்களும், அப்பூக் களில் வாழும் அன்னங்களுமேயாம்!

அத்தான்! அங்குமிங்கும் அலமந்து ஓயாது ஓலமிடும் கடலைக் கண்டு, தம்மைப்போல் அக் கடலும் அதன் தலைவனைப் பிரிந்து, துன்புறுவ தாகக் கருதி, அதற்குப் பரிந்து அதனோடு உரை

யாடித் துன்பம் பகிர்ந்துகொள்ளும் பெண்மைக்குப் பெருந்தக்கது இவ்வுலகத்து ஒன்றுண்டோ? அன்ப! கடல் கண்டு நொந்து, கா கண்டு வெந்து, காமத்தால் சாம்பும் மகளிர்தம் மேனி மெலிவு கண்ட தாயர்—அகங்குழைந்து, அது அணங்கு தீண்டியது என்று கருதி வெறியாட்டு அயர்ந்தால்—அன்பரே! தாயர் முன்னும் வேலன் முன்னும் அவர்கள் துடிக்கின்ற துடிப்பைத் துலையிட்டுரைக்க இவ்வுலகத்து ஒரு கருவியுண்டோ?

காதல! ஆடவர் அறியவொண்ணு ஆயிரமாயிரம் துன்பங்கள் மகளிர்க்குண்டு. ஐயோ! [ பெருமூச்சு விட்டுக்கொண்டு ] தாமுற்ற நோயைத் தாயறிந்தால்—காரணமறிய முற்படுவாளென்று எப்படியெல்லாமோ மறைத்து மறைத்து மாழ்குவதுதான் அவர்களின் பெண்மைக் குணம். அன்பே! கூற்றுவன்போல வருகின்ற மாலைக்காலம் அவர்களை வாளாவிடுமா? காம நோய் நம்போல் இல்வாழ்வார்க்குக் காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையில் மலரும். காதல! காமத்திற்குப் புதியவர்க்கும், காதலனல் கைவிடப்பட்டார்க்கும் காலையே அது அலர்ந்துவிடும். பின்னர், பகற்பொழுதில் காய்ந்து மாலையில் அது கருகி ஒழியுமே. அந்தோ! வள்ளுவன் இந்தக் கொடுமையை நினைத்திருந்தால், "காலை மலர்ந்து பகலெல்லாம் வீயாகி, மாலை கருகுமிந்நோய்" என்று வேறு ஒரு குறளும் செய்திருப்பானே! அன்ப! பெண்ணுள்ளத்தைச் சற்று திறந்து காட்டுகின்றேன், பாருங்கள்!

காமநோய் பிரிந்த இருவருக்கும் பொதுவல்லவா? துறந்தவன் வேறுதுணையோடு வாழ்ந்தாலும்

அதனை அறியா தலைமகள் அவனும் தன்னைப் போல் துன்புறுவதாகத்தான் நினைப்பதுண்டு. மாலையின் கொடுமையைக் கண்டு அத்தகைய மகளிர் படும்பாட்டைப் பாருங்கள்! தாங்கள் மாலைக் காலத்தால் வதைபடுவது போதாதா? தங்கள் காதலர்களும் தங்களைப்போல் இந்த மாலையால் வதைப் புண்டால் அவருயிர்க்கு ஏதம் வருமே; வந்தால்—வருவாரென்று கொண்ட நம்பிக்கைக்கு இடமின்றியொழியுமே என்று கருதி—"மாலையே யாம் என்ன செய்வோம்! எம்மைக் கொன்றாலும் சரி, அவரை ஒன்றும் செய்யாதே" என்று வேண்டுகின்றார்கள் என்றால்—அன்பரே அவர்களின் வெள்ளையுள்ளங்களை என்சொல்லிப் போற்றுவது?

பறவைபாட்டு அடங்கினவே பகல்செய்வான்
[மறைந்தனனே
நிறைநிலா நோய்கூர நெடுங்கண்ணீர் உகுத்தனவே
துறுமலர் அவிழ்குழலாய் துறந்தார்நாட் டுளதாங்கொல்
மறவையாய் என்னுயிர்மேல் வந்தவிம் மருண்மாலை

என் அன்பே! அவர்கட்கு இருபுறத்துத் துன்பம்—இருபுறம் துன்பம் என்றாலும் துன்பத்தின் முடிநிலை இன்பமல்லவா? அதனால், தம் காதலர்களை நினைந்து நினைந்து, நெஞ்சு நெக்கு உருகி உருகி, உடம்பு கண்ணீரதனால் நனைந்து நனைந்து, இறப்பு சூழும் நேரத்திலும் அவரே எல்லாமாய் அவர், தம்மின் நீங்கினார்—கைவிட்டார்—துறந்தார் என்ற எண்ணம் போய்க் காதலர் நெஞ்சத்தவராகக் கற்பித்துக் கோழிபோல் அவர்பால் பெறத்தகும் இன்பமெல்லாம் கற்பித்துப் பெற்று உள்ளத்துப் பெருமகிழ்வெய்துவது அவர்கள் இயற்கை.

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீநல் கென்றே நின்றார் ஒருவர்

நீநல் கென்றே நின்றார் அவர்நம்
மானேர் நோக்கம் மறப்பார் அல்லர்

அதனால், அத்தான்!

அன்னந் துணையோ டாடக் கண்டு
நென்னல் நோக்கி நின்றார் ஒருவர்
நென்னல் நோக்கி நின்றார் அவர்நம்
பொன்னேர் சுணங்கிற் போவா ரல்லர்

என்று இந்த வேதனையைத் துய்த்துழந்து, பின் அதனை உள்ளத்து உருவாக்கிப் பழைமை நினைந்து மகிழும்போது—முன்னை நாள் இருவரும் காமுற்றுக் கலந்தபோது அங்கு நின்ற பறவை இனங்களைக் கண்டதும், மகிழ்ந்த மகிழ்ச்சி குறைந்து பழைய நினைவு மேலிடத் தம்பால் இரக்கமுற்று ஒரு தூதும் செல்லாக் குருகினங்களை வெறிபிடித்துக் கடிவதைக் காணுங்கள்!—துன்பஞ் சொல்லப் போங்கள் என்று கூறித் துடிப்பதைப் பாருங்கள்!

[ கோவலன் முகம் சிவந்து, சினத்தால் கருகிவிடுகின்றது ]

மாதவி: ஐயையோ அத்தான்! கெட்டேன்–இதுகாறும் வேதனைகொண்ட மகளிர் மனந்திறந்து காட்ட முற்பட்டஎன்மனமும் வேதனைப்படுகின்றது! அத்தான் இந்த மாலை என்னுயிர் குடிக்க வருகின்றதோ? யாழின் பகை நரம்பை என் கை மீட்டுவானேன்?

[ வெறிகொண்டவள்போல் கும்பிட்டுக்கொண்டு ]

மாக்கடல் தெய்வமே! நின் மலரடி தொழுகின்றோம்—தீ சிந்தி வந்து துன்புறுத்தும் மாலைப்போது வருத்துமென்றுகருதாது, பூ மலர்ந்து மணங்கமழும் கானலில், "நின்னைப் பிரியேன்—பிரியினும் தரியேன்–தரியினும் உயிர்வாழேன்"—என்றுனை நம்பி அவன் வருவான் வருவானென்று அவன் வருகை எதிர்ந்து நிற்கும் எங்களை ஏய்த்துச் சூள்கூறிய

வனைப் பொறுத்தருள்க! அவனுக்கு எம்மைக் கைவிட்டதால் ஊட்டும் வினைப்பயன் கூடாதொழிக! கடல் தெய்வமே! உன்னைக் காட்டிக் காட்டிச் சூளுரைத்தவன் ஏன் பொய்த்தான் என்று நின் சினத்தை அவன்பால் காட்டற்க! யானிறப்பினும் அவன் வாழவேண்டும். இதுதான் எம்போன்றார் வேண்டுகோள். எம்போன்றார் மனநிலையும் இத்தகையதே. அன்ப...அன்ப...! என்ன, முகத்தில் சினக்குறிப்பு? வெறுத்த முகம் திருத்தும் என் முகங் கண்டுமா சிரித்தமுகம் ஒழிந்தீர்? அந்தோ! கெட்டேன். [ மயங்கிக் கலங்கி நிற்றல் ]

[ கோவலன் சிந்தனை ]

"என்ன மாயமிது!—நான் நினைத்தவெல்லாம் இவள்முன் தவறாகிவிட்டன! என்ன பொய்? இவள் பேசுவதெல்லாம் யான் கருதிய உண்மைக்கு மறுதலையாகின்றன. காவிரியில் பிழைத்தது, பூம்புகாரில் பிழைத்தது. ஆடவர் இயல்பில் பிழைத்தது. யான் கூறிய பலவற்றிற்கும் பலகூட்டி உரைக்கின்றாள். இனி இவளோடு நாம் வாழ்தற்கில்லை, இவளிடம் என் கருத்தெல்லாம் பொய்படுகின்றன."

மாதவி: அன்ப! என்ன நெடும்பொழுது பேச்சில்லை...

கோவலன்: ஆம்......! பொழுதுபட்டது......போக வேண்டும்!

[ எழுந்து தலைகவிழ்ந்தவண்ணம் ஒன்றும் பேசாது கோவலன் தனியே போதல். அது கண்ட மாதவியும் கோவலன் தன்னை உடன் அழைக்காது போகும் காரணம் உணரகில்லாது தவித்துநின்று பின்னர் தானும் தனித்துப் போதல்]

## கோவலன் மனை

[ கண்ணகி படுக்கையிலிருந்து துடித்தெழுந்து அலற, அருகில் படுத்திருந்த தேவந்தி விழித்தெழுந்து ]

**தேவந்தி :** கண்ணகி! என்ன, ஏனிந்த நடுக்கம்?

**கண்ணகி :** தேவந்தி! என்னவோ என் நெஞ்சு நடுங்குகின்றதே! என் அன்பர்......

**தேவந்தி :** அன்பரைக் கனவு கண்டாயோ? [ சிரித்துக் கொண்டு ] கண்ணகி! நனவில் நல்காதவரைக் கனவில் கண்டு இன்புறுவதுதானே நம் வாழ்வு! அதில் ஏன்...நடுக்கம்?

**கண்ணகி :** கனவைக் கேட்டால் நீயும் நடுங்கிப் போவாய்!

**தேவந்தி :** நானுமா? என்ன அப்படி!

**கண்ணகி :** கனவில் என் அன்பர் வந்து என் கை தொட்டழைத்தார். நாங்கள் இருவரும் ஒரு பெரிய ஊருக்குள் போனோம். அவ்வூரார் எம்மீது ஒரு பெரும்பழி சூட்டினார்கள். அப்பழியால் என் அன்பர்க்கு ஏதோஒரு தீங்கு வந்ததாக ஊரார் சொல்லக் கேட்டு, வாழ்க்கையில் எவர்முன்னும் வழக்குரையாத யான் அவ்வூர்அரசன் முன்னிலையில் சென்று வழக்குரைத்தேன். அதனால், அந்த ஊருக்கும் அரசனுக்கும் பெருந்தீங்கு நேர்ந்தது. இந்தத் தீக் கனவினுள்ளும் எனக்கு ஒரு பெருமை கிடைத்தது! அதைச் சொன்னால் நீ நகுவாய்...அதனால் நினக்குச் சொல்லமாட்டேன்!

**தேவந்தி :** கண்ணகி! நீ சொல்லவேண்டாம். இத்தீக் கனவிற்குச் சிறிதும் நீ அஞ்சவேண்டாம். உன் தலைவன் உன்பால் எந்த வெறுப்புங்கொண்டு நின்னைப் பிரியவில்லை. நீ சென்ற பிறவியில் உன் கணவனுக்கு ஆற்றவேண்டிய நோன்பு ஒன்றைத் தப்பியதால் வந்த விளைவுதான் இது! நான் சொல்வதுபோல் செய்தால் அனைத்தும் அகலும். கண்ணகி! நம் காவிரி கடலொடு கலக்குமிடத்தில் சோமகுண்டம், சூரியகுண்டம் என குளங்கள் இரண்டுள்ளன. அவற்றில் மூழ்கி, அண்மையிலுள்ள காமவேள் கோட்டம் தொழுதால், தொழுத மங்கையர் யாவரும் இம்மையில் கணவனோடு இன்புற்று வாழ்வதோடு மறுமையிலும் அவரைப் பிரியார் என்பார்கள். அங்கு நாம் போய் ஒருநாள் நீராடி வருவோமா?

**கண்ணகி :** வேண்டாம் தேவந்தி! அது நம் போன்றார்க்குப் பெருமை தருவதுமன்று, நம் கணவர்க்கும் பீடளிப்பதுமாகாது.

**தேவந்தி :** இதுகாறும் யான் குளம் மூழ்குவதை என் பொருட்டால்கூட நினைந்ததில்லை; நின் துன்பங் கண்டு இப்பொழுது நினைந்தேன்.

**கண்ணகி :** குண்டம் மூழ்கிக் காமவேளைத் தொழுததால் நாம் நம் கணவன்மாரைப் பெற்றோம் என்றாகு மன்றி அவர்தம் அன்பால் கூடப்பெற்றோம் என்று ஆகாது. அன்றியும் அவர்கள் பிரிவுழி எல்லாம் குண்டம் மூழ்கவேண்டும். அதனால்தான் யாருக்கும் பீடன்று என்றேன்.

**தேவந்தி :** நன்று, கண்ணகி!

**கண்ணகி :** தேவந்தி! அதோ பார்...

**தேவந்தி :** கண்ணகி! ஐயாவைப்போல்...

**கண்ணகி :** ஆம், என் அன்பர்தாம்...

**தேவந்தி :** அப்படியானால், நான் அப்புறம் போகின்றேன். ஐயாவிடம் நீ மகிழ்ச்சியோடு நடந்துகொள்!

[ கோவலன் கண்ணகி இருந்த அறைக்குள் புகுந்து அவள் மேனி முழுவதும் ஒருமுறை நோக்கி ]

**கோவலன் :** கண்ணகி! உம்...கொடுமை நிறைந்த கடல் கலன்களைக் கவிழ்த்ததால் தந்தை வணிக முதலாகத் தந்த என் குலப்பொருள் அனைத்தும் தொலைந்தன. அவர்கட்கு இது தெரிந்தால் பெரிதும் துன்புறுவார்கள். அதுகுறித்துத் தலை காட்டவியலா நாண்மிகுந்து உழக்கின்றேன். இப்பொழுது கைப்பொருளிழந்து வறியவனாகி விட்டேன்! [ நாணித் தலைகவிழ்ந்து நிற்றல் ]

**கண்ணகி :** ஐய! குலமகன் வாயினில் 'இல்லை' என்ற சொல்லா?—இதோ என் சிலம்புகள் இருக்கின்றன. "இவற்றின் உள்ளேகிடக்கும் மணிகட்கு விலைமதிப்பில்லை" என்று என் தந்தை கூறி வியப்பார்கள். தாங்கள் இழந்த பொற் குன்றுகள் அனைத்தும் இவற்றுள் மணியாகிக் கிடக்கின்றன! இதோ சிலம்புகள்—கொள்ளுங்கள்.

[ சிலம்புகளைக் கண்டதும் ]

**கோவலன் :** ஆம், கண்ணகி! இழந்த பொருளனைத்தையும் பெற்றேன். இதனை முதலாகக்கொண்டு பெரும் பொருள் ஈட்டலாம். இனிச் செல்வனானேன். இன்றேபுறப்படு, இப்பொழுதே எவரும் அறியாமல் மதுரை சென்று பொருள் திரட்டி மீள்வோம்...வா!

**கண்ணகி :** அன்ப! இதோ புறப்பட்டேன்.

[ இருவரும் மதுரைக்குப் புறப்படல் ]

## வழிநடைக் காட்சி

[கோவலன், கண்ணகி இருவரும் ஒருவருமறியாவண்ணம் புறப்பட்டுத் தங்கள் இற்புறத்துப் பூங்கா கடந்து வெளியே நெடுந்தொலைவு வந்து, திருமால் கோயிலைக் கண்டு அதனை வலஞ்செய்து, ஐந்து சந்தி எனப்படும் பஞ்ச பரமேட்டிகள் தெருவைக் கடந்து சாவகர் வழிபடும் சிலாதனத்தையும் இலவந்திகைப் பொழிலையும் தாண்டிக் காவிரியின் வடகரையில் ஒரு காவதம் கடந்து ஆண்டுப் பூத்துக் குலுங்கும் ஒரு பொழிலை அடைகின்றனர். கண்ணகி நடக்கமாட்டாது மதுரையே வந்ததாக நினைக்கின்றாள். கோவலனோ தனக் குற்ற நிலை நினைந்து வாய்பேசாது போகின்றான். கண்ணகியோ ஒன்றும் புரியாமல் அவனைப் பின்தொடர்ந்து போகின்றாள்.]

**கண்ணகி :** [நொந்த உள்ளத்து எழுந்த சிரிப்போடு] தலைவ! மதுரை என்பது எது? அங்கு வந்துவிட்டோமா?

**கோவலன் :** [கண்கலங்க] கண்ணகி! இதோ ஐந்தாறு காவதத்திற்குள்ளேதான் இருக்கிறது. அருகில் தான் வந்துவிட்டோம்; வா!

[கோவலன் ஒரு கோட்டத்தில் அமர்ந்திருந்த காவுந்தியடிகளைத் தொழக் கண்ணகியும் தொழுகின்றாள். காவுந்தி இருவரையும் அடிமுதல் முடிகாறும் நெடிது நோக்கித் துணுக்குற்று]

**காவுந்தி :** யார் நீங்கள்? பார்த்தால் பெருங்குடி மக்கள் போல் தோன்றுகின்றீர்கள். என் பெருமகன் அருகனுக்கு அன்பு செய்யும் சாவகர் போலவும் காணப்பெறுகின்றீர்கள். ஏனிந்த அவலக் கோலம்? கொடுமை செய்தாரைப்போல் வீடு கடந்து இப்பால் போந்தது எது கருதி?

[சற்றுநேரங் கழிந்து]

**கோவலன் :** பெருந்தவத்தீர்! நீங்கள் கேட்டதற்கு விடை என்னால் கூறுமாறில்லை. நாங்கள் பொருள் தேட மதுரை செல்லக் கருதி வந்திருக்கின்றோம்!

**காவுந்தி :** அப்பா! இவளோ இந்தக் கற்கானத்தையும் முட்காட்டையும் கடக்கும் தன்மையள் அல்லள். அன்றியும், உயர்குலத்துப் பிறந்த இவளை நீ ஒருங்கு கொண்டு சேறலும் இழுக்கு...

**கோவலன் :** [இடைமறித்து] இல்லை...... எப்படியும் சென்றாகவேண்டும்.

**காவுந்தி :** உம்...தடுத்தல் பயன்படாதுபோல் தோன்றுகின்றது. ஊழ் இனி என்னென்ன செய்யுமோ!—அப்பா! நானும் மதுரை செல்லுங் கருத்துடையேன். உங்கட்கு உறுதுணையாக யானும் உடன் வருகின்றேன். உம்...புறப்படுவோமா?

**கோவலன் :** [தொழுதவண்ணம்] ஆ! அடிகாள்!...... நீங்களே எம்பால் அருள்காட்டி மதுரைக்கு உடன் வருவீராயின் இவள் துயரமெல்லாம் இப்பொழுதே துடைத்தவனாவேன்! இவள் என் மனைவி கண்ணகி, என் பெயர் கோவலன்.

**காவுந்தி :** உம்...அப்பா! நாம் போகும் வழியோ பல வித்த் துன்பங்களை உடையது. அதனை அறிந்து போக வேண்டும். கண்ணகி! இப்படி என் பின்னர் ஒதுங்கி வா—அதோ, நம் எதிரில் பூவுஞ் சருகும் உதிர்ந்து கிடக்கின்றதே—அது வள்ளிக்கிழங்கு அகழ்ந்த குழி. தப்பித்தவறி அடியைப் பெயர்த்து அதில் வைத்தால் கால் முறிந்துபோகும்! போற்றி வா.

கண்ணகி: ஆமம்மா! பார்த்தால் ஒன்றும் அப்படித் தெரியவில்லையே!

காவுந்தி: கண்ணகி! நம் காவிரிநீர் மதகில் தேங்கித் திடுதிடெனக் கீழிறங்கி வருவது, முரசுபோல் ஒலிக்கின்றதல்லவா?

கண்ணகி: ஆம், அதோ—அவை என்னம்மா!

காவுந்தி: அவைதாம் காணுங்கோழிகள். படைவீரர் போர்க்களத்து ஆர்ப்புபோல அலறும், அஞ்சாதே! அதோ உழவர்களின் "நாவலோ" என்றிசைக்கும் நாளோதையும், உழத்தியர் மதுவுண்டு வாய் குழறிப் பாடும் பாட்டையும் கேள். இனிமேல் அஞ்சாது செல்லலாம். ஊரிடையிட்ட நாடுகள் தாம் இனி.

கண்ணகி: ஊருக்குள் வந்துவிட்டோம், இல்லையா அம்மா?

காவுந்தி: கண்ணகி! கோவலா! இதோ பாருங்கள், எம் பெருமகன் அறமுரைக்கும் சாரணர்கள் தோன்றுகின்றனர்.

[ எல்லோரும் அடிபணிந்தெழுகின்றனர் ]

[ சாரணர்கள் எல்லோருடைய முகத்தையும் கூர்ந்து நோக்கிச் சிரித்துக்கொண்டு ]

சாரணர்கள்: காவுந்தி! நாம் செய்த தீவினை நாம் நுகர்ந்தாலன்றித் தானே செல்லுமோ? அன்றி அதனைக் கழுவாய் செய்துதான் கழிப்போமோ? முற்பகல் செய்தது பிற்பகல்விளையும். தினை விதைத்தவன் சுரையா அறுப்பான்? இவ்வுடம்பில் நிற்கும் உயிர் கடுங்காற்று வீசும் பரந்த வெளியில் எரியும் விளக்கைப்போன்றது. அதனால் நாம்ஆதிபகவனை-

அறத்தலைவனை — புராணனை — பரமனை — குணக் கடலை வழிபட்டு அவன் ஒளிபெற முயல்வோம்!

**காவுந்தி:** கண்ணகி! எம்மிறை அத்தகைய மேலோன்! —அவன் புகழையன்றி வேறொன்றை என் செவி திறந்து கேளாது. அவன் நாமத்தையன்றிப் பிறர் பெயரை என் நா பெயர்ந்து புகழாது. அவன் திருவடியிணைகளையன்றிப் பிறர் அடியினை என் கைகள் குவிந்து வணங்கா. அவன் திருமெய்க்கன்றி என் மெய் நிலந்தோய்ந்து தொழாது!

**சாரணர்:** காவுந்தி! உன் தீவினை கெடுவதாக!

[ சாரணர் வான்வெளிச் செல்லல் ]

**கண்ணகி:** அம்மா! இவர்கள் வான்வழிச் செல்கின்றனரே!

**காவுந்தி:** ஆம், அம்மா! இவர்கள் இயக்கமெல்லாம் வானில்தான்! நினைத்த இடத்திற்கு நினைத்தபோது செல்லவல்ல வன்மையுடையவர்கள். கோவலா! நாம் காவிரி கடந்து, தென்கரை செல்வோம்.

**கோவலன்:** நீர்நிலை...எவ்வாறோ! ஓடம்...

**காவுந்தி:** அஞ்சியோர்க்கு ஓடமுண்டு; அஞ்சாதே— உன் கண்ணகிக்கு ஒன்றும் வாராது. இந்த நீர்த் துறை கோடையாதலால் யாரும் இறங்கிச் செல்ல வல்லது. நீர் வலிப்பும் இங்குக் குறைவு. வா, போகலாம்.

[ மூவரும் ஆற்றைக் கடத்தல் ]

## வழியிடை ஒரு மரநிழலில்

[கோவலனும், கண்ணகியும் ஒரு மரத்தின்கீழ் தனித்தமர்ந்திருக்கின்றனர். காவுந்தியடிகள் தம் கடமை முடித்து அவர்கள் பக்கம் வருதல். அப்போது பரத்தையோடு கூடிய இளைஞன் ஒருவன் கனியாட்டோடு வருகின்றன். அவன் கோவலனையும் கண்ணகியையும் கூர்ந்து பார்த்து]

பரத்தன்: ஏடி! அதோ பார்த்தாயா?

பரத்தை: ஆமையா! இரண்டு பேரையும் பார்த்தால் முருகனும் வள்ளியும் உருவெடுத்து வந்ததுபோல...

பரத்தன்: சரி வா, போய் யார்—என்ன என்று கேட்போம். அவர்களும் நம்மைப் போலத்தானே என்னவோ?

[காவுந்தியடிகளை அணுகி]

ஏ துறவியம்மா! அவர்கள் யார், உங்கள் கூடவே புறப்பட்டிருக்கிருர்கள்? பார்த்தால் இரதியும் மன்மதனும் போல...

காவுந்தி: என் மக்கள்தாம் அவர்கள் — பார்த்தால் தெரியவில்லையா? காமனும்–தேவியாம்! போங்கள் அந்தப் பக்கம்—அவர்கள் துன்புற்றவர்கள்.

[பரத்தனும் பரத்தையும் வெடிச்சிரிப்புக் கொள்கின்றனர்]

பரத்தன்: ஏனம்மா! எனக்குச் சிரிப்பு வருகின்றது. அது போகட்டும், அவர்கள் உங்கள் மக்கள் என்ருல்...ஒரு வயிற்றில் பிறந்த அண்ணனுந் தங்கையும் கணவன் மனைவியாவது எங்காவது உண்டாம்மா? நீங்கள் நிரம்பப் படித்தவர்களாயிற்றே...

[ கண்ணகி தன் கையால் செவி பொத்திக்கொண்டு ]

**கண்ணகி :** ஆ... என்ன சொன்னீர்கள் ? யாரிடம் எது சொல்வது என்பதை அறியாமல்...

**காவுந்தி :** ஆ !...கண்ணகி வருந்தாதே; இதோ பார்— ஏ இழிமக்களே ! என் கண்காணவா அவர்களுக்குக் கொடுமை செய்கின்றீர்கள்......இந்தக்காட்டில் நரியாக அலைந்து திரியுங்கள் ! போங்கள்...

[ இருவரும் நரிகளாகி ஊளையிடுதலைக் கண்ட கண்ணகியும் கோவலனும் விம்மிதமுற்று நரிகளை இரங்கிப் பார்த்தல் ]

**கண்ணகி :** ஐயோ அம்மா ! எங்கள் பொருட்டாகவா அவர்கட்கு இந்தக் கேடு ? வேண்டாம்......அம்மா! அவர்கள் தோற்றத்திலேயே இழிந்தவர்கள் என்பதைத் தெரிந்துகொண்டும் அவர்கள் செய்த பிழையைப் பொருட்படுத்துவது முறையா ? தவமுடைய தாங்கள் வெகுண்டு சபித்தல் தகுமா ? உங்கட்கு அவர்கள்பால் சினம்வர நாங்களல்லவோ காரணம்! என்ன செய்வேன் ?

**காவுந்தி :** கண்ணகி ! நீ ஒன்றும் காரணமாகாய்; நான் செய்த தவறுதான் அது. நெறியின் நீங்கியவர் முறையின்றிப் பேசுவதைத் துறந்தார் பொறுத்தல் கடனே. நீ சொல்வது முற்றிலும் உண்மை.

**கண்ணகி :** அப்படியானல் அவர்கட்குச் சாபவீடு தந்துவிடுங்கள் !

**காவுந்தி :** உன் எண்ணப்படி ஆகட்டும். அவர்கள் ஓராண்டு இந்த உறையூர் நொச்சிக்காட்டில் அலைந்தபின் பழைய உருவைப் பெறுவார்கள். போதுமா கண்ணகி ?

**கண்ணகி :** போதும் அம்மா!

**காவுந்தி :** கண்ணகி! கோவலா! அதோ பாருங்கள்; உறையூர்த் திருநகர். எம்மனோர் பெரிதும் பேணி வாழும் இடம் இது. இங்கு ஒரு காலத்தில் எம் அருக சமயத்தவர் அறுபத்து நான்கு கலைகளையும் மக்கட்குப் பயிற்றும் ஒரு பல்கலைக் கழகமே நிறுவி யிருந்தார்கள். அவ்வளவு பீடுடையது இப்பேரூர். இந்த இரவை இவ்விடத்துக் கழித்து விடியற்காலை நம் செலவை மேற்கொள்வோம்!

[அனைவரும் உறையூரின் ஒருபுறத்தே தங்குதல்]

---

# மதுரைக் காண்டம்

களம்: 3] [காட்சி: 1

## உறையூரை அடுத்த காடு

[காவுந்தி, கோவலன், கண்ணகி மூவரும் வழியிடையில் நடந்துகொண்டே]

காவுந்தி: கண்ணகி! கோவலா! கீழ்வானம் வெளுக்கும் இளங் காலையே நடந்துவந்ததால், தொலைவும் மாய்ந்தது; யார்கண்ணிலும்படாது உறையூரையும் தாண்டிவிட்டோம்.

கோவலன்: ஆம், அம்மா! இங்கு நம்மூரைக் காட்டிலும் வெப்பம் மிகுதியாகத் தோன்றுகிறது. நிலவுகூட இப்பொழுதில்லை. ஆகவே, வைகறை, விடியல் இரண்டுந்தான் இனி நமக்கேற்ற நேரம்.

[கண்ணகியைப் பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு]

காவுந்தி: கண்ணகி—வாம்மா, என்செய்வது! ஊழ்வினை நம்மை விட்டு நீங்காத நிழல் போன்றது. அதைத்தான் அன்று அரங்கத்தில் சாரணர்கள் கூறினர். நீ விளங்கிக்கொள்ளவில்லையோ?

கண்ணகி: முற்றிலும் விளங்கவில்லை... ஊழ்வினையை அறஞ்செய்தோ, ஆலயந் தொழுதோ மாற்ற இயலாதோ?

காவுந்தி: முடியவே முடியாது. ஊழ்வினை என்பது செய்வினை. அதாவது, ஒருவன் தான் முற்பகல் செய்தது—அது நல்லதாகவும் இருக்கலாம்; கெட்டதாகவும் இருக்கலாம். நல்லது செய்தாலோ, அல்லது செய்தாலோ அவற்றின் பயனை நாம் ஏற்றுத்தான் தீரவேண்டும். நஞ்சுண்டவன் அதன் பயனைத் துய்க்காது விடுவானு? அன்றி அதுதான் தன் பயனைத் தாராது ஒழியுமா?

கண்ணகி: ஆலயம் தொழுவது...

காவுந்தி: ஆலயம் தொழுவதால் அதற்கும் ஓர் அறப் பயனுண்டு. தீயது செய்த ஒருவன் ஆலயந் தொழுது அதனை அகற்றல் அரிது. அவ்வாலயத் தெய்வம் அதில் குறுக்கிடாது. குறுக்கிட்டால் அது தெய்வமும் ஆகாது; அதனை ஆலயத்து வாழும் அறன் என்றும் அழைத்தற்கு இல்லை.

கண்ணகி: [வியப்போடு] அறஞ்செய்வது பாவம் போக் கற்கென்றும், ஆலயம் தொழுவது புண்ணியம் பெறற்கென்றும் அல்லவோ கருதினேன்.

காவுந்தி: ஓகோ—இது வைதிக மதத்தார் கூற்று. கண்ணகி! இதோ பார்; ஊழ்வினையோ, நாம் செய்த பாவமோ ஒருபொன்கட்டியைப்போன்றது. அதனை நாம் உருக்கித் தகடாக்குகின்ருேம்—கம்பியாக்குகின் ருேம்—அணியாக்குகின்ருேம். முதலில் நம்மிடம் உள்ள பொன் பலவித வடிவில் இருக்கின்றதன்றி அது அழிவதில்லை. பொன்னில் அணிகள் செய்வ

தால் வடிவு மாறிற்றன்றி பொன் அழிந்துபோவதில்லை. அதுபோல நாம் செய்த ஊழ்வினை நம்மை அடுத்து வரும்பொழுது வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வடிவு கொண்டு நம்பால் இருக்கின்றதன்றி அழிந்தேபோவதில்லை.

**கண்ணகி :** அம்மா ! இப்பொழுது தெளிவாகப் புரிந்து கொண்டேன். நீங்கள் சொல்வதுதான் பகுத்தறிவோடு பட்டிருக்கின்றது. இதுதான் நம் சமண சமயக் கோட்பாடோ?

**காவுந்தி :** ஆமம்மா ! அங்கு அறவோர் உணர்த்தியதும் அதுதான். சற்று இந்த இளமரக்காவில் தங்கிச் செல்வோமா ?

[ தொலைவில் ஒருவர் வருகின்றார் ]

**கோவலன் :** யாரது? பாருங்கள், ஒருவர் வருகின்றார்...

**மாங்காட்டு மறையோன் :** வாழ்க, எங்கோன் மன்னவன் பெருந்தகை ! ஊழிதோறூழி உலகங் காக்க— வாழி ! வாழி !

**கோவலன் :** யாரையா நீர் ? யாரை வாழ்த்துகின்றீர் ?

**மாங்காட்டு மறையோன் :** யாரை வாழ்த்துகின்றேனா ! அவன் பெருமை கூற ஆயிரம் நா வேண்டும். கல் தோன்றி மண்தோன்றா முன்தோன்றி மூத்தது பாண்டியக்குடி. அந்தப் பாண்டியன்...

**கோவலன் :** எம் சோழனும் அந்தப் பண்டைய குடியினனல்லனோ?

**மாங்காட்டு மறையோன் :** ஆம், இல்லை என்று கூறியது யார்?

**கோவலன் :** பாண்டியர் பெருமை கூறவந்து, எம் சோழர் குடியை மறந்துவிடுவீரோ என்றுதான் அஞ்சினேன்.

**மாங்காட்டு மறையோன் :** முன்னொரு காலத்தில் இந்திரன் உக்கிரபாண்டியனையும் அவன் நாட்டையும் அழிக்கக் கடலை ஏவினான். அது சினந்து பொங்கி வந்து அழிப்பது கண்டு அதன்மேல் தன்னுடைய வெவ்வேலை எறிந்து வலியொடுக்கினான், அவன். அதனால், பின்னொரு காலத்தில் பாண்டியர் சோர்ந்திருந்தபோது கடல் தன் பகைமையைத் தீர்த்துக் கொள்ளப் பஃறுளியாற்றையும், அது பரந்த பன்மலை அடுக்கத்தையும், குமரியாற்றையும் அது தழுவிய நாட்டையும் ஒருசேர அழித்துவிட்டது. நாடு இழந்த பாண்டியன் வடபுலம் சென்று இழந்த மலைக்கு இமயத்தையும், தொலைந்த ஆற்றிற்குக் கங்கையையும் தன்வயப்படுத்தித் தென்னாடே தன்னுடாகக் கொண்டு ஆண்டான். அந்தப் பாண்டிய குலம் வாழ, அவர் வீரம் விளங்க வாழ்த்துகின்றேன்.

**கோவலன் :** ஓ ! வியத்தகு செய்திதான்......

**மாங்காட்டு மறையோன் :** அப்பப்பா ! அதுமட்டுமா ? சுமக்கமாட்டான் என்று கருதி இந்திரன் வஞ்சமாகச் சூட்டிய ஒரு பேராரத்தைத் தன் மார்பிற் பூவின் மெலிதாக ஏற்று, அவன் வியப்ப வீரங் காட்டிய உக்கிரபாண்டியனின் குலமய்யா அது !

**கோவலன் :** அப்படியா ? மறமிகுதி உடையவர்கள் போலும் !

**மாங்காட்டு மறையோன் :** மறமா ? உக்கிரபாண்டியன் ஒரு காலத்தில் தன் கைச்செண்டால் இந்திரன் தலையில் அடித்தான். அதனால், அவனுக்கு ஊர்தியாக

அமைந்த மேகம் பாண்டிநாட்டில் வளஞ்சுரக்க மழைபெய்யாது போகக்கண்டு, எல்லா மேகங்களை யும் தன் மந்திர வலிமையால் சிறைசெய்து ஒடுக் கினன். அந்தப் பேராற்றல் படைத்தோன் வழி வந்தவனே இன்று ஆளுகின்ற நெடுஞ்செழியன். அந்தப் பழம்பெருமையோடு, தானும்முறைதவறாது ஆளும் நேர்மை குறித்து வாழ்த்துகின்றேன்.

**கோவலன் :** ஐயா, நும்மூர் யாது?......இங்கு வரக் காரணம்?

**மாங்காட்டு மறையோன் :** ஐயா, யான் குடகுமலைப் பக்கத்திலுள்ள மாங்காடு என்ற ஊரினன். திருமால் காவிரி அரங்கத்தில் ஆயிரந்தலையுடைய ஆதி சேடன்மீது துயில்வது, பெரிய நீலமேகம் ஒன்று பொன்மலைமீது படிந்துகிடப்பதுபோன்று கிடக்கும் அந்தக் கிடந்த வண்ணத்தையும், வேங்கடத்துச்சி யில் கருமேகம்போல் இருபுறத்தும் திங்கள் அன்ன சங்கையும் ஞாயிறை ஒத்தசக்கரத்தையும்கொண்டு பொன்னுடையுடுத்து நிற்கும் நின்றகோலத்தையும் காட்டு காட்டு என்று என் கண்கள் என்னை ஏவிக் கவற்ற, அக்கவலை போக்கப் புறப்பட்டுவந்து அக் கண்மணி குளிர்ப்பக் கண்டேன். நீங்கள் எங்கு...

**கோவலன் :** நாங்கள் மதுரை செல்லவேண்டும். தீதற்ற வழியறியும் வேட்கை உடையோம். நீரறி யின் உரைக்கவேண்டும்.

**மாங்காட்டு மறையோன் :** அன்பரே! முறைகெட்ட அமைச்சர்களோடு கூடி அரசியல் நடாத்தும் அரசன்பாலமைந்த மக்கள் எப்படி உள்ளம் புழுங்கி, உடல் கருகி, உலர்ந்து வெந்துபோவாரோ

அப்படி அல்லவோ இந்த வேனில் நீடிக்கிடக்கின்றது. குறிஞ்சி நிலமும் பாலை நிலமாகும் இந்த வெங்கோடையில்-முல்லை நிலமும் மருத நிலமும் நெருப்பாதற்கு யாரைக் கேட்கவேண்டும்? ஐயோ, இந்த மடவோளொடு வந்திருக்கின்றீரே, இம் மணிக் கொழுந்து உழக்கும் காலமன்றோ இது!

[ கோவலன் கலங்கி நிற்றல். மறையோனும் சற்றுக் கலங்கிய நிலையில் ]

இதோ இந்தப் பாறை கூடிய சிறுமலைப் பாதையாகச் சென்றால் அங்கு எதிரில் கொடும்பாளூர் ஏரியைக் காண்பீர்கள். அதன் தென்கரையில் சிவபிரான் சூலம்போன்று மூன்று வழிகள் பிரியும். அதில் காய்ந்த வெண்கடம்பும், உலர்ந்த ஓமையும், முதலையின் முதுகுபோல் பொறிந்த வாகையும், காய்ந்த மூங்கிலும் தவிர வேறு ஒரு பயன்மரங் காண்டலறிது. அந்தப் பாதையில் நிழல் காணாது மானினம் அலமந்து குலையும். வேடர்கள் வாழும் காடும் இடையிடையே உண்டு. அதையும் கடந்து சென்றால் நல்ல நீர்வளமுடைய நிலப்பரப்புத் தோன்றும். அதன் பக்கத்தில் பாண்டியனுடைய சிறுமலை தெரியும். அந்த மலையின் இடப்பக்கமாகப் போனால் மதுரை செல்லலாம்.

**கோவலன் :** உம்...இவ்வளவு தொலையுண்டா?

**மாங்காட்டு மறையோன் :** ஐயா, இடப்பக்கத்து வழியோ சற்று நீர்நிறைந்த வயலுடையது. அடுத்து அடுத்துப் பூம்பொழில்கள் அமையப்பெற்றது. அதன்வழிச் சென்றால் திருமால் குன்றம் செல்லலாம். ஆனால், அங்கு ஒரு பிலத்து வழியுண்டு.

அதற்குள் புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி என்ற மூன்று பொய்கைகள் இருக்கின்றன. புண்ணிய சரவணம்...

[காவுந்தி இடைமறித்து]

**காவுந்தி :** என்ன! என்ன! புண்ணிய சரவணமா?

**மாங்காட்டு மறையோன் :** ஆம், புண்ணிய சரவணம் முழுகினுல் ஐந்திர வியாகரணம் அறியலாம். பவகாரணி குடைந்தாடினுல் பழைய பிறப்பும் காரணமும் தெரியும். இட்டசித்தியில் படிந்தால் நினைத்த சித்தி பெறலாம். அதன்பின் மலை வீற்றிருக்கும் திருமாலை வழிபட்டுப் புறப்பட்டால் அங்குள்ள சிலம்பாற்றின் கரையில் வரோத்தமை என்ற இயக்கி தோன்றுவாள். அவள், "இம்மைக்கு இன்பந் தருவது எது?" என்றும் அதனை அடுத்து, "மறுமைக்கு இன்பம் தருவது எது?" என்றும் வினவுவாள். இவை இரண்டும் அல்லாமல், "எக்காலத்தும் இன்பம் தருவது யாது?" என்ற இறுதி வினவையும் விடுப்பாள். அந்த வினக்களுக்கு விடையிறுத்தால், விடைதந்தார்க்கு என்றும் அடிமையாய் ஏவல் கேட்பாள். அதோடு அந்தப் பிலத்தின் கதவையும் திறந்துவிடுவாள். அங்கு வாயில்கள் பலவுண்டு. அதைக் கடந்து போனுல் அங்கு ஒரு பாவை தோன்றுவாள். அவளோ, "ஈறில்லாத இன்பந் தருவது யாது?" என்று ஒரு கேள்வி கேட்பாள். அதற்கு மாற்றம் உரைத்தால் இந்த மூன்று பொருள்களிலும் விரும்பிய இன்பம் பெறலாம். விடை கூறவில்லை என்ருல் வழியைக் காட்டி வறிதே போக்குவாள். இவை யாவும் செய்ய விருப்பமில்லையானுல் அந்தக் கோயிலில் வீற்றிருக்கும் திருமாலின் திரு

வடிகளை நினைத்தால் போதும்; அதுவே உங்கள் பிறவித் துன்பத்தைக் கெடுக்கும். பின்னர் மதுரைக்கு அதுவழியாகச் செல்லலாம். இவை இரண்டுமன்றி நடுவழியே செல்வீராயின் அதன் கண் பொழில் சூழ்ந்த ஊர்கள் இடையிடையுண்டு. ஆனால், கடத்தற்கரிய தெய்வம் ஒன்று குறுக்கிடும். அது கொடிய உருவத்தில் தோன்றித் துன்புறுத்தாது; இனிய வடிவிலேயே நின்று தடுக்கும். அங்கு வழியும் தெளிவாகத் தெரியும். நீங்கள் சென்றுவாருங்கள். யானும் நெடுமுடி யண்ணலை வழிபடச் செல்கின்றேன்.

காவுந்தி: வைதிக மறைவல்லரே! தாங்கள் இந்திர வியாகரணமறிய எளியமுறை கூறினீரே, அது எம் அருகன் அருளிய பரமாகமங்களிலிருப்பதைத் தாங்கள் அறிந்ததில்லையோ? புண்ணிய சரவணம் பொருந்தித்தான் அது பெறவேண்டுமோ? இது என்ன குறுக்குவழி? முயன்று மெய்வருந்திப் பெறுதல் அல்லவோ உண்மைப்பயன் தரவல்லது. போகட்டும்; முற்பிறப்பின் பயனைப் பவகாரணிக் குட்டத்து முழுகியா அறியவேண்டும்? இப் பிறவியே அதனைக் காட்டவில்லையா? ஏனையா! இட்டசித்தி எய்த, வாய்மையும் கொல்லாமையும் பூண்டால் போதுமே. இதற்கு இட்டசித்திக் குளத்திலா மூழ்கவேண்டும்? எங்கள் அருகமதம் அறிவுக்குப் பொருத்தமாகவும், உண்மையாகவும் நெறி தப்பா அறம் உரைக்கவும், நீங்கள் உங்கள் வைதிக மதத்தைப் பரப்ப ஏனிப்படிக் குளத்தையுங் குட்டத்தையுஞ் சுட்டிப் பிலத்தையும், பேயையும் காட்டி மக்களை மயக்கி மடமைக்கு உள்ளாக்குகின்றீர்கள்? எங்களுக்குப் பிலமும் புகவேண்டாம்,

பெரும் பேறும் பெறவேண்டாம். வேண்டுமாளுல் நீங்கள் பெரிதும் போற்றும் அந்தத் திருமாலை வணங்கச் செல்லுங்கள். எங்களுக்கு விருப்பப் பட்ட வழியில் நாங்கள் செல்கிருேம்.

**மாங்காட்டு மறையோன் :** ஓகோ! அருகமத நூலும், கொள்கையும், தெய்வமும் அப்படியா...! நான் வருகிறேன்.

**கோவலன் :** சென்றுவருகிருேமையா, உங்கட்கு என் நன்றி.

**காவுந்தி :** கோவலா! வெப்பம் மிகுதியாகிவிட்டது. சற்று இங்குத் தங்கி மாலையில் செல்வோம்.

**[எல்லோரும் மரநிழலில் தங்குதல்]**

---

## பொய்கைக் கரை

**காவுந்தி:** கோவலா! வெயில் தணிந்து தென்றலும் வீசுகின்றது. பொழுதுபடுமுன் சற்றுத் தொலைவைக் கடப்போம்; வா. இந்த இடைவழியே செல்வோம். மயக்கும் தெய்வம் வந்தால் நான் பார்த்துக் கொள்கிறேன். கண்ணகி, நீ அஞ்சாமல் வா.

**கண்ணகி:** நீங்கள் அருகிருப்ப எனக்கென்ன அச்சம்!

**காவுந்தி:** நல்ல பொழிலிடையிட்ட வழி; இன்று வெயில் வெம்மை தெரியாது வந்துவிட்டோம்.

**கண்ணகி:** இவ்வளவு பொழிலிருந்தும் குளம் ஒன்றையும் காணுமே!

**காவுந்தி:** நீர் வேண்டுமா?

**கண்ணகி:** இல்லையம்மா......

[ குறிப்புணர்ந்த கோவலன் ]

**கோவலன்:** இதோ கொண்டுவருகிறேன்.

[ காவுந்தியையும், கண்ணகியையும் விட்டுச் சற்றுத் தொலைவு சென்றதும் — கோவலன் தனக்குள் ]

அதோ, அந்த மரங்கள் வளர்ந்து செழித்திருப்பதைப் பார்த்தால், குளம் ஆண்டு உறுதியாய் உண்டென்று உணர்கிறேன்.

[ குளம் நோக்கி ஒரு பெண் வருவதைக் கண்டு, வியப்போடு ]

யாரது? ஒரு பெண் தனியே வருகின்றாள்! என்ன, இந்தக் காட்டில் வழி உணர்ந்தவள்போல் நம்மை நோக்கியே வருகின்றாளே! ஒருகால்

நம்மைப்போல் நீரருந்த வரலாம். ஏன், அவளோடு வந்த ஆடவன் நீரெடுத்து அருத்தக்கூடாதோ?

மயக்கும் தெய்வம்: ஐயா, அடைக்கலம்; தங்கள் திருவடி தொழுதேன். [அடிவிழுந்து வணங்கல்]

கோவலன்: என்ன, வயந்தமாலையா! ஏன்...இந்தக் காட்டில் தனியாகவா வந்தாய்? அந்தோ! கண்ணீரைத் துடைத்துக்கொள்; எழுந்திரு.

மயக்கும் தெய்வம்: ஐயா, தாங்கள் கடற்கரையிலிருந்து பிரிந்து வந்தபோது, மாதவி எழுதிய கடிதத்தைத் தாங்கள் புறக்கணித்துத் துறந்ததற்கு யான் செய்த தவறு காரணமாகுமேயன்றித் தன் கடிதத்தில் தாங்கள் மறுத்துரைக்க ஒரு பிழை இல்லை என்றாள் மாதவி. பின்னர் மயங்கினாள். அப்படியே அடியற்ற வாழைபோல் அமளியில் வீழ்ந்து மூச்சற்றுக் கிடந்தாள்; பின் எழுந்தாள்; வெகுண்டாள். "என் கணவன் ஒரு மேலோன். அவனைப்போல் கற்றவர் இல்லை. அவனே இந்தக் கணிகை வாழ்க்கையை ஒரு நோய் என்று கருதி அருவருத்து ஒதுக்கிவிட்டானே. கலை வாழ்வு என்பது நூலோராலும், மேலோராலும் புறக்கணிக்கப்படுமேல் அதுவும் இழிந்ததன்றோ?" என்று கூறிக் கலையையே வெறுத்தாள்; தன் மாலையை அறுத்து எறிந்து என்னையும் வெறுத்தாள். யான் செல்லிடங் காணாது தாங்கள் மதுரைக்குச் செல்வதுணர்ந்து வணிகர் கூட்டத்தோடு புறப்பட்டு வந்தேன்; தங்களைக் கண்டேன். என் துயர் கெட என்னைத் தழுவியேற்று இன்புறுத்துங்கள். [கோவலனைத் தழுவுவாள்போல் நெருங்கி] ஏன் தயக்கம்?

[ கோவலன் சற்றுப் பின்வாங்கி இவள் பேச்சில் மாறுபா கண்டு ஐயுற்று மறையவன் மயக்கும் தெய்வம் உண் என்றதை நினைவுகூர்ந்து, கொற்றவை மந்திரத்தை வழுத் தியதும் வயந்தமாலை வடிவு நீங்கிய வனசாரணி, தன் தெய்வ வடிவோடு நிற்கின்றாள். ]

வனசாரணி: கோவலா! யான் இந்தக் காட்டுத் தெய்வம்; உன்னை மயக்கினேன்; என்னை மன்னித்துவிடு. ஆனால், ஒன்று; இந்த நிகழ்ச்சியை உன் மனைவி கண்ணகியிடம் கூறாதே. அவள் என் செய்கையைக் குறித்து இந்த நொந்த நிலையில் வருந்தினால் போதும், நான் அழிந்துபோவேன். அவள் கற்பு அத்துணை வலியுடையது! மற்றும் அந்தத் துறவியிடமும் கூறாதே. தன்னிடம் அடைக் கலமாக உடையவர்களை யான் வருத்தினேன் என்று நினைந்து, சாபம் இடவும் கூடும்.

கோவலன்: அப்படியானால் சரி, நீ பிழைத்துப் போ!

[ கோவலன் தாமரை இலையைக் குடைபோல் தைத்து நீ கொண்டுவருதல் ]

## கொற்றவைக் கோயில்

கோவலன் : அம்மா! கோழி கூவிற்று, புள்ளினங்களும் ஒலிக்கத் தலைப்பட்டுவிட்டன; செல்வோமம்மா!

காவுந்தி : செல்லலாமே. வாம்மா......வா......[போய்க்கொண்டே] கோவலா! என்னப்பா, செல்லச்செல்ல அடர்ந்த காடாகவே காணப்படுகின்றதே!

கோவலன் : அம்மா, இது வேட்டுவர்கள் வாழுமிடம் போல் தோன்றுகின்றது. அவர்கள் அறம் ஒரு சிறிதும் அற்றவர்கள் ஆவரே. அவர்கள் கொள்ளும் பொருள் ஒருவர் கையில் இல்லை என்றாலும், அப்பொருளற்றாரைக் கொன்று, அவர் துடிக்கும் துடிப்பில் ஓர் இன்பம் காணும் அவ்வளவு அருள் நிறைந்தவர்கள் என்பார்களே!

கண்ணகி : அம்மா, நாம் ஏன் இந்தக் கொடியவர்களிடம் வந்தோம்? வேறு வழியில் போகலாமே!

காவுந்தி : அம்மா கண்ணகி! நடுங்காதே; அவர்கள் நமக்கு ஏதம் எதுவும் செய்யமாட்டார்கள். எம் போன்ற துறவியர்களைக் கண்டால் அஞ்சும் பண்புடையவர். யானிருப்பவும் நீ அஞ்சுவானேன்?

[ வேட்டுவர்கள் பறைமுழக்கத்தோடு நெருங்குகின்றனர் ]

கோவலன் : அம்மா, அவர்கள் விழாக்கொண்டாட இப்பக்கம் போவார்கள் என்று தெரிகின்றது. பேரிரைச்சல், பெருங்கூட்டம்!

காவுந்தி : ஆம், வழிபாடியற்றும்போது யாரையும் எதுவும் செய்யமாட்டார்கள். நம் கண்ணகியோ வேனிலால் கால்களில் கொப்புளங்கள் மிக்கு, அடி

வைக்கத் தவிக்கின்றுள். நாம் இந்த ஐயைக்கோட்டத்துச் சற்றுத் தங்கிப் போவோம்.

**கோவலன் :** அம்மா, அவர்கள் இங்கேதான் வருகின்றனர்.

**காவுந்தி :** அப்படியா, வரட்டும். யாரும் ஒரு சிறிதும் அஞ்சவேண்டாம். இங்குப் பூசனை, பலியீடு எல்லாம் நிகழும். நாம் அவர்கள் உரிமையில் தலையிடுதற்கில்லை. பரம்பரை பரம்பரையாக அவர்கட்கு இப்படிப் பலியிட்டுக் கொற்றவையை வழிபடல் இயற்கையாகிவிட்டது. அவர்களிடம் அறங்கூறிப் பயனில்லை.

[டும்...டும், டும்..... திடும் திடும்........என்ற அச்சந்தரும் தனித்த பேரொலி. சாலினி என்ற பெண்ணின்மேல் தெய்வமேற, அவள் ஆடுகின்றுள் ]

**சாலினி :** ஓஓ—ஓகோஓ......ஆஅஅ... ...ஆகாஅ...... மறக்குடிமக்களே, மாய்ந்தது புகழ்–மடிந்தது மறம். பட்டது வீரம்—கெட்டது குடி—இனி நீங்கள் மறவர்களும் இல்லை—மானியுமில்லை–என் மைந்தருமில்லை ஓகோகோ—ஆகாகா — அந்தோ !—அறவோராய் ஆனீரே—ஆக்கொள்ளை அற்றதே—அலறுகின்றீர் போருக்கு—இனி இங்கு வாழ்வில்லை—ஓகோ— கெட்டது எல்லாம்—மறக்குடி மடிந்ததே—அறக்குடிகள் அங்கங்கே.

**மறவன் :** தாயே! நீ கேட்கும் பலியெல்லாம் தருகின்றேம்—எங்களிடம் சினம் வேண்டாம்.

**சாலினி :** ஐயகோ—கெட்டதே — வில்லெங்கே— வேலெங்கே—மாடெங்கே — மன்றெங்கே — மாய்த்தீரே — மறந்தீரே — மறம் போயிற்றே — அறம் ஆயிற்றே—குடி போயிற்றே—பகையாயிற்றே— பகையூரில்–பசுவாயிற்றே—இனி வாழ வழிஇல்லை.

மறவன் : அம்மா! என்ன, நாங்கள் எங்கள் குடிப் பண்பை இழந்தோமா?—இல்லை—மறக்குடி மாய்ந்ததா?—இல்லை. அறக்குடிபோல் சினம் போயிற்று?—இல்லவேயில்லை.

மறவருள் சிலர் : தாயே! போர்க்களத்தில் வேந்தன் நினைத்த தலையை யாங்கள் வெட்டவும், நாங்கள் நினைத்த தலையை யாங்களே வெட்டவும், பகைவர்கள் எங்கள் தலையைச் சுட்டி அறுக்க முடியாதவாறும் வெற்றிதந்த எங்கள் தாய், கொற்றவையை மறப்போமா? இதோபார்......

[ கொற்றவைத் தெய்வத்தைக் கோலம்செய்து—தலையின் முடியைக் கலிழ்த்து, காதில் பாம்பை அணியாக்கி—பன்றிப் பல்லைக் கடைவாயில் சேர்த்துப் புலிப்பல் தாலியைக் கழுத்தில் அணிவித்துப் புலித்தோலை ஆடையாகக் கட்டி—எருமைக்கடாமேல் அமர்த்தல்—பின் மகளிர் பலவகைப் பலிப்பொருள்களோடு வலம் வருதல். சாலினிக்கும் இவ்வாறே அலங்கரித்தல் ]

பூசாரி : மாவில் செய்த பாவையா?—இங்கேவை. அது என்ன கிளியா?—அந்தப் பக்கம் வை. மயில் தோகையா?—என்னிடம் கொடு; கொற்றவைக்குச் சாத்துவோம்—பந்து கழங்கெல்லாம் பாதத்தில் வையுங்கள். பூவிடுவோரெல்லாம் இப்பக்கம் போங்கள். பொரி இறைப்போர் அங்கே நில்லுங்கள்—நறும்புகை இடுவோர் அருகில் வாருங்கள்.

மறவனில் ஒருவன் : நீ துடிகொட்டு. நீ பறையியக்கு—நீ சின்னம் ஒலி—நீ கொம்பூது—நீ குழலூது—நீ மணியடி. வரிசையாக நில்லுங்கள்—மறவர்கள் எல்லோரும் வளைந்து நில்லுங்கள். நீங்கள் பாடுங்கள்.

1. கொற்றவை கொண்ட அணிகொண்டு நின்றஇப்
பொற்றொடி மாதர் தவமென்னை கொல்லோ
பொற்றொடி மாதர் பிறந்த குடிப்பிறந்த
விற்றொழில் வேடர் குலனே குலனும்

2. ஐயை திருவின் அணிகொண்டு நின்றஇப்
பையர வல்குல் தவமென்னை கொல்லோ
பையர வல்குல் பிறந்த குடிப்பிறந்த
எய்வில் எயினர் குலனே குலனும்

3. ஆனைத்தோல் போர்த்துப் புலியினுரி யுடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்

4. சுடரொடு திரிதரும் முனிவரும் அமரரும்
இடர்கெட அருளும்நின் னிணையடி தொழுதேம்
அடல்வலி எயினர்நின் அடிதொடு கடனிது
மிடறுகு குருதிகொள் விறல்தகு விலையே.

[ இப்பாட்டில் கலந்துகொண்டு ஆவேசமுற்று ஆடிய சாலினி புலம்பிக்கொண்டே கண்ணகியின் பக்கத்தே வந்து கூர்ந்து பார்த்து நடுக்கமுறுதல் ]

சாலினி: ஓகோ! மறவர்களே—இவள் கொற்றவைக்கும் கொற்றவை—வெற்றிக்கும் வெற்றிதருவாள்—இதோ பாருங்கள்.

இவளோ கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணி

கண்ணகி: மூதறிவுடைய கொற்றவை ஏதேதோ சொல்கின்றாள். மயக்கமுற்று மருளத்தக்கது கூறுகின்றாள். ஐயோ, என்னை ஏன் புகழ்கின்றாள்!

[கண்ணகி கோவலனின் பின்புறம்போய் நகைமுகத்தோடு ஒடுங்கி நிற்கின்ருள். இதைக் கண்ட எல்லோரும் அஞ்சி நடுங்கிக் கண்ணகியைக் கண்ட வண்ணம் நிற்கின்றனர்—தெய்வமேறிய சாலினியும் நடுங்கி]

மறவரும் சாலினியும்: அம்மா! எங்களிடம் கருணை காட்டு. நாங்கள் போய்வருகின்றோம்.

கண்ணகி: அப்பா, எவ்வளவு கொடுமையான கோலம்! பாடல்!

காவுந்தி: ஆம், கோலந்தான் கொடியது—அஞ்சத்தக்க தொன்றும் நமக்கில்லை. இவர்கள் மறவர்கள்தாம். செய்யுந் தொழில் கொள்ளையேனும், இது பாண்டி நாட்டு மண்ணல்லவா? இதில் அருள், அறம் எல்லாமுண்டு. இப்பொழுது பாண்டியர் எல்லைக் குள் வந்துவிட்டோம். பாண்டியர் ஆட்சியில் என்றும் அஞ்சுவதும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. கரடி தான் உண்ணும் புற்றுஞ் சோற் றிற்குப் புற்றைக்கூட அகழ்வதில்லை; மறப்புலிகள் மான்கணந் தேடுவதில்லை; பாம்பு மக்களைக் கடிப்ப தில்லை; பேய் யாரையும் தீண்டுவதில்லை; முதலை கொடுமை செய்வதில்லை — என்றெல்லாம் பாண்டியர் குலப்பெருமை பரவாத இடமில்லை. அதனுல் நாம் இப்பொழுது இந்தப் பல்லுயிர் ஓம்பும் நிலவொளியில் செல்வோம்.

கண்ணகி: ஆமம்மா! இனி இரவில் செல்லலாம்; நல்லதுதான்.

கோவலன்: நான் முன்னர்ச் செல்கின்றேன்.

காவுந்தி: கண்ணகி! இங்கு வா. உன் கையைக் கொடு உன்னுல் இனி தனியே நடக்க முடியாது...இந்தா என் தோளில் கையை வைத்துத் துணையாகப் பற்றி

நடந்துவா. பக்கத்தில் கரடி, புலி, யானை, சிங்க எல்லாம் வரும்; நீ அஞ்சாதே. அவை நம்மை ஒன்றும் செய்யா.

**கோவலன் :** அம்மா, புலி ஒன்று வருகின்றது.

**கண்ணகி :** இருங்கள், நீங்கள் முன்னர்ப் போகவேண்டாம்.

[ காவுந்தி சிரித்துக்கொண்டு கூறுதல் ]

**காவுந்தி :** இருவரும் அஞ்சவேண்டாம். அது தானே போகும். நாம் அருளுடையவர்களாக இருந்து அன்பு காட்டினால், அவையும் நம்மிடம் அன்பு காட்டும். "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்பது எம் மதக்கொள்கையல்லவா!

**கோவலன் :** ஏன், வைதிக மதத்தில் இல்லையோ?

**காவுந்தி :** ஓ! வைதிக மதமா? அது பக்திமார்க்கத்தை வலியுறுத்துவது. அதில் ஆண்டவனிடத்தில் அன்பும், பக்தியும் உடையவர்களானால் போதும், அவர்கள் ஆ உரித்துத் தின்று உழலும் புலையரானாலும் சரி என்பார்களே!

**கோவலன் :** அப்படியா? புத்தமதமிருக்கிறதே!

**காவுந்தி :** ஆம், புத்தமதம் புலாலுண்பதைக் கண்டிக்கவில்லையே. ஆனால், கொன்றுதான் தின்னக் கூடாது என்கின்றது.

**கோவலன் :** சரிதானே அம்மா, அந்தக் கொள்கை!

**காவுந்தி :** இல்லை, இல்லை; முற்றிலும் தவறு. ஆய்ந்து பார்த்தால் உண்மை புலனாகும். புத்தர்கள் செய்கை மறைமுகமாகப் பாவத்திற்குக் காரண

மானது. புத்தர்கள் போதிமரத்தைச் சுற்றிச்சுற்றி வந்து, அந்த மரத்தையே வணங்குகிறுர்களே, ஏன்? புத்தரா அங்கு இருக்கிறுர்? இல்லை. அவர்கள் மரத்தை வணங்கும்போதே புத்தரை வணங்குவதாகக் கருதிப் பயனைப் பெறுகிறுர்கள். அதைப் போலவேதான் ஊன் தின்பதும் ஊனுடை உயிரைத் தின்பதற்கு ஒப்பு. அது ஊன் பெறும் வழியை உளவாக்கவும், முடிந்தால் தானே கொன்று ஊனைப் பெறவும் தூண்டும். "படைகொண்டான் நெஞ்சம் போல் நன்றூக்காது ஒன்றன், உடல்சுவை உண்டார் மனம்" என்று எங்கள் வேதம் உரைப்பதும், அக்கோட்பாட்டினை மறுத்தன்றே? "தினற் பொருட்டால் கொல்லாது உலகெனின் யாரும், விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்" என்று ஊன் உண்பதில்தான் பாவச் செயல் மிகுந்துள்ளதென்பதை எங்கள் ஆகமம் விளக்கிக் காட்டலை அறியாயோ? இந்த உண்மை தெரியாதவர்கள்தாம் எங்கள் மதத்து அறநூலை—தங்கள் மதக் கூறுபாடு எதுவென்று நன்குணராமலேயே—தங்களுடையது என்று கூறுகின்றனர்.

கோவலன்: அம்மா! ஒவ்வொரு மதத்தின் உண்மையான கொள்கைகள் இன்னும் மக்கட்குச் சரியான முறையில் அறிவிக்கப்படவில்லை. அந்த மதக் கூறுபாடுகளை அறியவேண்டினுல் தமிழ் ஒன்றுமட்டும் அறிந்திருந்தால் போதாது.

காவுந்தி: ஆம், வடமொழி தென்மொழி போன்ற பன்மொழி அறிந்தவர்தாம் உண்மையான மதத் தத்துவங்களைப் புரிந்துகொள்ள முடியும்.

கோவலன்: அம்மா, அதோ எதிரில் ஓர் ஊர் தெரிகின்றது!

காவுந்தி : ஆம், ஊர்தான் கோவலா! அது ஒரு பார்ப்பனச் சேரி. அங்குக் கட்டியிருக்கும் கொடிகளையும், ஊரைவிட்டு ஒதுங்கியிருக்கும் அதன் தன்மையையும் காணும்போது, அது வேள்வி செய்யாத பார்ப்பனர்கள் சாதியினின்றும் நீக்கப்பெற்று, சங்கு வளையல்களை அறுத்து விற்பவர் வாழும் வீதி போன்று தெரிகின்றது.

கோவலன் : அம்மா! யாராயிருந்தால் என்ன ; மக்கள் தாமே அவரும்? இன்று அங்குத் தங்கிச் செல்வோம்.

காவுந்தி : அப்பா, நாங்கள் இங்கு இருக்கின்றோம்; நீ சென்று நீராட நல்ல இடம் எங்கு உண்டு என்று பார்த்துவா.

[ கோவலன் போதல் ]

## குளமடுத்த பொழில்

**கோவலன்:** [குளக்கரையோரம் சென்று நின்றுகொண்டு தனக்குள்] உம்...என்ன பாவம் செய்தேனோ! அது போதாதென்று என் கண்மணியையும் காட்டில், கானலில், காரிருளில், கடு வெயிலில் அழைத்து அலைக்கழிக்கின்றேன். என்னே கொடுமையிது! உம்...

**கோசிகமாணி:** [கோவலனைப் பார்த்து விழித்தல்] இவனைப் பார்த்தால் நம் கோவலன்போல் காணப்படுகின்றான். ஆனால், முகங் கருகி மெய் சுருங்கித் தோன்றுகின்றான். சற்று அணுகிப் பார்ப்போம்.

[தெளிவுகொள்ளவேண்டி ஒரு மாதவிக் கொடியைப் பார்த்து]

ஓ, மாதவி! என்ன வியப்பு! கோவலனைப் பிரிந்த அந்த மாதவியைப் போன்று நீயுமா உன் காதலனைத் துறந்து, அவளைப்போலவே உன் தலை அலரும் பூவைத் துறந்தாய்! உம்......

**கோவலன்:** ஐயா! என்ன சொன்னீர்? இப்பொழுது உரைத்ததை மீண்டும் ஒருமுறை கூறுங்கள். நீங்கள் யார் ஐயா? என்னை......

**கோசிகமாணி:** ஐயா, என்னைத் தெரியவில்லையா? தங்களைத்தான் நான் அடையாளங் கண்டுகொள்ள முடியாது தவித்தேன் என்றால், நீங்களும் என்னை அறியாதவர்போல் கூறுகின்றீர்களே! யான் உங்கள் காவிரிப்பூம்பட்டினத்திற்கு அண்மையில் உள்ள தலைச்சங்காட்டுக் கோசிகமாணி; மாதவிக்கு உற்றது புரிவோனல்லவா?

**கோவலன்:** ஓ! புரிகின்றது. ஏதோ நினைவில் இருந்ததால் தங்களை இனங் கண்டுகொள்ளக்கூடவில்லை.

**கோசிகமாணி :** ஐயா, உங்கள் தாயும், உங்கள் தந்தையும் மணியிழந்த நாகம்போல் தவிக்கின்றனர். உங்கள் உறவினர்கள் எல்லோரும் உயிர் நீங்கிய உடல்போலச் செயலற்றுப்போனுர்கள். உங்களைத் தேடி ஏவலாளர்கள் செல்லாத இடமே இல்லை. சுருங்கச்சொன்னுல் அன்று இராமன் காடு புகுந்த போது, அயோத்தியிருந்த அந்த அவலத் தன்மையை நம் புகார் பூண்டது. வயந்தமாலை மாதவியிடம் நீங்கள் கூறிய மாற்றத்தைக் கூறக் கேட்டதும் அவள் பட்ட பாடு...ஐயனே! பூமாலை ஒன்று சுருண்டு கருகி விழுந்ததுபோல் பள்ளியில் விழுந்தாள்; தீயிடைப்பட்ட புழுப்போல் துடித்தாள். இதோ, அவள் செங்கை தீட்டிய மடல். இதை, "என் கண்மணி அனையார்க்குக் காட்டுக" என்று தந்தாள்.

[ கோசிகமாணி கொடுத்த மடலைக் கோவலன் ஒன்றும் பேசாது கைநீட்டி வாங்கி, அதை மார்போடு ஒற்றிக்கொண்டு கண்மூடி நின்று பின் பிரித்துப் படிக்கின்றுன் ]

அன்பே வடிவான காதல!

தங்கள் திருவடிகளில் விழுந்து வணங்குகின்றேன். செம்மையுருத என் சொற்களின் வடுவனைத்தும் மனத்தேற்று உழக்கவேண்டாம். அன்பே! தாங்கள், தங்கள் தாய் தந்தையர்க்கு ஆற்றவேண்டிய கடமையையும் மறந்து அவர்கள் ஏவாப்போதும் படிதாண்டியறியாத குலப்பிறப்பாட்டியோடு இரவில் ஆடகமாடம் கடந்து செல்ல, யானிழைத்த பிழை என்னவோ என்று அறிந்துகொள்ளவேண்டி என்னுள்ளம் துடியாய்த் துடிக்கின்றது.

குற்றமற்ற பெரியோய்! உங்கள் திருவடி போற்றி!

இங்ஙனம்,
தங்கள் வருகைக்கு உயிர்வாழும்,
மாதவி.

**கோவலன் :** அந்தோ! மாதவி ஒன்றும் அறியாதவள். அவளை முறையின்றி ஆடுமகள் என்று பழி கூறினேன். எல்லாம் யானிழைத்த கொடுமைகளே! பாவம், அவளை நொந்தேன். ஐயா, தாங்கள் கடிதில் சென்று என் பெற்றோர்க்கு என் நிலையுரையுங்கள். யான் மதுரை சென்று வருகின்றேன்.

[ கலக்கத்தோடு கோசிகன் போதல். கோவலனைத் தேடி காவுந்தியும் கண்ணகியும் அங்கே வருகின்றனர் ]

**காவுந்தி :** நீ ஏன் இதுகாறும் இங்கேயே நிற்கின்றாய்?

**கோவலன் :** [ திடுக்கிட்டுக் கோசிகமாணியைச் சுட்டிக்காட்டி ] அதோ, அந்த மறையவரோடு பேசிக்கொண்டிருந்தேன்.

[ தொலைவில் கூட்டம் ஒன்று வருதல் ]

**கண்ணகி :** அம்மா! அதோ கூட்டமாக வருகிறார்களே...

**காவுந்தி :** கூட்டமாகவா?......ஆம்.

**கோவலன் :** அம்மா, அவர்கள் இசைப்பாணர்கள். பாருங்கள், கையில் உள்ள இசைக்கருவிகளை.

**காவுந்தி :** பெரும்பாணர்கள்; இனிமையாகப் பாடுவார்கள். பாண்டி மன்னன்பால் பரிசு பெற்ற மகிழ்ச்சியோடு வருகின்றவர்போல் காணப்படுகின்றனர்.

[ அவர்கள் இவர்களை நெருங்கி வருகின்றனர் ]

கோவலன்: நீங்கள்......

பாணர்கள்: நாங்கள் பாணர்கள்.

கோவலன்: அது தெரிகின்றது...

பாணர்கள்: ஓ! பாண்டிநாட்டிலிருந்து வருகின்றோம்

கோவலன்: அதைக் கேட்கவில்லை...

பாணர்கள்: நாங்களா? கொல்லிமலைக்குப் போகின் றோம். இங்கு, இப்போது இசைப்பயிற்சியை மேற்கொள்ளப் போகின்றோம்.

கோவலன்: சரி சரி, மீட்டுங்கள்; கேட்போம்!

பாணர் தலைவன்: ஐயா, உங்கட்கு இசை தெரியுமா!

கோவலன்: ஏதோ, ஓரளவு தெரியும்.

பாணர் தலைவன்: இதோ யாழ், மிழற்றுங்கள் கேட் கின்றோம்.

கோவலன்: இது செங்கோட்டு யாழாயிற்றே...எனக்கு மகர யாழினும், சகோட யாழினும் பயிற்சியுண்டு.

பாணர் தலைவன்: இதில் தெரிந்தமட்டும் பாடினால் போதும்.

[ கோவலன் பாடுகின்றான். இசை கேட்டுச் செயலற்றுப் போகின்றது பாணர் கூட்டம். பின் பாணர் தலைவன் எழுந்து கோவலன் அடிகளில் வீழ்ந்து ]

ஐயா! இத்தகைய இசை நுணுக்கங்களை யாங்கள் அறியோம். தாங்கள் யார்? தாங்கள் எந்த நாட்டு மன்னர்? ஏனிந்தக் கோலம்? உண்மை அறியத் துடிக்கின்றது என்னுள்ளம், கூறுங்கள்.

காவுந்தி: கோவலா! இத்துணை மேம்பட்ட இசை கற்ற நீயா நொந்து நொந்து உளம் சாம்புகின்றாய்! சற்று நேரத்தில் எங்களை அந்த அருகதேவனின்

அமைதியான இன்ப உலகத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டாயே! நீ உன் துன்பம் போக்கிக் கொள்ள இந்த இசை ஒன்றே போதுமே!

**கோவலன் :** [ கண்கலங்க ] அம்மா......இந்த இசை...... இந்த இசையைப்பற்றிக் கேட்காதீர்கள் அம்மா! வேண்டாம்.

[ காவுந்தியும் மற்றும் பாணர் கூட்டமும் கலங்கிநிற்றல் ]

**பாணர் தலைவன் :** ஐயா, எங்களை மன்னித்துவிடுங்கள்; நீங்களனைவரும் துன்புற நாங்கள் காரணமானோம்.

**கோவலன் :** இல்லை ஐயா, நீங்கள் இந்த இசையாலும் இசைக்கருவியாலும் பேரின்ப உலகில் வாழத்தக்க வர்கள். உங்கள் பெருமையை உண்மையாக மக்கள் அறிந்துகொள்ளட்டும். எமக்கு நீங்களிழைத்த தீங்கு ஒன்றும் இல்லை. என்னை மறந்து கொஞ்ச நேரம் இன்புற்றேனே தவிர, துன்புறவில்லை. எங் கட்கு மதுரை செல்லும் நல்வழியைக் கூறுங்கள், அது போதும்.

**பாணர் தலைவன் :** இதோ, பக்கத்தில்தானிருக்கிறது. ஐயா! இங்கு வீசும் மதுரைத் தென்றலின் மணங் கொண்டு தொலைவறியலாம்.

**கோவலன் :** ஆம், பூமணம் புகைமணம் இரண்டும் மணக்கின்றன. அண்மைதான். என்ன நுட்பம்! மணங்கொண்டு தொலைவறிகின்றனர்.

**பாணர் தலைவன் :** நாங்கள் உடன் வந்து வழிகாட்டி வருகின்றோம்.

[ எல்லோரும் புறப்படல் ]

**கோவலன், காவுந்தி :** வேண்டாம் வேண்டாம்; நாங் கள் போகின்றோம். உங்கட்கு நன்றி.

[ எல்லோரும் போதல் ]

## வையையாற்றில்

[விடிந்து எழுந்து காவுந்தியுடன் நடந்தபின்னர், புறப்பட்டு வரும்போது]

காவுந்தி : கோவலா! கண்ணகி! வையை வளத்தைப் பார்த்தீர்களா? வளமார் வயல், குளஞ்சூழ்பொழில், இளமரக்கா, ஏந்தெழில் கோயில், பாண்டி மன்னன் பெருமையெல்லாம் இந்த வையைக் குலக்கொடியின் வாழ்வால் அன்றோ?

கண்ணகி : அம்மா, நம் காவிரிப்பாவை நம் சோழர் குடிக்கு உயிராதல்போலல்லவா?

காவுந்தி : ஆம், இக்குலக்கொடிச் சிறப்புதான் இக் கோமகன் பெருமை, இவளும் பொய்யாக் குலக்கொடி!

கண்ணகி : அம்மா, இது பூவாரு புனலாரு?

காவுந்தி : [நகைத்துக்கொண்டு] வையை பெண்ணல்லவா? ஆடவர் கண்ணை நடத்தல் ஆகாது என்று தன்னைப் பூப்போர்வையால் போர்த்துக்கொண்டு போகின்றாள். அவளும் உன்னைப்போல் நாணின் பாவையல்லவா?

[கண்ணகி நாணித் தலைகவிழல்]

கோவலன் : அம்மா, கரைகடக்க யானைமுகம் வைத்த தோணி, குதிரைமுகத் தோணி, சிங்கமுகத்தோணி எத்தனை அழகு! மதுரைத் தச்சர்கட்கு எத்துணை அழகுணர்ச்சி!

[அக்கரை செல்லத் தோணியில் ஏறுதல். தோணிக்காரன் பாடுகின்றான்]

தோணிமிக உண்டுங்கோ தொலைவும் போகுங்கோ
—தோன்றும், தொல்லை இல்லிங்கோ
பேணியிதில் ஏறுங்கோ பெரிய தோணிங்கோ
—எங்கும், போகும் வாருங்கோ

பரிமுகத் தோணிங்கோ பறந்து போகுங்கோ
—பக்கு, பழசும் இல்லிங்கோ
காதலர்க் குண்டுங்கோ கரிமுகத் தோணிங்கோ
—காற்றில், கவிழ்தல் இல்லிங்கோ
கரைக்கண் எல்லோரும் கடக்க உதவுங்கோ
—காசு, கணக்கும் இல்லிங்கோ
புனைதல் இல்லிங்கோ பொய்யும் இல்லிங்கோ
—போற்றிப், போகும் பாருங்கோ
நீர்வழி ஓடுங்கோ நெடுங்கோல் உண்டுங்கோ
—நினையும், நெறியில் ஓடுங்கோ
ஊழின் இயல்பெல்லாம் உணர்த்தும் ஓடங்கோ
—உயிரின், உண்மை தெரியுங்கோ
கணியன் பூங்குன்றன் கண்டு சொன்னுங்கோ
—கவியும், உண்டு பண்டுங்கோ.

[காவுந்தி முதலாயினோர் பாட்டை வியந்தவண்ணம் தோணியி னின்றும் இறங்கிக் கரையேறல்]

[ஒவ்வொரு கோவிலிலும் காலைப் பணிமுழக்கம் கேட்டல்]

கோவலன்: [காவுந்தியின் காலில் விழுந்து வணங்கிப் பைத்தியம் பிடித்தவன்போல]

அம்மா, நான் ஓர் இழிந்தவன். கீழ்மக்கள் செய்தொழிலனைத்தும் புரிந்தேன். அந்தோ அம்மா! இந்த இளையோளை நடுங்கிக் குலையச் செய்துவிட்டேன். கரடுமுரடான காட்டில் அவளைக் கால் கொப்புளம் கொள்ள இழுத்து, அலைக்கழித்துவிட்டேன். யான் மதுரை நகர்க்குள் சென்று என் மரபினர்கட்கு என் வருகையுணர்த்தி வருகாறும் இந்த மணிவிளக்கு உங்கள் பாதக்காப்பில் இருக்கட்டும். அம்மா, துன்பம் ஒன்றும் வாராதல்லவா?

காவுந்தி: கோவலா! இத்துன்பத்திற்கு நாம் முன்னை இழைத்த தீங்குதான் காரணம். நாம் செய்ததை

நாமே ஏற்றாக வேண்டும். என் செய்வது? தீவினை செய்தவர் அத்தீமைக்கு இலக்காகத்தான் வேண்டும். இதனைக் "கொன்றால் பாவம் தின்றால் தீரும்" என்று எவ்வளவோ எளிய முறையில், உலகவழக்கில் மக்கள் புரிந்துகொள்ளும் வண்ணங்கூட இத்தத்துவத்தை எம் மதத்தில் பழமொழியாகக் கூறிக் காட்டினேம்; பயன்? மக்கள் பிறழ உணர்ந்து, ஓர் உயிரைக் கொன்றால் பாவம் என்றும், அவ்வூனைத் தின்றால் அது போகும் என்றும் பொருள் கொண்டு உயிர் கொன்று ஊன் தின்கின்றரென்றால் அம்மடமையை என்சொல்லி இரங்க? அப்பா, கோவலா! ஓர் உயிரைப் போக்கல் பாவந்தான். அவ்வுயிர் நாமாகி நாம் அவ்வுயிராகி அது நம்மைக் கொன்று தின்றால் அப்பாவம் தீரும். அம்மட்டோ! பெண்டிரும் உண்டியுமே இன்பம் என்று கருதி இன்றுமட்டுமன்று, அன்றும் துன்புற்றார் ஒருவரல்லர், கோடானு கோடி. இராமன் தன் குலக்கொடி சீதையோடு காட்டிற்குச் சென்று பட்டபாட்டினை நீ கேட்டதில்லையா? நளன் உழந்த உழப்பு உலகறிந்ததன்றோ? அன்னார் பட்ட துன்பத்தில் நீ கால்கூறு துன்புற்றாய் என்று என்னால் கூறமுடியாது. ஏன் அவலங் கொள்கின்றாய்? நீ போ, நின் காதலியை விட்டுப்பிரியாத வாழ்க்கையைப் பெற்றிருக்கின்றாய்! அது போதும். கலக்கம் வேண்டாம்; கையாறு கொள்ளாது சென்றுவா.

**கோவலன்:** அம்மா! இராமனைப் போன்றோ, நளனைப் போன்றோ துன்பம் வந்தால், அந்தோ! எம்போன்றார்க்கு அது தாங்கற்கு அரிது; அதனை எம்மால் தடுத்து நீக்கற்கும் ஒண்ணாது. இப்பொழுதுதெளிவு பெற்றேன்; நான் மதுரை சென்று வருகின்றேன்.

[ கோவலன் போதல் ]

## துறவோரிருக்கை

[கோவலன் முகமலர்ச்சியுடன் வருதல்]

கோவலன்: அம்மா! மதுரை, பெருமையில் புகார்க்கு ஒரு சிறிதும் குறைந்ததன்று. வழங்கத் தவாத வளமும், முழக்கு அறாத விழவும், உழப்பு அறியாத வாழ்வும் களிநடம் புரிகின்றன. கோலின் செம்மையைக் கூடல் உணர்த்தக் கண்டேன்; குடையின் தன்மையைக் குடியுணர்த்தக் கண்டேன்; வேலின் திறத்தை எங்கும் விளங்கக் காண்கின்றேன். அம்மம்மா!

காவுந்தி: புகாரைப்போலவே பதியெழு வறியாப் பண்புடையதப்பா இந்த மூதூர்!

கோவலன்: கண்கொள்ளாக் காட்சி! எல்லாமுடையது மதுரை என்றால் தவறொன்றுமில்லை.

[மாடலன் வருதல்]

மாடல மறையோன்: அப்பப்பா! வேனில் நிலைபெற்று விட்டதோ?

காவுந்தி: மாடல மறையவரா? வாரும்.

கோவலன்: திருவடிகட்கு வணக்கம் ஐயா!

மறையவன்: கோவலனா! கண்ணகி கேள்வனா! என்ன, மகள் மணிமேகலை பிறந்த நாள் விழாவில் செம்பொன் மாரி பொழிந்த நினக்கேன் இந்த வறிஞர் கோலம்? ஆ! ஆண்டுக் கொலைசூழப் போந்த யானையை அடக்கி அம்முதியவனை விடுத்த கருணைமறவனே, நின் தோளா இப்படி வாடிக் கிடக்கின்றது? நம்ப முடியவில்லையே!

காவுந்தி: என்ன மறையவரே! தம்பி கோவலனைப் பற்றியவா நீர் கூறியவெல்லாம்?

மறையவன்: ஆம், அந்தோ! இவன் ஒரு செல்லாச் செல்வனம்மா. இவனுக்குரிய செல்வத்தைக் குறிக் கொண்டழிப்பினும் அழிப்பரிதாயிற்றே! அன்று, புகாரில் ஒரு மறையவனின் மனைவி, மகவைக் காத்த கீரியைக் கொன்றதற்காக அவன், அவள் கை தொட்ட ஊண் கோடல் இழுக்கென்று பெயர, அவள் ஆற்ருது அழுவது கேட்ட இப்பெருமகன், மறையவனுக்கு அப்பாவம் போக்கச் செய்யும் யாகத்திற்குத் தந்த பொருள் கணக்கிலடங்காதே! இவன் இன்று இப்படி உருமாறி வறுமையுற்றுக் கிடக்கின்ருனே!

காவுந்தி: உம், அறங்கிடந்த நெஞ்சினன், அல்லல் உழத்தல் ஏன்?

மறையவன்: அம்மா! இம்மை இவன் செய்தவை யெல்லாம் யானறிய நல்வினைகளே. அப்பப்பா! அன்று ஒரு பூதம் பொய்க்கரி கூறிய ஒருவனைக் கயிற்ருல் கட்டி இழுத்துச் செல்ல, அங்கு இவன், அவன் தாய் படுதுயர் கேட்டு, அப்பூதத்திடம் தன்னைக் கொன்று அவனை அலைக்காது விடுக்க வேண்டினன். இதனைக் கேட்டதும் பூதம் நடுங்கி "பொய்க்கரி கூறியவனே கொல்லுதற்குரியோன், நீ செல்" என்று கூறி அவனை அவ்விடத்திலேயே புடைத்துண்டது. அதனைக் கண்ட தாயின் அலமரல் கண்டு பொருது, தான் அவளுக்கு மகனுயமைந்து வேண்டுவன வழங்கிய ஞானவிருத்தனம்மா இவன்!

காவுந்தி: தனக்கென வாழாது பிறர்க்கென்று வாழ்ந்தவன் துன்புறக் காரணம்......உம்...ஊழ்வினைதான்!

மறையவன் : தனக்கென வாழாமையா? ஆ! அன்று நிகழ்ந்ததை இன்று நினைத்தாலும் நெஞ்சு நடுங்கு கின்றதம்மா!

காவுந்தி : என்ன! நடுங்கத்தக்கதா?

மறையவன் : அம்மா! தம்பி கோவலனுக்கு மாதவி என்ற கணிகை ஒருத்தி உண்டு. அவளுக்குப் பிறந்தாள் ஒரு பெண்மணி. கோவலன் அவட்கு மணிமேகலை என்ற தன் குலதெய்வத்தின் பெயரைச் சூட்டி விழவயர்ந்தபோது அவன், கொடையென்ற பெயரில் பொன்மாரி பெய்தான். அந்தக் கொடைவளங் காணவந்தான் ஆண்டு பல கழிந்த முதியவன் ஒருவன். அவனை மதங்கொண்டு வீதிவாய்ச் சென்ற யானை, சினந்து வெளவிற்று. அதுகண்ட கோவலன் யானைமீது ஞேரேரெனப் பாய்ந்து, அதன் கோட்டிடைப் புகுந்து, செருக் கடக்கி முதியவனை விடுவித்தான். அத்தகைய கருணைமறவனம்மா இவன்! ஐயோ! இந்தச் சுடர்விளக்கோடு இப்படி இந்த அவலக்கோலத் தில் ஏனப்பா வந்தாய்? என்ன உலகம் இது! என்ன படைப்பு இது!

[ காவுந்தி பெருமிதத்துடன் நகைத்தல் ]

காவுந்தி : ஐயா, மறையவரே! இந்தச் சிக்கலுக்கு வைதிக வேத ஆகமங்களில் பதிலிருக்காது. தெய் வத் திருக்குறளில்தான் விடையுண்டு. பொருமை, அழுக்காறு, தீச்செயல்கள் எல்லாம் உடையா னுக்குச் செல்வம் மலிவதையும், அவன் செம்மை யாக வாழ்வதையும்— மிகப்படித்தவன், மேலான பண்புடையவன், தூய நெஞ்சினன் பொருளும் இல்லாது, புகழும் இல்லாது உளம்புழுங்கி, இக்

கோவலன்போல் நோவதெல்லாம் பழவினையின் காரணமேயன்றி உலகின்மேல் பழி கூறுவதற்கில்லை!

**மறையவன் :** அம்மா, நம் அருக சமயத்தில் இத்தகைய பேருண்மை பொதிந்திருந்தும் அது பெரிதும் பரவாக் காரணம்?

**காவுந்தி :** உம், எல்லாம் வைதிக சமயமும், மக்களின் மடமையும்தான் காரணம்!

**கோவலன் :** அம்மா, ஒரு கனவு கண்டேன். எனக்கு ஒரு கொடியவனால் தீங்கு வருவதைப் பார்த்தேன். கண்ணகி அது காரணமாகப் படாத பெருந்துயர் படுவதை உணர்ந்தேன். இருவரும் மேலுலகு புகுவது போலவும், புகாரில் போதி அறவோன் திருவடிக்கு மாதவி என் மகள் மணிமேகலையை அடைக்கலம் கொடுப்பது போலவும் நனவு போலக் கண்டேனம்மா!

**காவுந்தி :** அப்படியா? ஒன்றுமில்லை, அஞ்சாதே! இல்லற ஒழுக்கத்து வாழும் நீவிர் இந்தத் துறவுடையோர் உறைவிடத்திருத்தல் நன்றன்று. கதிரவன் மறையுமுன் கண்ணகியோடு வணிகர் வாழுமிடம் செல்லுங்கள்; அதுதான் நல்லது. நான் வருவதாகக் கூறியது இந்த அறவோர் பள்ளிக்குத்தான். இனிமேல் நாம்... ஓ! அதோ மாதரி வருகின்றாளே! சற்று இருங்கள்.

[ மாதரி வருதல் ]

**மாதரி :** அம்மா திருவடிதொழுதேன். எப்பொழுது வந்தீர்கள்? புகாரில் சிறப்பு ஏதேனும் உண்டா?

**காவுந்தி :** எல்லோரும் நலம். சிறப்புச் செய்தியொன்றுண்டு.

மாதரி: சொல்லுங்களம்மா!

காவுந்தி: ஆவொடு பழகும் உங்கள் வாழ்க்கையே வாழ்க்கை!

மாதரி: ஆம், பசுவோடும் கன்றோடும், பாலோடும் தயிரோடும், வெண்ணெயோடும் நெய்யோடும் பழகும் எங்கட்கு என்னம்மா குறை?

காவுந்தி: மாதரி...... இதோ, இவர்கள் யார் தெரியுமா? இவர்தம் தந்தையர் பெயரைக் கேட்டால், மதுரை வணிகப் பெருமக்கள் அனைவரும் அயர்ந்து போவார்கள்; இவர்களைப் பொன் எனப் போற்றி மணியெனப் பேணிக்கொள்வார்கள். அவர்கள் பால் செல்லும்வரை, இவர்களை நீ அடைக்கலமாக ஏற்றுக்கொள். ஏற்று, இவர்கட்குப் புத்தாடை புனைந்துப் புதுமலர் சூட்டி அன்னையாய் அமைந்து அன்புகாட்டு.

மாதரி: அம்மா, இந்தச் சுடர்விளக்கு என் மனையில் ஒருநாள் ஒளிர்ந்தால் போதும். அதுவே யான் பெறும் பேறல்லவா? இவர்கள் என் மக்கள் என்றால் நானும் ஒரு தெய்வப் பிறப்பே!

காவுந்தி: மாதரி! நான் என் மதத்திலும், என் தெய்வத்திலும், என் கொள்கையிலும் சற்றுந் துளக்க முடியாத நம்பிக்கை உடையவள். இதோ, இவ்விருவரோடு சில திங்கள் தொடர்பு கொண்டதன்றி வேறில்லை. அம்மம்மா! கடுங்கோடை—இந்தக் கோடையின் கொடுமை, தன்னைச் சுட்டுக் கரியாக்கியும் தன் துயர் காணாது தன்கேள்வன் துன்பங் கண்டு வருந்தும் இக்கற்புடைத் தெய்வமல்லது ஒரு பொற்புடைத் தெய்வத்தை யான் கண்டதில்லை. இதுகாறும் தனக்கு உவமை இல்லாதவன், தனித்

துயர்ந்த மேலோன் என்றெல்லாம் கூறி வணங்கிய எம் அருகனுக்கும் ஓர் உறட்சி கண்டேன். [கண்ணகி யைச் சுட்டிக்காட்டி] அருகனின் புகழையே பேசும் என் நா, இன்று இவள் பெருமையைப் பேசுகின்றது. அவனையே கண்டு கண்டு இன்புற்ற என் கண்கள் இன்று இவளைக் கண்டு களிகொள்கின்றன. இத் தகைய கற்புடைப் பெண்டிர் இருக்கும் நாட்டில் திங்கள் மும்மாரி திரிபின்றிப்பெய்யும்; வேலியாயிரம் விளையும்; வேந்தனின் கொற்றமும் சிதையாது.

மாடலன்: ஆமம்மா, அனைத்தும் உண்மை!

மாதரி: அம்மா, இவளைக் காணும்போதே எல்லாம் எனக்கு விளங்குகின்றது.

காவுந்தி: [கண் கலங்க] கண்ணகி! கோவலா! நேர மாகின்றது, புறப்படுங்கள்.

[கோவலனும் கண்ணகியும் கைகூப்பி]

கோவலன்: தாங்கள் செய்த இந்தப் பேருதவிக்கு நன்றி செலுத்தும் வழியறியாது உழக்கின்றேன்—வருகின்றோம்.

[காவுந்தி கண்ணகியைத் தழுவி வழிப்படுத்தல்]

மாதரி: வாம்மா! வாப்பா!

[எல்லோரும் போதல்]

## மாதரி இல்லம்

மாதரி: ஏடி! ஆண்டாள், பாவை, நப்பின்னை வாருங்கடி. இதோ நம் கண்ணகி. இம்மாமணியைக் கோட்டக்காய் ஊறிய நீரால் நீராட்டிக் கோலஞ் செய்யுங்கள்.

[ ஆய மகளிர் கண்ணகியை ஒப்பனை செய்துகொண்டு ]

ஐயை: அம்மா! இவளுக்கு நாம் கோலஞ் செய்தால் புனைந்தவைதாம் கோலம் பூணும்; அழகுக்கு அழகியற்ற யாரால் இயலும்?

மாதரி: கண்ணகி! இவள் என் மகள் ஐயை. உனக்கு அருகிருந்து பணிபுரிவாள். இவளோடு சற்றுப் பேசினால் உன் துன்பம் அகலும். மாதவத்தாட்டி உன்னையும், உன் கேள்வனையும் எங்கள் கூட்டத்தில் ஒப்படைத்தபின் தீங்கேதும் நேருமென்று நீ சற்றுங் கவலவேண்டாம்.

கண்ணகி: ஐயை! நீ என் நாத்தியல்லவா? உன் அண்ணன் இரவுண்ணாச் சாவக நோன்பி; பொழுது கழியுமுன் அடிசில் ஆக்கும் கலன்கள் கொண்டுவா!

ஐயை: அண்ணி! இதோ ஒரு நொடியில் வருகின்றேன்.

[ சென்று புதுப் பாண்டங்களும் காய்கறி வகைகளும் கொண்டு வந்து ]

புதுப் பாண்டங்கள், பலாக்காய், கொம்மட்டி, மாதுளங்காய், வெள்வரிக்காய், மாங்கனி, வாழைக்கனி, சாலியரிசி, உலைக்குப் பால் எல்லாம் இருக்கின்றன; ஏற்றுக்கொள்ளுங்கள்.

கண்ணகி: ஐயை! நான் அடுப்பை மூட்டுகின்றேன்; நீ காய் திருத்து.

**ஐயை :** எளிமையாக அடுப்பை மூட்ட வைக்கோல் கூடக் கொணர்ந்தேன்.

**கண்ணகி :** நான் கேட்பவற்றை எடுத்துதவு : நான் நொடியில் அடுகிறேன்.

**ஐயை :** அண்ணி! இதோ......

**கண்ணகி :** என்னம்மா அது? மதுரைக் கைவினையெல்லாம் இந்தத் தடுக்கு காட்டும்போலும்! இதில் அமர்ந்து உண்டால் மூன்று மடங்கு மிகுதியாக உண்ணலாமே!

**ஐயை :** அண்ணி! சோறுடைய நும் சோழநாட்டில் எங்களூர்த் தடுக்கில்லையே என்று கவல்கின்றீர்களா?

**கண்ணகி :** இல்லை இல்லை, உன் அண்ணு இன்று மகிழ்வோடு நிரம்ப உண்பார்கள் அல்லவா என்று எண்ணினேன்.

**ஐயை :** அண்ணி நேற்று, அதற்கு முந்நாளெல்லாம் இப்படி நீங்கள் உண்ணவில்லையா?

**கண்ணகி :** [ அழுகையும் சிரிப்பும் வர ] பல ஆண்டுகள் ஆயின ; உம்...அந்த வாழையிலையை எடு.

[ கண்ணகி உண்ணும் இடத்தை மெழுகத் தலைப்படல். அதனை ஐயை தடுத்து ]

**ஐயை :** அண்ணி! நான் இடம் மெழுகுகின்றேன்; நீங்கள் அட்டுச் சிவந்த கையால் மெழுக வேண்டாம்.

**கண்ணகி :** வேண்டாம்; நானே செய்வேன்.

**ஐயை :** சரிசரி, அண்ணு உண்ணட்டும்; நான் என் தோழியோடு சற்று வெளியிலிருக்கின்றேன்.

கண்ணகி: [கோவலன்முன் போந்து] அமுதுண்ண வாருங்கள்.

கோவலன்: இதோ வருகிறேன். இது என்ன! ஓலைத் தடுக்கா; ஓவியத் தவிசா! பொன் தகடு விரித்தன்ன வாழைக்குருத்து — உம்...

[கண்ணகி மகிழ்ச்சியும் வருத்தமும் தோன்றப் பேசாதிருத்தல்]

கோவலன்: இது என்ன கறி, இத்துணைச் சுவையோடு துவரம் செய்திருக்கிறாய்?

கண்ணகி: எல்லாம் தங்கள் தங்கை தந்தவை!

கோவலன்: இது மாதுளங்காய் கூட்டா? அடேயப்பா! என்ன சுவை! கண்ணகி! நீயும் உண், வா!

[இருவரும் உண்டு களித்து அடைக்காய் அருந்தல். மாதரி முதலிய ஆய்ச்சியர் சிலர் சாளரத்தின் வழியாக இருவரையும் பார்த்தல்]

மாதரி: ஏய், இராதை! அவர்களிருவரையும் பார்த்தாயா? நம் கண்ணனும் நப்பின்னையும் போல, கண்கொள்ளாக்காட்சி! கண்ணேறு படப்போகின்றது, வா போவோம்.

கோவலன்: கண்ணகி! இங்கு வா.

[கோவலன் கண்ணகியைத் தழுவ முற்படல். கண்ணகி வெட்கிக் கூசி]

கண்ணகி: போங்கள் அத்தான், இது என்ன குறும்பு!

கோவலன்: கண்ணகி! ஐயோ, உன் கால்கள் இந்தக் கரடுமுரடான வழியை எப்படிக் கடந்தன? இதை நினைந்து நம் தாய், தந்தையர் என்ன துயருற்றார்களோ? நாம் எங்கிருந்தோம்? எங்கு வந்தோம்?

என்ன செய்கின்றோம்? இது மாயமா? ஊழ் வினையா? உளம் மயங்குகின்றதன்றி ஊகித்தறிய முடிந்திலேன். அந்தோ! வெறும் பேச்சாளர்களோடும், புதிய புதிய பரத்தையரோடும் கூடிக் கூடி, ஆடிஆடி நகைத்தேன். அவரின் மேம்பட்டுச் செம்மாந்து, வெடிச் சிரிப்பும் வேடிக்கைப் பேச்சும் கொண்டு என்னை மறந்தேன்; உலகை மறந்தேன்; உன்னையும் மறந்தேன். ஐயகோ! மேலோர் அறிவுரையை அறவே துறந்தேன். பெற்றோர் எனக்களித்த குலத்தொழிலையும் விடுத்தேன். அவளையும் கைவிட்டேன். உன்னையும் இரவெல்லாம் தனித்து நடத்தி அலைத்தேன். புறம்போதல் பிழையென்றும் ஓர்ந்திலேன். அந்தோ! கண்ணகி, நான்தான் அறிவு மயங்கி அழைத்தேன் என்றால், நீயாவது தடுத்து நிறுத்தி, மறுத்திருக்கக்கூடாதா? எத்தகைய தவறு செய்துவிட்டாய்.

**கண்ணகி:** தவறு செய்தேனா? ஆம், ஐயனே! தவறு தான் செய்தேன்—அன்றும் யானிழைத்தது தவறு-அறவோர்க்கு அளிக்கும் இல்லாள் கடமையை மறந்தேன் — மரமாக வாழ்ந்தேன்; தவறுதான். வந்த அந்தணரைப் பேணி வேண்டுவன தர என் நிலை மறுப்ப, கல்லாக வாழ்ந்தேன். வந்த விருந்தினரை ஓம்புதலொழிந்து உயிரற்ற பிணமாய்க் கிடந்தேன்; தவறுதான். இந்த நிலையைக் கண்டு என் மாமனும் மாமியும் உளங்கலங்கலாகாது என்று என் துன்பம் மறைத்துப் புன்முறுவல் கொண்டேன். என் நிலைகண்டு, அது என் துன்பத்தையும், கொடுமையையும் கூறுகின்றது என்று நெஞ்சு நெகிழ்ந்து நெகிழ்ந்து, கண்ணீர் வார்த்து வார்த்து உளைந்து, அவர்கள் நெஞ்சுடையுமாறு தாங்கள் பிழை செய்தீர்கள். குரவர் போற்று

ஒழுக்கம் புரிந்தீர்கள். உலகு புகழும் ஒழுக்கம் துறந்தீர்கள். யான் அவ்வாழ்வைக் குறித்து நொந்தேன் — ஆனால் ஒன்று; யான் தங்கள் குறிப்பு எதுவாயினும் அதன்வழி ஒழுகும் குறிக்கோளுடையவள். ஆதலின், வாவென்றதும் வந்தேன், போ என்றால் போவேன். இதுதான் என்றும் யான் பூணும் வாழ்க்கை.

**கோவலன்:** அந்தோ! கண்ணகி! போதும், போதும்—எரிமலையின் வாயைத் திறந்துவிட்டேன். உன் உளக் கொதிப்பை வழியெல்லாங் கண்டு கண்டு வெந்துவிட்டேன். மேலும் உன் உள்ளத் தீ பற்றிச் சுட என்கண் ஓரிடம் இல்லை. போதும், உன் துன்பத்தை உணர்கின்றேன். எப்படியோ என்னோடு வந்து இப்பொழுது என் துயர் களைந்தாய். நெருப்பிலிட்டுச் சுடச்சுட மேன்மேல் ஒளிரும் பொன்போல் நின்னைப் பாலை நெருப்பிலிட்டு வருத்தி நின் பீடு ஒளிரக் காண்கின்றேன். அன்று யானிழந்து பெற்ற பொன்னே! நீரகன்ற நீலமே! பிரிவுக் கொடுமையில் உணங்கிய கொடியே! அலராலாய அணங்கே! நாணுதற்கென்றே செய்துவைத்த பாவையே! நீ இந்த உலகிற்கு ஒரு விளக்கு! கற்பின் கருவூலம்! பண்பின் பயன்! உன் சிலம்பிலொன்றை விற்றுக் கணத்தில் வருகின்றேன்; மயங்காதே. கண்ணே! கண்ணகி! தனித்து இருக்கின்றாயே! கனிபிழிந்த நறுஞ்சாறே! கட்டிக் கரும்பே! விடைகொடு......

[கோவலன் கண்ணகியைத் தழுவித் தலையில் தன் மாலையின் பூச்சூட்டிப் பிரிதல்]

## மதுரை வீதி

[கோவலன் வீதிவழியாய்ச் செல்லுதல்]

**கோவலன்:** [போய்க்கொண்டே தனக்குள்] புகாரை நோக்க மதுரை, வீதியழகில் விஞ்சியதுதான். எத்தனை வீதி! எத்துணை அழகு! திங்களின் பெயரால் வீதிகள் — சங்கப் புலவர் வீற்றிருக்கும் மதுரை என்பதற்கு இந்தப் பெயர்வைப்பே போதியசான்று.

[தொலைவில் பலர் பின்தொடரப் பொற்கொல்லன் வருதல்]

**கோவலன்:** யாரது? பெருங்கூட்டம் பின்வர நடந்து வருகின்றான். அரசனோ! ஓ, இருக்காது. குடை இல்லை, சிவிகை இல்லை. கொல்லர் கோலம் பூண்டிருக்கின்றான். ஒருகால் அரசர் குலத்திற்கு அணிகலன் அமைப்போன் போலும்!

[பொற்கொல்லன் கோவலனை நெருங்குதல்]

**கோவலன்:** ஐயா! தாங்கள்......

**பொற்கொல்லன்:** யானொரு பொற்கொல்லன்; அரண்மனைத் தொடர்புடையவன். தாங்கள் என்பால் விழைவது......

**கோவலன்:** அரசமாதேவி அணியத்தகும் ஒரு காற்சிலம்பு என்பாலுள்ளது. இதை விலை மதிப்பிடத் தாங்கள்......

**பொற்கொல்லன்:** அடியேன் வணிகர் சிலம்பளக்கும் அத்துணை அறிவு படைத்திலேன்; எனினும், அரசர் முடிதொடங்கிய கலன்கள் இயற்றி மாணிக்க மணியினும் பழக்கமுடையேன்.

[சிலம்பைக் கோவலன் கொடுப்ப வாங்கி, முடிந்த துணியினின்றும் அதனை ஆவலோடு அவிழ்த்தெடுத்துப் பார்த்தல்; பார்த்தவன் வியந்து நெடிது நோக்குதல்]

கோவலன் : என்ன, ஆழ்ந்து எண்ணுகின்றீர்கள் ?

பொற்கொல்லன் : நல்ல நேரத்தில் தாங்கள் இதைக் கொண்டுவந்தீர்கள். பாண்டியன் அவைக்களத்தில் இதுபோல ஒரு சிலம்பு உண்டு. அதற்கு இது இணையாகுமோ என்று, அதில் பதித்த மணிகளை யும், பத்திகளையும், வளைவுகளையும், பூவேலைகளையும் மனக்கண்ணில் நிறுத்தி ஒத்துப்பார்த்தேன், அவ் வளவே — இது அரசமாதேவிக்கு ஏற்றதன்றிப் பிறர் வாங்கிப் பூணும் தரத்ததன்று. இச்செய்தியை யான் அரசனுக்கு அறிவித்து வருகாறும் தாங்கள் இவ்விடத்தில் இருங்கள். அதோ, அண்மையில் இருப்பது என் சிறு குடில்.

[ சிலம்பைக் கோவலனிடம் திருப்பிக் கொடுத்தல் ]

கோவலன் : நல்லதைய்யா, சென்றுவாருங்கள்.

[ பொற்கொல்லன் தனிமொழி ]

நல்லவேளையாக ஒரு சிலம்போடு வந்தான். நான் கவர்ந்த அச்சிலம்பிற்கு இதனை ஈடாக்க அரியதொரு வாய்ப்பளித்தான். அரசன் ஒருவாறு யானே கவர்ந்ததாக நம்புங்காலம் நெருங்கும் பொழுது இவன் வந்து சிக்கினன். சிலம்பும் புறத் தோற்றத்தில் முழுமையும் அதனோடு ஒத்திருக் கின்றது. களவுபோனதாகச் சொன்னதற்கும் ஒரு சிலம்போடு இவன் வந்ததற்கும் என்ன பொருத் தம்! அப்பா! இன்றுதான் நான் வாழ்ந்த நாள், பழி இவன் தலையோடு போகட்டும்.

[ கொல்லன் முதலியோர் போதல் ]

---

## பாண்டியன் ஆடரங்கு

[ அரசவையில் ஆடல்பாடல் நடைபெறல். ஆடுமகளைப் பார்த்து ]

பாண்டியன் : ஆகா! என்ன அழகு! அயன் திறமை அனைத்தும் காட்ட அமைத்த அமைப்பன்றோ இவள் உறுப்புக்கள்!

பாண்டிமாதேவி : ஆமாம், இதில் என்ன புதுமை? கணிகையர் அழகென்றால் உங்கட்கு ஒரு தனிப் புகழ்ச்சிபோலும்!

பாண்டியன் : அதோ தேவி! அந்த இளமை ததும்பும் அக்குறுமகளின் வடிவழகும், வண்ணமும், கண் கவர் கருநிறப் பித்தையையும் காண். அறல் தோற்கும் அதன் அழகை அழகுணர்ச்சியுடையார் வியவாதிருத்தல் ஒல்லுமோ?

பாண்டிமாதேவி : அப்பப்பா! இந்த அரச கூட்டத்திற்கே உரியதோ இந்த வருணனைத் திறம்? அன்றி, இது உங்களோடு கூடிக்குலவும் புலவர் கூட்டம் கற்பித்ததோ?

[ அவள் சொன்னதைப் பொருட்படுத்தாது ஆழ்ந்த ஈடுபாட்டோடு ]

பாண்டியன் : இரு இரு, எவ்வளவு அழகாக ஆடுகின்றாள்! ஆட்டத்திற்கேற்ற அழகு! அழகிற்கேற்ற உரு! உருவிற்கேற்ற உணர்ச்சி! உணர்ச்சிக் கேற்ற பாடல்! பாட்டிற்கேற்ற பருவம்... பருவத்தில் ஒளிரும்......

பாண்டிமாதேவி : தலைவ! எனக்குத் தலை வலிக்கின்றது. தாங்கள் இருந்து இதனைக் களித்து வாருங்கள். யான் போகின்றேன்.

[புறப்பட்டுப் போகின்றாள். பாண்டியன் ஆடலை நிறுத்தி ஆடல்மகளிரைப் போகச்சொல்லிவிட்டுத் தேவியைப் பின்தொடர்கின்றான்]

பாண்டியன்: தேவி! தேவி! இதோ நானும் வருகின்றேன்.

[பாண்டிமாதேவி வாய்பேசாது செல்கின்றாள். எதிரே பொற்கொல்லன் வருகின்றான்]

பொற்கொல்லன்: வாழ்க மன்னா! வாழ்க நின் கொற்றம்! இங்கு இப்பொழுது வந்ததற்கு அருள் கூர்ந்து மன்னிக்கவும்.

பாண்டியன்: பொற்கொல்லரே! என்ன, புதுமை ஏதேனும் உண்டோ? இங்கு—இப்பொழுது......

பொற்கொல்லன்: ஆம், அரசே! புதுமையிற் புதுமையும், பழமையிற் புதுமையும் உண்டு.

பாண்டியன்: அதென்ன, புதுமையிற் புதுமை! பழமையிற் புதுமை!

பொற்கொல்லன்: அரசே! நம் அரண்மனை எத்தனையோ காப்புடையது. இத்தனைக் காப்பையும் கடந்து கன்னக்கோலின்றிக் கவைக்கோலுமின்றி அரசியின் சிலம்பை ஒருவன் திருடுவது என்பது புதுமையிற் புதுமையன்றோ?

பாண்டியன்: ஆம், அப்படித் திருடுவது புதுமைதான். எனினும், திருடர்கள் திருடுவது என்பது பழமை தானே?

பொற்கொல்லன் : வேந்தே! பழமைதான் — இப்படி யெல்லாம் திறமையாகத் திருடியவன், அதே சிலம் போடு நம் நகர் புகல் என்பது பழமையிற் புதுமை. அன்றியும் இவன் என்கைப்பட்டது புதுமையிற் புதுமையன்றோ!

பாண்டியன் : ஓ! அப்படியா? யாரங்கே?

[ அரண்காவலர் வருதல் ]

அரண்காவலர் : வாழ்க மன்னு! ஆணை எதுவோ?

பாண்டியன் : இதோ, இக்கொல்லர் கூறியாங்கு நம் சிலம்பு அந்தக் கள்வன் கையகத்திருந்தால், அக் கள்வனைக் கொன்று, சிலம்புடன் வாருங்கள்.

பொற்கொல்லன் : அரசே, ஆணை. இதோ, சிலம்பை நொடியிற் கொணர்வேன். வாழ்க மன்னு! வாழ்க நின் கொற்றம்!

[ அரண்காவலர் கொல்லன் முதலியோர் வெளிப்போதல் ]

## மதுரை வீதியில் ஓர் ஒதுக்கிடம்

[கோவலன் தலைகவிழ்ந்தவண்ணம் சிந்தனையை முகத்தில் தேக்கி அமர்ந்திருக்கின்றான்]

பொற்கொல்லன்: ஐயா! இதோ இவர்கள் அரண்மனை அலுவலாளர்கள். சிலம்பு கண்டுபோக வந்துள்ளனர்! காட்டுங்கள்.

கோவலன்: ஓ! அப்படியா? இதோ இருக்கின்றது... நன்கு பாருங்கள்.

பொற்கொல்லன்: [அரண்காவலரிடம்] இதோ பார்த்தீர்களா பூத்தொழிலை? கேவணப்பத்தி பத்து, தலைமணி மூன்று, மூட்டுவாய் மணியும்......

[அரண்காவலர், பொற்கொல்லன் முதலியோர் சற்றுத் தனித்துப் போகின்றனர்]

அரண்காவலன்: ஐயா, கொல்லரே! என்ன, அவனைப் பார்த்தால் கள்வனாகத் தோன்றவில்லையே!

மற்றவன்: இவன் திருவுரு இலக்கணமனைத்தும் பொருந்தியதாக இருக்கின்றதே! உயர்ந்த இலக்கணமுடையான் கள்வனாதல் எப்படி?

பொற்கொல்லன்: அஃகஃகா! [வெடிநகை கோடல்] ஐயா, அரண்காவலரே! திருடர்கள் மந்திரம் என்றும், மருந்து என்றும், தெய்வமென்றும், நிமித்தமென்றும், தந்திரம் என்றும், இடங்காலங்கருவி என்றும் இத்தகைய எட்டுப் பொருள்களைக் கருவியாகக் கொள்கின்றவர் என்பது நீர் அறியாததா?

அரண்காவலன்: என்ன சொல்கிறீர்கள்?

பொற்கொல்லன் : திருடர்கள் பார்வைக்கு இப்படித் தான் இருப்பார்கள். அவர்கள் மருந்துகொண்டு சூழ்ச்சி செய்தால், நாம் நம் மன்னனிடம் அகப்பட்டுத் தொல்லைப்படத்தான் வேண்டும். மந்திரம் செய்தால் மறைந்தே போவர். அவர்கள் கைவயப்படுத்திய தெய்வத்தை நினைத்தால் போதும், தம் கைப்பொருளை நம்மிடம் காட்டியே மறைப்பார்கள். மருந்தால் மயக்கினால், நாம் இருந்த இடத்தை விட்டு அசையமுடியாது. இவர்களுக்குப் பல்லி சாத்திரம், குருவி சாத்திரம், நிமித்த சாத்திரம் எல்லாம் தெரியும். தங்களுக்கு அவை செல்லாவிடத்துப் பெறுதற்கரிய பொருள் ஒன்று கிடைத்தாலும் கைவைக்க மாட்டார்கள், தெரியுமா ? இவர்கள் எல்லாம் களவுநூன்முறை நன்கறிந்தவர்கள். இந்த மண்ணுலகத்திலிருந்துகொண்டே இந்திரன் மார்பிலுள்ள முத்தாரத்தைத் திருட நினைத்தாலும் அதுவும் இவர்கட்குச் சாலும்! இவர்கட்கு இரவுதான் பகல், பகல்தான் இரவு. அப்பப்பா! இவர்கள் திறமை சொல்லித் தொலையாது.

அரண்காவலன் : [ தன் கைவாளை இறுகப் பற்றிக்கொண்டு ] ஐயா, நீங்கள் சொல்வது சரிதான். எங்கள் வீட்டிலேகூட......

மற்றவன் : என்னடா! எங்கள் வீட்டிலே...? நான் பக்கத்தில் படுத்திருக்கும்போதே ஒருவன், என் மனைவி கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு போய்விட்டான்......

பொற்கொல்லன் : பார்த்தீர்களா! அரண்காவலன் வீட்டிலேயே திருடினால் மற்றவர்கள் வீட்டில் இவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள் ?

அரண்காவலன் : ஏய், அவன்மேலே ஒரு கண் இருக்கட்டும். அப்புறம் இவனும் ஓடிவிட்டால்......?

மற்றவன் : ஆமாண்டா, ஆமாம். அதுபோல இவனும் ஏதாவது செய்துவிட்டால் நம் தலைக்குக் கேடு. என்ன செய்யலாம்? சொல்லுங்கள் சீக்கிரம்...

ஒருவன் : ஐயா, நான் மெல்ல அவன் பக்கம் போவது போலப் போய்......

மற்றவன் : டேய்...நீ விழிப்போடு...

மற்றவன் : ஏய்...ஒரே வெட்டு...

[ பெரும் அரிவாளோடு ஒருவன் மறைந்து கோவலன் பக்கம் போய் சிந்தனையில் ஆழ்ந்து குனிந்தவண்ணமாக உட்கார்ந்திருக்கும் அவன்மீது வாளோச்சி ஒழிகின்ருன் ]

கோவலன் : ஆ!......

[ கோவலன் அலறிச் சாய்தல். பொற்கொல்லன் கோவலனிடமிருந்த சிலம்பை எடுத்துக்கொண்டு மற்றையோருடன் அரண்மனை நோக்கி விரைதல் ]

## ஆயர்பாடி

[ விடியற்காலை – மாதரி வீடு – கன்று காலிகளின் ஒலி – ஆடு, மாடுகளைக் கண்காணிப்போர் இயக்கம் முதலியன ]

மாதரி: ஐயை! ஐயை! எழுந்திரு அம்மா! பொழுது விடிந்தது. அதோ, பாண்டியன் கோயிலின் துயிலெடை மணியோசையும் கேட்கின்றது!

ஐயை: இரவெல்லாம் நல்ல தூக்கமில்லை. என்னென்னவோ தீக்கனாக்கண்டேன். ஒன்றும் இப்பொழுது நினைவில்லை.

மாதரி: உனக்குமா அப்படி!...சரி சரி. முகம், கை, கால் கழுவிக்கொண்டு மத்தை எடுத்துவா. இன்று பாண்டியன் கோயிலுக்கு நெய் தரவேண்டியது நம் முறை.

ஐயை: ஆமம்மா! இதோ ஒரு கணத்தில் வருகின்றேன்.

மாதரி: [ பால் பானையைப் பார்த்துக்கொண்டு ] இது என்ன கொடுமை! பால் தோயவில்லையே! ஐயோ, என்ன செய்வேன்? உறை நான்தானே குத்தினேன்! செவ்வியில் ஒன்றும் குறைவு இல்லையே!

ஐயை: அம்மா! அம்மா! நம் எருதின் கண்ணில் நீர் தாரைதாரையாக வந்திருக்கின்றதே! வைக்கோல் கூடச் சரிவரத் தின்றதாகத் தெரியவில்லையம்மா! என்னவோ கெடுதல் வரப்போகிறது!

[ இருவரும் உரையாடிக்கொண்டே கொட்டில் பக்கம் சென்று ]

மாதரி: என்ன, பால் தோயவில்லையே என்று அஞ்சினேன்; நீ கூறுவதைப் பார்த்தால் ஆ!...இதென்ன ஆடுகள் படுக்கக்காணோம். எல்லாம் வெருண்டு நிற்கின்றன!

ஐயை: ஐயையோ அம்மா! இதோ பார், மாட்டு மணியெல்லாம் அறுந்துகிடக்கின்றதே! யாராவது இரவு......

மாதரி: யாரும் இல்லையம்மா! இது ஏதோ தெய்வக் குற்றம்! வா, போய்க் கண்ணனுக்கு விழாவெடுத்து வழிபடுவோம்; எல்லாம் தீரும்.

[ இவர்களைப்போலவே ஆயமகளிர் தத்தம் இல்லங்களிலிருந்து கூக்குரலோடு வெளிவருதல் ]

## பொது மன்றம்

[ ஆயமகளிர் எழுவர் ஏழிசைக்குரியோராய்த் தமக்குள் கண்ணன்போலவும், நப்பின்னைபோலவும் வேடந்தாங்கி, வட்டமாக நின்றுகொண்டு குரவைக் கூத்தாடுதல் ]

ஒருத்தி :

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ !

மற்றவர்கள் :

பாம்பு கயிறுகக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ !

அடுத்தவள் :

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயில்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ !

மாதரி : மூவேந்தர் வாழ்த்தைக் கூறுங்கள்.

ஒருத்தி :

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுலம் மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்.

[ ஒன்றையும் காணாது கலங்கியிருந்த கண்ணகியைப் பார்த்து மாதரி ]

அம்மா! இதோ உம் சோழன் பெருமை கூறு வதைக் கேள்:

பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்
மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
மன்னன் வளவன், மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந் திகிரி பொருபடையான் என்பரால்.

மாதரி: அம்மா, கண்ணகி! என்னம்மா உன் புகார் பெருமையைக் கூறியும் நின் முகம் மகிழக் காணோமே! ஏன், நின்முகம் கருகித் தோன்றுகின்றது? தம்பியைப் பிரிந்ததும் இப்படியா மாறுவது? தம்பி வரும் நேரமாயிற்று, மகிழ்ச்சியாயிரு. இதோ ஒரு நொடியில் வையையில் நீராடி வந்துவிடு கிறேன். சற்று ஆறுதலாக இரு. [இராதையைப் பார்த்து] ஏய் இராதை! திருமாலைப் பாடுங்கள். யாருக்கும் எந்தத்தீங்கும் வாராமற் காக்கும் எந்தெய்வம் அது.

எல்லோரும்:

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே.

ஐயை: [கண்ணகியை விளித்து] அம்மா! அதோ பார், திருமாலைத் தொழுதோம். அதற்கேற்ப விடியற் காலையே புறப்பட்டு வையை மூழ்கித் திருமாலடி தொழ மதுரை சென்று மீண்ட எம் முதுயகளும் இதோ வந்துவிட்டாள். சேடம் தருவாள்; துன்பம் நீங்கும். இனியும் நீ அவலமுறல் வேண்டாம்.

[குரவை அயர்ந்த கூட்டமெல்லாம் வந்த அம்முதுமகளைச் சூழ்ந்துகொள்ள அவள் கண்ணகியை அணுகி நின்று வாய் திறவாது அழுகின்றாள். ஐயை, கண்ணகி முகத்தையும் முது மகள் முகத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கலங்குகின்றாள்.]

கண்ணகி: அம்மா! என்ன மௌனமிது? நீயும் கலங்குதல் எதற்கு? இதோ நான் உயிர்க்கின்ற உயிர்ப்பு கொல்லன் உலைக்களத்தை விஞ்சுகின்றது. என்னென்னவோ உள்ளத்தில் மாறுபாட்டைக் காண்கின்றேன், என் கணவனைக் காண்கிலேன்; அந்தோ! என்ன மாயமிது?

ஐயை: அம்மா, கலங்காதே!

கண்ணகி: அம்மா, இந்த முதியோள் வாய்பேசாது நிற்பானேன்? அதோ பெண்டிர் கூடிக்கூடிப் பேசி, கூசிக் கூசி என்னை நோக்கி நோக்கிக் கலங்குவானேன்? ஐயோ! அன்பனைக் காணேன் அம்மா! அலவுகின்றது என் நெஞ்சு. தோழி! தலைவனைக் காண்கிலேன். வஞ்சமோ! என் நெஞ்சு மயங்குவானேன்! எதையோ மறைக்கின்றனர்! ஆ...... அ......அ......அம்மாவோ!

[கண்ணகி சோர்ந்துநிற்றல்]

ஐயை: அம்மா! இம்முதியவள் ஏதோ சொல்கின்றாள்; மயங்காது கேளம்மா!

முதியோள்: அம்மா! நின் கணவன்......அரண்மனைச் சிலம்பைத்......திருடிய......கள்வனென்று அந்தப் பாவிகள்......கொலை......குறித்......

கண்ணகி: ஓ ஓ ஓ கொலையா......கெட்டேன்......என் கண்ணா.....நீ கள்வனா......! என் கண்ணே......! நீ கள்வனா......? [அம்பு தைத்த மயில்போல் கண்ணகி

கீழே விழுதல் ] ஐயோ, இந்த மன்னன் தவறுசெய்து என் துணையைப் பிரிப்ப, ஐயையோ! யான் கைம்மைகொண்டு, உலகு பழிதூற்ற வாழ்வனோ? அன்பனைப் பிரிந்து அவலமுற்று அழிவனோ...... அந்தோ கொடுமை! இதோ பாருங்கள்.........! [ எழுந்து நின்று அண்ணாந்து பார்த்து ] ஓ! காய்கதிர்ச் செல்வனே! இந்தக் கடல்சூழ் உலகத்து நிகழ்வது காணும் நீயறிய என் கணவன் கள்வனோ......? சொல்.

கதிரவன் : இல்லை, இல்லவே இல்லை! அம்மா இந்த ஊரைத் தீயுண்ணும்.

கண்ணகி : தீயுண்ணுமா? தீ, தீ......ஐயை, எடுத்து வா அந்தச் சிலம்பை.

ஐயை : [ ஓடி எடுத்துவந்து கொடுத்து ] இதோ அம்மா!

கண்ணகி : உம்ம்......உம்ம்...... சிலம்பு......திருடன்... முறைகெட்ட அரசன் ஊர்வாழ் பத்தினிப் பெண்டிரே! படாத படுதுயரம் பட்டேன்! கெட்டேன்! இதோ என் கேள்வனைக் காண்பேன், அவன்வாய்ச் சொற் கேட்பேன்! கேளாதொழியின் இவள் ஒரு பழிகாரி என்று பகருங்கள்! பரக்கழி செய்தாள் என்று பழியுங்கள்!

[ கண்ணகி வீதிவாய்க் கடுகுதல் ]

## மதுரை வீதி

[ ஊர்மக்கள் வீதியில் கூட்டங் கூட்டமாக நிற்கின்றனர் ]

ஒருவன் : என்னய்யா......வம்பாய்ப் போயிற்றே!

மற்றவன் : என்னய்யா சொன்ஞர்கள்?

மற்ருெருவன் : கொல்லட்டும்...ஆராய வேண்டாமோ?

மற்ருெருவன் : உம்......நம் பாண்டியன் தவறு செய்தான் என்று நம்பக்கூட முடியவில்லையே!

மற்ருெருவன் : அந்த ஆளைப் பார்த்தால் அரசர் வீட்டுப் பிள்ளைபோல் கிடக்கிருனய்யா!

மற்ருெருவன் : நம் வேந்தன் அவனைப் பார்த்திருந்தால் இந்தக் கேடு வாராது!

மற்ருெருவன் : எல்லாம், அந்தத் திருட்டுப்பயல் பொற்கொல்லன்தான் இப்படிச் செய்துவிட்டான்.

மற்றவன் : பொற்கொல்லனுவது, செய்யவாவது! நம் மன்னன் சற்று ஆராயவேண்டாமா?

மற்றவன் : திருடியதற்கா கொலைத் தண்டனை?

மற்றவன் : ஆமாய்யா, அப்படித்தான் கடுமையான சட்டம் உண்டு. ஆனல், இதுவரை இப்படிச் செய்ததில்லையே!

மற்றவன் : என்னமோ நம் மன்னன் விதிதான் இந்தக் கொடுமை செய்யத் தூண்டியிருக்கவேண்டும்!

மற்றவன் : ஐயா, இந்தப் பழி வழிவழி நின்று நம் நாட்டையே வாட்டுமே!

ஒருவன் : அண்ணே, உண்மையாக நடந்தது என்ளுண்ணே ?

மற்றவன் : உண்மைதான் எல்லாம். ஓர் ஆள், நம்மூர்க்குப் புதியவன், ஏதோ ஒரு சிலம்பை விற்பதற்குக் கொண்டுவந்தானும். அரண்மனைப் பொற்கொல்லன், "இந்தச் சிலம்புதான் நம்மரண்மனையில் முன்னம் திருட்டுப்போனது; அந்தத் திருடனும் என் வீட்டில் இருக்கிருன்" என்று வேந்தனிடம் சொன்னுனும்.

கேட்டவன் : ஓகோ! கொஞ்சநாளைக்கு முன்னல் அரண்மனைச் சிலம்பு காணுமல்போயிற்று. அதைக் கண்டுபிடிக்க ஒற்றர்கள் மறைமுகமாகத் திரிகின்றனர் என்ருர்கள்!

மற்றவன் : ஆமாய்யா.........அதுகூட அந்தப் பொற்கொல்லனே எடுத்து மறைத்து வைத்துக்கொண்டான் என்றுகூடச் சொன்ஞர்கள்......

மற்றவன் : ஆமாம், ஆமாம்! அந்தப் பொற்கொல்லன்தான் இன்று வேந்தனிடம் சொன்னதும். அரசர் அரண்காவலரைக் கூப்பிட்டு, "நம் சிலம்பு அவன் கையில் இருந்தால் அவனைக் கொல்லவேண்டும்–சிலம்புடன் கொண்டுவா" என்று சொல்ல நினைத்தவர், "கொன்று கொண்டுவா" என்று சொல்லிவிட்டாராம். இந்தக் கொடியவர்களும் இதுதான் வாய்ப்பென்று அவனைக் கொன்றுவிட்டார்கள்.

மற்றவன் : அண்ணே! இதுவரை நாட்டிலே இப்படித் தேவகோட்டத்து மதிலுக்குள் ஒருவனை நம் அரசாங்கம் கொலைசெய்து நான் பார்த்ததில்லை.

மற்றவன் : ஆமாம், ஆமாம்; கொலைக்களம் என்று ஒன்று இருந்தும், அதில் கொலையுண்டான் ஒருவன் என்று இதுகாறும் நான் கேட்டதில்லை!

[ கண்ணகி தலைவிரிகோலமாக வீதிவாய்ப் பூசலிட்டு வருதல் ]

ஒருவன் : ஆமாம், ஐயோ! அதோ பாரய்யா! என்ன கொடுமை! பாண்டிநாடா இவ்வாறு அல்லலுறும்? தெய்வங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து இப்படி அல்லற்படுத்துகின்றனவா? இது என்ன தெய்வமா? தெய்வமேறிய பெண்ணோ? இவளும் ஒரு சிலம்பைக் கையில் வைத்திருக்கின்றாளே! இதனால் வேறு ஏதேனும் கேடு......

மற்றவன் : ஆமய்யா! அவன் கொணர்ந்த சிலம்பு தான் மதுரையைக் குருதிக்கறை படிய வைத்த தென்றால், இது என்ன செய்யுமோ?

கண்ணகி : கம்பலை மாக்களே! எங்கே என் கணவன்? கொடுங்கோலன் மக்களே! எங்கே என் கேள்வன்?

மக்கள் : அதோ! அதோ! அங்கே!

[ கண்ணகி வெட்டுண்ட கோவலனைத் தழுவிக்கொண்டு ]

கண்ணகி : ஐயோ! அன்பே! கண்ணே! நீங்களோ கள்வர்! கண்திறந்து பாரீரோ! வாய்திறந்து பேசீரோ! ஆ!

[ ஊரவர் வாளாவிருக்க கண்ணகியின் கூக்குரல் மட்டும் கேட்கின்றது ]

அத்தான்!.. என் அன்பே! என் அவலத்திற் கோர் ஆறுதல் சொல்லீரோ...அந்தோ! உம் பொன் மேனி பொடியாடிக் கிடக்குமோ? இதைக் காணவா

இந்தக் கண்! [கண்ணில் அடித்துக்கொண்டு] என் தீவினையோ இது! மன்னன் தவறிழைத்தான் என்று கூறுவாரையும் காணேன். தாங்களும் வாய் பேசாதிருந்தால் ஐயோ, ஐயா! தனிமகள் நான் என்ன செய்வேன்! ஓ...ஓ பாண்டியன் பழிசெய் தான் என்று இப்பாரகம் பகராதே! கொடிது, கொடிது! மாலையில் என் தலையில் மலர்சூடி மகிழ்ந்த நீங்கள் இப்படிப் பூவாடப் பொன்றினால் பொறுப் பனோ அத்தான்! போகாதோ உயிர்? "ஐயையோ! இதுவென்ன கொடுமை" என்று என்பால் இரங்கு வாரும் இல்லையே அத்தான்! "கொடும்புண்ணில் குருதி கொட்ட நெடுங்கண்ணில் நீருகுக்க நெக்குரு கும் இவள் யார்?" என்பாரையுங் காணேனே! அத் தான், ஆருயிரே! "என்ன கொடுமை இது?" என்று என்பால் பரிவுகாட்ட எவரும் இல்லை. அந்தோ! கள்வனென்பாருண்டு, கண்ணேடுவாரில்லை. பழித் துப் பழி தூற்றுவாருண்டு, பதைத்துப் பாவமென் பார் இல்லை. அத்தான்! இன்னும் குருதி ஓடுகின் றதே, அன்பே! நீங்கள் இன்னும் இறக்கவில்லை. வாழ்கின்றீர்கள். பேசுங்களத்தான், பேசுங்கள்... ஒரு வார்த்தை கூறுங்கள்......பேசமாட்டீர்களா...? அலறித் துடிக்கும் எனக்கு ஆறுதல்கூற இங்கு ஒரு பெண்ணும் இல்லையோ ..? தேற்றித் தெளிவாக்க ஒரு சான்றவர் இல்லையோ...? ஆ...தெய்வமே.. நீயும் இல்லையோ...? இருக்கமாட்டாய்...படுகொலை புரிந்த பாண்டியனுக்கு அஞ்சியோ இக்கூடல் தெய்வமும் வாய்திறக்கவில்லை!

[மீண்டும் தழுவி மயங்கி உயங்க உடம்பில் அசைவு தோன்றிக் கோவலன் எழுதல்]

**கண்ணகி :** அத்தான்! அன்பே! உங்கட்கா இந்தக் கேடு! இந்தப் பழி! அந்தோ!

**கோவலன் :** ஐயோ கொடுமை! உன் மலர்முகம் கன்றியதே! [கண்ணீர் துடைத்தல்]

**கண்ணகி :** அன்பே! இனி என்ன செய்வேன்?

**கோவலன் :** கண்ணகி! கலங்காதே, இங்கிரு...!

[கோவலன் தன் உடம்போடு வான்புகுதல், கண்ணகி மயங்கி விழுதல்]

**கண்ணகி :** [மயக்கத்தினின்று உணர்வுபெற்று] ஈண்டிருக்கவா! யாரு! இங்கா! தங்களையின்றியா...ஏன்? ஆ...அந்தோ! இதோ தங்களோடு நானும் வருகின்றேன்..இல்லை...இல்லை! நான் வருவதா? பழி துடைக்காமலா? என்ன, மாயமா? வல்வினையா? தெய்வமா? மருட்கையா? உம்...உம்...காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன். என் கணவனைக் கொன்றவனிடம் நீதி கேட்பேன், நெறி கேட்பேன், முறை கேட்பேன்! இன்றேல் பழிக்குப் பழி...பழி..பழி...!

[அரண்மனை நோக்கி விரைகின்றாள்]

## பாண்டியன் அரண்மனை

[ பாண்டியன் அரண்மனை—பாண்டிமாதேவி கனவு காண்டல் ]

பாண்டிமாதேவி : குடை ! கொற்றக்குடை ! பாண்டியன் பரம்பரைக் குடை ! சாய்ந்தது ! அதோ, மணி! ஆராய்ச்சி மணி ! அந்தோ ! அசையாத மணி, காதடைக்க ஒலிக்கின்றதே ! ஆ ! கதிரவனை இருள் விழுங்குகின்றதே ! மீன் ! விண்மீன் ! ஐயையோ ! உதிர்கின்றனவே...ஆ...ஆ!

[ பணிப்பெண்கள் பதறி ஓடிவரல் ]

தோழி : அம்மா ! அம்மா ! தேவி ! என்ன நடுக்கமிது ? உறக்கத்தில் ஏதேதோ கூறுகின்றீர்கள்...!

பாண்டிமாதேவி : ஆம் ! கூறினேன்...கனவா, நனவா... கனவுதான் தோழி ! இப்பாண்டிய மன்னன் அசையா மணிநா அசையக் கேட்டேன் : தாழாத கோலின் தாழ்ச்சி கண்டேன்! இரவில் வானவில் ஒளிரக் கண்டேன்! பகலில் உடுக்கணம் உதிரக் கண்டேன்! ஏதோ தீங்குண்டு. மயங்குதென் நெஞ்சு; மன்னர்க் குரைப்போம் மங்கலம் திரட்டுங்கள்.

[ ஏவற்பெண்டிர் எட்டு மங்கலப் பொருளையும் ஏந்தி முன்போகப் பாண்டிமாதேவி அவைக்கண் இருக்கும் பாண்டியனைக் காணப் போதல் ]

பாண்டியன் : [ அரியணையினின்றும் இறங்கிவந்து ] தேவி ! என்ன, காலமில்லாப் போதில் இங்கு வருகின்றாயே ? இம் மங்கலப்பொருள்கள் எதற்கு ? யாருக்குச் சிறப்பு செய்ய ?

பாண்டிமாதேவி : அரசே ! தங்கட்குச் சிறப்பு செய்யத் தான் ! யான் துயின்ற வைகறைப் போதில்

அஞ்சத்தக்க தீக்கனா ஒன்று கண்டேன். அதனைக் கூறி ஆறுதல் பெறவே இவண் வந்தேன். அவை இன்னும் முடிந்தபாடில்லையோ?

பாண்டியன்: ஆம், தேவி! நேற்றைய அல்லோலக்கமும் இன்றைய நாளோலக்கமும் அமைதியாக நடைபெறவில்லை. ஏதேதோ குழப்பம். அறங்கூறு அவையின்கண்ணும் ஒரு வாட்டம். வா, இருக்கையிலிருந்து பேசுவோம்.

[ அரசனும் அரசியும் இருக்கையில் அமர்தல் ]

## பாண்டியன் அரசவை

[கண்ணகி அவிழ்ந்த கூந்தல், குருதியும் புழுதியும் படிந்த மேனி, பழிவாங்கப் பிடித்த கைச்சிலம்பு, கலங்கி வழியும் கண்ணீர் இவற்றோடு அரண்மனை வாயிலில் வந்து நின்று]

**கண்ணகி:** வளமனை காக்கும் வாயிலோயே! இல்லை, இல்லை! இறைமுறை கெட்டோனின் வாயிலோயே! இங்கே வா!

**வாயிற்காப்போன்:** [நடுங்கியவண்ணம்] அம்மா!

**கண்ணகி:** கணவனை இழந்த ஒருத்தி, கைக்கண் ஏந்திய சிலம்பொன்றோடு வாயிற் கடைத்தலை யாள் என்று நும் வேந்தற்கு அறிவி!

**வாயிற்காப்போன்:** [அரசவை புகுந்து] வாழி வேந்தே! வாழி தென்னா! பழிதலைப் படாத பஞ்சவனே! செழியனே! வாழி! வாழி! அரசே, ஒருத்தி... ஒருத்தி......

**பாண்டியன்:** ஏன் இந்த நடுக்கம்? நடந்ததைச் சொல்.

**வாயிற்காப்போன்:** ஒருத்தி—அன்று எருமை வடிவில் வந்த மகிடாசுரனைக் கொன்று, குருதி கொட்டும் அவன் தலைமேல் ஏறிநின்ற கொற்றவை என்றால், ஈண்டுற்ற இவள் சினத்திற்கு அவளும் ஒப்பாக மாட்டாள்! வேந்தே! பிடாரி என்கோ! சிவனையும் ஆடல்கண்ட காளியென்கோ! நாடு துறந்து காடு புகுந்து பிணமுகந்து வாழும் அந்த மாகாளி என்கோ! அந்தோ! தாருகன் மார்பகம் பிளந்து குடல்பறித்த பெண் என்கோ! இல்லை; இவள் அவர்கள் எல்லாருமாயுள்ளாள். கொற்றவா! அவள் நின்பால் பகைகொண்டாள்போல்

வந்திருக்கின்ருள். கைக்கண் வாளில்லை; வேலில்லை; சூலமில்லை; மழுவில்லை; வேறு படை எதுவுமில்லை. ஒற்றைச் சிலம்பேந்தி நிற்கின்ருள். நின்னைக் காணவேண்டுமாம்!

பாண்டியன் : காவலா! கலங்காதே. அவளை உள்ளே வரவிடு! காலந்தாழ்த்தவேண்டாம்!

[கண்ணகி அழுகையும் சினமும் பொங்க வந்து நிற்கின்ருள்]

பாண்டியன் : நீரொழுகு கண்ணோடு நிலைகுலைந் தழுங்கும் நீ யார்! எம்பால் புகக் காரணம்?

கண்ணகி : ஆய்வற்ற அரசே! நான் யாரா? இன்னும் புரியவில்லையா? உம்...சொல்கிறேன் கேள். நான், அந்தோ!...நான்..அன்று விண்ணவர் வியப்பப் புறவிற்காகத் துலைபுகுந்து உயிர்கொடுத்த சிபி யாண்ட சோழநாட்டில் பிறந்தவள். ஆ! சோழர் களே! அந்தோ! பாண்டியனே! கேள். அன்று, கன்றிழந்து மணியசைத்து முறைகேட்ட ஆவிற்கு, மாட்சியிற்சிறந்த ஒரு மகனைத் தேர்க்காலிலிட்டு அரைத்து முறைசெய்த மனுச்சோழன் ஆண்ட பூம்புகார் என்னூர். கொற்றவனே, அரசு விழை யும் அருந்திரு பெற்ற மாசாத்துவான்; அந்த வணிக வேந்தன்—அவன் மைந்தன்—ஐயோ! ஊழ்வினையின் சூழலில் சிக்கி, யாங்கள் இழந்த முதலை உன் நாட்டில் திரட்ட வந்தோம். என் காற்சிலம்பு ஒன்றை விலையிட வந்து உன்னுல் இன்று கொலைப்பட்ட கோவலன் மனைவி நான். கண்ணகி என்பது என் பெயர். போதுமா!

பாண்டியன் : பெண்ணிற் பெருந்தகாய்! கள்வனைக் கோறல் கடுங்கோலன்று. பாண்டிய மன்னர் களும் உம் புகார் வேந்தர்போல் என்றும் கொற்றம் பிழைத்ததில்லையே!

கண்ணகி : பகுத்துணர்வற்ற பாண்டியனே! என்ன சொன்னாய்? கள்வனா! என் கேள்வனைக் கண்டாயா? அவன் வாய்மொழி கேட்டாயா? கொன்றாயே! கொன்றது போதாதென்று கொடுங்கோலுக்கு ஒரு விளக்கமா? கள்வன் என்ற பழி வேறா சூட்டுகின்றாய்! புறத்தோற்றத்துப் புலம் போக்கினையன்றிப் புகுந்து ஆராயாது கொன்றாயே. புரைபட்டவனே! அந்த என் சிலம்பில் மாணிக்கப் பரலுண்டு; உடைத்து உண்மை காண்!

பாண்டியன் : பெண்ணணங்கே! நன்குரைத்தாய். வேண்டியதுரைத்தாய்! என் சிலம்பில் முத்துப் பரலுண்டு. இதோ அதனையும் காண்போம்; உளையாதே! யாரங்கே? அந்தச் சிலம்பைக் கொண்டுவா.

ஏவலர் : அரசே! இது கைப்பற்றிய சிலம்பு, இது நம் அரண்மனைச் சிலம்பு.

[இரண்டையும் அரியணைப் படியின்மேல் வைத்தல்]

கண்ணகி : உம்! பாண்டியனே பார்!

[கண்ணகி விரைந்துசென்று அந்தச் சிலம்பை எடுத்து அதனைக் கீழே எறிந்து உடைத்தவண்ணம்]

நான் உடைக்கிறேன், நீயே பார்! கண்ணோட்டமற்ற காவலனே காண்! கண் களிக்கக் காண்!

[சிலம்புடைத்துக் கண்ணகி கலங்கி நிற்ப உடைந்த சிலம்பின் மணி ஒன்று அரசன் முகத்தருகில் தெறிக்கின்றது]

பாண்டியன் : மணி! மணி! மாணிக்க மணி! கெட்டேன்! கொன்றேன்! குலைந்தேன்! முத்து! முத்து என் சிலம்பின் பரல் முத்து! அந்தோ! அவள் சிலம்பகம் இருந்தது மாணிக்கம்! மாணிக்கம்! மடமை பூண்ட யானோ அரசன்? இல்லை! இல்லை!

இல்லவே இல்லை! யானே கள்வன்! என் குடி கெட்டது! என்னோடு கெட்டது! அந்தோ, பாண்டியர் குலமே! ஆய்ந்திலேன்—அறிவிழந்தேன். அன்று கதவு தட்டிய கையைத் துணித்து முறைசெய்து வாழ்ந்த பாண்டியன் பரம்பரையிலே வந்த யானு இப்படித் தவறு இழைப்பது? இல்லை இல்லை! ஆய்ந்து நீதிவழங்கா யானோ அரசன்? இல்லை! இறைவன் தலைவனாகத் தமிழாராய்ந்த புலவர் பெருமக்களோடு அறிவுரை பெற்று நெறிமுறை செய்த பாண்டிய மரபைக் கெடுத்தேன்! ஐயகோ! அழிக என் வாழ்நாள்! ஒழிக என்னுயிர்! பொற்கொல்லன் பேச்சுக்குச் செவிசாய்த்து முறை தப்பிய எனக்கும் ஓர் அரசபட்டமா? தகுதியற்றானைத் திறமை இல்லானை, கோள்கோட் பட்டானை வழிவழிச் சிறந்த இந்த அரசிருக்கை ஏன் சுமந்தது? அந்தோ! என்னோடு எல்லாம் ஒழியட்டும்!

[கோல் சாய குடை சாய பாண்டியன் கீழே விழுந்திறத்தல். இதனைக் கண்ட பாண்டிமாதேவி கண்ணகியிடம் ஓடி]

பாண்டிமாதேவி: ஆ! கெட்டேன். கண்ட கனவும் மெய்யாயிற்றே! அம்மா! உலகில் தந்தை இறந்தால், ஆறுதல் கூறுவோர் அவர்க்குத் தம்மைத் தந்தை முறை கூறித் தேற்றுவர். மற்ற உறவில் அது சாலும். கணவனை இழந்த உனக்கு நான் தான் என் சொல்லித் தேற்றுவேன்? யார்தான் என் சொல்லித் தெளிவிப்பார்? உன் அவலம் தேற்றுந் தரத்ததன்று! இதோ என்னிலையும் அதுவாயிற்று. [வீழ்ந்துகிடக்கும் பாண்டியன் பக்கம் திரும்பி] பேரரசே! இதோ வந்தேன். கணம் பிரியக் கலுழும் என்னை விட்டுத் தாங்கள் பிரிவதா? பிரிய ஒட்டேன்.

[அவளும் மயங்கி விழுதல்]

**கண்ணகி :** உம்...மாலுற்றுக் கிடந்தால் மடிந்த என் கணவன் வருவனே? நீயும் வாய் மூடினால் என் வஞ்சந் தீராது. அல்லற்பட்டு ஆற்றாது அவதியுறும் அவல நிலை ஒருபுறம், மக்கள் பெயரால் மன்பதை காக்க மாட்சிமைபெற்று, ஆட்சியின் பெயரால் அடாதன செய்தல் ஒருபுறம். காட்சி உண்டா? கண்காணிப்பு உண்டா? கொண்டதே கோலம், கண்டதே காட்சி! கொடுமை சுட்டி முறைமை கேட்டால் வாயடைப்போ? வாய்மூடி வதைக் காதே மன்னா! வாய்திறந்து பேசு. பஞ்சவனே, பேசு! கூசாது கொல்லப் பணித்த வாயெங்கே? எங்கள் வீழ்ச்சியிலா உங்கள் வாழ்க்கை? எங்கள் கொலையிலா உங்கள் கொற்றம்? என்னே கொடுமை! கொடியவனே! கணவனை இழந்த மகளிர் படும்பாட்டைக் கருதினையா? கவன்றாயா? காவலனும், காவலன்! உனக்கும் ஓர் அவை! [அவைப்பக்கம் திரும்பி] ஏ, அறங்கூறு அவையே! எண்பேராயமே! எங்கே உங்கள் அறம்? நேர்மை எங்கே? நெறிமுறை எங்கே? இங்கே அறிவு கொளுத்தும் ஆசான் இல்லையோ? பொதுநலத் திற்கு உயிரையும் மதியாப் புலவர் இல்லையோ? வருவது உரைக்கும் பெருங்கணி இல்லையோ? அறக்களத்தாரும் அழிந்தனரோ? மரப்பாவைகளா இங்கு வீற்றிருப்பவெல்லாம்? அடாது செய்த வேந்தனைக் கண்ணின்று கண்ணறக் கழறிக் காக் காது வாயடைத்து வாழ்ந்த நீங்கள் இனி வாழ முடியாது! ஓயாது என் சினம்! ஒழியாது என்றுமே. உயிர் குடித்த உங்களை ஒழித்தே தீருவேன். [மருங்கு நின்ற பெண்களைப் பார்த்து] குறுந்தொடியீர்! நீங்களும் ஏன் பேச மறுக்கின்றீர்கள்? வாய்வாளாமை என்பது கொலைக்கு உடன்பாடு. உடன்பட்ட உங்களையும் விடேன். பழிக்குப் பழி—பழிக்கு மேலும் பழி—என் காய்சினம் தணிகாறும் பழி! பழி! பழி!

[கண்ணகி சீற்றத்தோடு வெளியேறல்]

---

## மதுரை வீதி

**கண்ணகி :** என்னே! இந்த ஊர்—மக்கள்—தெய்வம்—பெண்டிர்! ஒருவரும் ஒன்றும் பேசாது ஊமையானது அரசன்பால் கொண்ட காதலோ? அவலத்தின் அடைப்போ? அன்றி அறனழிச் செம்மாப்போ? அலமந்த எனக்கு இன்னும் ஆறுதலளிக்காத இவ்வூர்தான் ஏன் வாழவேண்டும்? மதுரை மாக்களே, இதோ பாருங்கள்! காவிரி தன் கணவனைக் கழார் முன்துறையில் கொள்ள, அன்று புகார்க் கடற்றுறைகாறும் அலறிச் சென்று, அவனைக் கைக்கூடி இன்புற்ற ஆதிமந்தி போன்ற பத்தினி எழுவர் பிறந்த புகார்ப் பிறந்தவள் யானென்றால், என் காதலனைக் கொன்ற கோன் நகரைக் கொளுத்துவேன், குலைப்பேன். அரசனெவ்வழி குடியுமவ்வழி! குடிகெடுக்கும் இக் குடியினர் அழிக! ஒழிக! எரிக! மாய்க! மடிக!

[நகர் வலம் வந்து நகில்முகத்தைத் திருகி எறிதல். தீக்கடவுள் தோன்றுதல்]

**அங்கியங் கடவுள் :** பத்தினிப் பெரியோய்! உனக்குக் குறைசெய்த இந்நாளில் இந்நகர் தீயுண்ணும் என்றதொரு சாபமுண்டு. உன் வரவெதிர்ந்து கிடந்த எனக்கு ஒருவாய்ப்பளித்தாய். இதோ பார், என் சினத்தில் தப்பும் உயிரினமும் உண்டோ—பார்ப்போம்!

**கண்ணகி :** ஐயா! வேண்டாம். வேதமுணர்ந்து அறிவு கொளுத்திக் கண் திறக்கும் பார்ப்பனர், பிறந்தநாள் தொட்டுச் சிறந்த தீம்பாலைப் பகுத்தருத்தும் பசுக் கூட்டம், கோழை உலகத் துயர்க்குடைந்து வாழும்

பத்தினிப் பெண்டிர், அறிவு திரு ஆற்றல் எல்லா வற்ருனும் மூத்தோர், நன்மை தீமையறியாக் குழவி—இவர் ஒழிய ஏனைத் தீத்திறமுடையார் பால் திரும்பு. திருகு சினத்தின் திறங்காட்டு! போ! அப்பா, அந்தோ!

[ கண்ணகி மயங்குதல்—நடை தள்ளாடுதல்—மெல்ல நடத்தல்—சோர்ந்து நிற்றல்—மதுரையைத் தீ சூழ்தல் ]

வீரர்கள்: தீ! தீ! கோயில் சூழத் தீ! அணைப்போர் அணைக்க! அகல்வோர் அகல்க! ஓடுங்கள் வெளியே! தேடுங்கள் புகலிடம்!

சிலர்: அந்தோ! ஊழிக்காலத் தீ கூட ஒருவாறு நல்லது. ஒருகாலத்தழிக்கும்—கண்ணகியின் நெஞ்சத் தீ இது; என்றும் நின்று அழிக்கும், போங்கள்.

சிலர்: அடடா; அரசர் வீதி போயிற்று! மறவர் சேரி போயிற்று! எல்லாம் போயிற்று!

சிலர்: நாம் எங்கே போவது? சுற்றித் தீ வளைத்துக் கொள்ளும்போலிருக்கிறதே!

ஆயர்: அடேய்! ஓட்டு மாட்டை! கன்றை விரட்டு, விரட்டு, விரட்டு! ஆட்டைத் தாம்பறுத்துவிடு!

காதலர்: ஐயோ தீ! தீ! மேற்கட்டிலிருந்து இறங்கு முன் தீ சூழும்போலும்! ஓடிவாருங்கள்......

இல்லறத்தார்: குழந்தை! ஓடுங்கள். நீங்களும் வாருங்களேன்! பெட்டி நகை பணம்! சீக்கிரம்...போனுல் போகட்டும். நீங்கள் வாருங்கள்! ஒரே புகை! தீ! என்ன கொடுமை! என்ன தீ! இனி யாம் வாழிடம் ஒன்றுகூட இருக்காதுபோலும்!

[ கண்ணகியைக் கண்ணுற்று ]

சிலர்: இவள் நடக்கலாற்ருது தள்ளாடுகின்ருளே! மார்பகத் தொழுகும் குருதியோடு எங்குப்

போகின்றாள்? அரசனும் மாய்ந்தான்; தேவியும் மாய்ந்தாள். ஊரும் அழிகின்றதே! இந்த அவலக் கோலத்திற்கொரு முடிவில்லையோ?

[மதுரைமாதெய்வத்தின் தோற்றம் — சடைமுடியாள் — பவள வாய், பொன்மேனியள்—அவலித்த முகத்தோடு தோன்றல் —இடக்கையில் தாமரை—வலக்கையில் கொடுவாள்—காலில் கழல்—இடக்காலில் ஒற்றைச் சிலம்பு—கண்ணகியின் பின் புறத்தில் தோன்றித் தொடர்தல்]

**கண்ணகி:** [பின்புறம் திரும்பிப் பார்த்து] யார் நீ? என்னைத் தொடர்வானேன்?

**மதுரைமாதெய்வம்:** நிறையுடையாய்! குறையுடையேன் ஒன்று சொல்ல விழைகின்றேன்—சினவாது கேட்பாயோ!

**கண்ணகி:** குறையுடையையோ ...குறை .. ...உம்... என் துன்பம், நீ உன்னும்தரத்தது அன்று: நீ போ!

**மதுரைமாதெய்வம்:** வெந்த நெஞ்சாய்! உன் துன்பம் அறிவேன். யான் இந்த நான்மாடக் கூடல் காக்கும் மதுராபதி. உன் கணவற்குற்ற தீங்கிற்கும் உழப்பவள் யான். ஒரு சொல் சொல்ல வேட்டேன், கேட்பையோ?

**கண்ணகி:** என்ன! என் கேள்வன் துயரறிவாயா? எனக்கு உளையும் நீ வேட்டது சொல். வெருவல் வேண்டாம்.

**மதுராபதி:** தோழி! எங் கோமகனுக்குற்ற ஊழ் வினையேதான் உன் துணைவற்குத் தீங்கிழைத்தது. பெருந்தகையாய்! எதைச் சொல்வேன்! எப்படிச் சொல்வேன்! உள்ளம் ஓய்ந்துபோகின்றதே!

**கண்ணகி:** மதுராபதி! உன் உள்ளமும் ஓயட்டும், உலகமும் ஓயட்டும்! இனி ஒன்றுமே வேண்டாம். போ...

**மதுராபதி:** அம்மா! அவலமுற்ற என் துயர் அளப்பரியது. ஆற்றல்மிக்க ஊழ்த்திறம் உணர்ந்தால் ஐயம் அகல்வாய்; ஆறுதலும் உண்டு; அடியேனும் உய்வேன்.

**கண்ணகி:** என்ன, ஊழா? உம்...ஊழ்!

**மதுராபதி:** ஆமம்மா! இந்தப் பாண்டிவள நாட்டில் இதுகாறும் மறையொலிக்கக் கேட்டனமன்றிச் சோழ நாட்டில் ஆவசைத்தாங்கு, இங்கு எம் மணியசையக் கேட்டதில்லை. எம் இறை, இம்மாநில வேந்தன், இன்று இறந்துகிடக்கின்றானே அவன் அடிதொழா மன்னரும் இல்லை; அவன் குடைப் பயன் துய்க்காக் குடியுமில்லை! இவன் செருக்குற்று அறிவு துறந்து தீங்கு செய்யத் துணியினும் இவன் பிறந்த பாண்டியக் குடியில் அது கடைபோகாது. நெறிமுறை தப்பியதாகப் பெரியோர் கூறுமுன் தானே நினைந்து, தன் கையைக் குறைத்துப் பொற்கை பூண்ட பாண்டியன் ஆண்டதம்மா, இம் மணித்திருநாடு! அந்தோ! இவனுக்குற்ற ஒரு சாபமுண்டு. அதன் விளைவம்மா இது. உன் கணவன் பழவினையும் ஒன்றுசேர்ந்து மதுரை அழிகின்றது. தீயின் கொடுமைக்கு உளைகின்றேன்.

**கண்ணகி:** என் கணவற்குற்ற பழவினையா? என்ன அது?

**மதுராபதி:** ஆமம்மா, சொல்கிறேன் கேள்: கலிங்க நாட்டில் வசுவென்ற ஒருவனும், குமரனென்ற மற்றொருவனும் சிங்கபுரத்திலும், கபிலபுரத்திலும்

ஆண்ட தாயமுறை வேந்தர்கள். இவர்களுள் பகைமூள ஒருவர் மக்கள் மற்றவர் நாட்டில் வழக்காறு ஒழிந்தனர். சங்கமன் என்ற வணிகன் கபிலபுரத்தினின்றும் பொருள் நசையால் சிங்கபுரம் சென்றான். அவனைச் சென்ற பிறப்பில் பரதன் என்ற பெயருடைய உன் கணவன் ஒற்றன் எனக் கற்பித்துக் கூறிக் கொலைசூழ்வித்தான். கொலைப் பட்ட சங்கமன் மனைவி நீலியென்பாள் உன்னைப் போல் கதறிக் கலங்கிக் கண்ணீருகுத்துக் களைகண் காணாது கையற்று, "இப்படி என் கணவன் கொலைப்பட்டது அரசர் முறையோ? பரதர் முறையோ? ஊரீர் கூரீர்!" என்று மன்றுதோறும் மறுகுதோறும் மாழ்கி மாழ்கிப் பூசலிட்டுப் பதினான்கு நாள் அலமந்து, பின் ஒரு மலையுச்சியேறி, "என் கணவனைக் கூடும் நாள் இது" என்று நின்றவள், "யானுறு துயரம் எனக்கிழைத்தாரும் எய்துக!" என்றாள். அப்பத்தினி வாய்ச் சொல்லம்மா, இந்த அவலத்தின் விளைவு. அவளைப் போல் நீயும் நின் கணவனைத் தெய்வ வடிவில் பதினான்கு நாளில் கூடுவாய். உம்மைவினை ஊட்டாது கழிக்க நம் செய்தவம் உதவாதம்மா, உதவாது.

[ எரிந்துக்கொண்டிருக்கும் அங்கியங் கடவுளைப் பார்த்து ]

**கண்ணகி:** ஆ, கெட்டேன்! அந்தோ! அந்தோ! அங்கியங்கடவுளே! வேண்டாம்! நில்! நிறுத்து! உனக்குற்ற ஏவல் எதுவேனும் சரி, நீ இனி மதுரையை அழிக்க விடேன். யான் பாண்டியன் மகள். பண்டை வினையின் விளைவைப் பரிப்பார் யார்? நில்! நிறுத்து!

அங்கியங்கடவுள்: [உடனே தன் தொழிலை நிறுத்திவிட்டு] அறிவுடையோய்! ஆணைவழி நின்றேன். அலமந்தேன், ஆணை ஏதோ......?

கண்ணகி: இனி இந்த மதுரை தீயுண்ண வேண்டாம், வாழட்டும்; நீ போ. பாண்டியனும் வீழ்ந்தான்... பாண்டிமாதேவியும் சோர்ந்தாள். மதுரையும் எரிந்து தணிந்தது. ஆ......! என் கணவன்! எங்கே என் கணவன்? உம்......! மீண்டபாடில்லை. ஈன்றோர் வடிவோ, வான்றோர் வடிவோ......எதுவாயினும் கண்டன்றிக் கால் ஓயேன்.

[பக்கத்திலிருந்த கொற்றவைக் கோயிலின் தூணில் தன் கைக்கண் இருந்த சங்க வளைகளை மோதி உடைத்து]

அந்தோ! மதுரையே, மதுரைமா தெய்வமே! உன் நகரின் கீழைவாயிலில் காலையில் என் கணவனோடு புகுந்தேன்; இதோ, மேலைவாயிலில் மாலையில் என் வள்ளலின்றி வறியேனாய்ப் போகின்றேன்; அந்தோ! போகின்றேன்!

[கண்ணகி போதல்]

## திருச்செங்கோட்டு மலைமுகடு

[ கண்ணகி மேடு, பள்ளம், மலை, காடு எல்லாம் கடந்து தளர்ந்த மெய்யோடும், தள்ளாடிய நடையோடும் போய்ப் பதினான்காம் நாள் திருச்செங்கோட்டு மலையேறி ஒரு வேங்கை மரத்தின்கீழ் நிற்கின்றாள். மலைப்பக்கத்தில் குறவர்கள் வேட்டையாடுகின்றனர் ]

**ஒரு குறவன் :** என்னப்பா, இன்று வேட்டை ஒன்றும் வாய்க்கவில்லை! வேட்டைத் தொடக்கமே இப்படி இருக்கின்றதே; இடந்தேர்ந்தது சரியில்லையோ?

**மற்றவன் :** இடமெல்லாம் சரிதான், இன்னும் நேரம் போகவேண்டும்.

[ மலைச்சாரலின் ஒருபக்கத்திலிருந்து சில குறவர்கள் ஓடிவந்து ]

**குறவர்கள் சிலர் :** அதோ பாருங்கள் மலை முகட்டில்!

**ஒருவன் :** ஆமாம்! ஒரு பெண் வேங்கைமரத்தடியில்...

**மற்றவன் :** என்ன! அவிழ்ந்த கூந்தலோடு...

[ நடந்து நெருங்கிக்கொண்டே வியந்து பார்த்து ]

**குறவர் :** அடே! உடம்பெல்லாம் குருதி .....

**சில குறவர்கள் :** ஐயோ! மார்பை யாரோ வெட்டி......

**ஒருவன் :** அம்மா! தாங்கள் யார்? எம் குலதெய்வம் வள்ளி போன்ற தங்கட்கு இந்தக் கேடு செய்தது யார்? சொல்லுங்கள்; ஒரு நொடியில் அவர்களை எங்கள் அம்பில் கோத்துக் கொணர்கிறோம்.

**கண்ணகி :** யானா?...யான் விதிவயத்தால் கணவனை இழந்தேன். மன்னவனோடு மதுரைகெடத் தீயிட்டு இங்கு வந்தேன்! யான் அன்றும், இன்றும் தீத் தொழிலாட்டியேன். உம், உம்......கேள்வனைக்

காணுது கழியுமோ என் உயிர்? மதுரைத் தெய்வக் கூற்றும் பொய்யோ? என் வஞ்சினமும் பிழைத்ததோ? ஆ! ஆ! அன்புத் தெய்வமே......எங்குற்ருய் நீ!

[வானவூர்தியில் விண்ணவர் கோவலனேடு வந்து மலர் மாரி பொழிய — கண்ணகி அணர்ந்து பார்க்கக் கோவலன் கீழிறங்கி வந்து]

**கோவலன்:** கண்ணகி! கண்ணே! வா!

**கண்ணகி:** அத்தான்! அன்பே! தாங்களா!

**கோவலன்:** புழுங்கியது போதும், புகலிடம் புண்ணியத்தால் கிடைத்தது. மண்ணக வாழ்க்கை இனி வேண்டாம், விண்ணகம் புகுவோம். இதோ, நமக்கு விருந்தயர நிற்கும் விண்ணவர், வா!

[கோவலன் கண்ணகியின் கையைப்பற்றி மேலே அழைத்துப் போதல். குறவர்கள் வியந்து நோக்கல்]

**ஒருவன்:** என்ன வியப்பு! என்ன காட்சி! இந்த அம்மை நின்றதும், வானவர் நேரே வந்ததும், ஒருவன் அவளை அழைத்துச் சென்றதும், உம்..... ஒன்றும் புரியவில்லையே!

**மற்றவன்:** புரியாமலென்ன? இவள் நம் குலதெய்வம் வள்ளிதான்! அவளை அழைத்துச் சென்றவனும் நம் முருகன்தான்!

**முதல்வன்:** ஆம்! உண்மைதான், நம்மிடம் அவள் பூசனை கேட்க வந்தாளோ என்னவோ!

**மற்றவன்:** இருக்காது, அப்படியானல் ஒரு மார்பை இழந்து வருவானேன்? மதுரையை எரிப்பானேன்? நம் மலைக்கு ஏன் வந்தாள்? தீவினையாட்டியென்று

தன்னை எதற்கு நொந்துகொள்ளவேண்டும்? ஒன்றும் புரியவில்லையே!

**வேறொருவன் :** ஏனப்பா நமக்கு அந்த ஆராய்ச்சி? அது யாராக இருந்தாலும் சரி, இந்த வேங்கை மரத்தடியில் இப்பொழுதே நம் முருகனைக் குறித்து ஒரு குரவைக் கூத்தாடுவோம்.

**குறவர் தலைவன் :** அதுதான் சரி; அடேய்... நீ தொண்டகம் தொடு, நீ பறை கொட்டு, நீ கொம்பூது, நீ மணி அடி. [ பெண்களை நோக்கி ] பெண்கள் எல்லோரும் குறிஞ்சி பாடுங்கள். அடேய்! நீங்களெல்லாம் ஆடுங்கள்!

**பெண்கள் :**

[ தெய்வ வழிபாடு ]

அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
அணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.

[ அறத்தொடு நிலை ]

இறைவளை நல்லாய் இதுநகை யாகின்றே
கறிவளர் தண்சிலம்பன் செய்தநோய் தீர்க்க
அறியாள் மற்றன்னை அலர்கடம்பன் என்றே
வெறியாடத் தான்விரும்பி வேலன் வருகென்றாள்.

நேரிழை நல்லாய் நகையாம் மலைநாடன்
மார்புதரு வெந்நோய் தீர்க்க வரும்வேலன்
தீர்க்க வரும்வேலன் தன்னினும் தான்மடவன்
கார்க்கடப்பந் தாரெங் கடவுள் வருமாயின்.

[பாட்டு மடை]

வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து
நீலப் பறவைமேல் நேரிழை தன்னோடும்
ஆலமர் செல்வன் புதல்வன் வரும்வந்தால்
மால்வரை வெற்பன் மணவணி வேண்டுதுமே.

குறமகள் அவளெம் குலமகள் அவளொடும்
அறுமுக வொருவநின் அடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொழுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமண மெனவே.

பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குல்நம் பைம்புனத் துள்ளாளே
பைத்தர வல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரே.

வானக வாழ்க்கை அமரர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் காரிகையே
கானநறு வேங்கைக் கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளே.

மறுதர வில்லாளை ஏத்திநாம் பாடப்
பெறுகதில் லம்ம விவ்வூர் பெற்றியுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடைய திவ்வூர்.

கொண்டு நிலைபாடி ஆடும் குரவையைக்
கண்டுநம் காதலர் கைவந்தா ரானாது
உண்டு மகிழ்ந்தானா வைகலும் வாழியர்
வில்லெழுதிய இமயத் தொடு
கொல்லி யாண்ட குடவர் கோவே.

[குறவர்கள் குரவை முடிந்த பின்னர்]

சிலர்: எல்லோரும் இப்படியே நம்மரசனிடம் போய் இதைச் சொல்லிவிடுவோம் வாருங்கள். இதனுல் அரசற்குத் தீங்கு எதுவும் வரக்கூடாது.

சிலர்: ஆமாம், நம் வேந்தனிடம் போனுல் கையுறையோடு போகவேண்டாமா? ஏதாவது கொண்டு செல்லுதல் நல்லது.

சிலர்: சரி, அப்படியானுல் வேட்டையாடி ஆளுக் கொன்று எடுத்துப்போவோம்.

[அவர்கள் வேட்டையாடக் காடு புகுதல்]

# வஞ்சிக் காண்டம்

களம்: 5 ] [ காட்சி: 1

### பேரியாற்றங்கரை

[ சேரன் செங்குட்டுவன் தன் மனைவி வேண்மாளொடும் உரிமைச் சுற்றத்தோடும் பேரியாற்றின் இயற்கை வளங்கண்டு களித்திருத்தல். மலைவாழ் குறவர்கள் கையுறையோடு காவலனைக் காண வருதல் ]

குறவர்கள்: வாழி அரசே! சேர வேந்தே! வாழி! வாழி!

செங்குட்டுவன்: என்ன கூட்டம்? யாரது?

வில்லவன்கோதை: அரசே! நம் மலைக் குறமக்கள் தங்கள் இருப்புணர்ந்து தாள்பணிய வருகின்றனர். அதோ கேளுங்கள், வாழ்த்தொலியை!

செங்குட்டுவன்: ஆம்! என்ன மகிழ்ச்சி! அப்பப்பா! பெருங் கூட்டம்; காட்டில் வாழினும் என்ன அன்பு! என்ன ஆர்வம்!

குறவர்கள்: வாழ்க வேந்தே! ஏழ்பிறப்படியோம்; வாழ்க நின் கொற்றம்!

செங்குட்டுவன்: வாருங்கள்! மட்டற்ற மகிழ்ச்சி! என்ன இது!

குறவர்கள் : பாதகாணிக்கை, ஏற்றருளவேண்டும்.

செங்குட்டுவன் : [அமைச்சரை நோக்கி] கோதை! என்ன, இதுகாறும் யாம் கண்டறியாப் பெரும் பெரும் யானைக் கோடுகள், தரமுயர்ந்த முத்துக்கள், மாசு மறுவற்ற வெண்கவரி, காழ்த்துக் கமழும் சந்தனக் குறைகள்! ஆகா! இவையெல்லாம் எமக்கா!

குறவர்கள் : இறைவா! இது நல்ல புலிக்குட்டி—இது சிங்கக்குட்டி—கரடிக்குட்டி—யானைக்குட்டி! இதோ தேன் குடம்! எம் அன்பின் காணிக்கை!

செங்குட்டுவன் : என்ன! பறவைகள்! மயில்! குயில்! கானக்கோழி! கிள்ளை! ஆகா...மகிழ்ச்சி, மகிழ்ச்சி!

குறவர்கள் : அரசே! தங்களிடம் யாம் கூறவந்தது ஒரு வியத்தகு செய்தி......

சிலர் : அரசே! ஒரு பெண், ஒரு மார்பை இழந்த நிலையோடு வேங்கைமரத்தடியில் நின்றுகொண்டிருந்தாள். யாங்கள் ஓடி அவளை வணங்கி யாரென்று கேட்டோம். அவள், "நான் ஒரு தீவினையாட்டி; கணவனை இழந்தேன்; மதுரையை எரித்தேன்; இங்கு வந்தேன்" என்றாள். உடனே வானத்தினின்றும் ஓர் ஊர்தி வந்தது. அதிலிருந்து ஒருவன் கீழிறங்கி வந்தான். அவனோடு அவளும் அவ்வான வூர்தியிலே ஏறினாள். எல்லோரும் மறைந்துபோய் விட்டனர். இதைக் கூறத்தான் வந்தோம். வாழ்க நின் கொற்றம்! வாழ்க வேந்தே! வாழ்க பல்லாண்டு!

செங்குட்டுவன் : என்ன! வியப்பினும் வியப்பு! நீங்கள் கண்டீர்களா? நம் நாட்டிலா? நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். நரகம் போன்ற நகர வாழ்க்கை நடத்தும் எங்கட்கு இத்தகைய காட்சியேது, களிப்

பேது? அமைதியுள்ள உள்ளத்திலல்லவா அருமை பிறக்கும். அமைதியான வாழ்க்கை. போகட்டும், மதுரையை எரித்ததாகக் கூறினீர்களே, ஏன்? விளக்கம் ஒன்றும் புரியாத புதிராகவன்றோ இருக்கின்றது!

**சாத்தனார்:** அரசே! வாழ்க நின் கொற்றம்! அது உணர்த்தும் செவ்வி பார்த்துக் கிடந்தேன். இடையீடு பல. குறவர்கள் உணர்த்தியது எனக்குப் புதிது. ஆனால், இவர்கட்கும் புரியாததொன்று எனக்குத் தெரியும். சின்னாட்களுக்குமுன் யான் மதுரை புகுந்திருந்தேன். இப்பொழுது குறவர்கள், வானவரோடு விண்ணகம் புக்கதாகக் கூறிய பெண் மதுரையை நடுங்கவைத்ததை யான் நேரிற் கண்டேன்.

**செங்குட்டுவன்:** என்ன புதுமை! நீங்களா?

**சாத்தனார்:** ஆம், அரசே! அவள் தீகொளுவியதால் வெள்ளியம்பலத்தைப் புகலிடமாகக் கொண்டு கிடந்தேன். அங்கு அவளோடு உரையாடிய மதுரைமா தெய்வத்தையும் யான் நேரில் பார்த்தேன்.

**செங்குட்டுவன்:** புலவரே! எனக்கேன் இந்த அரசிருக்கை? தெய்வங்களைக் காணும் குறவர் வாழ்க்கையும், புலவர் வாழ்க்கையும் பெற்ற பேறு; இந்த அரச வாழ்க்கைக்கேது? எல்லாம் புதுமை!

**சாத்தனார்:** வேந்தே! புகாரில் வணிக குலத்துப் பிறந்த கோவலன் பெருஞ்செல்வன். தன் மனைவி கண்ணகி என்பாளோடு ஊழ்வினை காரணமாக மதுரை போந்து, பாண்டியன் நெடுஞ்செழியனால் முறையின்றிக்கொல்லப்பட்டான். அதுகேட்ட கோவலன் மனைவி நீதிகேட்டு முறைகெட்டதற்கு உடைந்து

அரசனோடு அரசியும் மாய, அலமந்தாளுக்கு ஆறுதல் கூறு ஊரைத் தீக்கிரையாக்கினாள். மதுராபதித் தெய்வம் அவள் செயல்கண்டு அஞ்சி, அவளிடம் போந்து அற்றைநாள் வினை கூறித் தேற்றி அழல் அவித்தாள். அவளே ஈண்டுப் போந்துள்ளாள்; அதுபற்றி யானறிந்தது இவ்வளவே!

**செங்குட்டுவன் :** என்ன அரசியல் வாழ்க்கை! நெடுஞ்செழியன் இறந்தானா! அந்தோ, கொடுமை! தன் தவறுணர்ந்து தானே இறந்தானா? இதுவன்றோ கொற்றம்! வளைந்த கோலைச் சென்ற உயிர் நிமிர்த்தியதுபோலும்!

**சாத்தனார் :** ஆம், வேந்தே! உயிர் கோலின் நெளிவை நீக்கியது உண்மைதான்.

**செங்குட்டுவன் :** பார்த்தீர்களா! இதுதான் அரசியல் வாழ்க்கை. மழை வளம் மாய்ந்தால் மன்னன் மருளவேண்டும். உயிரினம்ஏதாவது முறையின்றித் துன்புற்றால் அரசனழுங்கவேண்டும். நாட்டில் எந்தப் பகுதியில் எந்தத் தீங்கு யாரால் விளைந்தாலும் அரசனே அதற்குப் பொறுப்பாளி என்றால்-ஓ ஓ! என்ன வாழ்க்கை இது? இதில் வரும் பெருமைதான் என்ன? துன்பமின்றிப் பீடொன்றிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை!

**சாத்தனார் :** அரசே! அந்தந்தத் துறையில் அமைந்தார்க்கு அவ்வவற்றால் அல்லல் உறுவது இயல்பு. தாங்கள் இதனைப் பெரிதாக மனக்கொளல் வேண்டாம்.

**செங்குட்டுவன் :** மலைவளந் துய்த்தது போதும். வாருங்கள் வஞ்சி புகுவோம்.

[ எல்லோரும் போதல் ]

## சேரன் அவைக்களம்

[அரசவையில் எல்லோரும் கூடியிருத்தல்]

**செங்குட்டுவன்:** அவையோரே! நேற்று நம் நாடு புகுந்த கண்ணகியையும், ஆண்டு உயிர்துறந்த பாண்டியன் மனைவியையும் நினைக்க நினைக்க என் மனம் குழம்புகின்றது. [அரசியைப் பார்த்து] வேண்மாள்! நம்மால் வியக்கத்தக்கோள் இப்பொழுது உயிரோடு உயிராய் ஒன்றித்து இறந்த பாண்டியன் மனைவியா, அன்றி துன்பத்துள் துன்பமுற்று நம் மலையடைந்து விண்புகுந்த கண்ணகியா? இவர் தம்முள் யார், கூறு பார்ப்போம்!

**வேண்மாள்:** அரசே! காதலன் துன்பம் காணப் பொருது ஒருயிர் வாழ்க்கை பெற்ற கோப்பெருந் தேவி வானகத்துப் பெருமகளாகட்டும்! இதோ, நலிவோடு நம் நாடு புகுந்த கண்ணகி, பழி துடைக்க என்றே ஈருயிர் வாழ்க்கை பெற்றிருக்க வேண்டும்! ஈனோர் வடிவில் கணவனை இழந்தும், வானோர் வடிவில் கணவனைக் கூடிய பத்தினிக் கடவுளே பரவுதற்குரியள். இவளாற்றல் அவளாற்றலிற் பெரிது.

**செங்குட்டுவன்:** ஓ! அப்படியா... [நிமித்திகனை நோக்கி] பெருங்கணி ஏன் வாளாமை மேற்கொண்டிருக்கிறார்?

**பெருங்கணி:** அரசே! வாய்ப்புக்கேங்கி வாளாவிருந்தேன். வாழ்க வேந்தே! வாழ்க நின் கொற்றம்! பத்தினி போந்தது நாம் பரவுதற்கே. பாரகம் அடங்கலும் பணிவித்த நீயும் பணிந்து வழிபடவே இங்கு வந்துள்ளாள். எவர்க்கும் கிட்டா வாய்ப்பு! ஏற்றுக்கொள்ளுங்கள். இனி பேரும், புகழும்,

வீரமும், வெற்றியும் கோடி கோடி நந்தும். கோயி லெடுத்தற்கேற்ற கல் பொதியத்தும், இமயத்தும் உண்டு. கடவுள் தன்மை கங்கை படுப்பினும்; காவிரி படுப்பினும் அமையும்.

**செங்குட்டுவன்:** பெருங்கணி! வாளொடு பிறந்த எங்குடிக்கு, வளமார் பொதியிலில் கல்லெடுத்துக் காவிரிப் படுத்தல் ஏற்றதன்று. புலராக் காழகம்—புலரவுடுத்து அறம் நவில் நாவும், நான்மறை முழக் கும் நீங்காச் சடைமுடி அந்தணர் வாழும் இமயமே அதற்குச் சாலச் சிறந்தது. என் நாடு புகுந்த பத்தினிக்குச் சிலை வடிக்க இமயவேந்தன் ஒரு கல் தாரானாயின், ஆ! இறந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சி, வடதிசை நின்று எதிரூன்றிய காஞ்சி, அம்மட்டோ! காஞ்சியனைத்தும் புலனாக்கி வடபுலம் நடுங்கக் காண்பேன். ஆ! அமைச்சரே! இன்று காலை இமயத்தினின்றும் மீண்ட தாபதர் சிலர் சொன்ன சிறுசொல்லை இந்த அவையறியக் கூறுங்கள்!

**வில்லவன்கோதை:** வாழ்க வேந்தே! அமைச்சர் பெரு மக்களே! பெருங்கணிகளே! எண்பேராயமே! அறங்கூறு அவையே! வடவர் உரைத்தது வாய் கடந்தது, வசை பொதிந்தது. கனகன், விசயன் என்ற ஆரிய மன்னரிருவர், "தங்கள் முன்னோர் சோர்ந்த காலத்துத் தமிழ்நாட்டரசர்கள் சூழ்ச்சி யாக வந்து இமயத்தில் புலியையும், கயலையும் பொறித்துச் சென்றனர். இப்பொழுது ஆண்மை யிருந்தால் வரட்டும்; ஆற்றலிருந்தால் பொரட்டும்; வந்தால் தக்க வலிகாட்டிப் போக்கலாம்" என்றார் களாம்—ந கை த் தா ர் க ளா ம், ஒரு திருமணக் கூட்டத்தில்.

செங்குட்டுவன் : அவையோரே! அந்த அற்கா வாழ்க்கையர் சொல்லைப் பொருட்படுத்தாதொழிந்தால் கங்கை வளம் காழ்கொள்ளும், பொருநை வளம் புரைபடும், பொன்னி வளம் பொன்றும், பொய்க்கும் எம் வளமார் வையை வளம்!

மறக்குடி மக்களே! இம் மாசு துடைக்காது போனுல் மானமோ, மாட்சியோ இல்லை. இதோ என் கை வாள்! பரம்பரை வாள்! வெற்றி வாள்! வீர வாள்! இதன்மேல் ஆணை! எம் பத்தினித் தெய்வம் வடிக்க ஒரு கல்லை அந்த வடவரசர் முடித்தலை ஏற்றிக்கொண்டு வாராது வறிது மீள்வேனேல் என்னை நீங்கள், பகை கண்டு அஞ்சிப் படை கண்டு நடுங்கும் பேதை என்றே, வளங்கொண்ட நாட்டை ஆளும் வலியற்ற கோழை என்றே அழையுங்கள். இனி யான் அமையுமாறில்லை.

ஆசான் : [எழுந்து] அரசே! இமயவரம்ப! ஏனிந்தச் சீற்றம்? வடபுலத்தரசர் இகழ்ந்தது ஆர்புனைச் சோழனையும், வேம்புசூடும் பாண்டியனையுமே அல்லாது போந்தை புனைந்த தங்களையன்று. தங்கள் பெருமை கண்டஞ்சித் தங்களைச்சுட்டாது விலக்கிய போது அஞ்சினர்க்களிக்கும் வெஞ்சினம் இல்லோய்! தணிக நின் சீற்றம்! தவிர்க இவ்வஞ்சினம்!

செங்குட்டுவன் : நன்று! நன்று! ஆசான் உரைத்ததை அமைவரக் கொளற்கில்லை. அவையோரே! நாம் தென்னாட்டுத் தமிழ் மக்கள். என்றுமுள தென் தமிழை இயம்பி இசை பூண்டவர். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துத் தோன்றிய பழங்குடிகளுள் பாண்டியரும், சோழரும் விலக்கோ? வீரத்திலோ, நாட்டு வளத்திலோ, போர்ப் பண்

பாட்டிலோ யாரில் யார் தாழ்ந்தோர்? தமிழ்த் தாயின் ஒரு வயிற்றுப் பிறந்த உடன்பிறப்பாளரை வடவரசர் வசை மொழிய, உடன்பிறந்தான், "என்னையன்று, என் முன்னோனை, இல்லை, பின்னோனை" என்று ஒழிவதா மேன்மை? இதுவா தமிழ்க் குடிப் பண்பு? தமிழர் வீரம்! இம்முடிகெழு மூவருள் வடவரால் எவர் இகழப்பெற்றாலும் தமிழர் இகழப்பட்டாரன்றிச் சோழரென்றோ, பாண்டியரென்றோ பகுத்துச் சேரர் இல்லையென்று விலக்கிக் கூறுவார் வடநாட்டுண்டோ? கனகனும், விசயனும் இகழ்ந்தது தமிழ் வேந்தரை; அது என்னையுந்தான். அவர் காதில் இது விழுந்தால் இதுகாறும் வடபுலம் வேகும், வடவர் சாம்புவர். என் செவியகம் வெதுப்பும் இப்பழி துடைத்தே தீருவேன்; தடுத்தல் வேண்டாம்.

[ நுடிநுடித்து வாள்தொட்டு நிற்றல் ]

**பெருங்கணி:** வெந்திறல் வேந்தே! வாழ்க நின் கொற்றம்! அமைதற்கு இது தக்க காலமன்று. கோள்கள் நிற்கும் இடங்கள் பன்னிரண்டையும் கூர்ந்து நோக்கின் இப்பொழுது படையெடுப்பை மேற்கொண்டால், அனைத்துலகையும் அடிக்கீழ் அடக்கலாம். தாங்கள் ஞாலங் கருதின் கைகூடும் காலம் இது. செய்வன செய்யுங்கள்.

**செங்குட்டுவன்:** அமைச்சரே! நம்கணியே கணி! காலங் கூறினர்; இடமறிந்து தொழிற்படுத்தல் நம் கடன். இதோ வலியழிக்கும் வாள் கொண்டேன்; புடை முரசு, நடைநல்கு, படையூக்கு, குடைபோக்கு.

**அழும்பில்வேள்:** அரசே! வாழ்க நின்கொற்றம்! வாழ்க பல்லாண்டு! அந்தோ! அன்று நம்மொடு இகலிக் கொங்கரும், கலிங்கரும் பட்டபாடு, கருநடர்

கட்டியர் கெட்டகேடு, பங்களர் கங்கர் அங்கங்கு அலைந்தது, வடவாரியர் தடுமாற்றம்—அப்பப்பா! அன்று நீ, நின் யானை இவர்ந்து களம் மயங்க உழக்கிய நிகழ்ச்சி இன்றும் என் கண்ணகன்ற பாடில்லை. அதுவொன்றோ? எங்கோமகளை நீர்ப் படை செய்ய அன்று நீ புக்ககாலை, ஆரியமன்னர் ஆயிரவர் அணியணியாப் போந்து, அலமந்து, அல்லற்பட்டு, ஆற்றாராய் ஒருதனிநின்ற நின்பா லுழந்ததை எண்ணுந்தோறும் அரசே, துணுக்குறும் என் நெஞ்சு; துளக்குறும் என் யாக்கை! அதனைக் கூற்றமே கண்டு வியந்து நிலைபெயராது விம்மித முற்றதன்றோ! அப்பப்பா! வடபுலமென்ன! இந்தக் கடல்சூழ் மண்டிலம் அனைத்தையும் தமிழ் நாடெனப் பெயர் புனையக் கருதித் தமிழ்மொழி யோடு அதன் பண்பாட்டையும் வளர்க்க நினையி னும் உன் கருத்து உளவாகுமன்றி, நின்னை எதிர்ப் பவர் இக்கடல்சூழ் மண்டிலத்தொருவருண்டோ? வேந்தே! நாம் இமயம் போவது கண்ணகிக் கட வுளை எழுதும் கல்லெடுத்து வடபுல வேந்தர் தலை யேற்றிக் கொணர்தற்கன்றோ? அதனால்நாம் வடபுல மன்னர்கட்கெல்லாம் புலி, வில், கயல் பொறித்த ஓலையைப்போக்கிவிட்டு, விழிப்பூட்டிப் போவோம். வடபுல மன்னர்தம் ஒற்றர்களும் இக் கடி நகர் வாழ்வாருண்டு. அவரும் சென்று சொல்லுவர்; சொல்லட்டும். யானைமேல் பறையேற்றி நகர்க்கு அறிவிப்போம். அதன்பின் படையெடுப்போம்.

**செங்குட்டுவன்:** அமைச்சரே! நன்று; அங்ஙனமே ஆகட்டும்.

[அவை கலைதல்]

---

## பாடிவீடு

[ இரவு வேளை—சேரன் செங்குட்டுவனும், படைஞரும், தானைத் தலைவரும், அமைச்சரும் அவரவர்க்கமைந்த இடத்தில் உறங்குதல் ]

முனிவர்கள் : என்ன, கடல்போல் பரந்த சேனைகள்! யாருடையது? சேரநாட்டை முற்றுகையிட்ட உலக மன்னர் அனைவரின் சேனைகளா இவை!

ஒருவர் : இல்லை, இது சேரன் படை. சேரனை முற்று கையிட இந்த மண்ணவர் படை போதாது; விண்ணவர் படையும் வேண்டும். குட்டுவன் இமயப் படையெடுப்பை மேற்கொண்டு இங்குத் தங்கியுள்ளான்.

முனிவர்கள் : ஓ! நன்று. இந்த இந்திரச் சிறுவனைக் கண்டு செல்வோம். அதோ, அவன் பாடிவீடு.

[ முனிவர்கள் வர, பாடிவீட்டின்முன் பேரொளி தோன்றல் ]

செங்குட்டுவன் : என்ன! கண்ணைப்பறிக்கும் பேரொளி! ஓ! முனிவர்கள்! என்ன வியப்பு! கதிரவன் போன்ற ஒளிமேனி! [ அவர்களை வணங்கி ] அடி தொழுதேன், ஐயன்மீர்! வாருங்கள்; தாங்கள் இங்கு வர யான் என்ன தவம் செய்தேனே?

முனிவர்கள் : செஞ்சடைக் கடவுளின் திருவடி துணை பெற்ற சேரனே! ஒன்று கேள். யாங்கள் பொதிய மலைக்குச் செல்கிறோம். செல்லும் வழியில் உன் பால் கொண்ட அருள்நோக்கால் உன் கருத் துணர்ந்து ஒன்றுணர்த்திப் போக எண்ணி வந்தோம். நீ இமயம் சென்றால் அங்கு அருமறை அந்தணர் பலரைக் காண்பாய். உன் படையெடுப்

பால் அவர்கட்கு எந்த ஊறும் நேராதவாறு போற்றுதல் நின் கடன். அன்றேல் துன்பம் நேரும். விழிப்பாகச் சென்று வா. உன் முயற்சி வெற்றி பெறும்! வாழ்க நின் கொற்றம்!

**செங்குட்டுவன்:** முனிவர் பெருமானே! தங்கள் சொற்களைத் தலைமேற்கொண்டேன். ஆவொடு அந்தணர் ஓம்பல் என் முதற்கடன். அதில் தினையளவும் தவறேன், உறுதி! [முனிவர்கள் மறைகின்றனர்] என்ன வியப்பு! மறைந்துவிட்டார்களே! வானத்தியக்கம் பெற்ற இவர்கள் பெருமை எங்கே! என் கொற்றமும், குடையும், படையும் எங்கே! இது வன்றோ வாழ்க்கை!

[படுக்கையில் சோர்ந்து உட்கார்ந்துகொண்டு வெளியில் கேட்கும் வாழ்த்தொலி நோக்கல்—கொங்கணக் கூத்தரும் குடகரும் ஆடுமகளோடும், பாடுமகளோடும் பெருங் கூட்டமாக வாழ்த்திக்கொண்டு வருதல்]

**கொங்கணக்கூத்தரும் குடகரும்:** கடல்சூழ் மண்டிலம் ஆள்வோன் வாழ்க! கடம்பறுத்த சேரலர் வாழ்க!

**ஒருவன்:** விறலியர்களே! நீங்கள் கொங்கணக் கூத்தின் திறங்காட்டியாடுங்கள். பாடினிப் பெண்களே! நீங்கள் குடகப் பாட்டின் நலம் மலியப் பாடுங்கள்.

**பாடினிப் பெண்கள்:**

இமயவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்ப்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல
உறுபுலி யுருவேய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவுகொண்டு அதன்முதற் குத்திய மதயானை
நீடிரு விடரகஞ் சிலம்பக் கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லாது உழக்கும் நாடகேள்:

ஆரிடை யென்னுய்நீ யரவஞ்சாய் வந்தக்கால்
நீரற்ற புலமேபோற் புல்லென்ருள் வைகறை
கார்பெற்ற புலமேபோற் கவின்பெறும் அக்கவின்
தீராமற் காப்பதோர் திறனுண்டேல்
உரைத்தைக்காண் ;

இருளிடை யென்னுய்நீ யிரவஞ்சாய் வந்தக்கால்
பொருளில்லான் இளமைபோல் புல்லென்ருள்
வைகறை
அருள்வல்லான் ஆக்கம்போல் அணிபெறும் அவ்வணி
தெருளாமற் காப்பதோர் திறனுண்டேல்
உரைத்தைக்காண் ;

மறந்திருந்தார் என்னுய்நீ மலேயிடை வந்தக்கால்
அறஞ்சாரான் மூப்பேபோல் அழிதக்காள் வைகறை
திறஞ்சேர்ந்தான் ஆக்கம்போல் திருத்தகும் அத்திருப்
புறங்கூற்றுத் தீர்ப்பதோர் பொருளுண்டேல்
உரைத்தைக்காண் ;

எனவாங்கு,

நின்னுறு விழுமங் கூறக் கேட்டு
வருமே தோழி நன்மலே நாடன்
வேங்கை விரிவிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே.

செங்குட்டுவன் : அமைச்சரே! இசைத்திறம் உணர்த்த இக்குடகர் பாடிய பாட்டும், கலேத்திறங்காட்ட இக்கொங்கணர் ஆடிய கூத்தும் இதுகாறும் யாம் கண்டறியாதன! வியக்கத்தக்கன! அங்ஙனமே அவர் கண்டறியா அணிவகையும் மணிவகையும் பரிசிலாகக் கொடும்.

ஒருவர் : வாழி வேந்தே! வாழி! வாழி! மறம் வாழி! வாள் வாழி! குடி வாழி! கோல் வாழி! கொற்றம் வாழி! அரசே பாடிவீட்டு வாயிலின்கண் சஞ்சயன் என்ற பெயருடையான்—மெய்ப்பை அணிந்து அரச பட்டத் தலேப்பாகையோடு ஆயிரவர்

பின்வர, நூற்றிருபது நாடக மகளிர் புடைசூழ, பல திறத் தோற்கருவி இசைக்கும் குயிலுவர் நூற்றிருபது பேர் பக்கல் நிற்ப, தொண்ணூற்ருறு வகைப் பட்ட சமயக் கல்வி பயின்ற நகைமொழியாளர் நூற்றுவர் முன்னியங்க, நுண்வினைத் தேர் நூறும், யானை ஐந்நூறும், புரவி ஐயாயிரமும், திண்ணிலைச் சகடம் ஒருபதினுயிரமும் அதுபொதிந்த பொருளும் பின்தொடரத் தங்களைக் காணவந்து பாடிப் புறத்து நிற்கின்ருன்.

செங்குட்டுவன் : என்ன! திறைப்பொருள் கொணர்ந் தனரோ! அவர்களை உள்ளே வரவிடு.

[ சஞ்சயன் அரசன்முன் வருதல் ]

சஞ்சயன் : வாழி வேந்தே! வாழி நின் கொற்றம்! யான் கன்னர் நூற்றுவர்க்குத் தூதன். எம் வேந்தர் கள் நும் வருகை எதிர்ந்து இவற்றைத் தங்கட்குக் காணிக்கைப் பொருளாகத்தந்து வரவேற்கப் பணித் தார்கள். இவற்றை ஏற்றுக்கோடல் வேண்டும்.

செங்குட்டுவன் : நன்று! நன்று! இவை கன்னர் நூற்றுவர் தந்தனவோ?

சஞ்சயன் : ஆம், வேந்தே! தாங்கள் வடபுலம் செல் வது கடவுள் எழுதும் கல்பெறல் ஒன்றிற்கென்ருல் தாமே அதனைக் கொண்டு கங்கைநீர்ப்படுத்தித் தங்கட்குத் தருவதாகக் கூறினர். அதற்குத் தாங்கள் எந்த முயற்சியும் மேற்கொள்ள வேண்டாம். வேற் றுமையின்றித் தங்களொடு நட்டார்க்கு அந்த ஆற்றல் உண்டென்று உரைக்கச் சொன்ஞர்கள்.

செங்குட்டுவன் : ஆம், ஆனல் ஒன்று. அருந் தமிழ் ஆற்றலையோ, அம்மக்கள் ஆண்மையையோ அவர்

விளைவிக்கும் வீரத்தையோ அந்த நாகாவா பால குமரன் மக்கள் கனகனும், விசயனும் அறிந்திலர். அது அவரோடு நட்ட விருந்தின் மன்னர் கூட்டுற வால் நிகழ்ந்தது. இதோ, இந்தக் கடல் அன்ன சேனைகளுக்குத் தலைவன் கூற்றுவனன்றி யானல் லன். தமிழாற்றலை அவர் உணர்வகை யான் உணர்த்த இதுதான் தக்க நேரம். இதனை நண்பர் கள் கன்னர் நூற்றுவர்க்கு அறிவி. இப்பெரும் படை கங்கை கடக்கவேண்டும்.வங்கம் அமைக்கும் உதவியொன்று செய்யட்டும்; அது போதும்!

சஞ்சயன்: வாழ்க வேந்தே! இதோ, கணத்தில் சென்று ஆவன புரிகின்றேன். வாழி! வருகின்றேன்.

[சஞ்சயன் வெளிப்போதல். தென்னவர் தூதன் உட்புகுதல்]

செங்குட்டுவன்: யாரது? தென்னவர் தூதுவனா?......

தென்னவர் தூதுவன்: சேர வாழி! செழிய வாழி! ஆயிர வர் சுமந்த சந்தின் குப்பையையும்,முத்து மூடை களையும் திறைப் பொருளாகத் தந்து இவ்வோலை யையும் தங்கட்கு எம் வேந்தன் அனுப்பினான்.

[ஓலையைச் சேரனிடம் கொடுத்தல்]

செங்குட்டுவன்: ஓலையா, ஆம்! பாண்டியன் முத்திரை யிட்டது. [வாங்கிப் பிரித்துப் படித்தல்]

வாழி சேர! வாழி பெருந்தகை! வணக்கம். பழவினை வயத்தால் எம் பாண்டிய நாட்டிற்கும், எம் குடிக்கும் அண்மையில் நிகழ்ந்த அவல நிகழ்ச்சி என்னைப் பெரிதும் வருத்திவிட்டது. இன்னும் பத்தினித் தெய்வத்தின் வெம்மை தணிந்தபாடில்லை. வற்கடம் மலிந்தமையால் உரிய காலத்தில் குறித்த திறைப்பொருளை

அனுப்ப இயலாமற் போயிற்று. அடுத்தவரும் ஆண்டுகளில் கூட்டிப் பெறலாம்; குறை கருதற்க. வாழி!

இங்ஙனம்,
வெற்றிவேற் செழியன்.

[ ஓலையைப் பார்த்துக்கொண்டே கண்கலங்கி மனம் நொந்து ]

செங்குட்டுவன்: நண்பா! நினக்குற்றது எனக்குற்றது. ஊழ்வழிப்பட்டோர் நீர்வழிப்பட்ட புணை; நம் முயற்சி இடைக்கிடப்பினும் அது செய்வது செய்தே ஒழியும். அமைச்சரே! பாண்டி வேந்தன் வெந்து, நொந்து தீட்டிய முடங்கல் என்னைத் தீய்க்கின்றது. இவர்கள் கொணர்ந்த திறைப்பொருளோடு இன்னும் இரட்டித்த பொருளைப் பாண்டியற்கு என் அன்பளிப்பாகக் கொடுத்தனுப்புங்கள்.

[ தூதுவன்பக்கம் திரும்பி ]

தூதுவனே! பத்தினிக் கடவுட்கு இமயத்தில் ஒருகல் கொண்டு கங்கையில் நீர்ப்படுத்தி ஆண்டு யான் தமிழாற்றல் காட்டப்போவதாகப் பாண்டியனிடம் கூறு. இறுதியாக ஊழ்கண்டு ஒரு சிறிதும் உளையாதிருக்க வேண்டியதாகவும் உரை.

தூதுவன்: வாழி வேந்தே! ஆணைவண்ணம் ஆகட்டும். சென்று வருகின்றேன்.

[ எல்லோரும் போதல் ]

## வடவர் பாடிவீடு

[கங்கையாற்றின் வடகரை — பாடிவீடமைத்தல், உத்திரன், விசித்திரன், உருத்திரன், வைரவன், சித்திரன், சிங்கன் தனுத்தரன், சிவேதன் — இவர்கள்]

உத்திரன் : என்ன! தமிழர்களாம், தமிழர்கள்!

விசித்திரன் : எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தால், கங்கையும் கடந்து இங்கு வருவான்? பார்ப்போம்!

உருத்திரன் : ஆம்; கங்கை கடந்ததும் நல்லதுதான். ஒருவன்கூட இனித் தப்பிப்போக முடியாமல் ஒழிக்க இதுவே நல்ல நேரம். இடந்தெரியாது வந்து நிற்கின்றான்.

வைரவன் : வந்திருப்பவன் யார் தெரியுமா? நாம் இகழ்ந்த சோழனுமில்லை, பாண்டியனும் இல்லை; இவன் சேரன்?

தனுத்தரன் : ஓகோ! இவர், அவர்களுக்காக வந்திருக்கின்றாரோ? இவராவது போய்ச் சொல்லட்டும், நம் வீரத்தை!

சிவேதன் : நேற்று ஒற்றர்கள் கூறக் கேட்டேன்; இங்கு வந்திருப்பவன் பெயர் செங்குட்டுவனும்; பெரும் ஆற்றல் உடையவனும். உலக மன்னன் என்று வேறு இவனை அழைக்கிறார்களாம். இவன் இமயத் தாபதர் கூறியது கேட்டு, கண்ணகி என்ற பத்தினி ஒருத்திக்குச் சிலை வடிக்க இமயத்துக் கல்லெடுத்து அக்கல்லை, நம் கனக விசயர் தலையில் ஏற்றிக் கொண்டுவருவதாக வஞ்சினம் மொழிந்து வந்திருக்

கின்றான். என்ன நெஞ்சழுத்தம்! முதலை புனல் நீங்கியுள்ளது, கிடைத்த வாய்ப்பைச் செம்மையாகப் பயன்படுத்தவேண்டும்......உம்.

எல்லோரும்: ஓ! வந்தவன் ஒருவன் — வஞ்சினம் வேறு! கன்னர் நூற்றுவர் துணையிருப்பதால் பேசுகின்றானே!

சிவேதன்: இல்லை, கன்னர் நூற்றுவர் அவனைப் போற்றுபவர் என்றாலும், நம்மை நேரில் எதிர்க்க மாட்டார்கள்.

எல்லோரும்: ஏன் நேரம் கடத்தவேண்டும்? ஒவ்வொருவரும் நம் படையோடு வெவ்வேறு அமைப்பில் இருந்து தாக்குவோம்! பிறகு புரியும் அவன் வஞ்சினமும், வாய்த் துடுக்கும்!

உத்திரன்: சரி, இதனை உடனே கனக விசயர்க்கு அறிவிப்போம். தமிழர்கட்கு இதுவே கடைசிப் படையெடுப்பாக இருக்கவேண்டும். இனித் தமிழ் இங்குத் தலைகாட்டக்கூடாது.

எல்லோரும்: ஆம், அப்படியே செய்வோம்.

[ எல்லோரும் போதல் ]

## போர்க்களம்

[ படையிரண்டும் மயங்கிப் பொருகின்றன. மலைமேல் நின்று காண்போர் பேசிக்கொள்கின்றனர் ]

ஒருவர் : ஐயா ! நாம் இருந்து காணும் இம்மலையுச்சி ஏதமற்றதுதானே ?

மற்றவர் : ஏதம் படைமறவரால் இல்லை ; ஆனால், அந்த முரசொலியால் உண்டு !

ஒருவர் : ஆம், அதிர்ச்சியில் மலையே உதிர்ந்துவிடும் போல் தோன்றுகிறது ! இடிமுழக்கில்கூட இவ்வளவு அதிர்வதில்லை !

மற்றவர் : அந்த முரசொலியில் ஏதோ உயிரிருப்பதாகத்தான் நான் உணர்கின்றேன்.

ஒருவர் : நாளும் உயிர்ப் பலி கொள்ளும் அந்த முரசில் உயிர்ப்பு இல்லாமலா ? அதோ, அந்த முழக்கிற்கு உடையும் படையைப் பாரும்.

மற்றவர் : அதோ நிற்பதுதான் தென்னவர் படையோ?

ஒருவர் : ஆம் ! அது குட்டுவன் என்பான் ஒருவனின் படை.

மற்றவர் : இது, நூற்றுவர் கன்னர் அன்றி எல்லா வடவரசர் படையும் கூடியது—இப்பக்கம் நிற்பது.

ஒருவர் : அதோ ஒருவன் பெரும்படை சூழ கூற்றுவன் போல விரைகின்றானே !

மற்றவர் : ஆம், அவன்தான் சேரன் செங்குட்டுவன்.

ஒருவர் : ஐயா ! கண் பார்க்கக் கூசுகின்றதே. இவன் சினத்தில் பிழைப்பாருண்டோ ?

மற்றவர் : உம், போர்க்களமென்ருல் அப்படித்தான் எல்லோரும் வருவார்கள், பாய்வார்கள், மாய்வார்கள்!

ஒருவர் : அதோ கனகன் படை! அதன்பின் விசயன்! உம்... இப்பொழுது பாரும் இவன் சினத்தை!

மற்றவர் : ஆம், தக்க பொருத்தம், ஐயோ! ஐயோ!

ஒருவர் : என்னய்யா? சொல்லும்.

மற்றவர் : ஒன்றுமில்லை. அந்த யானைகள் வீரர்களைத் தூக்கியெறிந்து மார்புழுகின்றதைப் பாரும்! கொடுமை! கொடுமை! இப்படிச் செய்ய எங்கே தான் அவை கற்றுக்கொண்டனவோ!

ஒருவர் : அதோ பார், ஒரே வெட்டு, தொலைந்தது அந்தக் களிறு!

மற்றவர் : என்ன, ஒரே வெட்டில் யானைத் தலையை... ஆ! ஆ! என்ன வலிமை!

ஒருவர் : ஐயையோ! குருதி ஆருக ஓடுகிறதே! ஏண்டா உங்கட்கு இந்தக் கேடு!

மற்றவர் : ஆறு சும்மா ஓடவில்லை-யானைகளோடு எல்லாப் பிணத்தையும் அடித்துக்கொண்டோடு வதைப் பார்!

ஒருவர் : ஐயா! ஒரு நரி குருதியாற்றில் நீந்துவதைப் பாரையா!

மற்றவர் : ஆம், குடல் பிடுங்கும் அந்தக் கழுகுகளையும் பாரும்!

ஒருவர் : ஐயோ! போயிற்று!

மற்றவர் : என்ன போயிற்று?

ஒருவர் : கண்! [ தன் கண்ணை மூடிக்கொள்கின்றான் ]

மற்றவர் : ஏன்? எங்கே, கொண்டுவா பார்ப்போம்!

ஒருவர் : எனக்கில்லை ஐயா, அதோ அந்த ஆளைப் பார். வேலாலே எதிரி கண்ணில் குத்திவிட்டு அவனையே உற்றுப் பார்க்கிறான்.

மற்றவர் : ஓகோ! அதுவா? அவன் எதைப் பார்க்கிறான் தெரியுமா? அந்த எதிரி தனது அடுத்த கண்ணை இமைக்கிறானாவென்று பார்க்கிறான்.

ஒருவர் : இமைத்தால்?

மற்றவர் : அவன் பயந்தவனென்று அவனைப் புறக்கணிப்பான்.

ஒருவர் : ஓகோ! பயந்தவனைத் தாக்குதல் இழிவு என்பதனாலோ? அட! இதைப் பாரையா.........

மற்றவர் : யானை கொல்லப்போகிறது; தொலைந்தான்...

ஒருவர் : ஆமாம், பாரையா!

மற்றவர் : என்ன துணிச்சல்! கையில் வேலிருந்தும் யானையைக் குத்தாது ஒதுக்கித் தள்ளிவிட்டானே!

ஒருவர் : ஆம், மதவேழமேனும் ஒரு கையுடைய அவ்விலங்கெறிதல் இரு கையுடைய தனக்கு வீரமன்று என விடுத்தான்போலும்!

ஒருவர் : எப்படி இந்த மனவுறுதி அவர்கட்கு வந்தது!

மற்றவர் : அதுதான் போர்நெறி.

ஒருவர் : என்னய்யா? போர்க்களத்தில் ஒன்றையும் காணோம்! களம் எல்லாம் குளம்போல் குருதி உறைந்து கிடக்கிறது!

மற்றவர்: அதோ பார், யாரோ பெண்கள் கூட்டம்...

ஒருவர்: ஆமாம், இதோ சாமியார் கூட்டம் வேறு!

மற்றவர்: இந்தக் குட்டுவன் ஏன் அவர்களை விரட்டுகிறான்?

ஒருவர்: ஆமாம்,.......... ஒன்றும் தெரியவில்லையே. என்ன வியப்பு!

மற்றவர்: போரிட்ட கனகன் எங்கே? விசயன் எங்கே?

ஒருவர்: இறந்துபோயிருப்பார்கள்.

மற்றவர்: இல்லை இல்லை; இதோ கனகனும், விசயனும் வருகின்றார்களே!

ஒருவர்: ஆமாம், அவர்களைச் சுற்றிப் பல அரசர்களும் வருகின்றனரே!

மற்றவர்: உம், இப்போது பாருங்கள் ஐயா, குட்டுவனை! யானைக்கூட்டத்தில் சிங்க ஏறுபோல் பாய்கின்றான்.

ஒருவர்: தொலைந்தான் குட்டுவன்!

மற்றவர்: இல்லை, தொலைந்தனர் இக்கனக விசயர்கள்!

ஒருவர்: ஐயா, ஐயா, அதோ பாருங்கள்! அந்தக் கவந்தம், பிணம் இடறிக் கீழே விழுகின்றது. என்ன கொடிய காட்சி! என்ன வீர உணர்ச்சி!

மற்றவர்: ஐயோ பல முண்டங்கள் கூத்தாடுகின்றனவே!

ஒருவர்: இல்லை, பேய்கள் கவந்தத்தோடு கைகோர்த்துக்கொண்டு ஆடுகின்றன!

மற்றவர்: கவந்தமிருக்கட்டும். எங்கே, அந்த அரச கூட்டத்தையே காணோமே! ஒரே அந்தணர் கூட்டமாகவல்லவோ தெரிகின்றது! இதுவென்ன மாயமா, மந்திரமா?

ஒருவர் : அதோ பாரும், குட்டுவன் சில தாபதர்களை யும் பெண்களையும் பிடித்துவந்து, வேல் திரித்து ஆடுகின்றானே, ஏன் ?

மற்றவர் : அதுவா ? அவர்கள் உண்மையில் தாபதர் களுமல்லர் பெண்களுமல்லர்; குட்டுவனை ஏய்த்து ஓடப்பார்த்த அவன் பகைவர்கள் !

ஒருவர் : ஓகோ ! கனகனும், விசயனும் தமிழ் வேந்தர் களை அன்று இகழ்ந்ததற்கு இன்று தக்க தண்டனை கிடைத்ததுபோலும் !

[ போர்க்களத்தில் செங்குட்டுவன் வில்லவன்கோதையைப் பார்த்து ]

செங்குட்டுவன் : வில்லவா, நீ செய்த இப்போர் பாராட்டற்குரியது !

அழும்பில் : ஆம், வேந்தே ! இதோடு தாங்கள் கூறிய வஞ்சினமும் முடிந்ததல்லவா ?

வில்லவன் : ஓகோ ! பத்தினிக் கல்லைப் பகைவர் தலையில் ஏற்றுவதையா குறிப்பிடுகிறீர் ?

செங்குட்டுவன் : ஆம், வில்லவா ! நீ தலைமைதாங்கி நம் படையோடு சென்று ஒரு கல் தேர்ந்தெடுத்து வா !

வில்லவன் : ஆணை, அப்படியே ஆகட்டும் !

[ வில்லவன் போதல் ]

## கங்கைப் பாடிவீடு

[ அழும்பில், வில்லவன் முதலியவரோடு செங்குட்டுவன் படை சூழ வருதல்—முரசு முழங்கல்—கனகனையும் விசயனையும் கல் சுமப்பித்தல் ]

செங்குட்டுவன் : உம்...தூக்குங்கள் இந்தக் கல்லை— தென்தமிழ் இகழ்ந்த கனகா! தமிழ்மறம் பழித்த விசயா! எம் தமிழ்ப் பாவையைச் சுமந்து செல்லுங்கள்! இதுவே, உம் வாய்த்துடுக்கிற்கு ஏற்றதோர் ஒறுப்பு; வடவர் இனியாவது தமிழகம் பழித்தல் ஒழியட்டும்.

புலவர்கள் :

[ வாழ்த்தல் ]

தடங்கடல்போல் படைபரப்பித் தாழ்வுரைத்த பகைவர்களைக்
கடந்தட்டுக் களங்கொண்டு கடுஞ்சினத்தாற் கல்லேற்றி
மடங்கலினும் மனஞ்செருக்கி மகிழ்பூக்கும் மன்னவனே
அடங்கலர்கள் இனிஇல்லை அருள்சுரந்து வாழிவாழி.

கணி : அரசே! முப்பத்திரண்டு மதியங்கள் வடபுலத்திற் கழிந்தன.

செங்குட்டுவன் : ஆம், இந்தக் கங்கைப் பேர்ஆற்றில் இக்கல்லை நீர்ப்படை செய்வோம்! நம் மறையவர்கள் எங்கே?

மறையவர்கள் : கறைபடா வேந்தே, வாழ்க!

செங்குட்டுவன் : பழமுறை வழாது மறைமொழி பகர்ந்து எம் பெருமகளை நீர்ப்படை புரியுங்கள், மஞ்சனமாட்டுங்கள்.

[ கனக விசயர் தலையினின்று கல்லை இறக்குதல் ]

மறையவர்கள் : மெல்ல இறக்குங்கள். மெல்ல...

கன்னர்கள் : வேந்தே! தென்கரையில் தங்கட்கென்று அமைத்துள்ள பாடிவீட்டில் போர்க்களைப்புத் தீரச் சற்று ஓய்வுபெறுங்கள்.

செங்குட்டுவன் : ஆம், ஓய்வுபெறுமுன்...எங்கே நம் பண்டாரத் தலைவன் ?

பண்டாரத் தலைவன் : வேந்தே! வாழ்க! ஆணை எதுவோ ?

செங்குட்டுவன் : படைக்குக் கொடைப்பொருள் கொணர்க!

[பண்டாரத் தலைவன், வில்லவன், அழும்பில், அஃதை, செங்கணன், முரம்பில் முதலியோர் புடைசூழ நிற்ப]

செங்குட்டுவன் : தமிழ்ப்பெருமக்களே! தாழ்விலாச் செல்வர்களே! தமிழ்த் திறத்தை, தமிழ் மறத்தை, தமிழ் ஆற்றலைத் தமிழ் அறியா வடவர்க்குத் தாக்கித் தாக்கி அறிவித்த தானைத்தலைவர்களே! இன்று வெற்றிகொண்ட களிப்பினும் வீரம் விளைத்து, வாகை தந்து, வானவர் மகளிரோடு வதுவை அயர்ந்த வீரர்களை நினைக்க நினைக்கப் பெருகும் துன்பமே எனக்குப் பெரிதாகின்றது.

செங்கணன் : அரசே! போர்முகத்துப் புறங்கொடாது மார்பில் புண்ணேற்று மாய்ந்தவர்க்குத் தாங்கள் மனமுடைந்தால், 'மடியக் கருதியும் மடியாது வாழ்கின்றேமே' என்றுடையும் எங்கட்கு ஆறுதல் கூறுவது யார் ?

செங்குட்டுவன் : ஆம், தமிழ் மறவனல்லவா நீ! உனக்குப் புகழும் கடமையும் களிறு எறிந்து பெயர்தலும், போரில் மடிதலுமே என்றாலும், அரியணையிலிருந்து இறந்தாரை எண்ணும்போது எனக்கு வீரம் தோன்றுவதில்லை; நம்மைப் பிரிந்தனரே என்ற அவலமே தோன்றுகின்றது.

அழும்பில் : ஆம், வேந்தே! போர் என்ருல் மடிவது தானே இயல்பு? மறவர்களுக்கு இத்துன்பத்தை மறப்பதும் இயல்பே!

செங்குட்டுவன் : இயல்பு—ஆம், இயல்புதான். எனி னும், அவர்கள் வழித்தோன்றல்கட்குச் சிறப்பும் வரிசையும் தந்து ஊக்கிஅவர்களுக்கு ஆறுதல்கூற வேண்டுவது என் கடன். அவர்களை அழையுங்கள்.

[ மறவன் ஒருவன் வந்து நிற்கின்ருன் ]

ஓ! தூசிப்படை தாங்கிப்போய்ப் பகைநாணப் படுகளமாக்கிய பனிமெய்யன் மைந்தனே, நீபெறுக இவ்விருதுகளை! இனி நீயே இப்படைக்குத் தலை வன்; பொறுப்புணர்ந்து நடந்துகொள்.

[ மற்றும் பல வீரர்கள் வரிசையாக வருதல் ]

மறவர் மகனே, 'செஞ்சோற்றுக் கடன் கழிப் பதுதான் எம் குடிப்பண்பு!' என்று முழங்கி ஆர்ப் பரித்து வீழ்ந்தானே உன் தந்தை, அப்பப்பா! அந்தக் காட்சி இன்னும் என் கண்ணகன்ற பாடில்லை. இதோ, நினக்கு இந்தப் பொற்குவை. இனி நீ நின் குலமறிந்து செயலாற்று.

பேய்மகளிர், 'அந்தோ! அந்தோ! அந்தோ! என்று அலறிக் குரவைக் கூத்தாடப் போர்க்களத்து வீழ்ந்தானே...உம்! அவன் மக்கட்குப் பொன்னும், பூணும் கொடைப்பொருள் ஆகுமோ? நீங்கள் இனி எமக்கு அகத்தும் புறத்தும் மெய்க்காப்பாளர் கள். எம்மோடே இருங்கள்.

ஓ! அந்த வேலொடு போர்க்களத்தில் முயங்கி உயங்கி உயிர் உய்த்தானே முரண்மெய்யன், அவன் கால்முளையோ இவன்? கொடு! கொடு! நிரம்பக் கொடு. இத்தகைய வீர மரபு கிடைக்காது.

ஓ! தேரேறி வந்த பகைவரை வேல் ஓச்சி மடித்து, அவ்வேல் வழிவந்த குருதியால் உடல் நனைந்து உதிரப் போர்வையனாய் வந்தானே, அவனா இவன்? அப்பப்பா! என்ன வீரம்! கொடு, கொடு—கொள்வவெல்லாம் கொடு. இக்கொடை அவ்வீரத்தை வளர்க்கட்டும்.

இவர்கள் நம் வஞ்சி வீரரா, அன்றி விஞ்சை வீரரா என்றுகூட அயிர்த்தேன். மாற்றரசர் தலைகளைத் தென்னங்குலைபோல் கோத்துக் கொணர்ந்தார்களே, அவர்கள்தாமே இவர்கள்! இந்தா— இந்தப் பொற்பூவைச் சூட்டிக்கொள்ளுங்கள்.

தானைத்தலைவன்: இவர்கள் பகைவரால் கவசம் சிதையக் குத்துப் பெற்றும், அவர்கள் புறங்காட்டப் பொருது உருச்சிதைந்த மறவர்கள்.

செங்குட்டுவன்: அப்படியா! அரும்பெருந்தொண்டு! கைம்மாறு கருதாது காட்டிய வீரம்; இவர்க்கு நாம் உண்ணும் பாம்பு வெகுண்டன்ன மயக்கும் தேறல் கொடு; புண்ணாறட்டும்; பரிசு பின்னர்த் தருவோம்.

[ மாடலன் வருகை ]

மாடலன்: வாழ்க மன்னா! வாழ்க நின் கொற்றம்! ஓ! மாதவியின் கானற்பாணி மன்னர் முடித்தலை நெரித்ததோ?

செங்குட்டுவன்: மறையவரே வாரும்! என்ன பகைப் புலத்தரசர் அறியா நகைத்திறம் உரைக்கின்றீர்? விளங்கக் கூறுங்கள்.

மாடலன்: வேந்தே! நகைத்திறமன்று, நலிவுடைச் செய்தி. மாதவி மடந்தை கடல் விளையாட்டில் கோவலனோடு வரிப்பாட்டுப் பாட, அதனை அவன்

தன் கருத்திற்கு இசையாமை கண்டு, அவளோடு ஓடிப்போய்த் தன் மனைவி கண்ணகியோடு கூடி மதுரை புகுந்து மன்னனால் முறையின்றிக் கொலையுண்டான். அதுபார்த்துப் பொறாத கண்ணகி தன் பத்தினித்தன்மையால் மதுரைக்கு எரியூட்டிச் சேர நாடு புகுந்து நின்றால் இமயக் கல்லாகி இன்று இம் மன்னர்தம் முடித்தலை நெரிக்கின்றாள். இதைக் கண்டு அயர்ந்து வியந்து கூறினேன், வேந்தே!

செங்குட்டுவன்: ஓ...நீவிர் இவ்வரலாறு முழுமையும் அறிவீரோ?

மாடலன்: அறிவேன் அரசே! அதனால்தான் யானும் வடபுலம் வந்தேன்.

செங்குட்டுவன்: என்ன? நீரும் ஒரு கல் கொணரத் தான் வந்தீரோ?

மாடலன்: இல்லை அரசே, இல்லை. நீராடிக் கொடுமை கழிக்க வந்தேன். கொற்றவா! கொடுமை...கொடுமையிற் கொடுமை. ஒன்றன்று பலப்பல!

[மாடலன் கலங்குதல்]

செங்குட்டுவன்: மறையவரே! மனமுடையாது சொல்லும். அது கேட்க என்னுள்ளம் துடிக்கின்றது!

மாடலன்: அரசே! பொதியமலை சென்று குமரியாடி மீண்ட யான் பாண்டிநாடு போந்தேன். அங்குக் கோவலன் கொலைப்பட்டது கேட்டுக் குலைந்தே போனேன். பாண்டி மன்னன் மனைவியோடு துஞ்சியது கேட்டுத் துணுக்குற்றேன். கண்ணகியைக் காவுந்திபாலிருந்து அடைக்கலமேற்ற இடைக்குல மாது இருளுடையாமத்து எரியகம் புகுந்தது கேட்டு மனம் பதைத்தேன். அந்தோ! அரசே......

அம்மட்டோ! அடைக்கலம் வைத்த காவுந்தி அடிகளும் உண்ணு நோன்போடு உயிர்துறந்தது கண்டு நடுங்கிப்போனேன். அந்தோ! அரசே! கல் நெஞ்சினேன் யான். என் உயிர் இன்னும் போன பாடில்லை. மீண்டும் எம் புகாருக்குப் போனேன். அப்பப்பா......! சொல்ல நா கூசுகின்றது. நெஞ்சு அழன்று கையறவு கொள்கின்றது. உம்......அரசே! மன்னிக்கவும். [ ஒரு கணம் வாய்பேசாது நின்று ] அரசே! மதுரையில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் உற்றது கேட்ட மாநாய்கனும்; மாசாத்துவானும் பட்ட பாடு, துடித்த துடிப்பு—அப்பப்பா......! கோவலன் தாயும், கண்ணகி தாயும் அங்கே அப்படியே மடிந்தனர். அந்தோ! வேந்தே! வணிகர் இருவரும் உணர்வு வரப்பெற்று உலக நிலையாமை உன்னித் தம் உலவாப் பொருள் அனைத்தையும் வாரி வாரி வழங்கித் தொலைத்துத் துறவு பூண்டுவிட்டனர். அரசே! இவ்வளவுகொடுமையையும் என் கண்ணல் கண்டேன். என் வாய்ச் சொல்லால் இவ்வளவு பேர் மடிந்தது கண்டு வெந்து வெந்து சாம்பலான உள்ளமுடையேன், சற்று ஆறுதல் பெற்று அமைதி கொள்ளவும், மறம் தொலைத்து அறம் பெறவும் இமயம் புகுந்து இங்கு வந்தேன்; தங்களைக் கண்டேன்.

செங்குட்டுவன்: மறையவரே! இடிமுழக்கோடு இது காறும் ஒரு மழையே பெய்துவிட்டது போலிருக்கிறது. போர்க்களத்தில் எத்தனையோ உயிர்களை மடித்துக் குருதியோட்டத்தைக் காணுகின்ற என் உள்ளமே துணுக்குறுகின்றதே; உம்முள்ளம் உளைவது இயற்கை! ஆனல்,இவையனைத்தையும் நேரில் கண்டும் உயிர் நிலைபெயரவொட்டாது தடுத்து நிறுத்திய உம் மனவலிமை எம்மின் மேம்பட்டதே!

**மாடலன் :** அரசே! மன்னிக்கவேண்டும். இக்கல் நெஞ்சு வாய்க்கப்பெற்றதற்கு உளம் வேகின்றேன். கோவலன்—கண்ணகி இருவர் பெருமையை அவர்கள் வாழ்க்கைதொடங்கிப் பழகி உணர்ந்தவன், இன்னும் வாழ்கின்றேனென்றால் இதைக்காட்டிலும் கொடுமை ஒன்றுண்டோ? பழகாத, பாராத தாங்கள் அவள்பொருட்டுப் போர்க்கோலம் பூண்டு முப்பத்திரண்டு திங்கள் வடபுலத்தில் கழித்துக் கோயிலெடுக்கின்றீர்களென்றால் இந்த அருள் நெஞ்செங்கே, இம் மற மனமெங்கே!

**செங்குட்டுவன் :** மறையவரே! அம்மாதவியைப்பற்றிக் கூறுதுபோனீரே, ஏன்?

**மாடலன் :** அரசே! அதுவா? அது அவலத்தின் அவலம். என் துன்பத்தில் அதனை மறந்தேன்; பொறுத்தருள்க. அவள் ஒரு கற்பரசி. அவள் பெருமை கூறுவதென்றால் புலநாள் வேண்டும். கோவலன் அவள் காட்டிய மெய்யன்பை உணராது தவறுணர்வு பூண்டதோடு முடங்கல் எழுதி அவள் மீண்டும் தன் மனைக்கழைத்தபோது அவனை அவன் "ஆடல்மகள்" என்றுவேறு இழித்துப் பேசிவிட்டான். அதனை நினைந்து நினைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, கசிந்து கசிந்து கண்ணீர் பெருக்கிப் போதல்செல்லா உயிரொடு புலந்து கிடந்தவள், தன் மகளை அழைத்துக் கோதையோடு குழல் களைந்து, போதி அறவோன்முன் தவப்படுத்தித் தன்னிடமுள்ள பொருள் அனைத்தையும் வாரி வழங்கிவிட்டுத் தானும் அறவண அடிகள் பால் துறவுபூண்டாள்.

**செங்குட்டுவன் :** என்ன! கணிகை வாழ்க்கை உடையவள் தான் துறந்ததோடு தன் மகளையும் துறவறப்

படுத்தினுளா? தன் செல்வமனைத்தையும் அறவழிப் படுத்தினுளென்றால் இக்கலைமகளும் கோயில்பெறத் தக்க பத்தினிப் பெண்டிருள் ஒருத்தியன்றே?

**மாடலன் :** ஆம், வேந்தே!...உலகு அதனை உணருமா! எம் புகாரே கோவலனிடத்தும் கண்ணகியிடத்தும் கொண்ட அன்பால் அவளுக்கு வசைமொழி வழங்கிற்று—அதனையும் கேட்டாள், குலைந்தாள், நடுங்கினுள், அழுதாள், அரற்றினுள்; என் செய்வாள் அவள்? "ஆடல்மகள்" என்று கடிந்த கோவலன் கூட, "சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்" என்று நொந்து, நொந்து வருந்தினுன். அதைக் கூறுமா ஊர்! அதற்கும் அது தெரியாது.

**செங்குட்டுவன் :** மக்கள் எதனையும் பகுத்துணர்ந்து சூழ்நிலையறிந்து பேசுவதில்லை. ஒருவர் பேசியதை மற்றவர் வழிமொழிவதுதானே வழக்கம். அதிருக்கட்டும், பாண்டிநாடு என்னவாயிற்று?

**மாடலன் :** அரசே! அது இன்னும் கொடுமையுடையது.

**செங்குட்டுவன் :** என்ன! நீர் வாய்திறப்பதெல்லாம் கொடுமையாகவே இருக்கின்றதே! சொல்லும், அதனையுங் கேட்போம்.

**மாடலன் :** அரசே! பாண்டியன் இறந்ததும் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் பாண்டிநாடு பொற்கொல்லன் சூழ்ச்சியால் அழிந்தது குறித்துக் கண்ணகி தெய்வத்திற்கு ஓர் ஆறுதல் அளிக்க வேண்டி ஒரேநாளில் ஆயிரம்பொற்கொல்லர்களைக் கொணர்ந்து பலியிட்டான். குருதி ஆறு ஓடியதை இக்கண் கண்டது வேந்தே, கண்டது! பின்னர் மன்னனின்றி அலமரும் மக்கட்கு உறுதுணையாக வெற்றிவேற் செழியனே அரசுகட்டிலில் ஏறினுன்.

செங்குட்டுவன்: என்ன கொடுமை! படையெடுத்து வந்த யானே ஆயிரம்பேரை அடாது கொன்றதில்லை. வெற்றிவேற் செழியன் கண்ணகி பொருட்டு ஆற்ருறுது ஆயிரவரைக் கொன்ருன! அப்பப்பா...! என்ன சினம்! பொற்கொல்லர் ஆயிரவர் இறப்பால் நுண்கலையின் பலகூறு அழிந்தேபோயிருக்குமே!

மாடலன்: அது உண்மைதான். அரசே! இப்படிச் செய்தால் இனி எங்கும் ஒருவனும் இத்தகைய கொடுமை சூழ்விக்கமாட்டானல்லவா? அது கருதிச் செய்தான் போலும்!

செங்குட்டுவன்: பொழுதும்பட்டது, நிலவும்பட்டது.

காலக்கணிதன்: அரசே! இப் பிறையோடு நாம் இங்கு வந்து முப்பத்திரண்டு திங்கள் முடிகின்றன.

செங்குட்டுவன்: மறையவரே! சோழநாட்டு நிலையைக் கூற மறந்தீர்போலும்!

மாடலன்: ஆம், வேந்தே! மறந்தேபோனேன். குறு நடைப் புறவிற்கு அரிந்துடம்பு இட்டோர்க்கு வருவதொரு குறையுமுண்டோ? 'காவிரிபுரக்கும் நாடுகிழவோற்கு நலிவேது?' என்ற உரை பொய்த்தது. கோவலனை இழந்த அக்கோநகர் அருமணி இழந்த அரவுபோல் அலமந்து, அருந்திறல் இராமன் பிரிந்த அயோத்திபோல் ஆயிற்று. அடுத்து, மாதவி துறந்தது கேட்டு மக்களோடு மன்னனுற்ற துன்பம் விளம்பரியது. பொலிவிழந்த நகர், மணிமேகலையும் துறந்தாள் என்றதும் கலை யழிந்ததே என்று கையறவு கொண்டு நடைப்பிணமாயிற்று. வணிகர் இருவர் துறவும்—அவர் மனைவியர் மடிவும் கேட்ட வணிகமக்கள் இடியுண்ட நாகமாயினர். வணிகர் பெருமை உணர்ந்த உரோமானியரும்

சீனரும் செயலொழிந்துபோனார்கள், அரசே! என்றால் ஒன்றும் பேசமுடியவில்லை; நெஞ்சோய்கின்றது.

செங்குட்டுவன்: மறையவரே! போதும் போதும். என்னைப் பாதி துறவியாக்கிவிட்டீர்கள்! அண்மை நாடுகளில் இத்தகைய அவலம் என்றால்...எனக்கு அச்சம் பெரிதாகின்றது. போதும் போதும் இந்த அரச வாழ்க்கை...எனக்குத் தாங்கள் கூறிய செய்திகள் அனைத்தும் சுமையாக நின்று வாட்டுகின்றன. அப்பொறை நீங்க இது [ஒரு பெருங் கட்டிப் பொன்னைக் காட்டி] என்னுடைய ஐம்பது துலாம் நிறையுடையது, இதைப் பெற்றுக்கொள்ளுங்கள்! இந்த ஆரிய மன்னர் நூற்றுவரைத் தம்மூர்க்கு அனுப்பிவிட்டுப் பின்னர் நாம் வஞ்சி புகலாம். வில்லவா...

வில்லவன்: வேந்தே!

செங்குட்டுவன்: அருந்தமிழ் ஆற்றலறியாது இகழ்ந்த வடவர் பெருமக்களை வஞ்சினங் கூறியாங்கு கொணர்ந்துவிட்டோம். நாம் யாருக்காக இச் செயல் புரிந்தோமோ அப்பாண்டியனிடத்திலும், சோழனிடத்திலும் சென்று இவ்விருவரையும் காட்டிவா.

வில்லவன்: ஆணைவண்ணமே செய்கின்றேன்.

செங்குட்டுவன்: தானைத் தலைவர்களே! அமைச்சர்களே! இன்று மாலைக்குள் வஞ்சி புக ஆவன இயற்றுங்கள்.

வில்லவன்: கணத்தில் வேந்தே!

[எல்லோரும் போதல்]

## வேண்மாளின் அந்தப்புரம்

[இரவு—அரண்மனை நிலாமுற்றம்—வேண்மாளுடன் செங்குட்டுவ னிருத்தல்—சாக்கையன் கூத்தாடுதல் முதலிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.]

ஆயப் பெண்டிர்: வாழ்க வேந்தே! வாழ்க தேவி!

[மங்கலப் பொருள் ஏட்டும் முன்வர அரசமாதேவி வருகின்றாள்]

செங்குட்டுவன்: வேண்மாள் வா......வா......

அரசமாதேவி: என்னை என்றாவது தாங்கள் நினைத்ததுண்டா?

செங்குட்டுவன்: மறந்தாலன்றோ நினைக்க!

அரசமாதேவி: ஓ! வடபுலம் சென்றது எனக்காகத் தானோ?

செங்குட்டுவன்: நம் கண்ணகிக்குச் சிலை வடிக்கக் கல் கொணரவும் வடவரை யொடுக்கவுமே எனினும், நின்னை மறப்பதுவும் உண்டோ? இந்த வெற்றுடம்புதானே அங்கிருந்தது.

வேண்மாள்: திங்கள் முப்பத்திரண்டிலும் தங்கள் அகற்சியால் யானுழந்த உழப்பு...

செங்குட்டுவன்: என்ன! உனக்கு ஆறுதல் கூற யான் பணித்து விடுத்த என் மட நெஞ்சு இங்கு இருந்து நினக்கு ஆறுதல் கூறாது என்னதான் செய்தது?

வேண்மாள்: இப்படியெல்லாம் ஏதாவது கூறி ஏமாற்றுவதுதானே தங்கள் தொழில்!

செங்குட்டுவன்: இல்லை கண்ணே! நின்னிற் சிறந்த பொருள் ஒன்று எனக்குண்டா? [அவள் கையைப் பிடித்துக்கொண்டு] வண்டு உன் விழிகாட்ட, வள்ளை செவி காட்ட வாடுவேன்; அங்கு நீர்மொண்ட கொண்டல்

நின் குழல் காட்டக் குழைவேன். கண்ணே! கஞ்சம் முகம் காட்டக் கமுகு உன் உளங்காட்டக் கலங்குவேன். கரும்பே! காந்தள் கைகாட்டக் கதலி துடை காட்டக் கரைவேன். பாவாய்! பவளம் இதழ் காட்டப் பதைப்பேன்!

வேண்மாள்: வேண்டாம் வேண்டாம்! போதும்! தங்கட்குத்தான் அந்த இளைய துணங்கைக் கூத்தியர்இருக்கின்றனரே இப்படி வருணிக்க...என்னை...ஏன்!

[ஊடுதல்]

செங்குட்டுவன்: ஆரணங்கே! அப்படியெல்லாம் எனக்கு உன்னிற் சிறந்தார் ஒருவரும் இல்லையே! நீ என்றும் இளையாய்—என்ன புதுமை! யார் சூழ்ச்சி இது?

வேண்மாள்: உம்......அவர்கள் தங்களைப் பாடத் தாங்கள் தலைக்கை தந்து அவர்களோடு நளிந்து வந்ததை மார்பிற் சிதைந்த கலவையும், குழைந்த இத்தாரும் உணர்த்துகின்றனவே, போதாவோ?

செங்குட்டுவன்: அந்தோ! அவர்கள் தங்கள் கடமையாற்ற வழக்கப்படி ஆடினர், பாடினர்—அது ஓய்ந்ததும் யானும் முறைப்படி நின்னிடம் வந்துள்ளேன். நீயும் நின் வழக்கப்படி ஊடிவிட்டாய் — இனி?

வேண்மாள்: போங்கள் போங்கள்... நீங்கள் எப்படியாவது, ஏதாவது சொல்லி ஏய்த்துவிடுவீர்கள்! தங்கள் எளிவந்த இன்மொழி என் நிறை உடைத்துவிடுகின்றது.

[அவளோடு இன்புற்று மகிழப் பள்ளியறை புகுதல்]

## நாளோலக்கம்

[எல்லோரும் கூடியிருத்தல்]

**வில்லவன்:** வாழ்க வேந்தே! வாழ்க நின் கொற்றம்!

**செங்குட்டுவன்:** பாண்டியனும் சோழனும் என்ன கூறினர்? சொல்......!

**வில்லவன்:** அரசே! நமக்கு என்றும் அடாதது கூறினர்.

**செங்குட்டுவன்:** என்ன......? அடாததா! விரைந்து சொல். [கண் சிவந்து வாய் துடித்தல்]

**வில்லவன்:** அரசே! நேரே சோழனிடம் சென்று இவ் வடவரைக் காட்டி, "மன்ன! தமிழகம் இகழ்ந்த ஆரிய மன்னர்கள் இவர்களே. இவர்கள் நம் படைக்கு ஆற்ருது உடைந்து மறையவர்போலவும், மகளிர் போலவும் ஓடினர். அவர்களைப் பிடித்து வாய்ச்செருக் கடக்கக் கண்ணகி சிலைக்குரிய கல்லைத் தலைமேலேற்றிக் கொணர்ந்தோம். இச் செய்தியைத் தங்களிடம் கூறி இருவரையும் காட்டிவரப் பணித்தான் எம் கொற்றவன்" என்றேன். அரசே! அவன் வெடிநகை கொண்டான், வெகுண்டான், வியர்த்தான்! "கொல்லாக் கோலத்து உயிர் உய்ந்து ஓடியவரை வென்றி மிகு தமிழ் மறவன் பிடித்ததே இழுக்கு; பிடித்த தோடன்றி அவர் தலையில் கல் சுமத்திக் கொணர்ந்தது அதனினும் இழுக்கு. அச்சிறுமை களைப் பெருமையெனக் கருதி எம்மிடம் காட்டப் பணித்தது இழுக்கிற்கெல்லாம் தலையாய இழுக்கு. இது வெற்றியன்று; வெறி! தமிழ் மறம் கறைபட்டதென்று கழறு. 'விழித்தகண் வேல் கொண்டெறிய அழித்திமைப்பின் ஓட்டன்ரே

வன்கணவர்க்கு' என்று வாழ்ந்த காலம் பொன்றிற்ருே! 'ஒரு கையுடையது எறிவேலோயானும் இருகை சுமந்து வாழ்வேன்' என்ற மறம் பிழைத்ததோ ?" என்றெல்லாம் கூறிச் சினந்து சினந்து அலறினன், அரற்றினன், துடித்தான், தூற்றினன்.

செங்குட்டுவன்: ஓ! என்ன நெஞ்சத்துணிவு! சோழன் என் வீரத்தில் குறையா கற்பித்தான்? உம்! இருக்கட்டும். பாண்டியன் என்ன சொன்னன்......?

நீலன்: அரசே!அவனும், "உன்னரசனின் வீரம் புதிதாகவன்ருே இருக்கின்றது! அடிபிறக்கிட்டோர் மாட்டுக் கோலோச்சாத் தமிழ் மறவன கொல்லாக் கோலம்பூண்டு உயிர்தப்பி ஓடியவரைப் பிடித்துக் கல் சுமத்தினன்? சுமத்தியதுமன்றி அறம் துறந்து, மறம் மறந்து எம்பால் காட்டவும் பணித்தானே! நன்று நன்று, நாணத்தக்கது நம்மவர் கொற்றம்!" என்று இகழ்ந்துரைத்தான்; எள்ளி நகையாடினன்.

செங்குட்டுவன்: அஃகஃகா! என்ன நெஞ்சழுத்தம்! என்ன ஏக்கழுத்தம்! என் வஞ்சினமறியாது இகழ்ந்த இவர்களை இனி வளரவிடேன்! வாழ ஒட்டேன்! கணந்தாழேன்! களங் காண்பேன்! எடுவாள்! தொடுபறை! விடுகுடை! தொடர்க தேர்! படர்க படை! உம்...படுகளம், இனி எங்கும் படுகளம்! பாரகம் அடங்கலும் படுகளம்!

மாடலன்: அரசே, அமைக! அமைக வேந்தே! வியலூர் எறிந்த வென்றி வேந்தே, வாழ்க! நேரிவாயிலில் நெரித்தோய்வாழ்க! ஆத்திசூடிய ஒன்பது மன்னரை ஒருநீயாகி வென்ற நின் வெற்றி வாழ்க! இடும்பில் அழித்தோய் அமைக! கடற் கடம்பறுத்தோய் காய்சினந் தணிக! கங்கைப்படைக் கடந்

தோய் கதமொழிக! பெரும்படை வேந்தே! அறிஞர் துணைவா! வாழி வாழி! ஊழி ஊழி! வாழி வாழி! தண்ணுன் பொருநை மணலினும் வாழி! பலப்பல வாழி! அடியேன் விண்ணப்பத்தை அயிர்க்காது, அழிக்காது அமைதியொடு கேட்டருளவேண்டுவல்.

**செங்குட்டுவன்:** உம், மறையவரே! ஏன் என்னைத் தடுக்கின்றீர்? தடுத்துப் பயனில்லை.

**மாடலன்:** வாழ்க்கை நிலையற்றது. அரசே! வையங் காவலும் அன்னதே. தென்கடல் வளாகத்தைப் பொதுமையின்றி ஆண்ட எத்தனையோ மன்னர்கள் நில்லாது போயினர்! நினக்கு இன்ருேடு நிறைவு பெற்ற ஆண்டுகளோ ஐம்பது. இதுவரை நீ காணுப் பகையும் இல்லை. நீ செய்யாப் போரும் இல்லை. நீ பெருப் பீடும் இல்லை! இனியும் நீ அறக்கள வேள்வி ஒன்றேனும் செய்தாய் அல்லை; மறக்கள வேள்வியே செய்யத் தலைப்படுகின்ருய்!

ஒன்று கூறுவல் உனக்கு. இமயப் பிடர்த்தலையில் என்றும் நிலவும் விற்பொறி பொறித்த நின் முதியோர் எங்கே?

பல்யானைச் செல்கெழு குட்டுவன் அன்று எண்ணற்ற பொருள் தந்து எத்தனையோ வேள்வி செய்து பெருமை கொண்டானே, அவன் எங்கே?

யவன நாட்டையும் தனதாகக்கொண்ட தமிழ் வேந்தன் எங்கே?

ஒருபகல் எல்லைக்குள் இரு கடலகப்பட்ட பெருவள நாடனைத்தும் வென்று அயிரைமலையில் கொற்றவைக்கு விழாவயர்ந்த வென்றிவேந்தன் எங்கே?

அமராவதியிலிருந்து பெயராத சதுக்கப் பூதத்தை வேள்வியாற்றலால் வஞ்சி புகுத்திய வெற்றிவேந்தன் எங்கே? எங்கே?

அரசே! இவ்வாறெல்லாம் வெற்றி விளைத்து வீரத்தால் மேம்பட்டோரால் நாம் கண்டதென்னை? யாக்கை நில்லாது, இளமை நில்லாது, செல்வம் நில்லாது என்பதன்றி வேறு ஒன்றுண்டோ? நில்லா உலகத்து நீ நிலைபெறல் வேட்டு அறக்கள வேள்வி செய். அதுவே பொன்றாதது; என்றும் நிற்பது.

[ செங்குட்டுவன் பெருமூச்செறிதல் ]

எழுமுடி மார்பா! நீ ஏந்திய திகிரி, வழி வழி சிறக்க! யான் பரிசில் பெறப் புனைந்துரைத்திலேன். பகுத்து உணர்ந்து பார்! இந்த அறச் செயல்கட்கு நாள், கிழமை, நேரம், காலம் எதுவும் இல்லை! நாளை, நாளை என்றால் நாளை நமன்உடை முறை நாள் ஆதலும் கூடும்! ஒருவனுடைய வாழ்நாள் இத்துணையதென்று சோதிடக் கலையால் வரையறுத் துணர்த்தினும் அவனுடைய வினை வேறுபாட்டால் அது மாறுபடுகின்றது. அதனால், இப்பெருமாட்டி யோடு கூடி மாநிலமன்னர்கள் நின் மலரடி போற்ற இப்பொழுதே அறம் வேட்டு. ஊழிதோறூழி வாழி!

செங்குட்டுவன்: மறையவரே! போதும், என்னை எத்தனையோ வேறு வேறு உலகிற்கு இழுத்துச் சென்று என் உளத்தை மாற்றி வேள்வி விதையை ஊன்றிவிட்டீர்கள். யாரங்கே? [ முரசறைவோனிடம் ] நான்மறை பயின்ற நலஞ்சால் பெரியோர் யாண் டிருப்பினும் ஈண்டியற்றும் வேள்விக்கு வருமாறு பறையறைக!

[ அமைச்சரை நோக்கி ]

அமைச்சரே! ஆரிய மன்னரைச் சிறைவீடு செய்யுங்கள். அவர்க்கு அரசியற் பெருமையோடு ஓர் உறைவிடம் காட்டுங்கள். வேள்விவிழா முடிந்த பின்றைத் தாயகம் புகலாம் என்று கேட்டுக்கொள்

ளுங்கள். அவரவர் தகுதியறிந்து, பண்பறிந்து ஆற்றுவதாற்றுங்கள்!

சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகட்டும்! திறைகொண்ட நாடெல்லாம் வீடுபெறட்டும்!

அழும்பில்வேள்! நீ போய், "நம்நாடு புகுந்து வேங்கைவாய் நின்ற நல்லோளை முறைப்படி தெய்வமாக்கிக் கோயில்கொண்டு வழிபடுவோம்; வம்மின்! வம்மின்!" என்று நாடு நாடாய், ஊர் ஊராய்ச் சென்று சொல்லச் செய்.

அழும்பில்வேள்: வேந்தே! ஆணைவண்ணம் அனைத்தும் ஆகும்.

பெருங்கணி: அரசே! என் கணிநூல் கூறுபாட்டின் படி தங்கட்கு வரந்தர இருக்கின்றாள், கண்ணகி. நேரிற் காண்பீர்கள்; இது உறுதி.

செங்குட்டுவன்: என்ன, எனக்கா! பத்தினி வெளிப்பட்டா!

பெருங்கணி: ஆம், அரசே! உங்கட்கும், உலகிற்கும் தெய்வ வடிவில்!

கம்மியர்: வாழ்க வேந்தே! எம் கைவினைத்திறனை அறிவின் துணைகொண்டு ஒல்லும்வகைப் பயன் படுத்திக் கோயில் கண்டுள்ளோம்.

அறக்கள அந்தணர்: அரசே! மறைவழி நின்று முறைப்பட ஓதி, அத் தெய்வம் என்றும் நம்பால் நின்று நிலவ, வேண்டுவ புரிந்துள்ளோம்.

செங்குட்டுவன்: மகிழ்ச்சி! மட்டற்ற மகிழ்ச்சி! அதன் திறங்காணவே நானை வருகின்றேம். நீங்கள் சென்றுவாருங்கள்.

[அவை கலைதல்]

## கண்ணகி கோயில்

[செங்குட்டுவன் தானைசூழக் கண்ணகி கோயில் நோக்கி வருகின்றான்]

பொதுமக்கள் : வாழ்க எங்கோ! வாழ்க சேரன்! வாழ்க வையம்!

செங்குட்டுவன் : அமைச்சரே! கோயிலுக்குள் நுழையும் போதே ஒருவகை மெய்ப்பாடு தோன்றுகின்றதே!

[கோயில்கண்டு வியந்தல்]

என்ன! இக்கோயில் கருங்கல்லால் ஆனதா! மரத்தாலானதா! மண்கொண்டியற்றியதா! அன்றிப் பொன்கொண்டு புனைந்ததா! என்ன நுட்பம்! என்ன கைத்திறம்! மரத்தின் நெளிவையும், வளைவையும் எப்படி இக்கல்லில் ஏற்றினீர்? [கண்ணகி சிலையைக் கண்டு] ஓ! கண்ணகி தெய்வத்தைக் கல்லில் வடித்ததென்று யாருங் கூறார். நிற்பது கண்ணகியேயென்று காண்போர் மருளும்வண்ணம் இயற்றிய உங்கட்கு ஆயிரங்காணி மானியம் விட்டேன்.

பெருங்கணி : கொற்றவா! யான் குறிப்பிட்டதுபோல் இப்பொழுது தங்கட்குக் கண்ணகி தெய்வத்தின் காட்சி கிடைத்தற்குரிய கோளமைப்பு உள்ளது.

புரோகிதன் : அரசே! வரன்முறை பிறழா மறைமொழிப் பயனே கண்ணகி வெளிப்படக் காரணம்.

வில்லவன் : நம்நாடு புகுந்த நங்கைக்கு நடுகல்லிட அன்றுகொண்ட வஞ்சினம்நிறைவேறப்பெற்றதால் உற்ற உளநிறைவேஅப்புலப்பாட்டிற்குக் காரணம்.

செங்குட்டுவன்: நினைத்தது முடிந்தது! மறையுண்மையோ, மனநிறைவோ, கோளமைப்போ எதுவாயினும் சரி, இன்றைய என் மகிழ்ச்சி இம்மை உலகத்ததன்று! ஏதோ, வேறு ஓர் உலகத்ததுபோல் தோன்றுகின்றது!

எல்லோரும்: ஆம், வேந்தே! எங்களுக்கும் அவ்வாறே.

[ பெண்கள் கூட்டமாக அழுதுகொண்டு வருதல் ]

செங்குட்டுவன்: யாரங்கே, பெண்கள் கூட்டம்! என்ன, அவலக்குரலில் உறவுகாட்டி வருகின்றனர்!......ஒன்றும் புரியவில்லை.

அமைச்சர்: அரசே! வாழி! நம் நாட்டில் அவலம் பிறக்க அடாத செயல் ஒன்றும் நிகழவில்லை, நிகழவும் வாய்ப்பில்லை! சற்றுப் பொறுத்துப் பார்ப்போம்.

செங்குட்டுவன்: கண்ணகி பெருமாட்டிக்குக் கோயிலெடுத்துப் பெருமிதக் களிகொள்ளும் இப்பொழுது உளஞ் சிதைந்துக் கண்ணீர் உகுத்து உளையும் நீங்கள் யார்?

தேவந்தி: அரசே! வாழ்க நின் கொற்றம்! வளர்க நின் பீடு! முடிமன்னர் மூவர்க்கும் வெற்றியால் உரிய வட இமயத்துக் கல்லாகிக் கங்கைப்புனல் படிந்து இதோ நின்முன் வீற்றிருக்கும் இத்தொடிவளை நல்லாளுக்கு உற்ற தோழி நான்; என் பெயர் தேவந்தி.

செங்குட்டுவன்: ஆ! பெண்ணிற் பெருந்தகாய்! நீ பெற்ற பேறே பேறு! எங்குல தெய்வத்தோடு உடனுறைந்து தோழமைபூண்ட உன்னிற் சிறந்தார் யார்? [ மற்ற பெண்டிரைப் பார்த்து ] நீங்கள் யார்?

காவற்பெண்டு: அரசே! தன் கேள்வன் கோவலனை மாதவி தன்வயமாக்கி இல்லறப்பயனை இழப்பித்தது

கண்டும் அவள்பால் கண்ணகி கொண்ட பெருமதிப்பால் கொடுமைகூறக் கருதாது கொடுங்கானம் புக நேர்ந்து, இதோ நின்பால் தெய்வமாய் நிற்கும் இவளை வளர்த்த தவமிலாத் தாயே யான்.

செங்குட்டுவன் : தாங்கள் இத்திருமாமணியைய வளர்த்த தாயா? நீங்கள் மிகப் பெரும்பேறு பெற்றவர்கள்! [மற்றையோரைப் பார்த்து] நீங்கள்?......

அடித்தோழி : வேந்தே! பேசும் ஆற்றலற்றேன்; எம் பெருமாட்டியை நினைத்தால் நா வறள்கின்றது; தடுமாறிப் பேசுகின்றது, பொறுத்தருள்க! அந்தோ! அரசே! இப்பெருமாட்டி இங்கு வந்தபோது தன் அன்னைக்கும் ஒரு சொல் சொன்னாளல்லள். [பக்கத்தில் நிற்கும் செவிலித்தாயைக் காட்டி] இதோ நிற்கும் என்னைப் பயந்த இவள், வளர்த்தாளே—வருந்துவாளே—வாடுவாளே என்று கூட நினையாது அவளிடமும் ஒருசொல் கூருது கற்புக்கடம் பூண்டு கணவன் அழைத்ததும் உரைத்த உரை மாற்ருது உடுத்த உடையோடு ஊர் துறந்து, உற்ருர் துறந்து புறப்பட்டு வந்து இவ்வுலகையுந் துறந்து இதோ நிற்கின்ருளே—இவளுக்குக் குற்றேவல் புரிந்த அடித்தோழி அரசே! யான் அடித்தோழி!

செங்குட்டுவன் : நீங்கள் கண்கலங்கி நீருகுத்துப் பயன்? யாமெல்லாம் அவளைத் தெய்வமாக்கிப் பேறுகொள்ளும் நேரம்; எல்லோரும் அழுதலொழியுங்கள்.

தேவந்தி : அரசே! அருள்கூர்தல் வேண்டும். திங்கட் கணக்கில் தேடித் திசைகெட்டு இன்று எங்கள் மகளை—மணியை — மருந்தை — மன்னுயிரை இதோ கல்லிற் காணுகின்ருேம்! ஆற்ருமை தீர அழுது உளவெப்பை ஆற்றிக்கொள்கின்ருேம்; பொறுத்தருள்க!

செங்குட்டுவன்: ஆம், உண்மைதான்! உறவுடைய உங்கட்கில்லா உரிமை எமக்கேது?

[ எல்லோரும் கண்ணகி சிலையைப் பார்த்துக்கொண்டு நின்று ஆற்றுகின்றனர் ]

தேவந்தி: அந்தோ! தோழி! அறிவறை போயன்றோ அன்று உன்னைத் துறந்தேன்! [ அழுதல் ] கண்ணகி உம்! நான் உன்னைக் காக்கும் ஓர் அருந்தவம் பெற்றிலேனே! அந்தோ! அன்று நீ கூறிய தீக்கனாத் திறத்தைச் சற்றும் சிந்தித்திலேனம்மா! எல்லாவற்றையும் கூறினாய்; அனைத்தையும் நகைமொழியாக்கிச் சிரித்தேனே! எல்லாம் வேண்டும் எனக்கு! ஆ! உன் அன்னை உனக்குற்றது கேட்டு அக்கணமே உயிர்துறந்தாளே, அதுவாவது தெரியுமா? ஐயோ! அம்மா! உன் மாமியும் அப்படியே மாய்ந்தாள்! கேளம்மா, கேள்! யாங்கள் உனக்கிழைத்த தீங்கென்ன? ஏனிப்படி அருந்துயருழந்தாய்? அடுக்குமா? வையந் தாங்குமா?

காவற்பெண்டு: அம்மா! கண்ணே! என் கண்ணகி! என்னோடு பேசமாட்டாயா? இதோ, உன் தாய் படும் பாட்டைப் பார்! அந்தோ! அந்தக் கொடியோன் உன் கேள்வனுக்குக் கொடுமை இழைத்தது கேட்டு உன் தந்தையும், மாமனும் தம் செல்லாச் செல்வத்தையெல்லாம் புண்ணியதானம் செய்து துறவு பூண்டுவிட்டார்கள்! நீயில்லாப்போது எங்கட்கு என்னம்மா வாழ்க்கை இனி! ஆ! [ அழுதல் ]

அடித்தோழி: அம்மா! தன் காதலனுக்குற்றதையும், நீ அலைந்துழந்ததையும் கேட்ட மாதவி படுசுடர்ப் பட்ட புழுப்போல் பதைத்தாள். அவளை இறவாமல் காத்தாள் நின் மகள் மணிமேகலை. ஏதிலா"

ஏச்சுரையெல்லாம் கேட்டு ஏங்கி ஏங்கிப் போதல் செல்லா உயிரொடு புலந்து புலந்து, நின் மகளையும் துறவுபடுத்தித் தன் பொருளனைத்தையும் வறியோர்க்கு வழங்கினாள். பின், தானும் போதி அறவோன்பால் துறவு பூண்டுவிட்டாள் அம்மா, துறவு பூண்டுவிட்டாள்!

**செங்குட்டுவன் :** என்னென்னமோ சொல்கின்றனரே! இவள் கதை பெரிதுபோலும்!

**தேவந்தி :** கண்ணகி! இதோ பாரம்மா! எங்களினும் உரிமையோடு, "அடைக்கலமேற்று அதனைக் காக்க ஆற்றலற்றேனே! அந்தோ! அந்தோ!" என்று ஆருயிர் துறந்த மாதரியின் மகள் — நின் தாத்தி ஐயை வந்திருக்கின்றாள். காணாயோ அம்மா? கண்விழித்துப் பாராயோ?

[ கண்ணகி ஒளிவடிவாக வானில் வெளிப்படல் ]

**செங்குட்டுவன் :** ஆ! என்னே! இது என்னே! காணுங்கள்–மின்னுக்கொடி! இல்லை, கண்ணகியே! ஒளிமேனியாள்! தெய்வ வடிவினள்!

**எல்லோரும் :** என்ன ஒளி! ஓகோ! ஆம்! அதோ! அதோ! தெரிகிறது. ஆகா! என்ன வியப்பு!

**கண்ணகி :** செங்குட்டுவா! தென்னவன் தீதிலன். அவன் தேவர்க்கு விருந்தானான். நான் அவன் மகள். தோழியீர்! இக்கொற்றவன் குன்றில் விளையாட்டு யான் அகலேன்; வாருங்கள் எல்லீரும்!

[ கண்ணகி தோற்றம் மறைதல் ]

**வஞ்சிமகள் :** புகார்ப் பெண்டிரே வாருங்கள்! கூடல் மகளிரே கூடுங்கள்! வஞ்சி மடவீர் பாடுங்கள்!

கொங்கை யொன்றால் கூடல் சிதைத்த பெரியவளை—எம் கோமகளை, கோற்சிலம்பால் கொற்றம் விளைத்தாளைப் பாடிப் பரவுவோம், வாருங்கள்!

சிலர் : தென்னவன் திருமகளைத் தேவர்ப் பெருமகளைப் பாடுவோம். தம் செங்கோல் நெறிதவற ஒரு போதும் வாழார் நம் தென்னவர் என்பதை எடுத்துரைத்த பொற்கொடியை ஏத்திப் புகழ் பரவி, எல்லோரும் பாடுவோம், வாருங்கள் !

சிலர் : எங்கெங்கோ அலைந்துழந்து, எங்கோன் திருநாட்டை ஏற்றமுறச் சென்றணைந்த எல்வளையைப் பாடுவோம்; எல்லோரும் பாடுவோம்; பாண்டியன் பெருமகளைப் பார்விளங்கப் பாடுவோம் !

சிலர் : நம் தெய்வத் திருமகளின் திருநகராம் பூம்புகாரை முதற்கண் பாடுவோம் !

புறவு நிறைபுக்குப் பொன்னுலக மேத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யா ரம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்கா ணம்மானை

சிலர் : கந்துகவரியில் பாண்டியனைப் பாடுவோம் !

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய்கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப எங்கணும்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந் தடித்துமே

சிலர் : ஊசல்வரியில் சேரனைப் பாடுவோம் !

வன்சொல் யவனர் வளநாடு வன்பெருங்கல்
தென்குமரி யாண்ட செருவில் கயல்புலியான்
மன்பதைகாக் குங்கோமான் மன்னன் திறம்பாடி
மின்செய் இடைநுடங்க ஆடாமோ ஊசல்
விறல்விற் பொறிபாடி ஆடாமோ ஊசல்

[ மகிழ்ச்சியால் ஆடிப் பாடுதல் ]

## கண்ணகி கோயிலின் வெளிப்புறம்

**செங்குட்டுவன்:** தேவந்தி! நின் தோழியைக் குறித்து அரற்றிப் புலம்பியபோது மணிமேகலை துறவு பூண்டாள் என்றுயே, அவள் துறக்கக் காரணம் என்ன? விளங்கக் கூறு.

**தேவந்தி:** அரசே! அவள் செய்தியும் ஓர் ஆருத் துயருடையது!

**செங்குட்டுவன்:** என்ன, எல்லாம் அவலந்தானு?

**தேவந்தி:** ஆம்; மாதவி, தன் மகள் மணிமேகலையை அணிமேகலையார் ஆயிரவர் அடிபரவும் அவள் தாயிடம் கலைபயிற்றத் தனித்திருத்தித் தான் கோவலனோடு இன்புற்று வாழ்ந்துவந்தாள். ஊழ் பிரிப்ப, உளைந்த நெஞ்சினள் தன் கேள்வன் தன்னை 'ஆடன்மகள்' என்று கூறி இகழ்ந்ததை நினைந்துப் பெரிதும் நொந்துபோனுள். தன் மகள் மணிமேகலையும் தன்போல் இவ்வாடற்றெழிலைப் பூண்டு, கணிகை என்று ஒருவனுல் இழிக்கப்பெறவும் கூடும் என்று இனைந்துகிடந்தாள். அவள் உழப்பதைத் தேற்றக் கருதிய அவள் தாய், மணிமேகலை எய்தியுள்ள பருவத்தையும், அழகையும், கல்வியையுங்கூறிக் "குலத்தொழுக்கைமேற்கொள்ளத்தக்க காலம் அடுத்தது, அதற்கு ஆவன இயற்றுக!" என்றுள். அதுகேட்ட மாதவி, தான் கோவலனுல் துறக்கப்பெற்றதற்கு இவ்வாடற்கோலமே காரணம் என்பதையும், அவனுல் இழித்துரைக்கப் பெற்ற அக் கோலத்தைத் தன் மகள் பூண்பது புரைபட்டது என்பதையும் நீடுநினைந்து உறுதி பூண்டவ

ளாதலின் மகளையழைத்துத் தலைமுடி களைந்து, காமனும் அழுது அரற்றித் தன் அலர்வாளி துறந்து அழுங்குமாறு துறவுக்கோலம் பூண்பித்துப் போதி அறவோன் பொன்னடிக்குச் சார்த்திவிட்டாள்!

செங்குட்டுவன்: கலைகள் பழிப்புண்டால் கலைஞருள் சிலர், தாம் வழிபடும் கலைக்கோயிலையே சிதைத்து விடுதல் இயல்பு என்பர், அது மெய்யாயிற்று!

தேவந்தி: ஆம், வேந்தே! அன்றுதொட்டு எம் புகார் ஆடுவார் அற்றது; அரசன் அழுங்கினன்; எம் மூதூரும் அருமணி இழந்த நாகம் ஆகி அயர்ந்தது. அவள் அருந்துறவு பூண்டற்குரிய பருவமன்றியும், பூண்டாளே என்ற வேதனையால் அவள் பெயர்கூறி அரற்றினேன் வேந்தே! அழுதேன் வேந்தே! தொழுதேன் வேந்தே! துவண்டேன் வேந்தே! ஆம்......வேந்தே! உம்...வேந்தே! வேந்தே...!

செங்குட்டுவன்: ஆ! என்ன, இவள் தெய்வமேறியவள் போல் பேசுகின்றாள்! மெய் நடுங்குகிறது; புருவம் துடிக்கிறது; வாய் மடித்து, எயிறு காட்டி உதடு கடிக்கின்றாள்!

[ தேவந்தி தலை அணைந்து, மயிர் குலைந்து, முகம் வியர்ப்பப் பல் காட்டி, ஓவென்றும் ஆவென்றும் அலறி, அடி பெயர்த்துக் கையுயர்த்தி ஆடுகின்றாள் ]

தேவந்தி: மாடலா! இதோ இப்பெண்கள் அரட்டன் செட்டிப்பெண்கள்...இல்லை...இரட்டைப்பெண்கள் ...அதோ...அவள்...ஆ! சேடக்குடும்பி...ஆம் அவனுடைய பெண்தான்...மறையோய்! இங்கு வா!

[ மாடலன் தேவந்திமுன் வந்து நிற்றல் ]

நீ...அன்று...மங்கலாதேவியின் கோயிலுக்குச் சென்ருயா ?

மாடலன் : ஆம்...போந்தேன்...! தொழுதேன்...!

தேவந்தி : அந்தக் கோபுர வாயிலில் நின்றபோது... நீ நின்றபோது...வேதியன் ஒருவன் வந்தாஞ?

மாடலன் : ஆம், வந்தான் ! நீர் நிறைந்த ஒரு கரகம் கொடுத்தான்.

தேவந்தி : உம்...! அதிலுள்ளது மலேச்சுனே நீர். மிகப் பெரிய ஆற்றல் வாய்ந்தது. அதனே...[ கூட்டத்திலிருந்த பெண்குழந்தைகள் மூவரைக் காட்டி ] இவர்கள் தலேயில் தெளித்துப் பார் ! பழம்பிறப்புணர்ச்சி பெறுவர்...பெறுவர்...ஆ !

[ மாடலன் கமண்டல நீரை அம்மூவர் தலேயிலும் தெளித்தல் ]

குழந்தை வடிவில் இருக்கும் கண்ணகியின் தாய் : அந்தோ ! மகளே கண்ணகி ! ஏனம்மா இங்கு வந்தாய் ? உன் கேள்வனின் போற்ரு ஒழுக்கங் கண்டு மெய்சாம்பி உளமோய்ந்ததற்கோ என்னே நீ மறந்தாய் ? உன் மனநிலேயறிந்தேதான் தனித்து வாழ்ந்த உன்னிடம் வரவில்லே. நீ உன் கணவனேத் தெய்வமாய்ப் பேணியது கண்டும் யான் அவன் அன்பில் மாசு சுட்டிஞல் நீ பொறுக்கமாட்டாய், உழப்பாய் என்றே ஒழிந்தேன் ! இத்தகைய ஏதம் வருமென்று கனவும் கண்டிலேனம்மா ! ஆ ! கண்ணே ! அனிச்சம் உருத்த அஞ்சும் நின் மெல்லடித் துன்பத்தை இந்த நிலமகள் அறிவாளா ? எத்தகைய இன்னலுற்ருயோ ? என்முகங் கண்டு சற்றுப் பேசமாட்டாயோ ? அம்மா ! அம்மா !

குழந்தை வடிவில் இருக்கும் கோவலனின் தாய்: கண்ணே, கண்ணகி! மகனுக்கு மணங்கொண்டு மங்கலத்தின் நன்கலம் விழைந்தேனடி...என் மனங்குலைய, மறைந்தாயே, அந்தோ! மனைமடிய, மடம்பட்டு மடவாளோடு காடுபுக்கானே என்று கலங்கிக் கையற்றுப் போனேன்! கண்திறந்து பாராயோ! கணவனொடு வாராயோ! கண்ணே, என் கண்மணியே!

குழந்தை வடிவில் இருக்கும் மாதரி: அந்தோ! அம்மா— மடமகளே! வையை நீராடி வந்தபின் கேடுணர்ந் தேன்! கெட்டேன்! குலமகளே, எங்கொளிந்தாய்? யாஞ்செய்த தீங்குண்டோ? அடைக்கலமிழந் தேனே என்று அயர்ந்தேனம்மா...கல்லானாயோ! கண்விழித்துக் காணாயோ!

செங்குட்டுவன்: மறையவரே! என்ன இது? எம் வஞ்சி நாட்டிற்குற்ற இறுதிக்காலமோ இது? கையறவு கொள்கின்றேன்; காலோடவில்லை; பொறிப்புலன் தொழில் ஓய்ந்தன! உம்...!

மாடலன்: அரசே! கோவலன் அன்று புகாரில் தன் மகள் மணிமேகலை பிறந்தநாள் விழாவில் பொன் மாரி பெய்தான். அவ்வளந் துய்க்க வந்த ஒரு முதிய மறையவனை வெறிவேழம் பற்றி உயிர் சிதைக்க நின்றபோது, தன்னுயிர் ஈந்து மீட்டான். அப் புண்ணியத்தால் அவன் வானுலகு பெற்றான். அன்றியும், அப்பெருமகன் தன்னைக் கொல்லப் பணித்த வேந்தனுக்குத் தன் உயிர்க் கொடையால் வானளித்தான். கண்ணகியோ தன் கற்புக் கடம் பூண்டதால் தெய்வமாய் விண்ணுலகெய்தினாள். அவர்களை ஈன்றார்க்கு அவ் வினைவயமில்லை. அத னால், இவர்கள் இம்மூதூரில் செட்டி மகளிராய்ப்

பிறந்தனர். கண்ணகிபால் வைத்த பற்ருலும், திருமால் திருவடி குறித்துக் குரவையாடிய பெரும் பேற்ருலும் இவ் ஆயமகள் சேடக்குடும்பியின் உயர்குடிக்கண் பிறந்தாள்!

இதனுல், அரசே! நாமறிவது ஒன்றுண்டு. நல்லது செய்தோர்க்குப் பொன்னுலகு கிடைப்பதும், அன்பு பாராட்டி நிற்போர் அப்பற்றுவழிப் பிறத்தலும், அறப்பயனும் மறப்பயனும் அழியாது விளைவு காட்டலும் உறுதியாக உண்டென்பதே! பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் இவ் வுலகத்து இயற்கை. புதுவது ஒன்றும் இங்கில்லை!

செங்குட்டுவன்: விம்மிதமுற்றேன்! என் கண்களையும் காதுகளையும் என்னுல் நம்பமுடியவில்லையே!

தேவந்தி: நீயோ சிவபிரான்பால் அன்புளம் சிறந்தாய். ஆதலால் இப்பேறு நினக்குக் கிடைத்தது, ஊழிதோறூழி வாழி வேந்தே! வாழி கொற்றவா! வாழி! வாழி!

செங்குட்டுவன்: மறையவரே! இன்றுதொட்டுக் கண்ணகி கோட்டத்திற்குக் கலிகெழுவிழவணி காண்பேன்! தேவந்தி! அன்னையின் கோட்டத்திற்கு அளவிலாப் பொருளமைத்துள்ளேன்; இனி, நீ இதனைப் போற்றிப் பேணி, இம் மாமகட்குப் பூசனை புரிந்துவா.

[அரசர் பலர் வந்து வணங்கல்]

அமைச்சன்: அரசே! இவர்கள் சிறைவீடு செய்த மன்னர்கள்.

செங்குட்டுவன்: மன்னர் பெருமக்களே! அவலம் மறந்து அமைதிகொள்ளுங்கள். அன்னை கண்ணகியின் பெயரால் ஒன்றுபடுவோம்!

[கனகவிசயர் வந்து வணங்கல்]

கனகனு! விசயனு! வாருங்கள்; இதோ இவள் உங்கள் தெய்வம். நீங்கள் தூக்கிச் சுமந்த தெய்வம். அப்பேறு உங்கட்குக் கிடைத்தது. ஆணவத்தால் அதனை இழந்தேன், யான்!

கனகவிசயர்: ஆம், அரசே! ஆணவம் எங்கட்கும் ஒரு பெருமையை அளித்தது. அன்று அப்படித் தமிழ் மறம் எம்மால் பழிக்கப்பெருதொழிந்தால் எமக்கேது இப்பேறும், தங்கள் புகழுரையும்?

செங்குட்டுவன்: அப்பப்பா! என்ன அழகாகப் பேசி விட்டீர்கள்! ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு மனங்கலந்தால் பிணக்கேது? பூசலேது? போரேது? ஓ! வாருங்கள், குடகக் கொங்கரா?

[ குடகக் கொங்கர் வணங்கல் ]

மாளுவவேந்தர்கள்: வாழி வேந்தே! வணக்கம், வணக்கம்!

அமைச்சன்: இதோ, கடல்சூழ் இலங்கைக் கயவாகு வந்திருக்கின்ருர்!

கயவாகு: வாழ்க மன்ன!

செங்குட்டுவன்: நும் நாடு, பகைவரால் அமைதி குலைந்ததாகச்செவிமடுத்தேனே, என்ன ஆயிற்று?

கயவாகு: அரசே! நம் பாண்டியன் படையெடுப்ப தாகத் தூது போக்கினன். அது கேட்டு ஓய்ந்தது அச் சிங்களர் கொடுமை!

செங்குட்டுவன்: வாருங்கள், வாருங்கள்! எல்லோரும் வாருங்கள்! யான் பெற்ற பேறே பேறு! எம் அன்னை எல்லோரையும் ஒன்றுபடுத்திவிட்டாள். வாருங்கள், வழிபடுவோம்!

[ கோயிற் சிலையிலிருந்து ஒரு குரல் கேட்கின்றது ]

செங்குட்டுவா! வந்தேன் நின்பால்! தந்தேன் வரம்!

[ தேவந்தி திரும்பவும் தெய்வமேறி ஆடுதல் ]

**தேவந்தி :** செங்குட்டுவா! இங்கு வா!

**செங்குட்டுவன் :** அம்மா! இதோ வந்தேன்!

**தேவந்தி :** உன் தந்தையோடு நீ அரசவை வீற்றிருந்த போது கணியொருவன் வந்தானா?...வந்தானா?...

**செங்குட்டுவன் :** ஆம், வந்தான்!

**தேவந்தி :** அரச பேறு உனக்கில்லை—உன் தம்பிக்குண்டு என்றது நினைவிருக்கின்றதா?

**செங்குட்டுவன் :** என்ன......? உண்மை......உண்மை! நாற்பது ஆண்டுகட்குமுன் நிகழ்ந்த நிகழ்ச்சி அல்லவா இது! என்ன!

**தேவந்தி :** நினக்குரியது இல்லை என்ற கணியை நீ கடிந்து பார்த்ததும், உன் தம்பி...

**வில்லவன் :** அரசே! அதோ, நம் அண்ணல்!

**மக்கள் :** வாழ்க வாழ்க! அண்ணல் வாழ்க! இளங்கோ வாழ்க!

**செங்குட்டுவன் :** தம்பி வா! யான் பெற்ற பேறே பேறு! அருமையான நேரத்தில் வந்தாய்!

**இளங்கோ :** அண்ணா! வணக்கம். வாழ்க நின் கொற்றம்! [ கண்ணகி சிலையைப் பார்த்து ] ஒருமாமணியாய் உலகிற்கோங்கிய திருமாமணியே! நின் திருவடி தொழுகின்றேன். [ வணங்குதல் — தேவந்தியைத் திரும்பிப்

பார்த்து] ஓ......தெய்வம் உற்று—ஓ! கண்ணகி தெய்வமா?

**தேவந்தி:** அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தே!... அரசியல் அவலமுற்றதென்று துறந்தாயல்லவா?

**இளங்கோ:** ஆம், துறந்தேன்......

**தேவந்தி:** துறந்து, பூண்டாயே அத்தூயோன் திருவடி...அது இணையற்றது; ஈடற்றது! அதனுல் எல்லா உலகும் நின்னைத் தொழ நீ உயர்ந்தாய்...நீ மிகப் பெரியவன். இந்த மன்பதை உய்ய நல்லற முணர்த்தி அதனை நின்வழிப்படுத்து...

**இளங்கோ:** நின்புகழ் பெற்ற யான் இனி வாழ்ந்தவன். அன்னுய்! கணவற்குற்ற கொடுமை கண்டுடைந்து கோமகனோடு கூடலழியக் கொதியழல் சீற்றம் கொங்கைகொண்டு விளைத்து, வென்றிகண்டருளிய நின் கற்பின் திறமெங்கே! ஐம்பொறியடக்கிப் புலம் வென்று, அவ்வைந்தின் வகையறிந்து உலகை எமதாக்கி ஏவல் கேட்பிக்கும் வலிமையீட்டக் காடுபுக்க எம்போன்ருர் துறவுநிலை எங்கே! கடவுளரை ஏவல்கொண்ட கற்பரசி! கண்கண்ட தெய்வமே! கழல் பணிந்தேன். உன்னைக் காணும் எம்குடி, எம்நாடு எல்லாம் பேறுபெற்றவை. யான் வணங்கும் அருகன் அருமையை நீயும் அறிந்ததோடு எனக்கு ஓர் ஆணையும் பிறப்பித்துவிட்டாய். அம்மே! அருளறம் பூண்டோன் திருவடிப்போது தெவிட்டாத தெள்ளமுது! அத் தெள்ளமுதுண்ண வேட்கும் திருத்தகு நல்லீர்! நீங்கள் யாவிராயினும் சரி, கண்ணகி தெய்வம் பணித்தவண்ணம் அத் தூயோன் அறமுரைக்கின்றேன், ஆர்வமொடு கேளுங்கள். கேட்டுப் பயன்பெற்று வாழ்வீராக!

[ இளங்கோ அறம் உரைத்தல் ]

பரிவு மிடுக்கணும் பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின் தீநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொழி நீங்கன்மின்
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்

— 0 —

முற்றும்

# அருஞ்சொற் பொருள்

## புகார்க் காண்டம்

பக்கம்

1 கொங்கு - தாது

,, அங்கண் உலகு – அழகிய உலகிடம்

2 திகிரி - சக்கரம்

,, வீங்குநீர் – நிறைந்த நீர்

5 சந்தனக்குறை - சந்தனக்கட்டை

8 கிளிச்சிறை
9 சாம்பூநதம்
சாதகும்பம்
வைணவம்
சிருங்கி
சுத்திசம்
ஆகரப்பொன் } பொன் வகைகள்

,, அயர்ந்து – நிலைதளர்ந்து

22 புறவு - புரு

22 உலப்பிலா – அழிவிலா

30 கடுவன் — ஆண் குரங்கு

32 நைவளம் – ஓர் இசைப் பண்

,, அட — காய்ச்ச

33 அமளி – படுக்கை

36 நானம் – மான்மதம் (கஸ்தூரி)

37 எழினி – திரைச்சீலை

பக்கம்

45 கவின் – அழகு

,, மூவா – முதிராத, அழியாத

49 சிலதியர் – பணிப்பெண்கள்

68 மிழற்றும் - ஒலிக்கும், ஊதும்

72 தணக்கும் - பிரியும், நீங்கும்

,, பாடுபெறும் - பெருமையடையும்

73 வாங்கும் - கொள்ளும்

,, மான்மகன் - மயக்கும் மகன்

,, ஓதம் – கடல்

76 ஞாழல் – புன்னைக் கொத்து

79 மாழ்குவது – மயங்குவது, சாவது

## மதுரைக் காண்டம்

98 அலமந்து – அங்குமிங்கும் சுழன்று

,, பிலம் – குகை

105 ஏதம் – துன்பம்

114 ஆடகமாடம் - பொன் மாளிகை

116 மிழற்றுதல் - யாழில் இசை எழுப்பல்

120 கையாறு – பெருந்துன்பம்

123 ஞெரேரென - திடீரென

127 கோட்டம் – மணம் தரும் ஒருவகைக் காய்.

,, சாவகநோன்பி – சமண மதத்தைச் சார்ந்தவர்

பக்கம்

129 துவரம் – உண்ணும் கறி வகை

130 உளைந்து – துன்புற்று

134 பித்தை - தலைமயிர்

,, அறல் - நீரோடிய இடத்தில் நெளிவாகப் படிந்திருக்கும் கருமணல்

142 குணில் – குறுந்தடி

143 சேடம் – தெய்வத்திற்குப் படைத்த பொருள்

151 உடுக்கணம் – விண்மீன் கூட்டம்

152 அல்லோலக்கம் - இரவில் நடைபெறும் அரசவை.

155 புலம் - அறிவு, புத்தி

156 கலுழும் – அழும்

157 மாலுற்று – மயங்கி

,, மன்பதை - உலகம், மக்கள்

158 வரவெதிர்ந்து - வருகையை எதிர்நோக்கி

160 உழப்பவன் - துன்புறுபவன்

,, வேட்டது – விரும்பியது

162 களைகண் - பற்றுக்கோடு, சார்ந்திருந்த இடம்

,, மன்று – பொது இடம்

,, மறுகு - தெரு

,, மாழ்கி – துன்புற்று

,, பரிப்பார் – நீக்குவார்

167 நீலப்பறவை – மயில்

## வஞ்சிக் காண்டம்

பக்கம்

170 காழ்த்து – முதிர்ந்து, உறுதிகொண்டு

174 நந்தும் - வளரும்

,, புலராக் காழகம் - ஈர ஆடை

175 காழ் – குற்றம்

176 சாம்புவர் - ஒடுங்குவர்

,, இகலி – பகைத்து

177 துளக்குறும் – நடுங்கும்

182 வற்கடம் – பஞ்சம்

189 கவந்தம் – தலைவெட்டுண்டு நின்றாடும் பிணம்

194 தேறல் – கள்

196 அழன்று – துன்புற்று

197 புலந்து – சினந்து

198 சிறுமுதுக்குறைவி – இளம் வயதிலேயே அறிவு முதிரப்பெற்ற மாதவி

199 கையறவு – செயலோய்ந்த நிலை

201 வள்ளை – காதுபோல் தோன்றும் ஒரு கீரை

202 கஞ்சம் - தாமரை

,, களம் – கழுத்து

,, நளிந்து - கூடி, முயங்கி

204 ஏக்கழுத்தம் - இறுமாப்பு

பக்கம்

205 வளாகம் – நிலப் பரப்பு

213 எல்வளை – ஒளிபொருந்திய வளையலையுடைய கண்ணகி

215 அழுங்கினான் – மனமுடைந்தான்

216 சாம்பி – உடல் மெலிந்து

218 கலிகெழு - ஒலிகள் மிக்க

222 வெள்ளைக் கோட்டி - பயனில்லாத உரை

,, பொருண்மொழி – மெய்யுரை

---

# இந்நூலைப்பற்றி

இளங்கோவடிகளின் கற்பனைக்கும் உட்கோளுக்கும் எங்கும் முரண்படாமல், சிலப்பதிகாரத்திற்கு நல்லதொரு விளக்கம்போல் உள்ளது இந் நாடகம்.

—டாக்டர் மு. வரதராசனார்

புத்தகம் சிறந்த முறையில் எழுதப்பெற்று உள்ளத்தைப் பிணிக்கின்றது. —T. V. சதாசிவ பண்டாரத்தார்

சிலம்பின் நுண்பொருள் அனைத்தும் பலர்க்கும் நன்கு புலனாதல் வேண்டுமென்னும் நோக்கினால் இனிய எளிய உரைநடையில் நாடகமாக உருவாக்கித்தந்த முயற்சி பாராட்டுதற்குரியதாகும். —க. வெள்ளைவாரணன்

இதுகாறும் விளக்கம் பெறாது நின்ற கானல்வரி புதிய விளக்கம் பெற்றுத் திகழ்கின்றது

—நா. இராசகோபாலன், M. A.

ஒவ்வொரு காட்சியையும் படிக்கும்பொழுது நிகழ்ச்சிகளை நேரில் கண்ணுறும் உணர்ச்சி தோன்றுகின்றது. ஒவ்வொரு சொல்லிலும் தூய தமிழ் மணம் கமழ்கின்றது.

—'தமிழ்நாடு'

நாடகச் சிலம்பு என்னும் நூல் சிலப்பதிகாரத்தை நாடகமாகவே உரைநடைப்படுத்திக் கொடுக்கிறது. அந்தந்தக் காட்சிகளுக்கேற்ப மூலத்தின் பாடல்களையும் பாத்திரங்கள் பாட ஏற்ற விதத்தில் அமைத்திருக்கிறார் ஆசிரியர்.

—'கல்கி'

சிலப்பதிகாரத்தைப் பல கோணங்களில் ஆராய்ந்து அதன் சாரத்தை ஆசிரியர் நயம்பட வடித்துக் கொடுத்திருக்கும் அழகு பாராட்டுக்கு உரியது. தமிழ் இன்பத்துக்காகவும், நாடக இன்பத்துக்காகவும் பன்முறை படித்து, நடித்து, சுவைக்க ஏற்றது. —'தினத்தந்தி'